தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்

1974-84

சுருக்கம்

மாநிலத் திட்டக் குழு
எழிலகம், சென்னை-5
மார்ச் 1974

Tamilnātu Tōlai Nokkut Tittam
1974-84 Curukkam
by
Tamilnātu, Mānilat Tittak Kulu

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்
1974 - 84
by
தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு.

20 JUL 1975

முன்னுரை

—◆—

திட்டமிட்ட வளர்ச்சியின் சுமார் கால் நூற்றாண்டை நம்முடைய நாடு கடந்து வந்துள்ளது. தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களின்போது, இந்தியா பல துறைகளிலும் கணிசமான முன்னேற்றத்தைப் பெற்றதென்பது திண்ணம். எனினும், திட்டமிட்ட எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், அதிகளவு வறுமை, வேலை வாய்ப்பின்மை போன்ற ஒரு சில பிரச்னைகள் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன. இதுவரை இந்தியாவில் திட்டமிடுதல் பெரிதும் உயர் மட்ட அளவில் மத்திய அரசாலேயே செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது, மூன்றாவது, ஐந்தாண்டுத் திட்டங்களில் 'அடி மட்டத்திலிருந்து திட்டமிடுதல்' (Planning From Below) என்னும் கோட்பாடு பரிந்துரைக்கப்பட்டிருப்பினும், அதைச் செயல்படுத்துவதில் எவ்வித முன்னேற்றமும் பெறப்படவில்லை. கூட்டாட்சி அமைப்பின் பிரிவுகளாக இருப்பதொரு மாநிலங்கள் செயல்படுகின்ற நம்முடையது போன்ற பரந்த குடியரசு நாட்டில், ஓர் மட்டத்திலிருந்து மட்டும் முழுமையான திட்டத்தை வரைய இயலாது. மாநிலங்களின் வளவைப்புகள் (Resources Endowments) பெரிதும் வேறுபடுகின்றன. அவற்றின் வளர்ச்சி மட்டங்களில் நிரம்ப வேறுபாடு உள்ளது. தேவைகள், பிரச்னைகள், வளர்ச்சிக்கான வாய்ப்புத் திறன்கள் ஆகியவற்றில் ஒரு மாநிலம் மற்றொரு மாநிலத்தினின்றும் மாறுபடுகின்றது. எனவே, ஒவ்வொரு மாநிலமும் அதன் வள வாயில்களைக் கவனமாக மதிப்பிட்டு, பிரச்னைகளின் கவனத்தைத் திருப்பி, வளர்ச்சி வாய்ப்புக்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடுதல் அவசியம். மேலும், இன்றைய நவீன யுகத்தில் பொருளாதாரப் பிரச்னைகளில் பெருகிவரும் சிக்கல்களினால் பொருளாதாரத்தின் நீண்ட கால நிலையைக்

கருத்திற்கொண்டு தொலைநோக்குத் திட்டத்தை உருவாக்குவது அவசியமாகிறது. அத்திட்டம், ஐந்தாண்டுத் திட்டங்களையும் செயல்படுத்தப்படும் ஆண்டுத் திட்டங்களையும் உள்ளடக்குமாறு தீட்டப் பெறலாம். தொலைநோக்குத் திட்டம் பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துகிறது; வளர்ச்சியில் ஏற்படும் சாத்தியமான இடையூறுகளைத் தெளிவாக உணர உதவுகிறது. இவற்றையெல்லாம் மனதிற்கொண்டு, 1971-ல் தமிழ் நாடு அரசு மாநிலத் திட்டக் குழுவை அமைத்து, அதனிடம் 1974 முதல் 1984 வரையான பத்தாண்டுக் காலத்தை உள்ளடக்கும் தமிழ் நாட்டுக்கான தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பை ஒப்படைத்தது. இப்பணியை நிறைவேற்ற மாநிலத் திட்டக் குழு இரண்டாண்டுகளுக்கும் மேலாகச் செயல்பட்டது. தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரிப்பதில் இக்குழு மூன்று நிலைகளைக் கொண்ட கொள்கையைப் பின்பற்றியது. அக்கொள்கை மாநிலப் பொருளாதாரத்தின் துறை வாரியான, பகுதி ரீதியான நடைமுறை வாழ்வுக்குப் பொருத்தமான நிலைகளைக் கருத்திற் கொண்டதாகும்.

1984 ஆம் ஆண்டுக்குள் தனி நபர் உண்மை வருமானத்தை இரட்டிப்பது, வறுமையின் கொடிய நிலைகளை நீக்குவது, முழு வேலைவாய்ப்புக்கு வகை செய்வது ஆகியவை திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இலக்குகள் உயரளவில் நிர்ணயிக்கப் பெற்றிருப்பினும், அவற்றை அடைவது நம் சக்திக்கு உட்பட்டதே. இவ்வுயர்வான இலக்குகளை அடைய கடின உழைப்பும், தியாக உணர்வும் மட்டுமல்ல; குன்றாத உறுதிப்பாடும் மங்காத ஆற்றல் திறனும் மிகத் தேவை. திட்டத்தின் வெற்றி பெரிதும் பொது மக்களின் ஒத்துழைப்பையும், அவர்களின் ஆர்வம் மிக்க பங்கேற்றலையும் சார்ந்திருக்கிறது. குடியரசு அமைப்பு முறையில், சமூக நீதியோடு பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதைத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நோக்கத்தை வெற்றிகொள்ள மக்களின் ஆதரவு தேவை. அரசு அதிகாரத் திணிப்பின் மூலம் இதைப் பெற இயலாது.

தொலைநோக்குத் திட்டம், வெவ்வேறு செயல் துறைகளில் பணியாற்றும் நுட்ப வல்லுநர்களின் இணைவான கூட்டுப் பணியால் உருப்பெற்றது. தொலைநோக்குத் திட்டத்தைத் தீட்டுவதில் வெவ்வேறு வகைகளில் மாநிலத் திட்டக் குழுவோடு தொடர்பு கொண்டிருந்த ஒவ்வொருவருக்கும் என் நன்றி. தமிழ் நாட்டு மக்களால் தொலைநோக்குத் திட்டம் வரவேற்கப்பட்டு, அது தமிழ் நாட்டின் வருங்கால வளர்ச்சிக்கான பயனுள்ள வழிகாட்டியாக அமையுமென்று நான் உறுதியாகக் கருதுகிறேன்.

தலைவர்,
மாநிலத் திட்டக் குழு,
முதலமைச்சர், தமிழ் நாடு.

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்

1974—84

சுருக்க வரைவு

பொருளடக்கம்

பக்கம்

I. பின்னணி *1*

II. நோக்கங்கள்—

தலா வருமானத்தை இருமடங்காக்குதல் *3*

முழு வேலை வாய்ப்பினை நோக்கி *16*

வறுமையை எதிர்த்துப் போரிடுதல் *17*

பொருளாதார—சமூக நீதி *18*

III. மாவட்டத் திட்டம்— *20*

IV. பொருளாதார-சமூக உள்ளமைப்பு—

மின்சக்தி *24*

போக்குவரத்து *30*

சுற்றுலா *34*

கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் *35*

சுகாதாரம், ஊட்ட உணவு, குடும்ப நலத் திட்டம், குடிநீர் வழங்கல், துப்புரவு. *41*

கிராமப்புற வளர்ச்சி *44*

கூட்டுறவு *45*

நகர்ப்புற மேம்பாடு *49*

கைவினைஞர் பயிற்சியும், வேலை வாய்ப்புப்பணிகளும் *51*

சமூக நலனும் உழைப்பாளர் நலனும் *52*

V. ஆக்க நடவடிக்கைகள்—

கனிவள மேம்பாடு *55*

பெரிய, நடுத்தரத் தொழில்கள் *57*

சிறு தொழில்கள் *60*

வேளாண்மை *62*

கால்நடை வளர்ப்பு *66*

காடுபேணல் *69*

மீனளம் *71*

VI. தனிப் பிரச்னைகளும் சிறப்புத் திட்டங்களும்—

பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சி *74*

நிர்வாகம்—நிறைவேற்றுதல் குறித்த பிரச்னைகள் .. *75*

ஆராய்ச்சியும் வளர்ச்சியும் *78*

புள்ளியியல் *81*

VII. நிதி—

திட்டத்திற்கான நிதி வசதிகள் *83*

பொதுக் கடன் *88*

நிதிக் கொள்கையும் மத்திய—மாநில நிதித் தொடர்புகளும். *90*

VIII. திட்டமிடல்—தொடரும் செயல் முறை *92*

I. பின்னணி

வருங்காலத்தை எண்ணிப் பார்த்து, அதற்கேற்ப உழைப்போருக்கு வளமான எதிர்காலம் அமையும்.

இந்நாட்டிற்கு ஐந்தாண்டுத் திட்டங்கள் புதியனவல்ல. ஆனால் சில துறைகளில் திட்டமிடுவதற்கு ஐந்தாண்டுகள் போதா. பெரிய திட்டங்கள் நிறைவேற ஐந்தாண்டுகளுக்கு மேலான காலம் பிடிக்கும். எனவே ஐந்தாண்டுத் திட்டங்களைத் தொடர்கின்ற ஒரு தொலைநோக்கில் இணைத்தல் வேண்டும்.

திட்டங்கள் தீட்டுவதும், அவற்றை நிறைவேற்றுவதும் ஆகிய பொறுப்புக்களை மத்திய-மாநில அரசுகள் பகிர்ந்து கொள்கின்றன. திட்டமிடத் தொடங்கிய காலத்தில் தேசிய அளவில் திட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால் மாநில அளவில் அதனையொத்த அமைப்பு எதுவும் ஏற்படவில்லை. மாநில அளவில் திட்டமிடுவதன் அவசியத்தையும், தொலை நோக்கில் திட்டங்களை இணைத்தலின் முக்கியத்துவத்தையும் உணர்ந்த தமிழ்நாடு அரசு, 1971 மே திங்களில் மாநிலத் திட்டக் குழுவினை அமைத்தது. பின் வருபவர்கள் குழுவின் உறுப்பினர்களாவர் :

தலைவர்	..	டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்.
துணைத் தலைவர்	..	திரு. எம். ஜி. ராஜாராம், ஐ. ஏ. எஸ்.,
உறுப்பினர்கள்	..	டாக்டர் டி. பிரைட்சிங்.
		டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷய்யா.
		டாக்டர் பா. நடராஜன்.
		டாக்டர் வி. சண்முகசுந்தரம்.
		திரு. நா. மகாலிங்கம்.

இம் மாநிலத்திற்கான பத்தாண்டுத் தொலைநோக்குத் திட்டம் ஒன்றைத் தீட்டும் பணி இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. இப் பணியில், இந்நாட்டில் தலை சிறந்த அறிவியலறிஞர்கள், ஆட்சியாளர்கள், தொழில்நுட்ப அறிஞர்கள், கல்வி நிபுணர்கள், பல்கலைக் கழகங்களின் துறை போகிய வல்லுநர்கள், தொழில் அதிபர்கள், உழவர் பெருமக்கள், தொழிலாளர் தலைவர்கள், சமூகத் தொண்டர்கள், பொது வாழ்வில் பற்பல துறைகளிலும் சிறந்து விளங்கும் விற்பன்னர்கள் ஆகிய பலரையும் ஒன்று திரட்டியது தமிழகத் திட்டக்குழு. இவர்கள் அனைவரது ஒருங்கிணைந்த சிந்தனையின் விளைவே இத்தொலைநோக்குத் திட்டம்.

வழிமுறை—இத் தொலைநோக்குத் திட்டம் தயாரிக்கும் பணியில் மும்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. முதலாவதாக, குறிக்கோள்களையும் வளங்களையும் கருத்தில்கொண்டு எண்ணிய பொருளாதார விளைவுகளை அளிக்கவல்ல திட்ட முன் வரைவும் அதற்குரிய முதலீட்டு முன் மாதிரித் திட்டமும் வரையப் பெற்றன. இரண்டாவதாக, குழுவால் அமைக்கப்பட்ட 15 செயலணிகள் பல்வேறு வளர்ச்சித் துறைகள் பற்றி ஆய்வு செய்தன. இச் செயலணிகள் துறைவாரியான திட்டங்களை உருவாக்கின. மூன்றாவதாக, பரவலாக மாவட்ட அளவில் திட்டமிடுவதென்ற முறையை மேற்கொண்டு ஆங்காங்கேயுள்ள தேவைகள், வளவாய்ப்புகள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்ஙனமாக, 23 வளர்ச்சி மாவட்டங்களுக்கான தொலைநோக்குத் திட்டங்களை 13 மாவட்ட அளவு திட்ட உட்குழுக்கள் தயாரித்தன. முதலீட்டு முன் மாதிரித் திட்டம், துறைவாரித் திட்டங்கள், மாவட்டத் திட்டங்கள் ஆகிய மூன்றும் கூட்டி இணைக்கப்பெற்று, இம் மாநிலத்திற்கான தொலைநோக்குத் திட்டம் உருவாக்கப்பெற்றது.

கீழ் மட்டத்திலிருந்து உருவாக்கப்படும் மாவட்டத் திட்டங்களும் மேல் மட்டத்திலிருந்து உருவாக்கப்படும் அனைத்திந்திய தேசியத் திட்டமும், இணைந்து பிணைவது மாநிலத் திட்டத்திலேயே. எனவே, இணைந்து செய்யும் இந்த நிலையில் தேசிய ஐந்தாண்டுத் திட்டம் முற்றிலும் கருத்திற் கொள்ளப்பட்டது. இந்த

தொலைநோக்குத் திட்டம் மாநிலத்தின் இயற்கை வளங்கள், நிதி வாயில்கள் ஆகியவை பற்றிய விரிவான மதிப்பீட்டின் அடிப்படையிலமைந்தது; முந்தைய திட்டங்களில் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைக் கருத்திற் கொண்டுள்ளது; அடுத்த பத்தாண்டுகளில் இம் மாநிலத்தின் தேவைகள் எவை என இலக்கிடப்பட்டு, அத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழி முறைகளை ஆராய்ந்து கூறுவது. திட்டம் கொண்டுள்ள குறிக்கோள்களை எவ்வாறு எய்துவதென ஆராய்ந்து அறிவிப்பது. 1974 க்கும் 1984 க்கும் இடையே செயல் படுத்தப்படும் ஐந்தாண்டுக் காலத் திட்டங்களையும் ஆண்டுத் திட்டங்களையும் தன்னுள் பொருத்திக் கொள்ளும் முன்வரைவாகவே இத்தொலைநோக்குத் திட்டம் அமைந்துள்ளது.

தொலைநோக்குத் திட்டம் மேற்கொண்டுள்ள ஏழு குறிக்கோள்களாவன :

1. 1984ஆம் ஆண்டுக்குள் இம்மாநிலத்தின் தலா வருமானத்தை இரட்டித்தல் ;

2. முழு வேலை வாய்ப்பளித்தல் ;

3. வறுமையின் மிகக் கொடிய நிலைகளைத் தெரிவு செய்யப்பட்ட முறையில் நீக்குவது ;

4. பொருளாதார, சமூக ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல் ;

5. சமூக அமைப்பையும், சமூக மனப்பாங்குகளையும் மாற்றி வளர்ச்சிக்கு ஏற்ற சமூக மாறுதல்களை விரைந்து கொணர்தல் ;

6. கலை நிகழ்ச்சிகளாலும், மக்கள் பங்கு கொள்ளும் சமூக நலத் திட்டங்களாலும், பொருளாதார வளர்ச்சிப் பணியை மக்கள் பணியென ஆக்குதல்;

7. திட்டமிடுதல், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளல், நிதிவளம் திரட்டல் ஆகிய முயற்சிகளைப் பரவலாக்குதல்.

II. நோக்கங்கள்

தலா வருமானத்தை இரட்டித்தல் :

தமிழ்நாட்டில் 1970–71 ல் மக்கள் தொகை 4·12 கோடியாக இருந்த போது தலா வருமானம் (1970–71 விலைவாசிப்படி) ரூ. 654 ஆகும். தொலை நோக்குத் திட்டத்தின் முக்கியமான நோக்கங்களில், தலா வருமானத்தை 1983–84-ல் இரட்டித்தலும் ஒன்றாகும். அதாவது 1983–84-ல் தலா வருமானம் ரூ. 1,308 ஆக இருக்க வேண்டும். 1983–84-ல் தமிழ்நாட்டின் மக்கள் தொகை சுமார் 5·37 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதால், அவ்வாண்டில், மாநில மக்களின் மொத்த வருமானம் ரூ. 70,24 கோடியாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டின் மக்கள் வருமானம் எவ்வளவாக இருக்கும் என்பதை அட்டவணை 1 காட்டுகின்றது.

மாநிலத்தின் வளர்ச்சித் துறைகளில் எத்தகைய மாற்றம் இருக்கும் என்பதையும், உற்பத்தியாகும் பொருள்களுக்கு மக்கள் தேவை எந்த வகையாக இருக்கும் என்பதையும் மனதில் வைத்து வெவ்வேறு துறைகளின் உற்பத்தி கணிக்கப்பட்டது. இவ்வாறாக கணிக்கப்பட்ட மாநில மக்கள் வருமானத்தைப் பற்றிய அடுத்த பத்தாண்டுப் புள்ளி விவரங்கள் அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை—1.

துறைவாரி வருமானங்கள்—மதிப்பிடப்பட்டவையும், கருதப்பட்டவையும்

(ரூ. கோடியில்)

துறை.	1970-71. தொகை.	1970-71. சதவீதத்தில்.	1974-75. தொகை.	1974-75. சதவீதத்தில்.	1979-80. தொகை.	1979-80. சதவீதத்தில்.	1984-85. தொகை.	1984-85. சதவீதத்தில்.
(0)	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1. வேளாண்மை உற்பத்தி ..	921	34	1,037	32	1,275	29	1,983	28
2. கால்நடை வளர்ப்பு, காடு பேணுதல் முதலியன	193	7	227	7	326	7	592	8
3. சுரங்கத்தொழிலும், தொழில் துறையும்	225	8	292	9	417	10	799	11
4. மின்சக்தி	45	2	65	2	107	3	186	3
5. சிறுதொழில் அமைப்புகள்	239	9	324	10	468	11	743	10
6. போக்குவரத்து, தொடர்புச் சாதனங்கள்	161	6	194	6	275	6	423	6
7. இதர பணிகள்	902	34	1,102	34	1,463	34	2,510	34
மொத்தம்	2,986	100	3,241	100	4,331	100	7,236	100

அட்டவணை 2

தொலைநோக்குத் திட்டக் காலத்திற்காக இலக்கிடப்பட்டுள்ள வருமான வளர்ச்சியும் முதலீடும்

(ரூ. கோடியில்)

	ஐந்தாவது திட்டம்						ஆறுவது திட்டம்					
	1973 –74	1974 –75	1975 –76	1976 –77	1977 –78	1978 –79	1979 –80	1980 –81	1981 –82	1982 –83	1983 –84	1984 –85
(0)	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)
1. ஆண்டின் தொடக்கத்திலான வருமானம் ..	..	3,100	3,240	3,400	3,588	3,807	4,065	4,362	4,799	5,303	5,875	6,523
2. ஆண்டில் வருமான உயர்வு ..	..	140	160	188	219	258	297	437	504	572	648	733
3. ஆண்டு இறுதியில் வருமானம் ..	3,100	3,240	3,400	3,588	3,807	4,065	4,362	4,799	5,303	5,875	6,523	7,256
4. முதலீடு	403	463	543	636	746	862	982	1,134	1,285	1,457	1,652	..
5. முதலீட்டின் இறுதிநிலைவீதம் (சதவீதத்தில்)*	..	45	50	50	50	45	40	35	30	30	30	..
6. முதலீடு வருமானத்தின் சதவீதமாக (3, 4-ன் சதவீதமாக).	13·00	14·30	15·97	17·75	19·62	21·20	22·50	23·65	24·25	24·82	25·30	..
7. மக்கள் தொகை (கோடியில்) ..	4·40	4·50	4·60	4·69	4·79	4·89	4·98	5·08	5·17	5·27	5·37	5·47
8. தலா வருமானம் (ரூபாயில்) ..	704	720	739	769	795	831	876	945	1,026	1,115	1,215	1,327
9. தலா வருமானத்தின் வளர்ச்சி வீதம் (சதவீதத்தில்).	..	2·22	2·66	3·47	3·89	4·59	5·39	7·83	8·58	8·68	8·96	..
10. மொத்த வருமானத்தின் வளர்ச்சி வீதம் (சதவீதத்தில்).	..	4·55	4·94	5·50	6·10	6·78	7·33	10·00	10·50	10·79	11·03	11·25
	(மூலதன உற்பத்தி விகிதம் 2·9 : 1)						(மூலதன உற்பத்தி விகிதம் 2·25 : 1)					

$$*\text{முதலீட்டின் இறுதிநிலை வீதமாவது} = \frac{\text{முந்திய ஆண்டைக்காட்டிலும் முதலீட்டின் அதிகரிப்பு}}{\text{முந்திய ஆண்டைக்காட்டிலும் வருமான அதிகரிப்பு}}$$

துறைவாரியாகவும் மொத்தமாகவும் தேவைப்படுகிற வருமானக் குறியிலக்குகளை அடைவதற்கு எவ்வளவு முதலீடு தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பு, அதிகரிக்கின்ற மூலதன உற்பத்தி விகிதங்களின் அடிப்படையில் போடப்பட்டது. அதாவது, ஒவ்வொரு துறையிலும் இவ்வளவு உற்பத்தி பெருக இவ்வளவு அதிக மூலதனம் வேண்டும் என்பதே இந்த விகிதக் கணக்கு. இந்த முறையான விகிதங்கள் 1960-61-லிருந்து 1970-71 வரையுள்ள மூலதனத்துக்கும் வருமானத்திற்குமுள்ள தொடர்பை வைத்துக் கணக்கிடப்பட்டு, அவை அட்டவணை 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த விகிதங்கள் அந்தந்தத் துறையில் போடப்படும் மூலதனத்தோடு விஞ்ஞான வளர்ச்சி, பொருள்களின் தர உயர்வு, உற்பத்தித் திறன் முதலானவற்றையும் பொறுத்தவை. மேற்கூறிய காரணங்களினுல், இந்த விகிதங்களில் ஐந்தாவது திட்டக் காலத்தில் உள்ளதைவிட ஆருவது திட்டத்தில் சில மாறுதல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

அட்டவணை 3

தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தில் அதிகரிக்கின்ற மூலதன உற்பத்தி வீதங்கள்

	துறைகள்.	அதிகரிக்கின்ற மூலதன உற்பத்தி வீதங்கள். ஐந்தாவது திட்டம்.	ஆருவது திட்டம்.
		(1)	(2)
1.	வேளாண்மை உற்பத்தி	1·87	1·20
2.	கால்நடை வளர்ப்பு, மீனளம், காடு பேணல் ..	1·46	1·00
3.	சுரங்கத் தொழிலும் தொழில் துறையும் ..	5·45	4·00
4.	மின்சாரம்	14·66	14·00
5.	சிறு தொழில்கள்	0·80	0·60
6.	போக்குவரத்துத் தொடர்புச் சாதனங்கள் ..	2·63	2·00
7.	மற்றப் பணிகள்	3·44	3·40
	மொத்த விகிதத் தொடர்	2·90	2·25

இந்த விகிதங்களை உபயோகித்து எதிர்பார்க்கும் வருமானத்திற்கேற்ற மூலதனங்கள் கணிக்கப்பட்டு, அட்டவணை 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 4

முதலீட்டுத் தேவைகளும் வருமான வளர்ச்சி வீதமும்

(ரூ. கோடியில்)

துறை.	முதலீட்டுத் தேவை.		ஆண்டுவருமான வளர்ச்சி வீதம் (கூட்டுசதவீதம்).		
	ஐந்தாவது திட்டம்.	ஆறுவது திட்டம்.	1970–71 முதல் 1973–74 வரை.	ஐந்தாவது திட்டம்.	ஆறுவது திட்டம்.
	(1)	(2)	(3)	(4)	(5)
1. வேளாண்மை உற்பத்தி	446	849	3·0	4·2	9·2
2, கால்நடை வளர்ப்பு காடு பேணுதல், மீனளங்கள்	145	266	4·1	7·5	12·7
3. சுரங்கத் தொழில், தொழில்துறை	682	1,530	6·8	7·9	13·9
4. மின்சக்தி	612	1,105	8·6	10·4	11·7
5. சிறுதொழில் அமைப்புகள்	115	165	7·0	7·6	9·7
6. போக்குவரத்து தொடர்புச் சாதனங்கள்	280	500	4·7	7·3	8·9
7. இதர பணிகள்.. ..	970	2,095	5·2	5·8	11·4
மொத்தம் ..	3,250	6,510	4·0	6·1	10·9

இந்த மொத்த மூலதனத்தில் மாநில அரசுத் துறை, மத்திய அரசுத் துறை, தனியார் துறை ஆகியவைகளின் பங்கென்ன என்பதைக் கடந்த கால, தற்போதுள்ள அமைப்பு முறையை வைத்தும், நாம் முதலீடு செய்யும் திட்டங்களை வைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அது அடுத்த பக்கத்தில் அட்டவணை 5-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 5

மூன்று முதலீட்டு அமைப்புகளுக்கிடையேயான முதலீட்டு ஒதுக்கம்

(ரூ. கோடியில்)

முதலீட்டு அமைப்பு	ஐந்தாவது திட்டம் (1974–79).	ஆறாவது திட்டம் (1979–84).
(0)	(1)	(2)
(அ) மாநிலத் துறை	1,365	2,734
(ஆ) மத்திய அரசின் நேரடி முதலீடு	780	1,562
(இ) தனியார் துறை	1,105	2,214
மொத்தம்	3,250	6,510

அட்டவணை 6

முதலீடு செய்யும் மூன்று அமைப்புகளுக்கு இடையேயான துறைவாரி முதலீட்டு ஒதுக்கீடு

(ரூ. கோடியில்)

துறை	ஐந்தாவது திட்டம்					ஆறாவது திட்டம்				
	மாநில முதலீடு	மத்திய அரசின் நேரடி முதலீடு	பொதுத் துறையின் மொத்த முதலீடு	தனியார் துறை முதலீடு	மொத்த முதலீடு	மாநில முதலீடு	மத்திய அரசின் நேரடி முதலீடு	பொதுத் துறையின் மொத்த முதலீடு	தனியார் துறை முதலீடு	மொத்த முதலீடு
(0)	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1. வேளாண்மை உற்பத்தி	200 (44.8)	10 (2.3)	210 (47.1)	236 (52.9)	446	425 (50.0)	14 (1.7)	439 (51.7)	410 (48.3)	849
2. கால் நடை வளர்ப்பு, காடுபேணுதல், மீனளம்	50 (34.5)	5 (3.4)	55 (37.9)	90 (62.1)	145	110 (41.4)	9 (3.3)	119 (44.7)	147 (55.3)	226
3. சுரங்கத் தொழிலும் தொழில் துறையும்	62 (9.1)	375 (55.0)	437 (64.1)	245 (35.9)	682	190 (12.4)	630 (41.2)	820 (53.6)	710 (46.4)	1,530
4. மின்சக்தி ..	412 (67.3)	200 (32.7)	612 (100.0)	..	612	635 (57.5)	470 (42.5)	1,105 (100.0)	..	1,105
5. சிறு தொழில்கள் ..	43 (37.4)	..	43 (37.4)	72 (62.6)	115	100 (60.6)	..	100 (60.6)	65 (39.4)	165
6. போக்குவரத்து, செய்தித் தொடர்பு ..	98 (35.0)	135 (48.2)	233 (83.2)	47 (16.8)	280	210 (42.0)	250 (50.0)	460 (92.0)	40 (8.0)	500
7. இதர பணிகள் ..	500 (51.5)	55 (5.7)	555 (57.2)	415 (42.8)	970	1,064 (50.8)	189 (9.0)	1,253 (59.8)	842 (40.2)	2,095
மொத்தம் ..	1365 (42·0)	780 (24·0)	2145 (66·0)	1105 (34·0)	3250	2,734 (42·0)	1,562 (24·0)	4,296 (66·0)	2,214 (34·0)	6,510

(அடைப்புக்குள் இருக்கும் இலக்கங்கள் ஒவ்வொரு வரிசையிலும் மொத்த சதவீதத்தைக் காட்டுகின்றன)

எந்தெந்தத் துறைகளில் எந்த அளவுகளில் மாநிலத்துறையில் முதலீடு செய்யப்படுமென்கிற விவரங்கள் அட்டவணை 7-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 7

மாநிலத் துறையின் துறைவாரியான நிதி ஒதுக்கீடு விவரங்கள்

(ரூ. கோடியில்)

இனம்	ஐந்தாவது, ஆறுவது திட்ட மொத்தம்	ஐந்தாவது திட்டம்	ஆறுவது திட்டம்
(0)	(1)	(2)	(3)
அ. வேளாண்மை	625·00	200·00	425·00
1. வேளாண்மை உற்பத்தி (பண்டக சாலை, விற்பனை வசதி உள்பட)	178·00	53·00	125·00
2. சிறு பாசனம்	178·00	60·00	118·00
3. மண்வளப் பாதுகாப்பு	30·00	10·00	20·00
4. ஆயக்கட்டு மேம்பாடு	19·00	7·00	12·00
5. நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளத் தடுப்பு	220·00	70·00	150·00
ஆ. கால்நடை வளர்ப்பு, காடு பேணல், மீனளம்	160·00	50·00	110·00
1. கால்நடை வளர்ப்பு	53·00	17·00	36·00
2. பால்பண்ணை, பால் வழங்குதல் ..	16·00	4·00	12·00
3. காடு பேணல்	23·00	8·00	15·00
4. சின்கோனு	3·00	1·00	2·00
5. மீனளம்	65·00	20·00	45·00
இ. சுரங்கத் தொழிலும், உற்பத்தியும் ..	252·00	62·00	190·00
1. பெரிய-நடுத்தரத் தொழில்கள் ..	246·00	60·00	186·00
2. கனிப்பொருள் மேம்பாடு	6·00	2·00	4·00
ஈ. மின்சாரம்	1,047·00	412·00	635·00
மின்சக்தி மேம்பாடு	1,047·00	412·00	635·00
உ. சிறுதொழில்கள்	143·00	43·00	100·00
ஊ. போக்குவரத்தும், செய்தித் தொடர்பும்	308·00	98·00	210·00
1. சாலைகள்	236·00	76·00	160·00
2. சாலைப்போக்குவரத்து	37·00	12·00	25·00
3. உள்நாட்டு நீர்வழி	9·50	2·50	7·00
4. துறைமுகங்கள்-கப்பல் துறைகள் ..	11·50	3·50	8·00
5. சுற்றுலா	14·00	4·00	10·00

இனம்	ஐந்தாவது ஆறுவது திட்ட மொத்தம்	ஐந்தாவது திட்டம்	ஆறுவது திட்டம்
(0)	(1)	(2)	(3)
எ. இதர பணிகள்	1,564·00	500·00	1,064·00
1. பொதுக்கல்வி	267·45	97·45	170·00
2. தொழில் நுட்பக் கல்வி	42·00	12·00	30·00
3. சுகாதாரம், குடும்ப நலத் திட்டம்	170·00	50·00	120·00
4. ஊட்ட உணவு	203·00	58·00	145·00
5. குடிநீர் வழங்கல், துப்புரவு ..	320·00	100·00	220·00
6. வீட்டுவசதி (நகர்ப்புறம்)	202·00	62·00	140·00
7. நகர் அமைப்புத் திட்டமும், நகர்ப்புற மேம்பாடும்	38·00	12·00	26·00
8. சமூக நலன்	38·05	11·75	26·30
9. பிற்பட்ட வகுப்பினரின் நலன் ..	77·00	25·00	52·00
10. மலைப்புற மேம்பாடு	10·00	4·00	6·00
11. தொழிலாளர் நலன்	5·00	1·80	3·20
12. கூட்டுறவு	61·00	21·00	40·00
13. சமூக மேம்பாடு	95·00	32·00	63·00
14. பண்பாட்டுத் திட்டம் (வளர்ச்சிப் பணியில் மக்களை ஈடுபடுத்துதல்) ..	5·00	2·00	3·00
15. கைவினைஞர் பயிற்சியும் வேலை வாய்ப்பு பணிகளும்	14·50	5·00	9·50
16. புள்ளியியல் மதிப்பீட்டு அமைப்பு ..	8·00	3·00	5·00
17. மதிப்பீட்டு அமைப்பு	2·50	1·00	1·50
18. எடைகளும், அளவைகளும் ..	3·00	1·00	2·00
19. செய்தி, விளம்பரம் (மக்கள் கூட்டுறவு)	2·50	1·00	1·50
மொத்தம் .. .. —	4,099·00	1,365·00	2,734·00

இலக்குகளின் மறு ஆய்வு.

அட்டவணை 1-ல் இருந்து, மொத்த வருமான வளர்ச்சியில் 28 சதவீதம் ஐந்தாவது திட்டத்திலும், 72 சதவீதம் ஆறுவது திட்டத்திலும் எழுவதைக் காணலாம்.

மொத்த மூலதனத்தில் மூன்றில் ஒருபங்கு ஐந்தாவது திட்டக் காலத்திலும், மூன்றில் இரண்டு பங்கு ஆறுவது திட்டக் காலத்திலும் முதலீடு செய்கிறோம்.

வருமான வளர்ச்சிக்கும், மூலதன வளர்ச்சிக்குமிடையேயுள்ள விகிதமானது ஆறுவது திட்டக் காலத்திலுள்ளதைவிட ஐந்தாவது திட்டக் காலத்தில் அதிகமாக உள்ளது. அதாவது, ஐந்தாவது திட்டக் காலத்தில் ஆறுவது திட்டக் காலத்தைவிட மூலதனப் பெருக்கம் சற்றுக் கடினமானதாகும். இந்த ஐந்தாவது திட்டக் காலத்தில்தான் விரைந்த வளர்ச்சிக்குத் தேவையான சமூக-பொருளாதார அடித்தள அமைப்புக்களை உறுதி செய்தல் வேண்டும்.

ஆண்டின் சராசரி வளர்ச்சி வீதம் ஐந்தாவது திட்டக் காலத்தில் சுமார் 6 சதவீதமும், ஆறுவது திட்டக் காலத்தில் சுமார் 10 சதவீதமுமாகும். அடிப்படையிலிருக்கும் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன் துறை, வனத் துறை

ஆகியவற்றை ஒருபுறமும், இரண்டாம் அடுக்கிலிருக்கும் தொழில்துறையை மற்ருெரு புறமும் வைத்து அவற்றின் வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்த்தால், மொத்த வருமானம் பெருக, தொழில்துறையின் பங்கு மிகுந்தும், மற்றதன் பங்கு குறைந்தும் காணப்படும்.

ஐந்தாவது திட்டத்தில் ஏற்படும் வருமான வளர்ச்சியின் 50 சதவீதத்தை அக்கால எல்லையுள் முதலீடு செய்கிருேம். ஆருவது திட்டத்தில் ஏற்படுகிற வருமான வளர்ச்சியில் ஆரம்பத்தில் 40 சதவீதமும், இறுதியில் 30 சதவீதமும் முதலீடு செய்கிருேம். எனவே, வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி திரட்டுவதில் பெருமுயற்சி தேவை என்பது வலியுறுத்தப்படுகிறது. மூலதனப் பெருக்கம் ஐந்தாவது திட்டக் காலத்தில் சற்று கடினமானதாக இருக்குமென்பதையும், மூலதனம் திரட்டுவதில், மாநில அரசு வரி விதித்தல், கடன் எழுப்புதல், மத்தியஅரசு மாநிலத்திற்குக் கொடுக்கும் திட்டத் தொகை மிகுதல் முதலிய எல்லா துறைகளிலும் முன்னிலும் அதிகமாக எதிர்பார்க்க வேண்டும்.

சில குறிப்பிட்ட பொருள்களை எந்த அளவுக்கு உற்பத்தி செய்யக் குறியிலக்கிட்டுள்ளோம் என்பதை அட்டவணை 8 காட்டுகின்றது.

அட்டவணை 8

தெரிவு செய்யப்பட்ட இனங்களின் மதிப்பிடப்பட்ட உற்பத்தி–1974-84

பொருள்/இனம்	அலகு	மதிப்பிடப்பட்ட உற்பத்தி 1973–74	1978–79	1983–84
(0)	(1)	(2)	(3)	(4)
I. வேளாண்மை உற்பத்தி				
1. அரிசி	லட்சம் டன்னிகள்*	57·00	69·00	76·50
2. மொத்த சிறுதானியங்கள் ..	ஷை ..	16·85	22·55	28·30
3. மொத்த பருப்பு வகைகள் ..	ஷை ..	2·43	4·72	7·68
4. எண்ணெய் வித்துக்கள்				
(அ) வேர்க்கடலை	ஷை ..	9·17	15·60	20·97
(ஆ) எள்	ஷை ..	0·39	0·44	0·48
(இ) சூரியகாந்திப் பூ ..	ஷை ...	..	1·50	3·00
(ஈ) ஆமணக்கு	ஷை ..	0·04	0·06	0·08
5. பருத்தி	லட்சம் பொதிகள் ..	6·76	9·22	11·88
II. கால்நடைப் பராமரிப்பு, மீனளம், காடு பேணுதல்				
1. பால்	மில்லியன் கிலோ ..	1,008	2,260	6,016
2. முட்டைகள்	மில்லியன் எண்கள்..	365	..	3,285
3. இறைச்சி	மில்லியன் கி.கிராம்	63	..	157
4. மீன் உற்பத்தி				
(அ) உள்நாட்டு நீர்நிலை மீன்	லட்சம் டன்னிகள்..	2	2·3	3·0
(ஆ) கடல் மீன்	ஷை ...	3	5·0	9·4
5. கூழ்மரம்	ஆயிரம் டன்னிகள்..	171	..	350
6. வெட்டுமரம்	ஷை ..	69	..	80
7. தீக்குச்சி மரம்	டன்னிகள்.. ..	175	..	200
8. தோல் பதனிடும் பொருள்கள்	ஷை ..	1,200	..	6,000
9. சந்தன மரம்	ஷை ..	1,600	..	1,500
10. விறகு மரம்	லட்சம் டன்னிகள்..	100	..	110
III. சுரங்கத் தொழிலும், தொழிற் துறையும்				
1. சுரங்கத் தொழில்				
பழுப்பு நிலக்கரி	மில்லியன் டன்னிகள்	4·5 (1971–72)	..	12
2. நூற்பு நெசவாலைகள்				
அ. பருத்தி நூல்	ஆயிரம் டன்னிகள்..	175	200	300
ஆ. செயற்கை இழைநூல் ...	டன்னிகள் ...	40,000	120,000	240,000
இ. துணி-ஆலைத் துறை ..	மில்லியன் மீட்டர்கள்	167	192	216
ஈ. துணி-சிறு தொழில் துறை	ஷை ...	576	659	743
ஊ. நைலான் நெசவு நூல் ..	டன்னிகள் ..	..	2,100	4,200

* Tonne (டன்னி)= 1000 கிலோ கிராம் (அ) 2204·6 ராத்தல் கொண்ட நிறை.
Ton (டன்)= 1016·1 கிலோ கிராம் (அ) 2240 ராத்தல் கொண்ட நிறை.

பொருள்/இனம்	அலகு	மதிப்பிடப்பட்ட உற்பத்தி		
		1973–74	1978–79	1983–84
(0)	(1)	(2)	(3)	(4)
3. மோட்டார் வாகனங்களும் துணைப் பொருள்களும்				
அ. மோட்டார் சைக்கிள்கள், பஸ் ஸ்கூட்டர்கள்	எண்கள்	15,000	30,000	90,000
ஆ. கார்கள்	ஷை	3,500	6,000	22,500
இ. சைக்கிள்கள்	ஆயிரம் எண்கள் ..	500	800	1,000
ஈ. வணிக ஊர்திகள்	எண்கள் ..	7,000	12,000	25,000
உ. மோட்டார் வாகனங்களுக்கான துணைப்பொருள்கள்.	கோடி ரூபாயில் ..	40	70	125
ஊ. மோட்டார் வாகன டயர்கள், டியூப்கள்.	லட்சம் எண்கள் ..	13	16	20
4. உலோகங்களும், இயந்திரங்களும்				
அ. அலுமினியம்	ஆயிரம் டன்னிகள் ..	20	40	100
ஆ. மிருதுவான இரும்பு	ஷை ..	..	50	100
இ. செம்புப் பொருள்கள் ..	ஷை ..	..	..	20
ஈ. இரும்பு அல்லாத உலோகங்கள்	கோடி ரூபாயில் ..	..	..	8·5
உ. டிராக்டர்கள்	எண்கள்	5,500	7,500	30,000
ஊ. இயந்திரச் சாதனங்கள் ..	கோடி ரூபாயில் ..	..	..	45
எ. இயந்திர கருவிச் சாதனங்கள்	ஷை ..	..	..	10
ஏ. எஃகுப் பொருள்கள்	ஆயிரம் டன்னிகள் ..	..	200	990
5. ரசாயனப் பொருள்களும் உரங்களும்				
அ. எரிசோடா	ஆயிரம் டன்னிகள் ..	150	300	600
ஆ. கார சோடா	ஷை ..	..	66	132
இ. பொட்டாசியம் குளோரேட் ..	ஷை ..	0·7	3·2	6·4
ஈ. ஆல்கஹால்	மில்லியன் காலன்கள்	9	12	15
உ. சோடியம் ஹைட்ரோ சல்பேட்	ஆயிரம் டன்னிகள்	..	3·3	6·6
ஊ. பண்படுத்தப்படாத தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட மூலப்பொருள்கள்	மில்லியன் டன்னிகள்	2·8	4·0	10·0
எ. உரங்கள் கலப்பு கூட்டு ..	ஆயிரம் டன்னிகள்	200	450	700
6. பிற வினைமுடிந்த நுகர் பொருள்கள்.				
அ. சிமெண்ட்	ஆயிரம் டன்னிகள்	3,000	4,500	6,000
ஆ. சர்க்கரை	ஷை ..	350	800	1,100
இ. காகிதம்	ஷை	50	90	165
ஈ. சிகரெட்டுகள்	மில்லியன் டன்னிகள்.	..	4,500	9,000
உ. வனஸ்பதி	டன்னிகள் ..	29,000	..	40,000

பொருள்/இனம்	அலகு	மதிப்பிடப்பட்ட உற்பத்தி 1973–74	1978–79	1983–84
(0)	(1)	(2)	(3)	(4)
IV. மின்சக்தி	மில்லியன் யூனிட்டுகள்	7,650	14,451	27,128
V. போக்குவரத்து				
1. சாலைகளின் நீளம்	கிலோ மீட்டர்கள்.	77,900	81,000	87,200
2. இருப்புப் பாதைகளின் நீளம்* ..	ஷை ..	3,800	4,300	4,600
VI. ஆரோக்கியம், குடிநீர் வழங்கல்				
1. சிறிய ஆரோக்கிய மையங்கள்..	எண் ..	2,700	..	3,700
2. மருத்துவர்-மக்கள் தொகை விகிதம்	ஷை ..	1:5000	..	1:3000
3. படுக்கை வசதி-மக்கள் தொகை விகிதம்	ஷை ..	1:2000	..	1:1000
4. செவிலியர்-படுக்கை வசதி விகிதம்	ஷை ..	1:8 (கல்லூரி இணைந்திராத மருத்துவ மனைகளில்) 1:15 (கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளில்)	..	1:5
5. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்	சிறு கிராமங்களின் எண்ணிக்கை.	48,005	..	52,658
VII. கல்வி				
1. பள்ளிக் கல்வி				
அ. தொடக்க நிலைப்பள்ளி ..	பதிவு செய்தலின் சதவீதம்	97·00	100·00	100·00
ஆ. நடுநிலைப் பள்ளி	ஷை ..	61·15	92·80	100·00
இ. உயாநிலைப் பள்ளி	ஷை ..	39·27	60·05	75·00
2. பள்ளி நேரத்திற்குப் புறம்பான கல்வி				
அ தொடக்கநிலைப் பள்ளி ..	பதிவு செய்தலின் சதவீதம்.	..	100·00	100·00
ஆ. நடுநிலைப் பள்ளி	ஷை	..	20·00	40·00
இ. உயர்நிலைப் பள்ளி ..	ஷை	..	10·00	20·00
3. கல்லூரிக் கல்வி				
அ. மாணவர்கள்	எண்கள் ..	2,16,658	2,58,318	2,99,978
ஆ. ஆசிரியர்கள்	ஷை ..	11,031	13,146	15,261
4. கல்லூரிக் கல்வி நேரத்திற்கு புறம்பான கல்வி				
மாணவர்கள் ..	எண்கள் ..	..	1,80,000	3,00,000
5. முதியோர் கல்வி				
எழுதப்படிக்கத் தெரிந்த முதியோர்	சதவீதம் ..	40	100	100

* இருப்புப் பாதைகளுக்கான வளர்ச்சித் திட்டம் பெரும்பாலும் மீட்டர் அகல (Metre-Gauge) இருப்புப் பாதையை அதிக அகல (Broad-Gauge) இருப்புப் பாதையாக மாற்றும் பணியும் சில இருப்புப் பாதைகளை மின்சார மயமாக்கப்பட்ட பாதையாக மாற்றும் பணியும் அடங்குகிறது.

முழு வேலை வாய்ப்பினை நோக்கி

கிடைத்த புள்ளி விவரங்களின் உதவி கொண்டு, திட்டமிடுவதற்குத் தேவையான வேலைவாய்ப்பு மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகளின் படி குறை-வேலையையும் (Under-employment) கணக்கில் எடுத்துக் கொண்டால், மொத்த வேலையின்மை 1973–74 ஆம் ஆண்டில் 52 லட்சமாகவும், குறை வேலையைத் தள்ளிவிட்டால் மொத்த வேலையின்மை 17 லட்சமாகவும் ஆகிறது. மக்கள் தொகையில் 39 சதவிகிதத்தினர் உழைக்கும் திறனுடையோராவர் என்கின்ற அடிப்படையில் மேற்கூறிய மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன. தொழிற்சாலைகள் போன்ற முறையான அமைப்புகள் உள்ளனவும், அஃது இல்லாதனவுமான எல்லாத் துறைகளிலுள்ள வேலைவாய்ப்புகளின் மதிப்பீட்டினை வைத்தே மொத்த வேலைவாய்ப்பு கணக்கிடப்பட்டிருக்கின்றது. தொலைநோக்குத் திட்டக்கால முடிவில் உழைக்கும் திறமுடையோரது எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 39 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயருமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

வறுமை என்பது வேலையின்மை, குறை வேலை இவற்றுடன் நேரிணைப்புக் கொண்டதாகும். இந்த நிலையில், ஒரு தனி மனிதனின் வருவாய் என்ன என்று பார்ப்பதிலும், ஒரு குடும்பத்தின் சராசரி வருவாய் என்ன என்று பார்ப்பதே பொருளாதார நலனை அளவிட பொருத்தமான கருவியாக அமைகின்றது.

இயற்கையாகவே ஏற்படக்கூடிய வேலைவாய்ப்புப் பெருக்கம், மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதால் ஏற்படக்கூடிய வேலை வாய்ப்புப் பெருக்கம் ஆகிய இரண்டின் அடிப்படையில், தொலைநோக்குத் திட்டக் காலத்தில் ஏற்படக்கூடிய வேலைவாய்ப்பு மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகளின்படி 1983–84 ஆம் ஆண்டில் 212 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படும். இவ்வாறாக மொத்த வேலைவாய்ப்பற்றோர் 3 லட்சம் பேராகக் குறைவர் (215 லட்சம் உழைக்கும் திறமுடையோரிலிருந்து 212 லட்சம் வேலையிலிருப் போரைக் கழிக்க); அதாவது வேலை வாய்ப்பற்றோர் மாநில மக்கள் தொகையில் 0·6 சதவீதத்தினராயும் உழைக்கும் திறமுடையோரில் 1·4 சதவீதத்தினராயும் இருப்பர். வேலை வாய்ப்புப் பெருக்கத்தை மாநிலத்தின் நிகர உற்பத்தியுடன் இணைத்து, சென்ற கால விவரங்களின் அடிப்படையில் எதிர்காலக் கணிப்பு செய்து பார்க்குமிடத்தும், மேற்கூறிய முழுவேலை வாய்ப்பு நிலையே தோன்றுகிறது.

இந்தத் திட்டத்தில் பலதரப்பட்ட துறைகளின் கீழ் கூறப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்கள் கணிசமான அளவில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தும். இவை முற்றும் கணிக்கப்பட்டு மேற்கூறிய வேலைவாய்ப்பு மதிப்பீடுகளில் சேர்க்கப் பட்டுள்ளன. இருப்பினும், குறுகிய கால வரம்பில் வேலையின்மை பிரச்னைக்குத் தீர்வுகாண பின்வரும் திட்டங்கள் மேற்கொள்ளலாகும்:

(அ) உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடையே வேலையின்மையைத் தீர்ப்பதற்கான திட்டம்: பணிச்சார்புடைய கல்வித் திட்டம், பள்ளிக்கப்பாற் பட்ட கல்வி நிலைத் திட்டம் ஆகிய திட்டங்கள், கிட்டத்தட்ட 13,000 வேலையற்ற உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கும்.

(ஆ) வேளாண்-பணி நிலையங்கள்: இந்நிலையங்கள் மேலும் 1,200 நிறுவப்பட்டால், கிட்டத்தட்ட 12,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முடியும்.

(இ) வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு உதவி செய்யும் வகையில் அவருள் தொழில் முனைவோரைக் கண்டுகொள்வதற்கான ஒரு சிறப்பு உட்குழு ஏற்படுத்தலாம். இதன் மூலம் 15,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டலாம்.

(ஈ) சாலை அமைப்புத் திட்டப்பணிகளுக்கான முன் நடவடிக்கையை மேற்கொள்ளல்: இத்திட்டத்தால் 6,500 பொறியாளர்கள், 900 பட்டயதாரர்கள், 1,800 கைவினைஞர்கள் மற்றும் சிறு பயிற்சியுடையோரும், பயிற்சியற்றோருமாகிய 4,500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும்.

(உ) கல்வி பயின்று வேலையில்லாதவர்க்கான சிறப்பு வேலைத்திட்டங்கள்: கல்வி பயின்று வேலையில்லாதிருப்போருக்காகக் கட்டடங்களைப் பராமரித்தலின் மூலம் சுய வேலைவாய்ப்பு, பண்டங்கள் வாங்குவோருக்கு அறிவுரை வழங்குதல் போன்ற 100 செயற்திட்டங்கள் கருத்துரைக்கப்பட்டுள்ளன.

(ஊ) தொன்றுதொட்டு வரும் பல தொழில்களைப் புதுமை முறையில் மாற்றியமைத்தல் : சலவையாளர், தச்சர் முதலிய பரம்பரைத் தொழிலாளர்களுக்கு நிதி உதவி அளிப்பதன் மூலம், கிராமப்புற மக்களிடையே உள்ள வேலையின்மையினைக் கிட்டத்தட்ட 50,000 பேர்கள் அளவுக்குக் குறைக்க முடியும். இந்த நிதி உதவி ரூ. 1,000 முதல் ரூ. 3,000 வரை இருக்கலாம்.

(எ) கிராமப்புறங்களில் வேலையில்லாதவருக்கான ஒருங்கிணைந்த திட்டம் : கறவைப் பசுக்கள், கோழிப்பண்ணைகள் அல்லது கிராமத் தொழில்கள் நடத்தத் தேவையான கருவிகளை இவை மூலம் கிட்டத்தட்ட 5 லட்சம் பேருக்கு உடனடியாக வழங்க முடியும். ஒரு குடும்பத்திற்கு ரூ. 3,000 வரை நிதி உதவி கொடுக்கலாம்.

(ஏ) வீட்டு வசதிக்கான கிராமப்புற தொழிற்பேட்டைகள்: வீடுகள் கட்டத் தேவைப்படும் பொருள்களைத் தயாரிக்கவும் மற்றும் கிராமப்புறங்களில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே வீடுகள் கட்டவும் நான்கு தொழிற்பேட்டைகள் தொடங்கப்படலாம். வேலையற்ற பட்டதாரிகள், கைவினைஞர்கள் மற்றும் பட்டயதாரர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

வறுமையை எதிர்த்துப் போரிடுதல்

வறுமைப் பிரச்னையை, உணவு ஊட்டம் மற்றும் குறைந்த அளவுத் தேவைகள் ஆகிய கோணங்களிலிருந்து ஆராயலாம். மாநிலத்தில் 16.95 மில்லியன் மக்கள் உணவு ஊட்ட வறுமை வரம்பிற்குக் கீழ் வாழ்கின்றனர் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 28.71 மில்லியன் மக்கள் குறைந்த அளவுத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்து கொள்ள முடியவில்லை.

வறுமையின் மிகக் கொடிய கூறுகளைத் தெரிந்தெடுத்து, அவற்றினைக் குறைத்திட ஒரு நியாயமான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். இதனைச் செய்திட பின்வரும் வழிமுறைகள் ஏற்றவை: (அ) வறிய மக்களின் இன்றியமையாத் தேவைகளை நிறைவு செய்தல் ; (ஆ) வறுமையில் வாழும் மக்களுக்குத் தேவையான அவசியப் பொருள்களைக் குறைந்த விலையில் வழங்கல்.

குறைந்த அளவுத் தேவைகள்.—கல்விக்கான வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எல்லாருக்கும் அடிப்படை ஆதாரக் கல்வி விரிவுபடுத்தப்படும் ; மற்றும் வேலைவாய்ப்பு அளிக்கவல்ல பணிசார் கல்வியும் புகட்டப்படும். பள்ளிப் படிப்பை முடிக்காது நிறுத்திவிடும் 6—11 வயதுப் பிரிவினரிடத்தும், மற்றும் வயதுவந்த ஆண்—பெண்களில் எழுத்தறிவற்ற 60 சதவீதத்தினரிடத்தும் தனிக் கவனம் செலுத்தப்படும். பல நிலை மருத்துவ மையங்கள், உதவி மையங்கள், நாட்டு மருத்துவப் பணிகள், பள்ளிப்பருவம் எய்தாத இளஞ் சிறார்கள் மற்றும் சூலுற்ற தாய்மார்களுக்கான ஊட்ட உணவுத் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் அடிப்படை மருத்துவப் பணி வசதிகள் விரிவுபடுத்தப்படும். கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், நிலமற்ற தொழிலாளர்களுக்கு வீடு கட்ட மனைகள் வழங்கப்படும். நகர்ப்புறங்களில் வாழும் ஏழைமக்களுக்கு ஏற்ற புகலிடம் அளிக்கும் வகையில், குடிசைமாற்றுத் திட்டம் விரிவுபடுத்தப்படும். தேவையுள்ள எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்படும். இந்த எல்லா வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்த ரூ. 651 கோடி செலவாகும்.

குறைந்த விலையில் உணவுப் பொருள்களை வழங்குதல்.—கிராமப்புறங்களில் உள்ள வறியவர்களில் மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்குக் குறைந்த விலையில் இன்றியமையாத் தேவைகளான அரிசி, பருப்பு வகைகள், சர்க்கரை, எண்ணெய், மண்ணெண்ணெய், மோட்டா ரகத்துணி ஆகியவை கிடைக்கும்படிச் செய்ய அமைப்பு ஒன்று நிறுவப்படும். வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் குறைந்த அளவுத் தேவைகள் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதின்மூலம் ஏழ்மை வரம்பிற்குக் கீழே உள்ளவர்கள் போதிய பயன் பெறுவர். இத்திட்டத்தினால் பயன் பெறுவோரிடையே வேலை செய்வதற்கான ஊக்கம் குறைந்து விடாதிருக்கும்படி பார்த்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இப்பணியில் வேலையளிக்கும் தொழில் நிறுவனங்கள், ஊராட்சிகள், அறநிலையங்கள், மற்றும் ஏனைய சிறப்பு நிறுவனங்கள் ஆகியவற்றை ஏற்ற முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

செயல்பாட்டு நிலைகள்.—இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான முதல் நடவடிக்கை, இன்றியமையாத பண்டங்களை அரசு பெருமளவில் முன் கூட்டியே சேகரித்து வைத்துக் கொள்வதாகும். இரண்டாவது தேவை, மிகப் பரவலாக வழங்கும் அமைப்பு. இதற்கான கட்டுக்கோப்பு நியாயவிலைக் கடைகள் என்கின்ற உருவில் ஏற்கனவே அமைந்திருக்கிறது. மூன்றாவதாக, நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள வசதி படைத்தவர்களின் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். தேவையிருப்பின் இத்தகைய செலவினங்கள் மீது தக்க வரி விதித்தும்கூட இக்கட்டுப்பாட்டினைக் கொண்டுவரவேண்டியிருக்கலாம். நான்காவதாக, அரசு உணவுப் பொருள் வழங்கும் துறைக்கு உரிய அதிகாரங்கள் வழங்கவேண்டும். அல்லது, இத்திட்டத்தினைச் செயல்படுத்த புதியதொரு அரசுத்துறை ஏற்படுத்த வேண்டும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம், இன்றியமையாத பண்டங்கள் ஏனையோருக்கும் நியாய விலையில் கிடைக்க வழிகோல முடியும்.

பொருளாதார–சமூக நீதி

நிறுவன அமைப்பை மாற்றிப் புதுப்பித்தலும், பொருளாதார—சமூக ஏற்றத்தாழ்வைக் குறைத்தலும் தொலைநோக்குத் திட்டத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும். வெவ்வேறு பிரிவு மக்களிடையே வருமானப் பகிர்வில் வேறுபாடுகள் இருப்பதோடு, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிடையே கருதத்தக்க அளவில் ஏற்றத்தாழ்வு உள்ளமையும் அறியப்படுகிறது. எனவே, அரிசனங்கள், பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர் ஆகிய இவர்களுக்கான, மற்றும் பின்தங்கிய பகுதிகளுக்கான சிறப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவது தேவையாகிறது. வகுப்பு—சாதி வேறுபாடற்ற புதிய பாணிச் சமுதாயத்தை ஏற்படுத்தி, உழைக்கும் திறனுடைய ஒவ்வொருவருக்கும் சம வாய்ப்பளித்து, திறமையான குடிமகனின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட்டால்தான் வெவ்வேறு சமூகங்களுக்கிடையே தற்போதுள்ள ஏற்றத்தாழ்வு குறைக்கப்பட்டு, இறுதியில் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

இவ்வகையில் வேளாண்மைச் சமுதாய அமைப்பை மாற்றியமைப்பது முக்கியமானதாக இருக்கிறது. இந்நோக்கத்தை அடைய, அரசுக்கும் நிலத்தை உழுபவருக்கும் நடுவிலுள்ள இடைநிலையாளரை ஒழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இவ்வழியில் தமிழ்நாடு, பட்டாக்கள் வழங்குவது, நிலமற்றவர்களுக்கு நிலம் அளிப்பது போன்றவை மூலம் கணிசமாக முன்னேறியுள்ளது. தொலைநோக்குத்திட்டம் வேளாண்மைத்துறையில் சமத்துவத்தைக்கொண்டுவரும் திட்டங்களுக்கும், திட்டப்பணிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்துகிறது. இத்திட்டங்களில் மக்களை இணைப்பு கொள்ளச் செய்வது வெற்றிக்கு மிக அவசியம். இக் குறிக்கோளை எய்துவதற்கான முக்கிய வழிமுறை அடிமட்டத்திலிருந்து திட்டமிடுதலாகும்.

அடுத்த முக்கிய நோக்கம் சமூக மாற்றத்தைக்கொண்டுவருவதாகும். முடிவுக்கான ஒரு வழிமுறையாக மட்டுமல்லாமல், சமூக மாற்றம் ஒரு முடிவாகவும் இருக்கிறது. வகுப்புவாதமற்ற, சாதியற்ற சமுதாயத்தை ஏற்படுத்துவது நோக்கமாக உள்ளது. சிறார்களை பள்ளி செல்வதற்கு முன்பான நிலையில் நல்ல சமூக நடவடிக்கைகளைப் பெறுமாறு செய்ய மும்முர சமூகக் கல்வித் திட்டம் கருத்துரைக்கப்படுகிறது. சரியான வகை சமூக மாற்றம் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும். திறமையான, கடின உழைப்புத் தரும் துணிவுள்ள பகுத்தறியும் மக்களால் இச்சமூக மாற்றத்தைப் பெறலாம். இந்நோக்கத்தை வெற்றி கொள்ள வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகளைத் தெரிவு செய்து, அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். விவசாயிகளின் மன்றங்கள், கைவினைஞர் மன்றங்கள், மகளிர் மன்றங்கள் போன்ற பணி செய் மன்றங்களும், பொதுமன்றங்களும் 20 முதல் 50 உறுப்பினர்களைக் கொண்டு கிராம அளவில் மாநிலம் முழுவதும் ஏற்படுத்தப்படவேண்டும். இத்திட்டம் தமிழ்நாட்டின் எல்லாக் கிராமங்களிலும், நடுத்தர நகர்ப்புறங்களிலும் நிறைவேற்றப்பெற வேண்டும்.

சாதிப் பெயர்களையும், பட்டப் பெயர்களையும் பயன்படுத்துவது தடுக்கப்பட வேண்டும். முதல் நடவடிக்கையாக, அரசின் உதவி மானியங்கள் குறிப்பிட்ட சாதி மற்றும் சமூகப் பிரிவினரின் பெயரில் அமைந்த முகவரமைப்புகளுக்கும், நிறுவனங்களுக்கும் மறுக்கப்படலாம்.

சட்டத்தின் வாயிலாக, சடங்குகள், விழாக்கள் போன்ற வீணான ஆடம்பரச் செலவைக் கட்டுப்படுத்துவது அவசியம். ஏற்றுமதி நோக்கங்களுக்கு அல்லாத தேவையற்ற ஆடம்பரப் பொருள்களின் உற்பத்தியைக் கட்டுப்படுத்த இதுபோன்ற வெவ்வேறு வகை நுகர்ப்பொருள்களின் உற்பத்தியைத் தடுக்கவேண்டும்.

ஊழலைத் தடுப்பது குறித்து, தாழ்ந்த நிலையில் உள்ளவர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரிகளின் தீர்ப்புரிமை அதிகாரங்களை மாற்றியமைப்பதும், குறைந்த அளவு ஊதியம் பெறும் அலுவலர்களின் ஊதியத்தை உயர்த்துவதும் கருத்துரைக்கப்பட்டுள்ளன. பொதுப் பணியாளர்கள் நேர்மை, நியாய உணர்வு, தோழமை ஆகிய பழக்கங்களைப் பெறுமாறு செய்ய சீரிய முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

வளர்ச்சியை மனித வழிப்படுத்துதல்.—வளர்ச்சிப் பணியில் மக்கள் பங்கு பெறுமாறு செய்ய, சரியான பண்பாட்டுக் கொள்கையும், முழுமையான பண்பாட்டுத் திட்டமும் தேவை. பண்பாட்டுக் கொள்கை, பண்பாட்டு வளர்ச்சிக்கான நிறுவனங்களை ஏற்படுத்துதல், பண்பாட்டை மேம்படுத்துவதற்கான சட்டத்தை இயற்றுதல், கைவினைத் திறனைச் சிறப்பாகப் பயன்படுத்துதல், மக்களோடு தொடர்புகொண்டு சமுதாயத் தொடர்புகளை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கும். இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான அமைப்புகள் கிராம, வட்ட, மாவட்ட, மாநில அளவுகளில் ஏற்படுத்தப்படும். இந்நிறுவன முகவரமைப்புகள் மாநிலக் கலாசார மன்றத்தால் (State Cultural Council) நெறிப்படுத்தப்படும். கர்னாடக இசை, நாடோடி இசை, மக்கள் விரும்பும் இசை போன்றவற்றை வளர்க்கும் நிகழ்ச்சிகளை நடத்துவது ஊக்குவிக்கப்பட வேண்டும்.

மனித வள முன்னேற்றத்திற்கான பிற திட்டங்களோடு பின்வரும் திட்டங்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன:

(அ) விளையாட்டுகளில் திறமையை வளர்ப்பதற்கான திட்டம்: வெவ்வேறு விளையாட்டுகளிலும், ஆட்டங்களிலும் திறன்பெற்ற சுமார் 20 மாணவ–மாணவியருக்கு நாட்டளவிலும் பன்னாட்டளவிலும் திறமை பெறுவதற்கு மாநில அரசு விசேஷ உதவி அளிக்கும். விளையாட்டுகள் பற்றிய குறிப்பேடு ஒன்று பராமரிக்கப் படவேண்டும். விளையாட்டுகளுக்கான இயக்குநர் பதவி தோற்றுவிக்கப்படலாம்.

(ஆ) சென்னைப் பல்கலைக் கழக நூலகத் தொகுதியை ஏற்படுத்துதல்: இது இந்திய, தென் கிழக்கு ஆசிய நாடுகள் பற்றிய மனிதவியல், சமூகவியல் குறித்த தீவிர ஆய்வுகளை வளர்க்கும் மையமாக இருக்கவேண்டும்.

(இ) நூலகங்களை மேம்படுத்தலும், அரிய பண்டைக்கால ஏட்டுச் சுவடிகளைப் பாதுகாத்தலும்: கன்னிமரா பொது நூலகம், தமிழ் நாடு தொல்பொருள் காப்பகங்கள், மாநிலத்திலுள்ள வெவ்வேறு கையெழுத்துப் பிரதிகளைக் கொண்ட நூலகங்கள் ஆகியவை விரிவாக்கப்படவேண்டும்.

(ஈ) தமிழ் கலாசார அவை: தற்போதைய தமிழ்க் கலாசார மறுமலர்ச்சியின் முழு நன்மையையும் பெறும் நோக்கோடு தமிழ்க் கலாசார அவையொன்று அமைக்கப்பட்டு, அது சமத்துவச் சமுதாயத்தின் முன்னேற்றத்தை விரைவு படுத்தும்.

(உ) மனிதவியல், சமூகவியல் பள்ளி: இது வெவ்வேறு மனிதவியல், சமூகவியல் பிரிவுகளின் பொருள்களில் சுயமாகவும், தனியாகவும் சிந்திப்பதை ஊக்குவிக்கும்.

பரவலாக்குதல்.—மக்களோடு தொடர்பு படுத்தப்படாத எந்த ஒரு திட்டமும் வெற்றி பெறாது. திட்டமிடுதலையும், வளர்ச்சிப் பணியையும் பரவலாக்குதல், திட்டமிடுதலிலும், திட்டத்தை நிறைவேற்றுதலிலும் மக்களைப் பங்கேற்கச் செய்ய உதவும். இதனை மாவட்டத் திட்டத்தின் மூலம் அடைய எதிர்பார்க்கப்படுகிறது.

III. மாவட்டத் திட்டம்

கொள்கை விளக்கம்.—பல்கலைக் கழகக் கல்வி, பெரியனவும் நடுத்தரமுமான தொழில்கள், மின் சக்தி, பெரியனவும் நடுத்தரமுமான பாசனத் திட்டங்கள் போன்று மாநில அளவில் திட்டமிடப் படவேண்டியன நீங்கலாக, ஏனைய திட்டங்கள் அவற்றுக்குரிய பகுதிகளிலேயே திட்டமிடப்பட்டு, அங்கங்கேயே நிறைவேற்றப்பட வேண்டும். அப்பொழுதுதான் இத்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறுவதாகும். தலா உண்மை வருமானத்தை இரட்டித்தல் என்னும் முடிந்த குறிக்கோளை எட்ட வேண்டுமானால், அவ்வப் பகுதியின் நிலைமைகளையும், வளங்களையும், தேவைகளையும் அடிப்படையாகக் கொண்ட திட்டப் பணிகளை நிறைவேற்றுவதே முறையாகும். அப்படிப்பட்ட பகுதித் திட்டங்களால்தான், முன்னேற்றமடையாத பகுதிகளைக் கண்டு கொள்ள முடியும். மேலும், பகுதித் திட்டங்களும், பிராந்தியத் திட்டங்களுமே ஆங்காங்குள்ள மக்களைத் திட்டமிடும் பணியில் ஈடுபடுத்த வல்லன.

வழிமுறை.—மாவட்டத் திட்டங்களின் எல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதில், உறுதியான புள்ளி விவரங்கள், அடக்கமான எல்லைப் பரப்பு, நிர்வாகச் சௌகரியம் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டது. இந்த அடிப்படையில் ''வளர்ச்சி மாவட்டம்'' வரையறுக்கப்பட்டுள்ளது. 23 வளர்ச்சி மாவட்டங்களுக்கும் தொலை நோக்குத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டமும், இயற்கை வளங்கள், மண்ணின் அமைப்பு, நிலத்தைப் பயன்படுத்தும் வகை, பயிரினங்கள், தொழில்கள்—இவற்றின் அடிப்படையில் ஒருங்கிணைந்த துணைப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. ஆங்கு தற்போது நடைபெறும் பொருளாதார முயற்சிகளை நன்கு மதிப்பிட்டு வளர்ச்சிக்குத் தடையாயிருக்கும் குறைபாடுகளையும் கருத்தில் கொண்டு, நிறைவேற்றுவதற்குரிய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. சென்ற கால அனுபவங்களையும் ஏற்பட்ட சிக்கல்களையும் கருத்தில் கொண்டு, குறித்த கால அளவில் தேவையான பலனை அடையவல்லவனவாய் இத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

சிறப்புக் கூறுகள்.—அநேகமாக எல்லா மாவட்டத் திட்டத்திலும் வேளாண்மைக்கும், அதனைச் சார்ந்தவைகளுக்கும் முக்கியமான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது ; ஏனெனில் நம் மாநிலத்தின் மக்களில் 70 சதவீதத்தினரும், சில துணைப் பிராந்தியங்களில் 90 சதவீதத்தினரும் விவசாயத்தையே நம்பி இருக்கிறார்கள். பல போகப் பயிர்ச் சாகுபடி முறைகள், மாற்றுச் சாகுபடி முறைகள், உணவுப் பொருள்களுக்கு பதில் வணிகப் பொருள்களை உற்பத்தி செய்தல் ஆகியவை கருதப்பட்டுள்ள வேளாண்மைத் திட்டத்தின் சிறப்பியல்புகள் ஆகும். கோவை, சேலம், திருச்சி, மதுரை, செங்கல்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களில் படிப்படியாக தொழில்வளம் ஏற்படவும் இத் திட்டம் வழி செய்கின்றது. மற்றும், மதுரை, தஞ்சாவூர், தென்னாற்காடு, வட ஆற்காடு, திருச்சி, தர்மபுரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் வேளாண்மை சார்ந்த தொழில்களும், பதப்படுத்தும் தொழில்களும் ஏற்பட வழி கோலுகின்றது. குறிப்பாக, மாவட்டத் திட்டங்கள் மாவட்டத்தின் வளர்ச்சி மையங்களை அறிந்து அவற்றின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழி செய்கின்றன.

மாவட்டத் திட்டங்கள் குறைந்த வருவாய் உள்ள மக்களின் சமூக நியதிகளையும் கருத்தில் கொண்டுள்ளது. சமூகப் பணிகள் என்ற பகுதியில் அரிசனங்கள், மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை எளிய மக்களின் மேம்பாட்டுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. குடிசை மாற்றுப்பணி, ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைகளுக்கு வகைசெய்தல், நகர்ப்புற, கிராமப்புற வீட்டு வசதிகளுக்கு வகை செய்தல், மகளிர் நலம், முதியோர் உதவித் தொகை முதலியவை மாவட்டத் திட்டங்களில் உள்ள இன்றியமையாப் பணிகளில் சிலவாகும். ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கென குறிப்பாக வகுக்கப்பட்டுள்ள ''குறைந்த அளவு தேவைகள் திட்டம்'' குறித்து மாவட்டத் திட்டங்கள் சிறப்புக் கவனம் செலுத்துகின்றன.

அமைப்பு.—மாவட்டத் திட்டங்களை நிறைவேற்ற மாவட்ட அளவில் அமைப்பு ஏற்படுத்தப்படும். இதற்கென ''மாவட்ட வளர்ச்சி வாரியங்களை'' தஞ்சாவூர், கோயம்புத்தூர், தர்மபுரி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் முதற்படியாக அரசு அமைத்துள்ளது.

மாநிலத் திட்டத்தோடு, மாவட்டத் திட்டத்தை இணைத்தல்.—மாவட்டத் திட்டக் குழுக்களால் தீட்டப்பட்டுள்ள மாவட்டத் திட்டங்கள், தேவையைக் கருத்தில் கொண்டு தீட்டப்பட்டவையாகும். மாநிலத் திட்டத்தை தீட்டும்பொழுது நிதி நிலைமை கருத்தில் கொள்ளப்படுகிறது. மாநிலத்தின் நிதி நிலைமைக்கேற்ற மாவட்டத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். மாவட்டத் தொலைநோக்குத் திட்டத்தின் சாராம்சம் வருமாறு:

சுருக்கம்.—மாவட்டத் தொலை நோக்குத்திட்டங்களின்* சுருக்கம் கீழேதரப்பட்டுள்ளது. மாவட்டத் திட்டங்களில் காட்டப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் முடிவானவை அல்ல. அவை, மாவட்டத் திட்டமிடும் உட்குழுக்களால் இதுவரை கருதப்பட்டுள்ள திட்டப்பணிகள், வேலைத் திட்டங்கள் ஆகியவற்றிற்கு ஆகுமென எதிர் பார்க்கப்படும் செலவினைக் காட்டுகின்றன. மேலும் அவற்றில், மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் மத்திய, மாநில அரசுத் துறைகளின் திட்டப் பணிகளுக்கான முதலீடு யாவும் அடங்கவில்லை. மக்கள் தொகை, வளங்களின் தேவைகள், பின்தங்கியுள்ள தன்மை முதலியவற்றின் தொடர்பாக பல்வேறு மாவட்டங்களுக்கு இடையிலான மூலதன ஒதுக்கீடு, மாநில திட்ட நிதிவாயில்கள், மாவட்டங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு மறு ஆய்வு செய்யப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். மாவட்டத் திட்டங்கள் பற்றிய வேலைத் திட்டச் சுருக்கம் பெரும்பாலும் வேளாண்மைத் துறை, தொழில் துறை தொடர்பானவை என்பதில் ஐயமில்லை. எனினும் அவற்றின் முக்கிய உள்ளடக்கம். மாவட்டங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் நிறைந்துள்ள குறைந்த அளவு தேவைகள் திட்டப் பகுதியைக் கொண்டுள்ளது.

1. செங்கல்பட்டு மாவட்டம்.—இம்மாவட்டத்தின் தொலைநோக்குத் திட்ட அளவு ரூ. 601·81 கோடியாகும். இதில் ரூ. 178·40 கோடி செங்கல்பட்டு தெற்கு வளர்ச்சி மாவட்டத்திற்கும் ரூ. 423·41 கோடி வடக்கு வளர்ச்சி மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. வேளாண்மையை மும்முரப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கு வளர்ச்சி மாவட்டத்தில் கருதப்பட்டுள்ள தொழில்களில் சர்க்கரை, செயற்கை இழை, வாயு உருளைகள், தொலைக் காட்சிப் பெட்டிகள் உற்பத்தி செய்யும் தொழிற் பிரிவுகளும் மற்றும் நாப்தா கிராக்கர் உற்பத்திப் பிரிவுகளும் முக்கியமானவையாகும். தெற்கு வளர்ச்சி மாவட்டத்தில் பல பொறியியல், பதப்படுத்தும் தொழிற் பிரிவுகளும் ஏற்படுத்துவதற்குக் கருத்துக் கூறப்பட்டுள்ளது.

2. கோயம்புத்தூர் மாவட்டம்.—கோயம்புத்தூர் மாவட்டத்தின் மொத்தத் திட்ட மதிப்பீடு ரூ. 277·07 கோடியாகும். இதில் ரூ. 137·65 கோடி கிழக்கு வளர்ச்சி மாவட்டத்திற்கும், ரூ. 139·42 கோடி மேற்கு வளர்ச்சி மாவட்டத்திற்குமாகும். இம்மாவட்டத் திட்டத்தில் கண்டுள்ள முக்கியத் தொழில் அமைப்புகள் ; ஸ்கூட்டர் உற்பத்தித் தொழில், பஞ்சாலைக்கான உபரி பாகங்களைத் தயாரிக்கும் அமைப்பு, கூட்டுறவு சர்க்கரை ஆலை, தோல் மற்றும் பின்னல் வேலை பிரிவு ஆகிய தொழில்கள் ஆகும்.

3. தர்மபுரி மாவட்டம்.—மொத்த ஒதுக்கீடு ரூ. 330 கோடி. இதில் சுமார் ரூ. 150 கோடி வேளாண்மைக்கும், அதனைச் சார்ந்த தொழில்களுக்கும் செலவிடப்படும். இம் மாவட்டத்தின் முக்கியத் தொழில் அமைப்புகள் வருமாறு : பழங்கள் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை, சிகரெட் தொழிற்சாலை, கரைப்பான்களைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை, வடிசாலை, கண்ணாடி இழைபொருள் தொழிற்சாலை முதலியன.

4. கன்னியாகுமரி மாவட்டம்.—இம் மாவட்டத் திட்ட ஒதுக்கீடு ரூ. 179·89 கோடியாகும். திட்டப் பணிகளில் நெல் சாகுபடி, கிழங்கு உற்பத்தி, கோகோ உற்பத்தி, தென்னை உற்பத்தி, தினைவகைகள், வாழை மற்றும் ரப்பர் உற்பத்திக்கான தனிக் கவனம் செலுத்தப்படும்; மீன்பிடிப்புத் துறையில் பெருமளவு கவனம் செலுத்தப்படும். தொழில் துறையில் ஹைட்ரோ குளோரிக் அமிலத் தொழிற்சாலை, பி.வி.சி. தொழிற்சாலை, கோகோ, மற்றும் டிட்டானியம் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும்.

5. மதுரை மாவட்டம்.—மதுரை மாவட்டத் திட்ட ஒதுக்கீடு ரூ. 448·39 கோடியாகும். இதில் ரூ. 236·12 கோடி மேற்கு வளர்ச்சி மாவட்டத்திற்கும், ரூ. 212·27 கோடி கிழக்கு வளர்ச்சி மாவட்டத்

*புதிதாக அமைக்கப்பட்டுள்ள புதுக்கோட்டை மாவட்டம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களின் திட்டங்களில் அடங்கியுள்ளது.

திற்கும் செலவிடப்படும். மும்முர பருத்தி, பழச் சாகுபடியும், தோட்டப் பயிர் வகை மேம்பாடும். புன்செய் சாகுபடித் திட்டங்களும் இம்மாவட்ட வேளாண்மைத் திட்டத்தில் முக்கிய அம்சமாகும். தொழில் துறையில், நைலான் இழைநூல், எலெக்ட்ரானிக் (பொறியியல்) தொழில்கள், காஸ்டிக் சோடா, அலுமினியம் தொழிற்சாலைகள் முக்கியமானவை.

6. நீலகிரி மாவட்டம்.—இம் மாவட்டத் திட்ட ஒதுக்கீடு ரூ. 122·49 கோடியாகும். வனத்துறை வளம் பெருக்கல், தோட்டப்பயிர் உற்பத்தி, கால்நடைப் பெருக்கம் முதலியவை இம்மாவட்டத் திட்டத்தின் சிறப்பியல்புகளாகும். நுட்பக் கருவிகள் செய்யும் ஒரு தொழிற்சாலையும், தேயிலை பக்குவப்படுத்தும் தொழில்களும், தொழிற் துறையில் கருத்துரைக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சியை விரிவுபடுத்தும் திட்டங்களும் இம்மாவட்டத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. வட ஆற்காடு மாவட்டம்.—வட ஆற்காடு வடக்கு வளர்ச்சி மாவட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 162·92 கோடியாகும். தெற்கு வளர்ச்சி மாவட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 83·52 கோடியாகும். வேளாண்மை, வேளாண்மை சார்ந்த தொழில்கள், பதப்படுத்தும் தொழில்கள், மேலும் பாரம்பரியத் தொழில்களான தோல் பதனிடுதல், நெசவு, மற்றும் கைவண்ணத் தொழில்களின் மேம்பாட்டுக்கு இத்திட்டம் வகை செய்கிறது. அரக்கோணத்தில் இருக்கும் எ.ஃகுத் தொழிற்சாலையை விரிவுபடுத்தவும், காட்பாடி பவுண்டரி தொழிலை விரிவாக்கவும், ராணிப்பேட்டை தொழில் நிறுவனங்களை விரிவாக்கவும் இம்மாவட்டத் திட்டம் வகை செய்கிறது.

8. ராமநாதபுரம் மாவட்டம்.—இம் மாவட்டத் திட்ட அளவு ரூ. 309·60 கோடியாகும். இதில் கிழக்கு வளர்ச்சி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு ரூ. 197·21 கோடியும், மேற்கு வளர்ச்சி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு ரூ. 112·39 கோடியுமாகும். வேளாண்மை, தொடர்ந்து இம்மாவட்டத்தின் முக்கியத் தொழிலாக இருக்கும். மானாவாரி முறையில் கவனம் செலுத்தப்படும். ஆழ்கடல் மீன் பிடித்தல் தீவிரமாக்கப்படும்; தொழில் துறையில், ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை விரிவுபடுத்தப்படும். மோட்டார் டயர், டியூப் தொழிற்சாலையும், கால்சியம் கார்பைட் தொழிற்சாலையும், சோடியம் ஹைட்ரோ சல்ஃபைட் தொழிற்சாலைகளும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன.

9. சேலம் மாவட்டம்.—சேலம் மாவட்டத் திட்ட மதிப்பீடு ரூ. 425·73 கோடியாகும். இதில் தெற்கு வளர்ச்சி மாவட்டத்திற்கு ரூ. 112·48 கோடியும், வடக்கு வளர்ச்சி மாவட்டத்திற்கு ரூ. 313·25 கோடியுமாகும். இம்மாவட்டத்தில் கருதப்பட்டுள்ள முக்கியத் தொழில்கள்: குழாய் உற்பத்தி, எ.ஃகுத் தொழிற்சாலை, அலுமினியம் .ஃபுளோரைடு தொழிற்சாலை, சுழலும் அச்சு உருளை அமைப்புத் தொழிற்சாலை, ஒளிக்கதிர் சிதர்வுத் தொழிற்சாலைகளாகும். மோகனூரும், ஆத்தூரும் இம்மாவட்டத்தில் முக்கிய நெல், கரும்பு உற்பத்திப் பகுதிகளாகும். இவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

10. தென்னாற்காடு மாவட்டம்.—தென்னாற்காடு தெற்கு வளர்ச்சி மாவட்டத்திற்கும் வடக்கு வளர்ச்சி மாவட்டத்திற்கும் முறையே ரூ. 169·53 கோடியும் ரூ. 213·61 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. நெய்வேலியைச் சுற்றியுள்ள வளர்ச்சி மையங்களில் தொழிற் பெருக்கத்திற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் முக்கிய வளர்ச்சி மையங்கள்: பண்ருட்டி, வடலூர், விருத்தாசலம், கடலூர், நெல்லிக்குப்பம் முதலியன. ஒரு பெரும் உரத் தொழிற்சாலையை நிறுவவும் இம்மாவட்டத் திட்டம் வகை செய்கிறது.

11. தஞ்சாவூர் மாவட்டம்.—இம் மாவட்டத்தின் மொத்த திட்ட மதிப்பீடு ரூ. 407 கோடியாகும். இதில் ரூ. 213·50 கோடி கிழக்கு வளர்ச்சி மாவட்டத்திற்கும், ரூ. 193·33 கோடி மேற்கு வளர்ச்சி மாவட்டத்திற்கும் ஒதுக்கப்படும். மொத்தத்தில் 30 சதவீதம் வேளாண்மைத் துறையில் செலவிடப்படும். தீவிரச் சாகுபடித் திட்டம், பல்வகைப் பயிர் உற்பத்தி, மாற்றுச் சாகுபடித் திட்டம் முதலியவை தீவிரமாக்கப்படும். மீன்பிடிப்புத் தொழிலில் பெரும் அபிவிருத்தி செய்யப்படும். தொழிற் துறையில் பதப்படுத்தும் தொழில், வேளாண்—சார்ந்த தொழில்கள் முதலியவை விரிவுபடுத்தப்படும்.

12. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.—இம் மாவட்டத்தின் மொத்த திட்ட அளவு ரூ. 491·81 கோடி. இதில் ரூ. 254·02 கோடி வடக்கு வளர்ச்சி மாவட்டத்திற்கும், ரூ. 237·79 கோடி தெற்கு வளர்ச்சி மாவட்டத்திற்கும் ஒதுக்கப்படும். தொழில் துறையில், கரூரில் ஒரு சர்க்கரை ஆலையும், திருவெறும்பூரைச் சுற்றி துணைத் தொழிலகங்களும் நிறுவ இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இவை பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் நிறுவனத்திற்குப் பல கருவிகளை உற்பத்தி செய்து அளிக்கும்.

13. திருநெல்வேலி மாவட்டம்.—இம்மாவட்டத் திட்ட மதிப்பீடு ரூ. 505·44 கோடியாகும். இதில் தெற்கு வளர்ச்சி மாவட்டம் ரூ. 166·85 கோடியையும் வடக்கு வளர்ச்சி மாவட்டம் ரூ. 338·59 கோடியையும் பெறும். வடக்கு வளர்ச்சி மாவட்டம் தொழில் துறைப் பகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி துறைமுகத் திட்டம், ஸ்பிக் (SPIC) தொகுதி ஆகியவை மேலும் விரிவடையக்கூடும். இப்பகுதியில் பரிந்துரைக்கப்பட்டுள்ள முக்கிய தொழில்கள்: ஹெவி வாட்டர் தொழிற்சாலை, சோடா ஆஷ், அலுமினியம் குளோரைடு, டிடானியம் டைஆக்ஸைடு, எண்ணெ சுத்திகரிப்பு ஆலை, காகித ஆலை, சர்க்கரை ஆலை, சிமெண்ட் தொழிற்சாலை, மற்றும் துணைக் கருவிகள் பிரிவுத் தொழிற்சாலைகளாகும்.

IV. பொருளாதார—சமூக உள்ளமைப்பு

மின் சக்தி

இம்மாநிலத்தில் தனி நபர் ஒருவர் பயன்படுத்தும் மின் சக்தி அளவு 1974-ஆம் ஆண்டில் 176 யூனிட்டாக இருப்பது, 1979-ல் 270 யூனிட்டாகவும், 1983-84-ல் 450 யூனிட்டாகவும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய தொடக்க காலத் திறன் 2,254 மெ. வாட்டாக இருந்தபோதிலும், பருவ காலக் கூறுகள், பாசனத் தேவைகளின் காரணமாக இம் மின்னிணைப்பின் உண்மையான திறன் 1,569 மெ. வாட் ஆகும்.

தொலைநோக்குத் திட்டக் காலத்தில் மின்சக்திக்கான தேவை பற்றிய முன் மதிப்பீடு; கடந்த ஐந்தாண்டுகளின் மொத்த வளர்ச்சி வீதங்களின் அடிப்படையி லும், வேளாண்மை, தொழில்கள், வணிக நிறுவனங்கள், தெரு விளக்குகள் உள்ளிட்ட வீட்டுப் பயன், போக்குவரத்து, பல்வகை இதர காரியங்கள் ஆகிய துறைகளில் எதிர்பார்க்கப்படும் தேவைகளைத் தனித்தனியே கருத்திற்கொண்டும் செய்யப்பட்டுள்ளது. 1973-74-ல் 1,720 மெ. வாட்டாகவுள்ள மின் சக்தித் தேவை 1978-79-ல் 3,360 மெ. வாட்டாகவும், 1983-84-ல் 5,983 மெ. வாட்டாக வும் உயருமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய உற்பத்தித் திறனை 1,569 மெ. வாட்டை, மின்சாரக் கசிவு மற்றும் இருப்புத் திறனுக்கு ஆகும் மின்சக்தியைக் கருத்திற்கொண்டு பரிசீலனை செய்கையில், 1973-74-ல் 495 மெ. வாட்டும், 1978-79-ல் 2,463 மெ. வாட்டும், 1983-84-ல் 5,611 மெ. வாட்டும் கூடுதலாக மின் சக்தி தேவைப்படும். இதனைக் கீழேயுள்ள அட்டவணை 9-ல் காணலாம்:

அட்டவணை 9

மின் சக்தி உற்பத்தித் திறன்—தேவையானதும் தற்போதுள்ளதும்.

(மெ. வாட்டில்.)

ஆண்டு.	தேவை.	தேவைப் படும் உற்பத்தித் திறன்.	தற்போ துள்ள உற்பத்தித் திறன்.	கூடுத லாகத் தேவைப் படும் திறன்.
(0)	(1)	(2)	(3)	(4)
1973-74	1,720	2,064	1,569	495
1978-79	3,360	4,032	1,569	2,463
1983-84	5,983	7,180	1,569	5,611

இந்த அட்டவணையிலிருந்து, தற்போது கிடைக்கும் மின் சக்திக்கும், தேவைப் படும் மின் சக்திக்கும் நடுவிலான இடைவெளியின் அளவினை அறிய முடிகிறது. மேலும், தொலை நோக்குத் திட்டக்காலத்தில் மின் சக்தி மேம்பாடு மிகவும் அவசிய மான உடனடித் தேவை என்பதும் புலனாகிறது.

விசைச் சக்தி அடிப்படையில் 1978-79-ல் தேவைப்படும் 15,490 மில்லியன் யூனிட், 1983-84-ல் தேவைப்படும் 27,920 மி. யூ. என்பதற்கு மாறாக, தொலை நோக்குத் திட்டத்தில் கருதப்பட்டுள்ள திட்டங்கள் முடிவடையும் போதும் 1978-79-ல் 14,451 மி. யூனிட்டும், 1983-84-ல் 27,128 மி. யூனிட்டும்தான் மின் சக்தி கிடைக்கும்.

மின்சக்தி வளங்களில் எதிர்கால வளர்ச்சி.—(அ) புனல் மின்சக்தி.—இது வரையில் பயன்படுத்தப்படாத புனல் மின்சக்தி ஆதாரங்களைப் பயன் படுத்துவதோடுகூட ஏற்கெனவே மின்சக்தி உற்பத்தியால் அதிகளவு சக்தியை உற்பத்தி செய்யும் வகையில் மாற்றம் ஒன்றும் கருதப்பட்டுள்ளது. ஆகவே, நீரேற்றி சேமித்து வைத்து மின்சக்தி உற்பத்தி செய்யும் திட்டங்கள் (Pumped Storage Scheme) குறித்து பெருமளவு கவனம் செலுத்தப்படுகிறது. தமிழ் நாடு மின்சார வாரியம் குழாய் மூலம் நீரேற்றி சேமித்து வைத்து மின்சக்தி உற் பத்தி செய்யும் முதல் திட்டப்பணியை கோயம்புத்தூர் மாவட்டம், காதம்பாரியில் மேற்கொண்டுள்ளது. இத் திட்டத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் 400 மெகா வாட் ஆகும்.

(ஆ) அனல் மின்சக்தி.—இம்மாநிலத்திலுள்ள வற்றுத நீர் வாயில்கள் மிகவும் குறைவானதால் இம்மின்னிணைக்கும் அடிப்படை விசைத்திறன், மற்ற மாநிலங்களிலிருந்து பெறப்படும் நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சக்தி உற்பத்தி செய்யும் அனல் மின்சக்தி நிலையங்களைக் கொண்டோ அல்லது புனல் மின்சக்தி நிலையங்களின் மின்சக்தியைக் கொண்டோ சமாளிக்க வேண்டியுள்ளது. துரதிருஷ்டவசமாக தமிழ் நாட்டில் நிலக்கரிச் சுரங்கமோ அல்லது எண்ணெய் வளங்களோ இல்லை. இம்மாநிலத்தில் கிடைக்கும் ஒரே கனிப்பொருள் நெய்வேலியில் வெட்டியெடுக்கப்படும் பழுப்பு நிலக்கரி ஆகும். பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் அனல் மின்சக்தி நிலையம் ஒன்று ஏற்கெனவே நிறுவப்பட்டிருந்த போதிலும் அதன் அமைப்புகாலத் திறனை 600 மெ. வாட் முழுவதும் பயன்படுத்தப்படவில்லை. எனவே, கூடுதலாக சுரங்கம் தோண்டும் சாதனங்களை அமைத்து, முதல் சுரங்கத்திலிருந்து வெட்டியெடுக்கப் படும் பழுப்பு நிலக்கரியின் அளவு உயர்த்தப்படவேண்டும். மேலும், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட வேண்டியது மிகவும் அவசியமாகும். தூத்துக் குடி, எண்ணூர் ஆகிய இடங்களில் அமைக்கக் கருதப்பட்டிருக்கும் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை மேற்கு வங்காளத்திலிருந்து பெற வேண்டியிருப்பதால், நிலக்கரியைக் கொண்டு வருவதற்குத் தேவையான கப்பல் வசதிகள் செய்யப்பட வேண்டும்.

(இ) அணு மின்சக்தி.—நிலக்கரி, எரிவாயு ஆகியவை இம்மாநிலத்தில் கிடைக்காததாலும், தற்போதுள்ள புனல் மின்சக்தி நிலையங்களைத் தவிர கூடுதலாக புனல் மின்சக்தி நிலையங்கள் அமைப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதாலும் இம் மாநிலத்தில் வருங்காலத்தில் அமையவிருக்கும் மின்சக்தி நிலையங்களுக்கு அணு சக்தியைப் பயன்படுத்துவதுதான் ஒரே மாற்று வழியாகும். 470 மெ. வாட் அமைப்புக் காலத் திறனுடைய அணு மின் சக்தி நிலையம் ஒன்றை சென்னைக்கு அருகே கல்பாக்கத்தில் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இந்த மின்சக்தி நிலையத்தில் தற்போதுள்ளதைப் போன்று மேலும் இரண்டு பிரிவுகள் அமைக்கப்படுவது இம் மாநிலத்தின் மின்சக்தித் தேவைகளைத் தவிர அண்டை மாநிலங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய உதவியாயிருக்கும். இம்மாநிலத்தின் தென் பகுதியில் தூத்துக்குடிக்கு அருகே 1,000 மெ. வாட் அமைப்புக் காலத்திறனுடைய இரண்டாவது அணு மின்சக்தி நிலையம் ஒன்றும் அமைப்பது குறித்து திட்டமிடப்பட்டுள்ளது.

அ. ஐந்தாவது திட்டக் காலத்திலான (1974-79) திட்டப் பணிகள்

1973-74-ல் 1,720 மெ. வாட்டிலிருந்து 1978-79-ல் 3,360 மெ. வாட்டாக உயருமென்று எதிர்ப்பார்க்கப்படும் மின்சக்தித் தேவையை, தற்போது 1,569 மெ. வாட்டாக உள்ள உற்பத்தித் திறனை ஐந்தாண்டுக் கால இறுதியில் 4,032 மெ.வாட் திறனுக உயர்த்துவதால்தான் சரிக்கட்ட முடியும். இதனைப் பின்வரும் பணிகளால் எய்தவேண்டியுள்ளது:

1. தற்போதுள்ள புனல், அனல், அணு மின்சக்தித் திட்டங்களை நிறை வேற்றுதல்;

2. புதிய திட்டப் பணிகளை மேற்கொள்ளுதல்.

பின்வரும் அட்டவணை நிறைவேறிவரும் திட்டப்பணிகளின் பட்டியலைத் தருகிறது. இத் திட்டங்கள் முடிவடைவதால் ஐந்தாவது திட்டத்தின்போது கூடுதலாகக் கிடைக்கும் திறனும் அட்டவணை 10-ல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 10

தற்போது நிறைவேறிவரும் திட்டப்பணிகள் முடிக்கப்படுவதால் ஐந்தாவது திட்டத்தில் கூடுதலாகக் கிடைக்கும் உற்பத்தித் திறன்

(மெ. வாட்டில்)

திட்டத்தின் பெயர்	முடிக்கப்படும் ஆண்டு	1978-79-ல் கூடுதலாகக் கிடைக்கும் உற்பத்தித் திறன்
(0)	(1)	(2)
(அ) புனல் மின்சக்தி—		
1. பாண்டியாறு-புன்னபுழா	1980-81	..
2. சுருளியாறு	1978-79	35
3. குந்தா திட்டம்-நான்காம் நிலை	1976-77	110
4. நடுவட்டம் நீர்த்திசை மாற்றம்	..	*
5. செருவலூர்	1978-79	20
6. நெல்லித்துரை	1978-79	50
7. காடம்பாரை நீரேற்று மின்சக்தி உற்பத்தி செய்யும் திட்டம் (Pumped Storage Scheme)	1978-79	100
(ஆ) அனல் மின்சக்தி—		
8. எண்ணூர் அனல் மின்நிலையத்தில் கூடுதலான பிரிவு	1974-75	110
(இ) அணு மின்சக்தி—		
9. கல்பாக்கம் அணு மின்சக்தி நிலையம்	1977-78	300†
மொத்தம் —		725

* மின்சக்தி வழங்குநிலை 69 மில்லியன் யூனிட்.

† தமிழ்நாட்டின் பங்கு.

ஐந்தாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் புதிய மின்சக்தி மேம்பாட்டுத் திட்டப்பணிகளின் பட்டியல் அட்டவணை 11-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 11

1974-75 முதல் 1978-79 வரையிலான ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் புதிய மின்சக்தி மேம்பாட்டுத் திட்டங்கள்

(மெ. வாட்டில்)

திட்டத்தின் பெயர்	முடியுமென எதிர்பார்க்கப்படும் ஆண்டு	மின்சக்தி உற்பத்தி
(0)	(1)	(2)
(அ) புனல் மின்சக்தித் திட்டங்கள்—		
1. சோழாத்திப்புழா	1979–80	60
2. மேல்கோட்மண்ட்—லோன் பள்ளத்தாக்கு ..	1977–78	30 (மி.யூ.)
3. மேல்அமராவதி	1979–80	20
4. சண்முகாநதி	1979–80	30
5. பேரலையாறு	1979–80	35
6. பைக்காரா இறுதி நிலை	1981–82	100
7. கூனூர் கல்லாறு பள்ளத்தாக்கு	1980–81	50
8. ஹொகனேக்கல் அல்லது மேல்காவிரி தீரம் ..	..	800
9. கோணியாறு—குழாய் நீரேற்றி நீர்த்தேக்க மின் சக்தித் திட்டம்	1982–83	100
10. வாலாறு-குழாய் நீரேற்றி நீர்த் தேக்க மின்சக்தித் திட்டம்	1982–83	100
(ஆ) அனல் மின்சக்தித் திட்டங்கள்—		
1. தூத்துக்குடி அனல் மின்நிலையம்	1978–79	400*
2. மேட்டூர் அனல் மின்நிலையம்	1978–79	
3. எண்ணூரில் இரண்டாவது அனல் மின்நிலையம் ..	1983–84	1,000
4. வாயு டர்பைன் நிலையங்கள்	ஓராண்டு	400
5. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதலும் இரண்டாவது அனல் மின்நிலையமும்	1983–84	800–1,000
(இ) அணு மின்சக்தித் திட்டங்கள்—		
1. கல்பாக்கத்தில் கூடுதலான பிரிவுகள்	..	200†
2. மதுரைக்குத் தெற்கே இரண்டாவது அணு மின்சக்தித் திட்டம் ..	..	1,000

* ஐந்தாவது திட்டக்காலத்தில் கிடைக்கும் வாய்ப்புள்ள அளவு.

† தமிழ்நாட்டின் பங்கு.

ஐந்தாவது திட்டத்தின்போது மின் உற்பத்தித் திட்டங்களுக்கான மதிப்பீட்டு நிதி ஒதுக்கீடு ரூ. 481 கோடி ஆகும். இதில் மாநில அரசின் பங்கு ரூ. 281 கோடியாகும்.

ஐந்தாவது திட்டக்காலத்தில் கூடுதலாகக் கிடைக்கும் உற்பத்தித் திறன் 1978-79 ஆம் ஆண்டிற்குள் முடியும் வாய்ப்புள்ள திட்டங்களிலிருந்து கிடைக்கிறது என்பதை அட்டவணைகள் 10, 11 ஆகியவற்றிலிருந்து அறியலாம். ஆகவே இதில் (அ) பாண்டியாறு-புன்னபுழா திட்டம் நீங்கலாக அட்டவணை 10-ல் கூறப்பட்டிருக்கும் அனைத்துத் திட்டங்களும் (ஆ) அட்டவணை 11-ல் கூறப்பட்டிருக்கும் தூத்துக்குடி அனல் மின்நிலையம், மேட்டூர் மின்சக்தித் திட்டம் ஆகியவையும் அடங்கும். எனவே கூடுதலாகக் கிடைக்கும் உற்பத்தித் திறன் 725 மெ. வாட்+400 மெ. வாட்=1,125 மெ. வாட்டாக இருக்கும். ஐந்தாவது திட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனல் மின்சக்தித் திட்டங்களில், மேல்கோட்மண்ட்லோன் பள்ளத்தாக்குத் திட்டம் 1977-78-ல், அதாவது ஐந்தாவது திட்டக் காலத்திற்குள்ளேயே முடிக்கப்படும். ஆனால் இத்திட்டத்தினால் உற்பத்தியாகும் மின்சக்தி, குறைவான அளவான 30 மி. யூனிட் ஆகும். எனவே ஐந்தாவது திட்ட இறுதியில் இருக்கும் மின்சக்தி வழங்கல் நிலையை கணக்கிடுவதில் அதன் பங்கினைச் சேர்த்துக்கொள்ளவில்லை. இவ்வாறாக நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 1,569 மெ. வாட்டிலிருந்து உற்பத்தித் திறன் ஐந்தாவது திட்ட இறுதியில் 2,694 மெ. வாட்டாக உயரும். ஆனால் 1978-79 ஆண்டளவில் தேவைப்படும் மின்சக்தி உற்பத்தி 4,032 மெ. வாட்டாக இருப்பதால் 1,338 மெ. வாட் பற்றாக்குறையாக இருக்கும். மின்சக்தி உற்பத்தித் திறனிலுள்ள இந்த பற்றாக்குறை குறுகிய கால அடிப்படையில் பின்வரும் பணிகளினால் பூர்த்தி செய்யப்படக் கருதப்பட்டுள்ளது:

(அ) உச்ச அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்துவோர் தங்களுடைய சொந்த டீசல் மின் உற்பத்தி இயந்திரங்களை வைத்திருப்பதற்கு ஆதரவு அளித்தல். இதனால் 50 முதல் 100 மெ. வாட் வரை பற்றாக்குறை குறைக்கப்படும். தற்போதைய எண்ணெய் நெருக்கடி காரணமாக இந்த எரிபொருள் அடிப்படை குறித்து மறு ஆய்வு செய்வது அவசியமாகும்.

(ஆ) 80 மெ. வாட் உற்பத்தித் திறனுடைய 5 வாயு டர்பைன்களை 5 நிலையங்களில் அமைத்தல். இவற்றின் பங்கால் பற்றாக்குறையில் 400 மெ. வாட் குறையும்.

(இ) வேளாண்மைத் துறையில் வேளாண்மைக்கான மின்விசை சுமைத் தேவையில் மாறுபாடு ஏற்படுவது.

(ஈ) 1975-76-ல் இடிக்கி மின்சக்தித் திட்டம் முடிக்கப்படும்போது கேரளா சுமார் 200 முதல் 300 மெ. வாட் மின்சக்தி உதவியை தமிழ்நாடு மின்னிணைப்பிற்கு அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நடவடிக்கைகளினால் பற்றாக்குறையில் 1,250 முதல் 1,400 மெ. வாட் வரை சரி செய்யப்படுகிறது. ஆனால் இவை பெரும்பாலும் குறுகிய கால நடவடிக்கைகளாகும். எனினும் வாயு டர்பைன் பிரிவுகள் நிரந்தரமாக கூடுதலான 400 மெ. வாட் திறனுக்கு வகை செய்யும். அதனால் இம்மினிணைப்பின் அமைவு காலத்திறன் 3,094 மெ. வாட் இருக்கும்.

ஆ. ஆறாவது திட்டத்திலான (1979-84) திட்டப்பணிகள்.

தொலைநோக்குத் திட்டத்தின் மின்சக்தித் தேவை 3,360 மெ. வாட்டிலிருந்து 5,983 மெ. வாட்டாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அளவிற்கு மின்சக்தி வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு 1983-84-ல் உற்பத்தித் திறன் 7,180 மெ. வாட்டாக உயர்த்தப்பட வேண்டியுள்ளது. ஆறாவது திட்ட தொடக்கக் காலத்தில் இம்மாநில மின்னிணைப்பின் செயல்படு உற்பத்தித் திறன் 3,094 மெ. வாட்டாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே ஆறாவது திட்டக் காலத்தில் உயர்த்தப்பட வேண்டிய மின்சக்தி உற்பத்தித் திறன் 4,086 மெ. வாட். ஆகும். 1979-84-ல் கூடுதலான உற்பத்தித் திறன் 3,065 மெ. வாட்டாக இருப்பதை அட்டவணை 12-லிருந்து அறியலாம்.

ஆறாவது திட்டக் காலத்தின்போது அதிகரிக்கும் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு ஐந்தாவது திட்டத்தில் தொடங்கப்பட்ட திட்டப் பணிகளை 1983-84 ஆண்டளவில் முடிப்பது அவசியமாகும். காடம்பாறை திட்டம் முதல் நிலை, பாண்டியாறு புன்னபுழா திட்டம் முதல் நிலை ஆகிய நான்காவது திட்டப் பணிகள் முடிக்கப்படுவதனால் ஆறாவது திட்டக் காலத்தில் கூடுதலாக 200 மெ. வாட் மின்சக்தி கிடைக்கும்; 1979-84 ஆம் ஆண்டுகளில் முடிவடையும் ஐந்தாவது திட்டப் பணிகளால் கூடுதலாக 565 மெ. வாட் கிடைக்கும்.

ஆருவது திட்டத்திற்காகக் கருதப்பட்டுள்ள புதிய புனல் மின்சக்தித் திட்டப் பணிகள் பின்வருமாறு. ஆனுல் அவை 1983-84 ஆம் ஆண்டில் முடிவடைய வாய்ப்பில்லை:

1. குந்தா இறுதிநிலை திட்டம்.
2. மேல் மணிமுத்தாறு (திருநெல்வேலி மாவட்டம்).
3. மேல் தாமிரவருணி (திருநெல்வேலி மாவட்டம்).
4. கீழ்க் காவிரி (சேலம் மாவட்டம்).
5. கீழ் மோயாறு—முதல் பிரிவு (நீலகிரி மாவட்டம்).
6. கீழ் மோயாறு—இரண்டாவது பிரிவு அல்லது குக்காலத்துறைப் பிரிவு (நீலகிரி மாவட்டம்).

ஆருவது திட்டக் காலத்தில் புதிய அனல் அல்லது அணு மின்சக்தித் திட்டங்கள் எவையும் கருதப்படவில்லை. எனினும், முந்தைய திட்டப் பணிகளை விரைவு படுத்துவதனுல் உற்பத்தித் திறன் கணிசமான அளவு கூடும்.

அட்டவணை 12

ஆருவது திட்டக் காலத்தில் கூடுதலாகும் உற்பத்தித் திறன்

(மெ. வாட்டில்)

திட்டப் பணிகள்	கூடுதலாகும் மின்சக்தி
(0)	(1)
(அ) புனல் மின்சக்தி—	
(i) ஆருவது திட்டக் காலத்தில் முடிக்கப்படும் நான்காவது திட்ட புனல் மின்சக்திப் பணிகள்	200
(ii) ஆருவது திட்டக் காலத்தில் முடிக்கப்படும் ஐந்தாவது திட்ட புனல் மின்சக்திப் பணிகள்	565
(ஆ) அனல் மின்சக்தி—	
(iii) ஐந்தாவது திட்டத்தைச் சேர்ந்த இரண்டு அனல் மின்சக்தி திட்டப் பணிகள் முடிவுறுதல், துணைக்கருவிகளுக்கு 10 சதவீதமும், மின்கசிவுக்கு 1 யூனிட்டும் போக எஞ்சிய திறன்	700
(iv) எண்ணூரில் இரண்டாவது அனல் மின்சக்தி நிலையப்பணி முடிவுறுதல்	600
(v) நெய்வேலியில் இரண்டாவது அனல் மின்சக்தி நிலையம் ..	800
(இ) அணு மின்சக்தி—	
(vi) கல்பாக்கம் அணு மின்சக்தி நிலையத்தில் கூடுதலாக 470 மெ. வாட் திறன் சேருதல் (தமிழ்நாட்டின் பங்கு)	200
மொத்தம் ..	3.065

ஆருவது திட்டத்தில் மின் சக்தி உற்பத்திக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 969 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் மாநில அரசின் பங்கு ரூ. 499 கோடியாகும்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டால்கூட தொலை நோக்குத் திட்டக்கால இறுதியில் மின்சக்தி உற்பத்தித் திறனின் பற்ருக்குறை, 1,021 மெ. வாட்டாக (4,086-3,065) உள்ளது. இந்த பற்ருக்குறை ஐந்தாவது திட்டத்திற்காக ஆலோசனைக் கூறப்பட்டுள்ள வாயு டர்பன்களை பயன்படுத்துவது, வேளாண்மைக்கான மின்விசை சுமைத் தேவையில் மாறுபாடு ஏற்படுத்து

வது, பகிர்வில் ஏற்படும் இழப்புக்களைக் குறைத்தல் முதலிய குறுகிய கால நடவடிக்கைகளை தொடர்வதனுல், அல்லது அண்மை மாநிலங்களிலிருந்து மின்சக்தி வாங்குவதனுல் நிறைவு செய்யப்படும். எனினும் இம்மாநிலத்தில் மின்சக்திப் பிரச்னையில், கூடுதலாக அணு மின்சக்தி மேம்பாட்டினைப் பின்பற்றுதல், மாநிலங்களுக்கிடையேயான உடன்பாட்டினுல் வட்டார அடிப்படையில் தெற்கு மாநிலங்களைச் சேர்ந்த புனல் மின்சக்தி ஆதாரங்களை முழு அளவில் பயன்படுத்துதல் ஆகியவற்றினுல்தான் உண்மையான தீர்வு காண இயலும்.

நிதி ஒதுக்கீடு—

ஐந்தாவது திட்டம் ரூ. 481 கோடி (மாநில அரசின் பங்கு ரூ. 281 கோடி).
ஆருவது திட்டம் ரூ. 969 கோடி (மாநில அரசின் பங்கு ரூ 499 கோடி).
மொத்தம் ரூ. 1,450 கோடி (மாநில அரசின் பங்கு ரூ. 780 கோடி).

போக்குவரத்து

போக்குவரத்துப் பணிகளின் தேவை, முக்கியமாக, வருமான உயர்வு, மக்கள் தொகைப் பெருக்கம் அதன் பெயர்ச்சி, தொழில் மயமாதல், வேளாண்மை வளர்ச்சி, நகர்மயமாதல், மாநிலத்திற்குள்ளும் மாநிலங்களுக்கிடையேயும் பண்டங்கள் மற்றும் பணிகளின் போக்குவரத்து, உள்நாட்டு வெளிநாட்டு வணிக விரிவாக்கம் போன்ற காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது. தொலை நோக்குத் திட்டக் காலத்தில், எல்லா நிலையிலும் மக்களுடைய பெயர்ச்சி மற்றும் பொருள்களின் போக்குவரத்து அதிகரிக்கும்; எனவே, மாநிலத்தில் விரைவான, பாதுகாப்பான, பொருளாதார ரீதியில் நன்மையளிக்கக்கூடிய போக்குவரத்துப் பணி மிக அவசியத் தேவையாகிறது. இதன் தன்மை பின்வரும் பிரிவுகளின் கீழ்க் கருதப்படுகிறது :

1. சாலைகள்.
2. சாலைப் போக்குவரத்து.
3. இருப்புப்பாதைகள்.
4. ஆகாய வழிகள்.
5. படகுத் துறைகளும் துறைமுகங்களும்.
6. உள்நாட்டு நீர்வழிப் பாதைகள்.
7. தலைநகர்ப் போக்குவரத்து.

1. சாலைகள்.—தற்போதைய நிலை—1971-ல் மாநிலத்தில் மொத்தசாலைகளின் நீளம் 66,929 கி.மீ.; அதில் 590 கி.மீ. சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகவும், 20,319 கி. மீ. தார் சாலைகளாகவும், 26,339 கி. மீ. கப்பிச் சாலைகளாகவும், 19,681 கி. மீ. மண் சாலைகளாகவும் இருந்தன. தேசிய அளவைகளோடு ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் பரப்பளவின் அடிப்படையில் சாலைகளின் நீளம் தேசியச் சராசரிக்கு அதிகமாக இருப்பினும், மக்கள் தொகையின் அடிப்படையிலான சாலைகளின் நீளம், முக்கியச்சாலைகளின் அகலம், பாலங்களின் சுமைதாங்கும் திறன், கிராமச் சாலைகளின் தரம் ஆகியவற்றில் மேலும் குறைபாடுகள் இருக்கின்றன. இம் மாநிலத்தில் 1971-ல் 100 சதுர கிலோ மீட்டர் பரப்புக்கான சாலைகளின் நீளம் 55 கிலோ மீட்டராக இருந்தபோது இந்தியச் சராசரி 37 கி.மீ. ஆகும். ஆனுல் 100 லட்சம் மக்கள் தொகைக்கான சாலைகளின் நீளம் 164 கிலோ மீட்டராக மட்டுமே இருந்தது. (இதன் அகில இந்தியச் சராசரி 217 கிலோமீட்டராகும்.) தேசிய நெடுஞ்சாலைகள் முழுதும், மாநில நெடுஞ்சாலைகளில் சுமார் பாதியும் ''இருவழிப்பாதை'' அகலத்திற்கு இருக்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், தேசிய நெடுஞ்சாலைகளில் 75 சதவீதமும், மாநில நெடுஞ்சாலைகளில் 30 சதவீதமும் மட்டுமே ''இரு வழிப்பாதை'' அகலத்திற்கு உள்ளன. மேலும் மாநிலத்திலுள்ள பாலங்களில் பல நீண்ட காலத்திற்கு முன்னமேயே கட்டப்பட்டவை. எனவே அவை தேசியத் திட்டத்தின் அளவைகளுக்கு ஒப்ப அமையவில்லை. மண் சாலைகளாக இருப்பதாலும், போதிய பாலங்கள் இன்மையாலும் கிராமச் சாலைகளின் நிலை மோசமாக உள்ளது.

1. எதிர்காலத்திற்கான திட்டங்கள்.—தொலேநோக்குத் திட்டக் காலத்தில் 860 கி. மீ. அதிக அகல இருவழி கப்பிச் சாலேகளும், 85 கி.மீ. ஒரு வழி கப்பிச் சாலேகளும், 70 கி.மீ. மண் சாலேகளும் அமைக்கக் கருதப்பட்டுள்ளன. சென்னே யிலிருந்து கன்னியாகுமரி வரையிலான கடற்கரையோரம் கிழக்குக் கடற்கரைச் சாலே அமைப்பதும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும். தவிர, தற்போதுள்ள சாலேகளின் மேற்பரப்பை மேம்படுத்துவதும், சாலேகளின் அகலத்தை இருவழி அல்லது நான்கு வழிக்கு மாற்றுவதும் கருதப்பட்டுள்ளன. கிராமச் சாலேகளேப் பொறுத்தவரை, 8,000 கிலோ மீட்டருக்கு அதிகமான புதிய சாலேகளே அமைக்க வும், தற்போதுள்ள சாலேகளில் சுமார் 20,000 கிலோ மீட்டரைத் திறம்படுத்த வும் திட்டமிடப்பட்டிருக்கின்றன. புதிய சாலேகளே அமைப்பதாலும், இப் போதுள்ள சாலேகளேத் திருத்தியமைப்பதாலும் 1972-ல் 100 சதுர கிலோ மீட்டருக்கு 55.1 கிலோ மீட்டராக இருந்த சாலேகளின் நீளம் 1979-ல் 57 கிலோ மீட்டராகவும், 1984-ல் 61 கிலோ மீட்டராகவும் உயருமென எதிர் பார்க்கப்படுகிறது.

2. சாலேப் போக்குவரத்து.— அடுத்த ஐந்தாண்டுகளில் பேருந்துப் போக்கு வரத்து முழுவதையும் தேசியவுடைமையாக்குவது அரசின் கொள்கையாக இருப் பதால், புதிய போக்குவரத்துக்கழகங்களில் அரசு பங்குகளே வாங்கவும், அலு வலகக் கட்டடங்களே கட்டவும், பார எடைப் பொறிகளே வாங்கவும், புதிய பணிமனேகளே அமைக்கவும், வாகனங்களேப் பராமரிக்கவும் ரூ. 37 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. இருப்புப் பாதைகள்.—மாநிலத்திலுள்ள மொத்த இருப்புப் பாதைகளின் நீளம் 3,758 கிலோ மீட்டர்; இதில் மீட்டர் அகலப் பாதைகள் (Metre-gauge) நீளம் 76 சதவீதம் அல்லது 2,889 கிலோ மீட்டர். மாநிலத்தில் 100 சதுர கிலோ மீட்டருக்கு இருப்புப் பாதைகளின் சராசரி நீளம் 2.63 கிலோ மீட்டர்; அகில இந்திய சராசரி 1·72 கிலோ மீட்டர். ஆயினும் மக்கள் தொகையின் அடிப்படையில் ஆராயும்போது இருப்புப் பாதைகள் மாநிலத்தில் ஒரு லட்சம் மக்களுக்கு 10·06 கிலோ மீட்டரும், அகில இந்தியாவில் 12·91 கிலோ மீட்டரும் உள்ளன. மாநிலத்திலுள்ள இருப்புப் பாதைகளின் பெரும்பகுதி மீட்டர் அகலப்பாதைகளாக இருப்பினும் மாநிலத்திலிருந்து செல்லும், மாநிலத்திற்கு வரும் சரக்குப் போக்குவரத்தின் பெரும்பகுதி அதிக அகலப் பாதைகளின் (Broad-guage) மூலமாகவே நடப்பதால், அது சிக்கலேத் தோற்றுவிக்கிறது. மாநிலத்தில் படிப்படியாக பொருளாதார நடவடிக்கையின் வேகம் அதிகரித்து வருவதால், மீட்டர் அகலப் பாதைகளே அதிக அகலப் பாதைகளாக மாற்று வதில் உடனடிக் கவனம் செலுத்துவது அவசியம்.

பொதுவாக இருப்புப் பாதைப் போக்குவரத்துத் திறனின் சிக்கல்கள் பின் வரும் காரணிகளோடு தொடர்பு கொண்டுள்ளன:

1. பிரிவுத் திறன்;
2. போதுமான எண்ணிக்கையில் 'வேகன்களின்' கிடைப்பு ;
3. மீட்டர் அகலப் பாதைகளும், அதிக அகலப் பாதைகளும் இருப்பதால் சரக்குகளே மாற்றுவதிலுள்ள தடைகள்.

தொலேநோக்குத் திட்டப்பணிகளே வரைவதில் இவை யாவும் கருதப்பட்டன.

தொலேநோக்குத் திட்டத்தில் கருதப்பட்டுள்ள திட்டங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தொலேநோக்குத் திட்டக் காலத்தில் இருப்புப் பாதை வளர்ச்சித் திட்டங்கள்

திட்டம்	நிறைவேற்றவேண்டிய காலவரையறை
(0)	(1)
1. சென்னே-அரக்கோணம் பாதையை மின்மயமாக்குவது	ஐந்தாவது திட்டக் கால இறுதிக்குள்

திட்டம்	நிறைவேற்றவேண்டிய கால வரையறை
(0)	(1)
2. திண்டுக்கல் வழியாக கரூர் முதல் மதுரை வரை அதிக அகலப் பாதையை புதிதாக அமைப்பது	ஐந்தாவது திட்டக் கால இறுதிக்குள்
3. மதுரை — விருதுநகர் — மணியாச்சி — தூத்துக்குடி திருநெல்வேலி பிரிவுகளை அதிக அகலப் பாதையாக மாற்றுவது.	ஷை
4. சென்னைக்கும் விழுப்புரத்துக்கும் இடையே தற்பொழுது இருக்கும் மீட்டர் அகலப் பாதைகளை அப்படியே வைத்துக் கொண்டு புதிதாக அதிக அகலப் பாதையை ஏற்படுத்துவது	ஷை
5. விருத்தாசலம், திருச்சிராப்பள்ளி வழியாகச் செல்லும் விழுப்புரம்-திண்டுக்கல் பிரிவை அதிக அகலப் பிரிவாக மாற்றுவது	ஆறுவது திட்டக் கால இறுதிக்குள்
6. சேலம்-கடலூர் பிரிவை அதிக அகலப் பிரிவாக மாற்றுவது	ஷை
7. விழுப்புரம்— மாயூரம்—தஞ்சாவூர்—திருச்சிராப்பள்ளி பிரிவோடு, தற்பொழுது மீட்டர் அகலப்பாதையாக இருக்கும் சென்னை—விழுப்புரம், செங்கல்பட்டு —அரக்கோணம் பிரிவுகளையும் அதிக அகலப்பாதையாக்குவது	ஷை
8. சேலம், கரூர் ஆகியவற்றிடையே புதிதாக அதிக அகலப்பாதையை அமைப்பது	ஷை
9. விருதுநகர் — தென்காசி, திருநெல்வேலி — செங்கோட்டைப் பாதைகளை அதிக அகலப் பாதைகளாக மாற்றுவது	ஆறுவது திட்டக் கால இறுதிக்குள் கேரள மாநிலத்தில் மீட்டர் அகலப் பாதையை மாற்றும் அதே சமயத்தில் செய்வது

4. ஆகாய வழிகள்.—மாநிலத்தின் எதிர்கால விமானப் போக்குவரத்தின் தேவையையும், வெவ்வேறு விமானங்கள் விமான தளங்களில் இறங்கும் பொருத்தமுடைமையையும் கருதி தமிழ்நாட்டின் பின்வரும் மையங்களில் புதிய விமான நிலையங்கள் அமைக்கலாமென்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது:

(அ) சேலம்—ஐந்தாவது திட்டம்.

(ஆ) தூத்துக்குடி—ஐந்தாவது திட்டம்.

(இ) குமரிமுனை—ஆறுவது திட்டம்.

(ஈ) தஞ்சாவூர்—ஆறுவது திட்டம்.

5. படகுத் துறைகளும் துறைமுகங்களும்.—தமிழ்நாடு சுமார் 1,000 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளதெனினும் தற்பொழுது சென்னையை மட்டுமே ஒரு பெரிய துறைமுகமாகப் பெற்றிருக்கிறது. தூத்துக்குடி, கடலூர், நாகப்பட்டிணம் ஆகிய மூன்று நடுத்தரத் துறைமுகங்களில் தூத்துக்குடி தற்பொழுது பெரிய துறைமுகமாக முன்னேற்றம் செய்யப்படுகிறது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சியும், ஏற்றுமதி-இறக்குமதிப் பொருள்களில் அதிகரித்துள்ள தேவையும் புதிய துறைமுக வசதிகளை வேண்டுகின்றன. தொலைநோக்குத் திட்டக் காலத்தில் பின்வரும் திட்டங்கள் கருதப்பட்டுள்ளன :

(அ) எண்ணெய், தாதுப் பொருள்களை இறக்குவதற்கான தனித்தனி இடங்களைக் கொண்ட வெளிப்புறத் துறைமுகத்தை சென்னைத் துறைமுகத்தில் அமைப்பது ;

(ஆ) சென்னை வெளிப்புறத் துறைமுகத்திற்கு மேலும் வடக்கே மீனளத் துறைமுகத்தை ஏற்படுத்துவது ;

(இ) ஆறுவது திட்டக் காலத்தில் சென்னைத் துறைமுகத்தில் புதியதொரு கப்பல் நிற்குமிடத்தைத் தோற்றுவிப்பது ;

(ஈ) தூத்துக்குடித் துறைமுகத்தை ஒரு பெரிய துறைமுகமாக வளர்ப்பது ;

(உ) நெய்வேலி-சேலம் பகுதியின் தொழில் வளர்ச்சியால் பெருகும் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்ய, கடலூர் துறை முகத்தை மாநிலத்தின் மூன்றாவது பெரிய துறைமுகமாக முன்னேற்றமடையச் செய்வது ;

(ஊ) நாகப்பட்டிணம், ராமேஸ்வரம், வெப்பலோடை. புன்னைக்காயல், எண்ணூர் ஆகிய இடங்களின் சிறிய துறைகளை மேம்படுத்துவது ;

(எ) சேது சமுத்திரத் திட்டம்.

6. உள்நாட்டு நீர்வழிகள்.—பிற வகைப் போக்குவரத்தோடு ஒப்பிடும்போது நீர் வழிகளில் பண்டங்களின் போக்குவரத்துச் செலவு குறைவாக இருப்பதாலும், இது சாலை வழிகள், இருப்புப் பாதைகள் ஆகியவற்றின் துணைப் போக்குவரத்தாக அமைவதாலும், கீழ்க்காணும் முக்கிய உள்நாட்டு நீர்வழிகளின் வளர்ச்சி கருதப்பட்டுள்ளது :

(அ) கூவம் ஆறு;

(ஆ) பக்கிங்ஹாம் கால்வாய்;

(இ) வேதாரண்யம் கால்வாய்.

7. தலைநகர்ப் போக்குவரத்து.—வேலைவாய்ப்புத் தேடி வருபவர்களாலும், மாநகரின் மாநகராட்சி எல்லை விரிவுபடுத்தப்பட்டதாலும் சென்னை மாநகரின் மக்கள் தொகை விரைவாகப் பெருகி வருகிறது. மேலும், மாநகராட்சிப் பகுதிக்கு வெளியிலுள்ள புறநகர்க் குடியிருப்புகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. இவ்வளர்ச்சி நிலைகள், மாநகரத்திற்கும், மாநகரத்திலிருந்தும் வந்து போகும் பயணிகள், வாகனங்களின் போக்குவரத்தைப் பெருக்குகின்றன.

தொலைநோக்குத் திட்டக் காலத்தில் தலைநகர்ப் பகுதியில் சிறப்பான போக்குவரத்து வசதிகளை அளிக்கவும், மாநகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும் பின்வரும் கருத்துரைகள் செய்யப்பட்டுள்ளன :

(அ) மாநகர எல்லைகளுக்கு வெளியே மூன்று தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் சுற்றுச் சாலையை அமைத்தல் ;

(ஆ) அண்ணா சாலைக்கு இணையான சாலையை கூவம் ஆற்றின் கிழக்குக் கரையில் டாம்ஸ் சாலையிலிருந்து கிரீன்வேஸ் சாலை வரை ஏற்படுத்துதல் ;

(இ) தெற்கு கூவம் சாலையை அதிக அகலப்படுத்துதல் ;

(ஈ) பல அடுக்குக் கார் நிறுத்துமிடங்களைக் கட்டுதல் ;

(உ) சென்னை மாநகரின் வடக்கு—தென் கிழக்குப் பகுதியில் சுரங்க இருப்புப் பாதையை அமைத்தல் ;

(ஊ) சென்னை மத்திய—சென்னை எழும்பூர் ரயில் நிலையங்களையும், அண்ணா நகரையும் இணைக்கின்ற சுற்று இருப்புப் பாதையை ஏற்படுத்துதல்.

நிதி ஒதுக்கீடு.—தொலைநோக்குத் திட்டக்காலத்தில் போக்குவரத்து வளர்ச்சிக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 746 கோடி ; இதில் தனியார் முதலீடு ரூ. 60 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சிய ஒதுக்கீட்டுத் தொகையை மாநில அரசும் மத்திய அரசும் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்.

(ரூ. கோடியில்)

பிரிவு	மாநிலத் துறை	மத்தியத் துறை	மொத்தம்
(0)	(1)	(2)	(3)
1. சாலைகள்	236·00	130·00	366·00
2. சாலைப் போக்குவரத்து	37·00	..	37·00
3. உள்நாட்டு நீர்வழிகள்	9·50	..	9·50
4. துறைமுகங்கள்	11·50	45·00	56·50
5. இருப்புப் பாதைகள்	..	216·00	216·00
6. ஆகாயப் பாதைகள்	..	1·00	1·00
மொத்தம்	294·00	392·00	686·00

சுற்றுலா

கருத்து வேறுபாடுகளுக்கு இலக்காகாததும், ஊக்கம் மிகுந்த உழைப்பினை அடிப்படையாகக் கொண்டதுமான சுற்றுலாத் துறை இப்பொழுது வளர்ச்சி பெற்று வரும் ஒரு துறையாகும். அது அரிய மூலப் பொருள்களுக்காகப் பிற துறைகளோடு போட்டி போடுவதில்லை ; ஒரு நாட்டின் இயற்கை வளங்களாலும், வரலாறு, பண்பாடு, கலை ஆகியவற்றின் சிறப்பாலும் வளர்ச்சியடைகிறது. சுற்றுலாத் துறையானது உணவு விடுதி, போக்குவரத்து முதலிய தொழில்களும், அவற்றின் துணைத் தொழில்களும் வளர்ச்சி பெற நேர்முகமாகத் துணைபுரி கின்றது ; விற்பனை வரி, வருமான வரி, பொழுதுபோக்கு வரி ஆகியவற்றின் வாயிலாக ஒரு மாநிலத்தின் வருவாய் பெருக மறைமுகமாகத் துணைபுரிகிறது. சுற்றுலாப் போக்குவரத்தினால் குறிப்பிடத்தக்க அளவு அந்நியச் செலாவணி யும் கிடைக்கிறது. இத்தகைய பொருளாதார நன்மைகள் மட்டுமன்றி தேசிய ஒருமைப்பாடு, அனைத்துலகு பற்றிய அறிவு வளர்ச்சி ஆகிய சமுதாய நலன்களும் சுற்றுலாத் துறையால் கிடைக்கின்றன. தமிழ்நாடு ஒப்பற்ற பழம்பெரும் கலைச் சிறப்புக் கொண்டது. அதனால் இதனைச் சுற்றுலாக் கவர்ச்சி மிகுந்த ஒரு பகுதி யாக வளர்த்துப் பெருமளவு அந்நியச் செலாவணியை நாம் ஈட்ட முடியும்.

தமிழகத்தில் இப்பொழுது இருக்கின்ற சுற்றுலாக் கவர்ச்சியினால், 1971-ல் 38,000 ஆக இருந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1984-ல் 3 லட்சமாக உயரும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தொல்பொருள் துறை, நகர்-நாட்டுப் புற அமைப்புத் திட்டம், சுற்றுலாத் துறை ஆகியவற்றின் முயற்சிகளை ஒருங் கிணைத்து சுற்றுலா வளர்ச்சிக்கு உதவுகிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் பெருகினால்தான், சுற்றுலாப் போக்குவரத்து வளர்ச்சியடையும். உணவு, உறையுள், போக்குவரத்து, பொழுதுபோக்கு ஆகிய வசதிகளைப் பெருக்குதற்கும், பயணிகள் தாம் விரும்பும் பொருள்களை வாங்குவதற்குச் சிறந்த வாய்ப்புத் தருதற்கும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சி பெறுதற்குச் சிறந்த சுற்றுலா அறிவிப்புகளும், விளம்பரங்களும் பயணி களுக்குக் கிடைக்குமாறு செய்தல் வேண்டும். சுற்றுலா வழிகாட்டிகளுக்குப் பயிற்சியளிக்க ஒரு திட்டம் வகுக்க வேண்டும்.

நீண்ட கடற்கரையினையும், மக்கள் சென்று மகிழ்தற்குரிய சிறந்த கடற் கரைப் பகுதிகளையும் (Beach Resorts) கொண்டிருக்கின்ற தமிழ்நாடு, சுற்றுலா வளர்ச்சிக்குப் பெரிதும் வாய்ப்புத் தருவதாகத் திகழ்கின்றது. இத்தகைய கடற்கரைப் பகுதிகளின் வளர்ச்சி குறித்து முறையாகத் திட்டமிடு தற்காகக் கடற்கரை வளர்ச்சிக் குழு ஒன்று நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பொழுது இருக்கின்ற விலங்கு, பறவைச் சரணாலயங்களை விரிவுபடுத்துதல், சென்னை நகரில் ஒரு பெரிய மீன் காட்சி சாலையை அமைத்தல், முக்கியமான சுற்றுலா இடங்களில் தென்னிந்திய இசை, நடனம், நாடகம் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல், போக்குவரத்து வசதிகளைப் பெருக்குதல், நியாயமான கட்டணத்தில் தங்குவதற்கு வசதியான இடமும் சிறந்த உணவும் பெற வாய்ப்பளித்தல் முதலியன சுற்றுலா வளர்ச்சிக்கெனத் தமிழ் நாட்டில் மேற்கொள்ள இருக்கின்ற மற்றும் சில திட்டங்கள் ஆகும்.

தமிழ் நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கென ரூ. 14 கோடி ஒதுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

கல்வி, அறிவியல், தொழில் நுட்பம்

நம் கல்வி முறையில் உள்ள குறைகள்—நாம் பெரிதும் பின்பற்றுகிற கற்பிக்கும் முறை, தேர்வுமுறை, காலத்திற்கு ஒவ்வாத பாடத் திட்டம் ஆகியவற்றால் ஏற்படுவதாகும். படிப்புக்கும் வேலை வாய்ப்புக்கும் தொடர்பு இருப்பதில்லை. கல்விக்குச் செலவிடும் பணம் உயர்ந்து கொண்டே போகிறது; கல்வி முறைக்கான திட்டவட்டக் குறிக்கோள்கள் இல்லை; நிர்வாகத்துக்குப் போதுமான பயிற்சி முறைகளில்லை. இவற்றின் விளைவாக, பெருமளவில் கல்வி வீண் இழப்பு எழுகின்றது. (படிப்பை இடையில் விட்டுவிடுவோர் எண்ணிக்கை 4-வது வகுப்பில் 50 சதவீதமும், 11-வது வகுப்பில் 80 சதவீதமும் ஆகும்). பள்ளியிலிருந்தும் கல்லூரியிலிருந்தும் படிப்பை முடித்து வெளியில் வருவோரை வேலைக்கு அமர்த்திக் கொள்ள முடியாத நிலைமையும் நேர்கின்றது.

இக்குறைகளைப் போக்க கீழ்க்கண்ட வகைகளில் கல்விமுறை உருவாக்கப்பட வேண்டுமென்று தொலைநோக்குத் திட்டம் கண்டுள்ளது. தமிழ்நாட்டுக் கல்வி முறை கொண்டுள்ள குறிக்கோள்களாவன :

குழந்தைகளின் இயற்கை ஆற்றலைப் பெருக்குவது ;

தமிழ்நாடு, இந்திய நாடு, உலகம் இவற்றின் பண்பாடு பற்றியும், வரலாறு பற்றியும் தெரிந்துகொள்ளல் ;

நாட்டின் அறநெறி பற்றியும் ஆன்மீக இலட்சியம் பற்றியும் கற்பிக்க ஏற்பாடு செய்தல் ;

அறிவியல் திறன், தொழில் நுட்பத்திறன், பணித்திறன் ஆகியவற்றைப் பெறல் ;

அறிவின் எல்லை காணும் வகையில் ஆராய்ச்சியினை விரித்துச் சென்று, மாநிலத்தின் தொழில் நுட்பத் துறையிலும் வளர்ச்சித் துறையிலும் எழும் பிரச்னைகளுக்கு முடிவு காண முயலுதல் ;

வளர்ந்து வரும் கல்வி வேட்கையைத் தணிக்கும் வகையில், கல்வியினை மக்களிடையே விரிவாய்ப் பரப்புதலோடு, பெரும்பாலான ஏழைகள் அடைந்த இழப்பினைப் போக்குமாறு சமூக நலன்களை வழங்குதல்

இத்தகைய நடப்புக் குறிக்கோள்கள் தொடரப்படும். இவைபோக, அடுத்த பத்தாண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய மற்றொரு குறிக்கோளும் உண்டு ; அதாவது கல்வி உரிமைக்கும் வேலை வாய்ப்புரிமைக்கும் தொடர்பு காணலும், அதற்கேற்ப பாடத் திட்டத்தையும் பயிற்சித் திட்டத்தையும் மாற்றியமைத்தலுமாகும்.

மேற்கண்ட குறிக்கோள் வரம்புகளுக்கு உட்பட்டு தமிழ் நாட்டில் பள்ளிக் கல்வியும், முதியோர் கல்வியும் பின்வரும் நோக்கங்களைக் கொண்டு அமையும் :

கல்விமுறை, பொருள் பொதிந்ததாகவும், பயனுடையதாகவும் அமைய, அதன் கட்டுக்கோப்பைத் திருத்தியமைத்தல்;

கல்வி வாய்ப்புக்களையும், சாதனைகளையும் சமப்படுத்தல் ;

தொடக்கக் கல்வியின் பயனை மிகுத்தல் ;

பள்ளிப் படிப்பை இடையில் விட்டவர்களுக்கு, பள்ளிக்குப் புறம்பான நேரக் கல்வியும், தொடர்ந்த கல்வியும் அளிக்க வகை செய்தல் ;

பணிச்சார்பான கல்வித் திட்டம் மூலம் முதியோரிடையே எழுத்தறிவின் மையைப் போக்குதல் ;

கல்வியை அறிவியல் அடிப்படையில் அமைத்தல் ;

பொதுக் கல்வியின் எல்லா நிலைகளிலும் கல்வியுடன் பணி அனுபவத்தைப் பொருந்த இணைத்தல்;

உயர்நிலைப் பள்ளிக் கல்வியைத் தொழில் சார்புள்ளதாக்குதல் ;

பள்ளிப் பாடத் திட்டத்தை நலம் பெருக திருத்தி அமைத்தல் ;

தேர்வு முறையைத் திருத்தியமைத்து, மாணவர் திறனை மதிப்பிடுவதில் புதிய உத்திகளை மேற்கொள்ளுதல் ;

ஆசிரியர்கள் பயிற்சிக் கல்வியின் தரத்தை உயர்த்துதல் ;

கல்வி நிர்வாக அலுவலர்கள், மேற்பார்வையாளர் ஆகியோரின் திறனை உயர்த்துதல்.

தொலை நோக்குத் திட்டக் காலத்தில் கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்தலாம் :

1. பள்ளிக் கல்வி அமைப்பு முறையைத் திருத்தியமைத்தலும், பணியில் இருந்தவாறு ஆசிரியர்கள் பயிற்சி பெறுதலும்.—

(அ) தற்போதைய பதினோராண்டு பள்ளிக் கல்விமுறை, பத்தாண்டுக் கல்வி முறையாக மாறவேண்டும். படிப்பை நடுவில் விட்டவர்கள் பள்ளியில் மீண்டும் சேருவதற்கும், அதன் பின்னர் நிறுத்தினாலும், திரும்பச் சேர்ந்து படிப்பதற்கும் வசதியுள்ளதாகப் பத்தாண்டுக் கல்விமுறை 4+3+3 என்ற அடிப்படையில் மாற்றப்பட வேண்டும். குறிப்பாக, முதல் வகுப்புக்கும் 4-ஆம் வகுப்புக்கும் நடுவே படிப்பை விட்டவர்கள், பள்ளிக்குப் புறம்பான நேரத்தில் கல்வி பெற வசதியுள்ளதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) இதற்காக 1·65 லட்சம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் வார இறுதி நாட்களிலும், கோடை விடுமுறை காலத்திலும், 135 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும், 23 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும், 6 கிராமப்புற விரிவாக்கப் பயிற்சி நிலையங்களிலும் பணியோடு விரவிய பயிற்சி பெற வேண்டியிருக்கும்.

(இ) உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், ஏனைய கலை—அறிவியல் கல்லூரிகளிலும் பணியோடு விரவிய பயிற்சிகள் அளிக்கப்படும்.

2. கல்வி பெறும் வாய்ப்பில் சமத்துவம் காணல்.—(அ) பிற்பட்ட வகுப்பினரும், நலன் குறைந்த வகுப்பினரும் கல்வி கற்க தனி வசதிகள் அளிக்கப்படும்.

(ஆ) தற்போது 1 முதல் 4-ஆம் வகுப்பு வரை கல்வி பெறும் பிள்ளைகளில், சுமார் 50 சதவீதத்தினர் வீட்டிலோ, வயலிலோ, தொழிற்சாலையிலோ வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்படுவதால், பள்ளியை விட்டுவிடவோ அல்லது பின்தங்கவோ நேரிடுகிறது. எனவே அவர்களுக்கு நான்காண்டு படிப்புக்குச் சமமான கல்வி அளிக்கப்படும்.

(இ) கிராமப் பகுதிகளில் வேளாண்மைப் பணி தீவிரமாக இல்லாத காலத்தில் பள்ளிகளில் பயிற்சி அளித்தல் ; அதற்கேற்ப பள்ளி நடக்கும் நாட்களைத் திருத்தி அமைத்தல்.

(ஈ) பெண்களுக்கான பாடத் திட்டம் பயனளிப்பதாகவும், தொழிற் சார் புடையதாகவுமிருக்க வேண்டும். மனையியல், கைவினைத் தொழில், நோய் பராமரிப்பு, ஊட்ட உணவு, உணவியல், உணவுப் பாதுகாப்பு, நுண் கலைகள், இசை, நடனம், ஓவியம் முதலியன பாடத்திட்டத்தில் இடம் பெற வேண்டும்.

(உ) கிராமப் புறங்களில் ஆசிரியைகளுக்கு வீட்டு வசதி தாராளமாகச் செய்து கொடுக்க வேண்டும். மாணவிகளுக்கு இலவசமாக உடைகள் வழங்க வேண்டும்.

3. பணிச்சார்புக் கல்வியைப் பரப்பும் திட்டம்.—ஐந்தாண்டு பயிலவேண்டிய பணிச்சார்புடைக் கல்வியைப் பரப்பும் திட்டம் ஒன்றுதொடங்கப்பெறும். இதைத் தொடர்ந்து எழுதப் படிக்கத் தெரிந்த முதியோருக்குத் தொடர்ச்சிக் கல்வித் திட்டம் மேற்கொள்ளப்படும்.

4. இடைநிலைப் படிப்பை தொழில் சார்புடையதாக்குதல்.—இதன் குறிக்கோள் கல்வியை வாழ்க்கையின் தேவைகளோடு பொருத்தி, திறனைப் பெருக்குவதாகும். உயர்நிலைப் பள்ளிகள் யாவும் '' விரிவான பள்ளிகளாகவோ '' அல்லது தொழில் நுட்பப் பள்ளிகளாகவோ மாற்றப்படும்.

5. மாநிலக் கல்வி ஆராய்ச்சி-பயிற்சி மன்றம் .—இம்மன்றம் சட்டபூர்வமாக நிறுவப்பட்டு, சுயநிர்வாகமுள்ளதாக இயங்கும். இது, பாடத் திட்டம், அறிவியல், சம்பிரதாய முறைக்குப் புறம்பான கல்வி, தொழில் கல்வி ஆகிய துறைகளில் செயல்முறைக்குகந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும். மேலும், கல்வித் துறையில் நடந்தேறியுள்ள சாதனைகளையும் மதிப்பீடு செய்யும்.

6. பள்ளிப் பருவத்திற்கு முற்பட்ட கல்வி .—உள்ளாட்சி மன்றங்கள், சேவா மன்றங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஊக்கமளித்து, 3 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் பயிற்சி பெற, குழந்தைப் பள்ளிகள், மாண்டிசோரி பள்ளிகள், கிண்டர்கார்டன் பள்ளிகள், குழந்தைகள் காப்பகங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை உயர்த்தப்படும்.

7. பள்ளிக் கல்வியை விரிவாக்கல்.—பள்ளிகளுக்குத் தேவையான கட்டடங்கள், கருவிகள் ஆகியவற்றை திருத்துவதிலும், பெருக்குவதிலும் கவனம் செலுத்தப்படும்.

8. உயர் கல்வி .—பொருளாதார, சமூக முன்னேற்றத்துக்கு இன்றியமையாத உயர்தர, நடுத்தரத் தொழில்நுட்ப விற்பன்னரைப் பயிற்றும் வகையில் உயர்கல்வி அமையும். இங்ஙனம் எத்தனை தொழில்நுட்ப விற்பன்னர் தேவைப்படுவர் என்பது முன்மதிப்பீடு செய்யப்படும்.

9. பட்டம் வழங்கும் புதிய மாநில மன்றம்.—(அ) பட்டப்படிப்பிற்கான காலம் திருத்தி அமைக்கப்படும். பட்டப்படிப்புக்குக் கீழ் உள்ள கல்லூரிப் படிப்பான இண்டர்மீடியட் இரண்டாண்டுக் காலம் நடைபெறும். மேலும், பி.ஏ., பி.காம்., பி.எஸ்.ஸி., படிப்புகள் இரண்டாண்டுகளும், இதே பட்டங்கள் ஹானர்ஸுடன் மூன்று ஆண்டுகளும் உள்ளதாக இருக்கும்.

(ஆ) பட்டங்கள் வழங்க சுய நிர்வாகமுள்ள மாநிலக் கவுன்சில் ஏற்படுத்தப்படும்; அல்லது பட்டக் கீழ்ப்படிப்பிற்குரிய இரண்டு அல்லது மூன்று புதிய பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்படும். படிப்பு முறை, போதனை முறை, சோதனை முறை ஆகியவற்றில் சுதந்திரமாய் இயங்கும் வகையில் சில கல்லூரிகளுக்கு உரிமை வழங்கப்படும்.

(இ) தற்போது தொழில்நுட்பக் கல்லூரிகளில் இருந்துவரும் 'செமெஸ்டர் முறை' எல்லா கலைக் கல்லூரிகளிலும், அறிவியல் கல்லூரிகளிலும் அமுலாக்கப்படும்.

(ஈ) வகுப்பில் மதிப்பீட்டு முறை கடைப்பிடிக்கப்படும். கல்லூரிக்குப் புறம்பான நேரக் கல்வியும் பயிற்சியும் வலியுறுத்தப்படும்.

10. சென்னை, அண்ணாமலை, மதுரை ஆகிய முதுநிலை பல்கலைக் கழகங்கள்.—
இந்த பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சித் துறையைச் சிறக்கச் செய்தல்.

11. சென்னை தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்.—

தற்போதுள்ள 12 தொழில் நுட்பக் கல்லூரிகளும், நிலையங்களும், 36 பாலிடெக்னிக்குகளும் இப்பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கும்.

12. அனைத்து நாடுகள் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.—

இந்த நிறுவனம் விரிவாக்கப்பட்டு, தமிழ் மொழி, தமிழ் கலாசாரம், தமிழ் இலக்கியம் ஆகியவைகளைப்பற்றியும், மற்ற மொழிகளோடு தமிழ் மொழிக்குள்ள தொடர்பு பற்றியும் ஆராய்ச்சிகள் செய்யப்படும்.

13. தமிழ்நாடு விஞ்ஞான நிறுவனம்.—

இது கீழ்க்கண்ட பிரிவுகளைக் கொண்டதாயிருக்கும் :

(அ) கணிதம், பௌதீக விஞ்ஞானம்;

(ஆ) பொறியியல் விஞ்ஞானம்;

(இ) உயிரியல் விஞ்ஞானம்;

(ஈ) ஒழுங்கு நெறி முறையை வளர்க்கும் திட்டங்கள்;

(உ) இயற்கை வளங்களும் மக்கள் வளங்களும்;

(ஊ) சமூக அறிவியல்;

(எ) தொழில் நுட்பக் கல்வி.

இந்நிறுவனம் ஆராய்ச்சிகளை ஒருங்கிணைப்பதுடன், அறிவியல், தொழில் நுட்பவியல் மேம்பாட்டிற்கான நிதியைப் பகிர்ந்தளிக்கும்.

14. தமிழ்நாடு அடிப்படை செயல்முறை விஞ்ஞானக் கழகம்.— விஞ்ஞானம், தொழில் நுட்பக் கூறுகளில் தமிழ்நாடு அரசாங்கத்துக்கு இது ஆலோசனை கூறும். பல்வேறு நிறுவனங்களின் பணியை ஒருமுகப்படுத்துதலும், இதழ்கள், நூல்கள் முதலியன வெளியிடலும் இதன் பணிகளாக இருந்துவரும்.

15. தமிழ்நாடு விஞ்ஞானத் தொழிற்கூடம்.—
மக்களிடையே தொழில் முன்னேற்றத்துக்கான விஞ்ஞான அறிவை வளர்த்தல்.

16. கம்ப்யூட்டர் நிலையங்கள்.—

ஆங்காங்குள்ள அரசு, தனியார் நிறுவனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கம்ப்யூட்டர் நிலையங்கள் மதுரையிலும் திருச்சியிலும் ஆரம்பிக்கப்படும்.

17. கடல் பொறியியல், கடல் அறிவியல் நிலையம்.—

இந்நிலையம், இம்மாநிலத்தின் கடல் செல்வத்தைக் கண்டறிய கடற் பொறியியல் ஆய்வுகளை மேற்கொள்ளும்.

18. தமிழ்நாடு நிர்வாகப் பயிற்சி நிறுவனம்.—

நிர்வாகம் பற்றிய பயிற்சி அளித்தற்கும் தமிழ் நாட்டின் நிர்வாகத் திறனைப் பெருக்கவும் இது தொடங்கப்படும்.

19. பொருள் பரிசோதனை நிலையம்.—

இந்நிலையம் சாதனங்கள், உற்பத்திப் பொருள்கள், செய்முறைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும்.

20. மோட்டார் பொறியியல் மேம்பாட்டு நிறுவனம்.—

இம்மாநிலத்தின் மோட்டார் தொழில் பெரிதாக உள்ளது. அதற்கு இந் நிறுவனம் ஆராய்ச்சி வளர்ச்சி-வசதிகளை அளிக்கும்.

21. நகர்ப்புறத்திற்கான பொறியியல் நிறுவனம்.—

இந்நிறுவனம் நகர்ப்புறப் போக்குவரத்து, வீட்டுவசதி, சுற்றுப்புற வசதிகள் குறித்த பிரச்னைகள் பற்றி ஆய்வு செய்யும்.

22. பொது நூலக முறை வளர்ச்சித் திட்டம்.—

இத்திட்டம் நகர்ப்புற, கிராமப்புற நூலகங்களில் பல கட்ட திட்டத்தைச் செயலாக்கும்.

23. தமிழ்நாடு நூல்வளர்ச்சி மன்றம்.—

இம்மன்றம் நூல்கள் வெளியிடுதலையும், விற்பனை செய்தலையும் மேம்படுத்தும்.

24. கல்விக்கான நிதிக் குழு.—

இக்குழு, மாநிலத்தில் கல்விக்காகும் செலவினைப் பரிசீலனை செய்து கல்வி வளர்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்களை அடைய எவ்வாறு செலவு முறை அமைய வேண்டும் என்று பரிந்துரைக்கும்.

25. தமிழ்நாட்டுக் கல்வித் திட்ட உட்குழு.—

இது மாநிலத் திட்டக்குழுவிலோ அல்லது அரசு கல்வித்துறைச் செயலாளரின் அலுவலகத்திலோ இயங்கும்.

26. கல்வி, பண்பாடு, அறிவியல், தொழில்நுட்ப நிர்வாகப் பணி.—

கீழ்க்காணும் ஆறு நிறுவனங்களும் அமைச்சரின் கீழும், கல்வித்துறை செயலாளரின் கீழும் இயங்கும்:

(1) தமிழ்நாடு அறிவியல் நிறுவனம்;

(2) கல்வி ஆராய்ச்சி–பயிற்சிக்கான மாநில மன்றம்;

(3) பள்ளிக்கல்வி, பள்ளிநேரத்திற்குப் புறம்பான கல்வி நிறுவனம்;

(4) கல்லூரிக் கல்வி நிறுவனம்;

(5) தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்;

(6) நூலக நிறுவனம்.

27. பள்ளிக்கல்வி, பள்ளிநேரத்திற்குப் புறம்பான கல்வி–இவற்றின் நிர்வாகம்.—

ஆரம்பக்கல்வி, பள்ளிநேரத்திற்குப் புறம்பான கல்வி, பண்பாட்டுச் செயல் திட்டங்கள், உடற் கல்வி ஆகியவற்றிற்குப் பொருத்தமான நிர்வாகப் பிரிவுகள் தொடங்குதல்.

நிதி நிர்வாகத்தைப் பொறுத்தவரை, செலவு அதிகரித்தலையும், விதி முறைகளையும், கணக்கீட்டு நியதிகளையும் தொடர்வதைவிட குறைவாக இருக்கும் வசதிகளிலிருந்து மிகுந்த பயன் பெறுவது எப்படி என்பதிலேயே கவனம் செலுத்தப்படும். கல்வித்துறையின் மேற்குறித்த ஆறு நிறுவனங்களும் செயல்படும் திறனுக்கேற்ப செலவு செய்கின்ற முறை கடைப்பிடிக்கப்படும்.

கல்வி, அறிவியல், தொழில் நுட்பம் இவற்றுக்கான தொலைநோக்குத் திட்ட முதலீடு

(ரூ. லட்சத்தில்)

இனம்	முதலீடு — ஐந்தாவது திட்டம்	முதலீடு — ஆறாவது திட்டம்
(0)	(1)	(2)
அ. பொதுக்கல்வி—		
1. ஆசிரியருக்குப் பணியோடு சேர்ந்த பயிற்சி ..	21·00	..
2. கல்வி வாய்ப்புகளில் சமநிலை பெறல், படிப்பை இடையில் விட்டவர்களுக்காக கல்வி நேரத்திற்குப் புறம்பான கல்வி தொடங்கல்	1409·00	1935·00

(ரூ. லட்சத்தில்)

இனம்	முதலீடு	
	ஐந்தாவது திட்டம்	ஆறுவது திட்டம்
(1)	(2)	(3)
3. பணிச்சார்புடைய கல்வித் திட்டம் ..	244·00	310·00
4. உயர்நிலைப்பள்ளிக் கல்வியைத் தொழில் சார்புள்ள தாக்கல்	1026·00	5752·00
5. பொது நூலக முறையை மேம்படுத்தல் ..	44·00	56·00
6. கல்வித் தர மேம்பாடு	698·00	709·00
7. தொடக்கக் கல்விக்கு முற்பட்ட கல்வி ..	339·00	431·00
8. பள்ளிக் கல்வி விரிவாக்கம்	3706·00	5357·00
9. கல்வி விருதுகளுக்கான மாநிலக் கவுன்சில் ..	1117·00	1706·00
10. சென்னை, அண்ணாமலை, மதுரை பட்ட மேற் படிப்புப் பல்கலைக் கழகங்கள் ..	748·00	210·00
11. நூலகம், தொகுப்புப்பணி ஆகியவற்றின் மேம்பாடு	44·00	56·00
12. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம் ..	45·00	62·00
13. தமிழ்நாடு அடிப்படை அறிவியல், செயல் முறை அறிவியல் கழகம்	7·00	9·00
14. தமிழ்நாடு அறிவியல் தொழிற்கூடம் ..	42·00	74·00
15. கணக்கிடும் பொறி நிலையங்கள் (Computer Centres)	53·00	83·00
16. தமிழ்நாடு கல்வித் திட்ட உட்குழு ..	50·00	68·00
17. கல்வி, பண்பாடு, அறிவியல், தொழில் நுட்பம் இவற்றின் நிர்வாகம் ..	152·00	182·00
மொத்தம்—பொதுக் கல்வி	9,745·00	17,000·00
ஆ. தொழில் நுட்பக் கல்வி		
1. சென்னை தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் ..	700·00	1600·00
2. தமிழ்நாடு அறிவியல் நிறுவனம் ..	395·00	1230·00
3. தமிழ்நாடு நிர்வாகப் பயிற்சி நிறுவனம் ..	105·00	170·00
மொத்தம்—தொழில் நுட்பக் கல்வி	1,200·00	3,000·00

திட்டத்திற்கான மொத்த முதலீடுகள்

	(ரூ. கோடியில்)	
பொதுக்கல்வி	97·45	170·00
தொழில் நுட்பக் கல்வி	12·00	30·00
	109·45	200·00
மொத்தம் ..	309·45	

சுகாதாரம், ஊட்ட உணவு, குடும்ப நலத் திட்டம், குடிநீர் வழங்கல், துப்புரவு

தமிழ்நாடு சுகாதாரக் கொள்கையின் நோக்கம், மக்களின் ஆரோக்கியத்தை—குறிப்பாக தற்போது போதுமான அளவில் பொதுச்சுகாதார வசதிகள் கிடைக்கப்பெறாத ஏழ்மைப் பிரிவு மக்களின் ஆரோக்கியத்தை—மேம்படுத்துவதாகும். ஆகவே, பொருளாதார நிலையில் நலிவுற்றிருக்கும் மக்களின் தேவைகளை நிறைவு செய்ய சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. குடும்ப நலத்திட்டம், போதுமான அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர், துப்புரவு வசதிகளுக்கு வகை செய்தல் ஆகியவை மிகவும் பின்தங்கிய பகுதிகளில் தொடங்கி இல்லங்கள் அனைத்திற்கும் முழு முயற்சியுடன் மேற் கொள்ளப்படும்.

தொலைநோக்குத் திட்டப் பணிகள்

1. சுகாதாரப் பணிகளும் கல்வியும்.—சுகாதாரப் பணிகளின் தரத்தினை மேம்படுத்துவது குறிக்கோளாகும். தற்போது 1:5000 என்றுள்ள மருத்துவர்-மக்கள் விகிதம் 1:3000 என்ற விகிதத்திற்கு உயர்த்தப்படும். அதுபோலவே தற்போது 1:2000 என்றுள்ள படுக்கை வசதி-மக்கள் விகிதம் 1:1000 என்ற விகிதத்திற்கு உயர்த்தப்படும். மேலும், தற்போது 1:8 என்ற விகிதத்திலுள்ள செவிலியர்-படுக்கை வசதி 1:5 என்ற விகிதத்திற்கு உயர்த்தப்படும். இக் குறிக்கோள்களை நிறைவேற்ற, தற்போதுள்ள மருத்துவமனை கட்டுக்கோப்பு சிறிய சுகாதார நிலையங்கள், பல நோய் மருத்துவ நிலையங்கள், பல நோய் மருத்துவமனைகள், மாவட்ட பொது மருத்துவ மனைகள் போன்றவைகளாக மாற்றியமைக்கப்படும்.

ஒவ்வொரு சிறிய சுகாதார நிலையமும் (தற்போதைய துணை நிலையம்) பத்தாயிரம் மக்களுக்குப் பணிபுரியும். அதில் ஒரு முழுநேர அல்லது பகுதி நேர மருத்துவ அதிகாரி ஒருவரும், கிராம உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்று பயிற்சி பெற்ற மருந்தகத் திறனாளர் ஒருவரும், துணை மருத்துவப் பணியாளர் சுமார் எட்டு பேரும் இருப்பர். சித்த, யுனானி, அல்லது ஆயுர்வேத மருந்தகம் ஒன்றும் இணைந்திருக்கும்.

பலநோய் மருத்துவ நிலையம் (தற்போதைய தொடக்கச் சுகாதார நிலையம்) 80,000 முதல் 1,00,000 வரையிலான மக்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்யும். ஒவ்வொரு மையத்திலும் காச நோய்களுக்காக 4 படுக்கைகள், தொத்து நோய்களுக்காக 2 படுக்கைகள் உள்பட, மருத்துவம், அறுவை மருத்துவம், மகப்பேறு-மகளிர் நோய் ஆகிய பிரிவுகளுக்காக 30 படுக்கைகளைக் கொண்டிருக்கும். வட்ட மருத்துவ மனைகள் 90 படுக்கைகள், கூடுதலாக 12 சிறப்புப் பிரிவுகள், 10 படுக்கைகளுடன் கூடிய சித்தவைத்தியப் பிரிவு ஆகியவற்றை கொண்ட பல நோய் மருத்துவமனைகளாகப் படிப்படியாகத் தரம் உயர்த்தப்படும். இந்த 90 படுக்கைகளில் 10 காச நோய்களுக்காகவும், 5 தொத்து நோய்களுக்காகவும் ஒதுக்கப்படும்.

மாவட்ட மருத்துவ மனைகள் ஒவ்வொன்றும் 400 முதல் 650 படுக்கை வசதிகளையும், 22 சிறப்பு வல்லுநர்களையும் தேவையான கூடுதல் மருத்துவ, துணை மருத்துவப் பணியாளர்களைக் கொண்ட மாவட்ட பொது மருத்துவ மனைகளாக படிப்படியாகத் தரம் உயர்த்தப்படும். இப்படுக்கை வசதிகளில் 30 படுக்கைகள் காச நோய்களுக்காகவும் 20 படுக்கைகள் தொத்து நோய்களுக்காகவும் ஒதுக்கப்படும். மாவட்ட மருத்துவமனை ஒவ்வொன்றிலும் 20 படுக்கைகள் கொண்ட சித்த வைத்தியப் பிரிவும், 10 படுக்கைகளுடன் கூடிய ஹோமியோபதி மருத்துவப் பிரிவும் இருக்கும். மலேரியா, யானைக்கால், பெரியம்மை, காலரா, தொழுநோய், இளம்பிள்ளை வாதம் (போலியோ), டிப்தீரியா, இசிவு (டெட்டனஸ்), கக்குவான் இருமல் போன்ற நோய்களைத் தடுத்து, கட்டுப்படுத்தி, ஒழித்து வரும் பணிகளில் ஈடுபட்டுள்ள தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

காஞ்சிபுரம் அரசினர் தலைமை மருத்துவமனை வளைவிற்குள் புற்று நோய்க்காக 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றை கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இது அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் நிலையத்தோடு இணைக்கப்படும். அந்நிலையம் விரிவுபடுத்தப்பட்டு ஆய்வகங்கள், ஆராய்ச்சி வசதிகள், கதிர்வீச்சு மருத்துவம், கதிர் வீச்சின் மூலம் நோய்க்குறி காணுவதற்கான வசதிகள் படிப்படியாக 500 வரை உயரும் படுக்கை வசதிகள் ஆகியவற்றுடன் வட்டார அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் நிலையமாக மேம்படுத்தப்படும்.

மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்த மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள் அனைத்திலும் புற்றுநோய் கண்டறிந்து சிகிச்சை செய்வதற்கான மையங்கள் ஏற்படுத்தப்படும்.

வட்ட மையங்களில் நெஞ்சு நோய் மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படும். திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட தலைமையிட மருத்துவமனைகள் போதனை செய்வதற்கான மருத்துவமனைகளாக மாற்றப்பட்டு, அங்கு மருத்துவம் சார்ந்த பாடங்களில் எம்.பி.பி.எஸ்., மாணவர்கள் 100 பேருக்குப் பயிற்சியளிக்கும் வகையில் வசதிகள் செய்யப்படும்.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ராயப்பேட்டை மருத்துவமனை, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவை முழு அளவில் கல்விப் போதனை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும்.

தற்போது ஆசிரியர்களாகப் பணி புரியவும், தனிப்பட்ட முறையில் மருத்துவத் தொழில் நடத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ள உதவி மருத்துவ அதிகாரிகள் (Civil Assistant Surgeons), மருத்துவ அதிகாரிகள் (Civil Surgeons) ஆகியோர் முழுநேர மருத்துவ ஆசிரியர்களாக மாற்றப்படுவர்.

சென்னை அடையாற்றில் பட்ட மேற்படிப்பு மருத்துவ மையம் ஒன்று ஏற்படுத்தப்படும். மாநில அளவில் கலந்து ஆலோசனை செய்யும் ஆய்வகம் (Referral Laboratory) ஒன்றையும், மாவட்ட, வட்ட அளவுகளில் இரண்டு வட்டார ஆய்வகங்களையும், ஆய்வுக் கூடங்களையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பல் நோய் மருத்துவத்திற்கு ஆண்டுதோறும் பயிற்சிப் பெற சேர்க்கப்படுவோரின் எண்ணிக்கை, 50,000 பேர்களுக்கு பல் மருத்துவர் ஒருவர் என்ற இலக்கு விகிதத்தை அடைய, படிப்படியாக உயர்த்தப்படும். பல் மருத்துவப் பிரிவில் ஊனங்களைச் சீர்செய்யும் அறுவை (Prosthetics), பல் சீரமைப்பு இயல் (Orthodentia), வாய் நோய்க் குறியியல் (Oral Pathology) ஆகியவற்றில் எம்.டி.எஸ்., வகுப்பு தொடங்கக் கருதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பல் நோய் மருத்துவமனையிலும் பல் மருத்துவர் ஒருவர் இருப்பார்.

மருந்தியலில் பட்ட மேற்படிப்புப் பட்டம் பெறுவதற்கான புதிய படிப்பு ஒன்று தொடங்கப்படும். இதனால் தற்போதுள்ள எம்.எஸ்.சி. (மருந்தியல்), படிப்பு நீக்கப்படும். மருந்தியலுக்கென்று தனிப்பட்ட நிறுவனம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

சென்னை நகரில் இரண்டாவதாக இந்திய மருத்துவ மனைக்கான கல்லூரி ஒன்றும், இந்திய மருத்துவ முறையில் (சித்த மருத்துவம்) பட்ட மேற்படிப்பையும், எம்.பி.பி.எஸ்., பட்டம் பெற்றுள்ள ஆங்கில முறை மருத்துவர்களுக்கு இந்திய மருத்துவ முறையில் மறு பயிற்சி அளிப்பதற்கான வகுப்பு ஒன்றையும் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அடிப்படை மருத்துவம், மருந்துகள், துறைகளில் ஆராய்ச்சிக்கான திட்டங்கள் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தரத்தில் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி ஒன்றும் இம் மாநிலத்தில் தொடங்கப்படும்.

2. குடும்பநலத் திட்டம்.—ஆயிரத்திற்கு 35 என்ற தற்போதைய பிறப்பு வீதத்தை 1979ஆம் ஆண்டில் 25 ஆகவும், 1984ஆம் ஆண்டில் 22 ஆகவும் குறைப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். இந்த இலக்கினை அடைய, 1979-ல் 1,000 பேரில் 175 தம்பதிகளில் 58 தம்பதிகளுக்கும், 1984-ல் கூடுதலாக 50 தம்பதிகளுக்கும் கருத்தடை சிகிச்சை செய்யப்படும். குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை மக்கள் அறிய வேண்டும். அவர்களுடைய குடும்பக் குறிக்கோளையும் ஆர்வங்களையும் நிறைவேற்ற குடும்ப நலத் திட்டத்தை அவற்றுடன் இணைக்க உதவ வேண்டும். குடும்ப நலத் திட்ட முறைகளைப் பின்பற்றுவதில் தடையாக இருக்கும் சமூக-பண்பாட்டுக் கூறுகள், குடும்ப நலத் திட்ட விரிவாக்கக் கல்வி, விளம்பரங்கள் ஆகியவற்றின் மூலம் வெல்ல வேண்டும்.

பள்ளிகள், கல்லூரிகள் அனைத்திலும், பள்ளிக்கு வெளியேயான கல்வி நிலையங்களிலும் திட்டமிட்ட குடும்பங்களின் பொருளாதாரத் தத்துவமும், அவசியமும் கற்பிக்கப்படும். பட்ட, இடை நிலை அளவுகளில் அனைத்து ஆசிரியர் பயிற்சித் திட்டங்களின் ஒருங்கிணைந்த பகுதியாக மக்கள் தொகை பற்றிய கல்வியைச் சேர்ப்பது குறித்து கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

குடும்ப நலத் திட்ட முயற்சியில் அரசுத் துறைகள் அனைத்துடன் தொண்டு நிறுவனங்களும் ஈடுபடும். தொழிற்சாலைகள், மலைத் தோட்டங்கள், வணிக நிறுவனங்கள் ஆகிய ஒவ்வொன்றிலும் சுகாதார-குடும்ப நலத்திட்டக் குழு ஒன்று அமைக்கப்படும். இத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு பிரிவுவாரியாக வினைச் செயல்வகை மேற்கொள்ளப்படும்.

பல்வேறு வகையான குடும்ப நலத் திட்டப் பணியாளர்களுக்காக நீண்ட காலப் பயிற்சிமுறை ஏற்படுத்தப்படும்.

3. ஊட்ட உணவு.—இம் மாநிலத்தில் ஏழ்மை நிலையினால் மக்களுக்கு ஊட்டச் சத்தின்மை நிலை ஏற்பட்டுள்ளது. வயது வந்தவர் ஒருவர் நாளொன்றுக்கு உட்கொள்ளும் உணவு 2,200 கலோரி சக்தி கொண்டதாகும். இது பரிந்துரைக்கப்பட்ட அளவிற்கும் 600 கலோரி குறைவாக உள்ளது. சூலுற்றிருக்கும், பாலூட்டுகின்ற தாய்மார்களிடையேயும் (தேவையான அளவான 2,500-2,900 கலோரியில் மூன்றில் ஒரு பங்கு குறைந்து காணப்படுகிறது), மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையேயும் (பரிந்துரைக்கப்பட்டுள்ள 1,200 கலோரிக்கு 500 முதல் 700 கலோரி வரை குறைவாகவும் காணப்படுகிறது) ஊட்டச் சத்தின்மை நிலவுகிறது. இந்த ஊட்டச் சத்தின்மையால் இளங் குழந்தைகளின் இறப்பு வீதமும் (உயிருடன் பிறக்கும் 1,000 குழந்தைகளில் 122 இறக்கின்றன) குழந்தைகளிடையே ஆரோக்கியக் குறைவும் அதிகமாக உள்ளது. ஊட்ட உணவுத் திட்டமானது, நலிவுற்று எளிதில் நோய் தாக்கக் கூடிய மக்கள் பகுதியான சிறுர்கள், சூலுற்ற, பாலூட்டுகின்ற தாய்மார்கள் ஆகியோருக்குரிய சிறப்புத் திட்டமாகும்.

இம்மாநிலத்தில் 15,000 ஆரம்பப் பள்ளிகளோடு இணைக்கப்பட்டுள்ள 12,500 குழந்தைகள் காப்பகங்களும், தொடக்கப் பள்ளிக்கு முந்திய பிரிவுகளும் தொடங்கப்படும். இவை 0-5 வயதுத் தொகுதியுள்ள 9·18 லட்சம் குழந்தைகளுக்கு புரோட்டீன் நிறைந்த சத்துணவை வழங்கும் முகவரமைப்புகளாகப் பணிபுரியும்.

சூலுற்றிருக்கும், பாலூட்டுகின்ற தாய்மார்களுக்கும், ஊட்டச் சத்து குறைவாயுள்ள குழந்தைகளுக்குமாக கல்வி, உணவளிக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

4. குடிநீர் வழங்கல், துப்புரவு.—நகர்ப்புற மக்களில் சுமார் 70 சதவீதத்தினருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. எஞ்சியோருக்கு நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்களால் குடிநீர் வழங்கப்படும். ஆனால் போதுமான அளவில் குடிநீர் வழங்கப்படவில்லை. ஒருவருக்கு நாளொன்றுக்கு 25 காலன் நீர் வழங்குவதற்காக நகர்ப்புற குடிநீர் வழங்குத் திட்டம் செயல்படுத்தப்படும். இதனால் 5·6 மில்லியன் பேர்கள் பயனடைவர்.

நகர்ப்புறங்களில் கழிவுநீர் அகற்று வசதி போதுமான அளவில் இல்லை. நகர்ப்புற மக்களில் 24 சதவீதத்தினருக்கு மட்டுமே (3·75 மில்லியன்) புதை வடிகால் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. திட்டக் காலத்தில் 10·9 மில்லியன் பேர்களுக்கு பயனளிக்கும் வகையில் நகர்ப்புறங்களில் கழிவுநீர் அகற்ற வசதிகள் செய்யப்படும்.

சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல் நிலை உயர்த்தப் படுவதோடு, மாநகர் கழிவுநீர் அகற்றும் முறையை முழுமையான முறையில் மேம்படுத்தும் திட்டமும் மேற்கொள்ளப்படும்.

தற்போது நீர் ஆதாரங்கள் எவையுமற்ற 4,653 சிற்றூர்களுக்கு நீர் வழங்கப்படும். தொத்து நோய்ப் பகுதியில் அமைந்துள்ள 2,213 சிற்றூர்களுக்கும், போதுமான குடிநீர் வசதியற்ற 14,486 சிற்றூர்களுக்கும் குடிநீர் வழங்கும் நிலை உயர்த்தப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியம் நகர்ப்புறங்களிலும் கிராமப் பகுதிகளிலும் குடிநீர் வழங்குதல், கழிவு நீர் அகற்றுதல் தொடர்பான திட்டங்கள் அனைத்தையும், திட்டமிடும், ஒருங்கிணைக்கும், மேற்பார்வையிடும், நிறைவேற்றும் முகவரமைப்பாக இருக்கும்.

தொழிற்சாலைக் கழிவுப் பொருள்களுக்கு ஒரு வகை செய்யவும், நீர் தூய்மைக் கெடல், காற்று தூய்மைக் கெடல் முதலியவற்றை தடுப்பதற்குமாகத் திட்டம் தொடங்கப்படும். நீரைத் தூய்மைப் படுத்தல், கழிவு நீரைச் சேகரித்து ஒரு வகை செய்தல், தொழிற்சாலைக் கழிவுகளைத் தூய்மைப்படுத்தல், காற்று தூய்மைக் கெடல், பொதுச் சுகாதாரம், தொழிற்சாலை ஆரோக்கியம் ஆகியவற்றில் பட்டமேற்படிப்பு ஆராய்ச்சி, டாக்டர் நிலைகளில் பயிற்சி தர சுற்றுப்புறப் பொறியியலுக்கான மையம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

நகர்ப்புற போக்குவரத்து, நகர்ப்புற வீட்டுவசதி, நகர்ப்புற சுற்றுச் சூழ்நிலை ஆகியவற்றைக் கையாள நகர்ப்புற பொறியியல் நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

சுகாதாரம், குடும்பநலத் திட்டம், ஊட்ட உணவு, குடிநீர் வழங்கல், துப்புரவு ஆகிய பிரிவுகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நிர்வாக செயற்குறிப்புகள், சுகாதார குடும்பநலத் திட்டம், ஊட்டவுணவு பணிகளை ஒரே பணியாக ஒருங்கிணைப்பதை ஒரு புறமும் பல்வேறு பொறுப்பு நிலைகளில் கொள்கை முடிவு எடுப்பதை பரவலாக்குவதை மற்றொரு புறமும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

திட்டத்தில் கருதப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள்

(ரு. கோடியில்.)

இனம்	ஐந்தாவது திட்டம்	ஆறாவது திட்டம்	மொத்தம்
(0)	(1)	(2)	(3)
சுகாதாரம்-குடும்ப நலத் திட்டம் ..	50	120	170
ஊட்டவுணவு	58	145	203
குடிநீர் வழங்கல், துப்புரவு	100	220	320
மொத்தம்	208	485	693

கிராமப்புற வளர்ச்சி

கிராமப்புற வளர்ச்சித் திட்டங்கள், கிராமப்புற மக்களின் குறைந்த பட்ச தேவையைப் பூர்த்தி செய்வதாயும், அதே சமயத்தில் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதாயும் இருக்கும். சமுதாய மாற்றத்துக்கு பஞ்சாயத்து முறை மிகவும் முக்கியமானதாகையால், அவற்றில் அதிகக் கவனம் செலுத்தப்படும்.

திட்டங்கள்

வேளாண்மைத் துறையில் எதிர்பார்க்கும் அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கவும், கால்நடை வளர்ச்சி, மீன் உற்பத்தி முதலானவற்றிற்கு வேண்டிய அடிப்படை வசதிகளைப் பெருக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களுக்காக இப்போதுள்ள தொகைகளில் ஆண்டொன்றுக்கு 10 சதவீதம் அதிகரிக்கப்படும். தாய்—சேய் நலத்தில் கவனம் செலுத்தப்படும். பொழுது போக்கு நிறுவனங்கள், வானொலி மன்றங்கள், நூல் நிலையங்கள், படிக்கும் அறைகள், இளைஞர் குழு, தொழிலுக்கேற்ற படிப்பு முறையை அபிவிருத்தி செய்தல் முதலியவற்றில் கவனம் செலுத்தப்படும். குடிநீரால் ஏற்படும் நோய்களைத் தடுக்க பொருத்தமான திட்டங்கள் செயற்படுத்தப்படும். நிலமற்ற ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள இடவசதி அளிக்கப்படும். கிராமப்புற மக்களின்—குறிப்பாக, தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்டோர் ஆகியோரின்—வீட்டு

வசதியைப் பெருக்க ''கிராமப்புற வீட்டுவசதிக் கழகம்'' ஏற்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. அரசு தற்போது, ''அரிசன வீட்டு வசதி-வளர்ச்சிக் கழகம்'' ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். கிராமப் புற கலை, கைத்தொழில், நுண்கலைகள் மேம்பாட்டிற்கு வகைசெய்யப்பட்டிருகிறது. கிராமப்புறத் தொழிற் பேட்டைகள் ஏற்படுத்தப்படும். தற்போதுள்ள திட்டங்களாகிய கிராமப்புற மக்கள் வளம், சத்துணவு வழங்குதல், கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவை விரிவாக்கப்படும்.

அமுலாக்கும் அமைப்பு.—மேற்கூறிய திட்டங்களை நன்முறையில் செயல் படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும், ''மாவட்ட வளர்ச்சிக் கழகம்'' ஏற் படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.

நிதி ஒதுக்கீடு.—வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, கல்வி, சுகாதாரம், குடிநீர் வழங்கல், முதலான துறைகளின் கீழ் வரும் கிராமப்புற அபிவிருத்தித் திட்டங்களுக்கு அந்தந்த துறையிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது தவிர கிராமப்புற சமுதாய அபிவிருத்தித் துறையில் மட்டும், மொத்தம் ரூ. 95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

கூட்டுறவு

கூட்டுறவு.—மாநிலத்தில், எல்லா கிராமங்களையும், 52·2 சதவிகிதம் வேளாண்மைக் குடும்பங்களையும் உள்ளடக்கக்கூடிய 5,243 வேளாண்மைக் கடன் வழங்கும் சங்கங்கள் உள்ளன. மொத்த நடப்பு உற்பத்தி நிதி ஒதுக்கீட்டில் ஏறத்தாழ 36 சதவிகிதம் இத்தகைய சங்கங்களால் கடன் வசதிகளாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இச் சங்கங்களின் உறுப்பினர்களில் 40 சதவிகிதத்தினர் இச்சங்கங்களால் நன்மையடைந்துள்ளனர்.

தொலைநோக்குத் திட்ட விவரம்

1. கடன் தேவைகள்.—(அ) குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்கள்.—1983-84 இறுதியில் உற்பத்திக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 540·50 கோடியாக இருக்குமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகளின் கடன் தேவை ரூ. 283·76 கோடியாக இருக்கும். இத் தொகையின் 60 சதவீதத்தைக் கூட்டுறவுச் சங்கங்களால் அளிக்கப்பட வேண்டிய வீதமாக நிர்ணயிக்கலாம். தொலைநோக்குத் திட்ட இறுதியில் இது 75 சதவீதமாக உயரக்கூடும்.

சங்கங்களின் புனரமைப்பு.—ஏற்கெனவே சங்கங்களில் ஏறத்தாழ 50 சதவீத சங்கங்கள் ஏற்புடைய முறையில் சீரமைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய சங்கங்கள் சீரமைக்கப்பட்டு திட்ட இறுதியில் நன்னிலைப் பெறும்.

வசூலாகாத கடன் சிறப்பு நிதி.—தற்போதைய வசூலாகாத கடன் சிறப்பு நிதித் திட்டத்தைத் தொடர்ந்து இருக்கச் செய்ய எளிய பிரிவினருக்கான கடன்களை உயர்த்த வேண்டும்.

நிதி வாயில்களை வலுப்படுத்துவது.—வெவ்வேறு மட்டங்களில் தற்போதைய பங்கு மூலதனம் 1983-84 ஆம் ஆண்டளவில் ரூ. 41 கோடியாக அதிகரிக்கப்பட வேண்டும். மேலும், பங்கு மூலதனத்தில் மாநில அரசின் அளிப்பும் தொடர்ந்து இருக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் தற்பொழுது அவை கொண்டுள்ள ரூ. 85 கோடி வைப்பு நிதிகளை நான்காவது திட்ட இறுதியில் ரூ. 180 கோடியாக உயர்த்த வேண்டும்

வேளாண்மைக் கடன்நிலைப்பேருக்க நிதி.—பஞ்சம், வெள்ளங்களினல் ஏற்படும் செலவைச் சமாளிப்பதற்காக குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றுவதை ஈடு செய்யவேளாண்மைக் கடன் நிலைப்பேருக்க நிதிக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் தொடங்கப் பெறவேண்டும்.

(ஆ) நீண்ட காலக் கடன.—வேளாண்மை மறுநிதிக் கழகத் திட்டங்களேயும், பனஞடரு வளர்ச்சி சங்கத் திட்டங்களேயும் நிறைவேற்றிவரும் நிலவள வங்கி களின் செயல்கள் அண்மை ஆண்டுகளில் பெருகியுள்ளன. இதன் நிதிகளே விரை வாகவும் திறம்படவும் பயன்படுத்துதற்குப் போதுமான திட்டங்கள் வரையப்பட வேண்டும். சிறு விவசாயிகள், அவர்களுடைய நிலங்களுக்குப் பாசன வசதியைப் பெற உதவும் நோக்கத்துடன் இறைவைப்பாசனச் சங்கங்கள் 'தொடங்கப்படு கின்றன. திட்டக்காலத்தில் மேலும் 1,000 சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட் டுள்ளது. மாநிலம் முழுவதும் விரிவான ஊற்று நீர்க் கணக்கெடுக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. இத் திட்டம், 46,500 கிணறுகளேத் தோண்டுவது, 37,000 கிணறுகளே ஆழப்படுத்துவது, 67, 700 விசைக் குழாய்களே அமைப்பது, 36,000 வடிமுனேக்குழாய்களே அமைப்பது, 300 நடுத்தர குழாய்க் கிணறுகளே வெட்டுவது ஆகிய செயல்களே மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டங்களே நிறைவேற்ற தேவைப்படும் கடன் ரூ. 83·71 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. கூட்டுறவு நிலவள வங்கிகளின் மூலம் அளிக்கப்படும் நீண்டகாலக் கடனுக்கான தொலேநோக்குத் திட்டக்கால ஒதுக்கீடு ரூ. 200 கோடியாக நிர்ணயிக்கப்பட் டுள்ளது. இதில் மாநிலத்தின் ஒப்பிய பொறுப்பு ரூ. 22·80 கோடியாக இருக்கும்.

2. கூட்டுறவு விற்பனேயும் பதனம் செய்தலும்.—தாலுக்கா மட்டத்தில் அமைந்துள்ள 123 அடிப்படை விற்பனேச் சங்கங்கள் வேளாண்மைப் பொருள்களே வாங்கி விற்பது, ரசாயன உரங்கள் மற்றும் பிற உள்ளீடுகளேப் பகிர்ந்தளிப்பது ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளன. மேலும், அவை வேளாண்மைப் பொருள்களேப் பதனம் செய்ய இயந்திரச் சாதனங்களே அமைத்துள்ளன. பங்கு மூலதனம், நிர்வாக உதவித் தொகை, கிடங்குகள் கட்டுவது, விலே ஏற்ற இறக்க நிதியை அமைப்பது முதலிய வகைகளில் அரசு உதவி செய்கின்றது.

அ. விற்பனேவசதி.—விற்பனேச் சங்தங்களின் நடவடிக்கைகளுக்கான செலவுகள் 1983-84 ஆம் ஆண்டுகளில் அதன் குறியிலக்கான ரூ. 75 கோடியை எட்டி விடும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. தகுதி பெற்ற நிர்வாகிகளின் வேலேக்கான நிர்வாக உதவித் தொகை 48 விற்பனேச் சங்கங்களுக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள 75 சங்கங்களுக்கும் இத்தகைய நன்மை தொலேநோக்குத் திட்டக் காலத்தில் நீட்டிக்கப்படும். தரப்படுத்தும் சாதனங்களே வாங்கவும், தரப் படுத்தும் பணியாளர்களின் வேலேக்கும் உதவித் தொகைகள் அளிக்கலாம்.

ஆ. வேளாண்மை உள்ளீடுகளின் பங்கீடு—உரங்கள்.—1983-84 ஆம் ஆண்டு இறுதிக்குள் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கி விற்கும் உரங்களின் அளவு 6 லட்சம் டன்னிகளாகவும் அதன் மதிப்பு ரூ. 60 கோடியாகவும் எட்டும். இந்த அளவு வணிகத்துக்குத் தேவையான கடனேப்பெற கூட்டிணேப்புகள் ரூ. 3 கோடியை இறுதிநிலேப் பணத் தேவையாகக் கொண்டிருக்கும். அரசு ரூ. 0·96 கோடியை தொலேநோக்குத் திட்டக் காலத்தில் பங்கு மூலதனமாக அளிக்கலாம்.

விதைகள்.—வித்தை வளர்ச்சிக் கழகம் ஒன்று துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. துடியலூர் கூட்டுறவு வேளாண்மைப் பணிகள் சங்கம் ஏற்கெனவே பணிகளேத் தொடங்கியுள்ளது. இக் கழகம் வேளாண்மை-கூட்டுறவு வளர்ச்சியில் ஒரு முக் கிய நிலேயைக் கொண்டிருக்கும்.

பூச்சிக் கொல்லி மருந்துகள்.—துடியலூர் கூட்டுறவு வேளாண்மைப் பணிகள் சங்கம் சமீபத்தில்பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரிக்கும் பிரிவினேயும், பாரத்தீயன் தயாரிப்பு ஆலேயையும் அமைத்துள்ளது. மேலும் 3 பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிக்கும் பிரிவுகளேத் தொலேநோக்குத் திட்ட இறுதிக்குள் ஏற்படுத்துவதென்று திட்டமிடப்பட்டுள்ளது.

இ. கிடங்கு வசதி.—ரசாயன உரங்களேயும் வேளாண்மைப் பொருள்களேயும் சேமித்து வைக்க ஒவ்வொரு வேளாண்மைக் கடன் சங்கத்திற்கும் குறைந்தது ஒரு கிடங்காவது அமையவேண்டியது அவசியம். நான்காவது திட்ட இறுதிக்குள் 2,300 கடன் சங்கங்கள் தங்களுக்கே சொந்தமான கிடங்குகளேப் பெற்றிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொலேநோக்குத் திட்டக் காலத்தில் 1,500

கிடங்குகளைக் கட்டுவதற்கு வகை செய்யப்படும். 1983–84-ல் கூட்டுறவுச் சங்கங்களின் சேமிப்பு வசதித்திறன் 5·49 லட்சம் டன்னிகளாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஈ. பதனப்படுத்துதல்.—கூட்டுறவு விற்பனை வசதிச் சங்கங்களுக்கு இணைப்புடையவைகளாகப் பதனம் செய்யும் பிரிவுகள் அரசின் நிதியுதவியோடு அமைக்கப்படுகின்றன. தொலைநோக்குத் திட்டக் காலத்தில் பின்வரும் பதனப்படுத்தும் பிரிவுகளை அமைப்பது கைக்கொள்ளப்படும்.

(ரூ. லட்சத்தில்)

பிரிவின் வரிசை	பிரிவுகளின் எண்ணிக்கை	மொத்தச் செலவு
(0)	(1)	(2)
1. சூரியகாந்தி விதையைப் பிரித்தெடுக்கும் இயந்திரக் கூடங்கள்	4	168
2. மரவள்ளி பதனிடும் பிரிவு	2	60
3. தேங்காய் எண்ணெய்த் தொகுதி..	3	144
4. பருத்தி வித்து எண்ணெய் ஆலை	2	96
5. பருத்தியினின்றும் விதைகளை அகற்றி பக்குவப் படுத்தும் பிரிவு	10	90
6. காகித ஆலைகள்	1	45
7. நல்லெண்ணெய் ஆலைத் தொகுதி..	1	120
8. இஞ்சித் துண்டுகளைப் பக்குவப் படுத்தும் பிரிவு ..	1	5
9. உருளைக்கிழங்கு பதப்படுத்தும் பிரிவு	1	5
10. பார்லி பதனம் செய்யும் பிரிவு	1	5
11. முந்திரி, ஆப்பிள் பதனப்படுத்தும் பிரிவு	1	24
12. தேங்காய் நார்ப் பிரிவு	1	20
13. ரப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழிலுக்கான பதப்படுத்தும் பிரிவு	1	60
மொத்தம்		842

3. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.— நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், வாழ்க்கையின் அடிப்படை நுகர்ப் பொருள்களை நியாயமான விலைக்கு வழங்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. அண்மை ஆண்டுகளில் கூட்டுறவு மொத்த விற்பனை மண்டிகள் நவீன சிறிய சிறப்பங்காடிகளை ஏற்படுத்தியுள்ளன. இவற்றிற்கு அரசு நிதியுதவி செய்கின்றது. மக்கள் தொகையில் 31 சதவீதத்தினரையும், சில்லரை வணிகத்தில் 14 சதவீதத்தையும் நுகர்வோர் கூட்டுறவின் கீழ்க் கொண்டுவரத் திட்டமிடப்படுகிறது. தற்போது நிறைவேற்றப்பட்டுக் கொண்டுவரும் பல்வேறு திட்டங்கள் தொலைநோக்குத் திட்டக் காலம் வரையில் தொடரப் பெறவேண்டும். மேலும், நிதி வசதி குறைந்த

கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்களைப் புனரமைக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. 1983–84 இறுதியில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை சுமார் ரூ. 100 கோடி இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்.—பயிற்சி பெறாத உழைப் பாளர்கள், உப்பு உற்பத்தியாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், நாவிதர்கள் போன்ற சமுதாயத்தின் சாமானியப் பிரிவினரின் நன்மைக்காக வெவ்வேறு வகைக் கூட்டுறவுச் சங்கங்களைத் தொலைநோக்குத் திட்டக் காலத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சமுதாயத்தின் கீழ்த் தளத்தில் வாழும் சாமானிய மக்களுக்கு மேலும் நன்முறையில் தொண்டாற்றும் வகையில் இச்சங்கங்களைச் செயலாற்றச் செய்வதற்கான தொடக்கம், இத்துறையில் ஏற் கெனவே தொடங்கப்பட்டுவிட்டது.

வட்டார மட்டத்தில் வேளாண் பொறியியல் மற்றும் பணி மையங்கள்.—16 மாவட்டக் கூட்டுறவு வேளாண் பணிச் சங்கங்களும் 153 வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்களும் வட்டார மட்டத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மேலும் 147 வேளாண் பணி மையங்களைத் தொலைநோக்குத் திட்டக் காலத்தில் தொடங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

5. கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்.— வெவ்வேறு கூட்டுறவு நிறு வனங்கள், கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தப் போதுமான எண்ணிக்கையில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்ப தற்குத் தனிச் சிறப்புப் பயிற்சி முறைகள் தொடங்க வேண்டுவதன் அவசியத்தை திட்டம் வற்புறுத்துகின்றது. தமிழ்நாடு மாநிலத்திற்கென ஒரு கூட்டுறவுக் கல்லூரி ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கருதப்பட் டுள்ள கல்லூரி, கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்கு உட்சேவைப் பயிற்சியளிப்ப தோடு, கூட்டுறவுக் கணக்குகளின் தணிக்கை, கூட்டுறவு வங்கி முறை, கூட்டுறவு விற்பனை வசதி, நிர்வாகம், நிதி நிர்வாகம் முதலான பாடங்களிலும் போதனைப் பயிற்சியை நடத்தும். இதுபோன்ற சிறப்புத் தேர்ச்சி வகுப்புகள், கூட்டுறவுச் சங்கங்களின் கீழ்மட்டப் பணியாளர்களுக்கும் தேவையாகையால், இத்தகைய பயிற்சிப் பள்ளிகள் இப்பணியினை மேற்கொள்ளும். மேலும், விற்பனையாளர் திறன், பற்று வரவுக் கணக்கு வைப்பு, வேளாண்மைப் பொருள்களின் அளிப்புகள் பற்றிய நிர்வாகம் போன்ற பணிசார்ந்த வகுப்புகள் நடத்தப்படும். உறுப்பினர் கல்வித் திட்டத்தை மாற்றியமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1974—84 ஆகிய பத்தாண்டுக் காலத்தில் கூட்டுறவின் மீதான நிதி ஒதுக்கீடு
(மாநிலத்துறை)

(ரூ. கோடியில்)

வளர்ச்சியின் தலைப்பு	தொலைநோக்குத் திட்டக் காலத்திற் காகக் கருதப்பட்டுள்ள ஒதுக்கீடு
(0)	(1)
1. கூட்டுறவுக் கடன்	37
2. கூட்டுறவு விற்பனை வசதியும் பதனம் செய்தலும்.	18
3. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்	3
4. பலவகைக் கூட்டுறவுச் சங்கங்கள்	1
5. கூட்டுறவுக் கல்வியும், பயிற்சியும்	2
மொத்தம்	61

நகர்ப்புற மேம்பாடு

இந்தியாவில் நகர்ப்புற வளர்ச்சியில் தமிழ்நாடு, மஹாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்து இரண்டாவதாக இருக்கிறது. நகரங்களின் எண்ணிக்கையில், 289 நகரங்களைக் கொண்டுள்ள மஹாராஷ்டிர மாநிலத்தைக் காட்டிலும் அதிக மாகத் தமிழ்நாடு 443 நகரங்களைக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டின் நகர்ப்புற மக்கள் தொகை 1971 ஆம் ஆண்டுக் கணக்கெடுப் பின்படி 12·5 மில்லியன்களாகும். இம் மக்கள் தொகை நம் நாட்டின் மொத்த நகர்ப்புற மக்கள் தொகையான 19 சதவீதத்தோடு ஒப்பிடும்போது 30·23 சத வீதமாக உள்ளது. இதில் 78 சதவீதத்தினர் I முதல் III வகுப்பு வரையிலுள்ள 123 நகரங்களில் செறிந்துள்ளனர்.

சென்னை நகர்ப்புறத் திரட்சியும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் முதலிய நகரங்களின் திரட்சியும் ஒன்று சேர்ந்து மாநிலத்தின் நகர்ப்புற மக்கள் தொகையில் 43 சதவீதத்தைக் கொண்டுள்ளன. இதில் சென்னை நகர்ப்புற மக்கள் தொகை 3·1 மில்லியன்கள்—அதாவது 25 சதவீதமாகும்.

நகர்ப்புற வசதிகள்.—மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான சுத்த மான குடிநீர் வசதி, பெரும்பாலான நகர்ப்புறப் பகுதிகளில், ஒருவருக்கு ஒரு நாளைக்கு 10 முதல் 15 காலன்களாக மட்டுமே இருக்கிறது. இவ்வசதியினை 141 நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கும் 9 மில்லியன் மக்கள் பெறுகின்றனர். மேலும், 37 நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள 0·9 மில்லியன் மக்களுக்கு இவ்வசதி கிடைப் பதற்கான பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதாரக் கேட்டினின்றும் மக்களைக் காப்பாற்ற கழிவுநீர் வடிகால் வசதி யினை விரிவுப்படுத்துதலில் உடனடிக் கவனம் செலுத்த வேண்டியது அவசிய மாகும். இக் கழிவுநீர் வடிகால் வசதியைத் தற்போது சென்னை, மதுரை மாநகராட்சிகளிலும், 5 நகராட்சிகளிலும், 4 நகரியங்களிலும், பேரூராட்சி மன்றங்களிலும் உள்ள 3.75 மில்லியன் மக்கள் மட்டுமே பெறுகின்றனர்.

நகர்ப்புறப் போக்குவரத்து.—பெரிய, நெருக்கடி மிகுந்த நகரங்களில்–முக்கியமாக சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் போக்குவரவும், போக்கு வரத்தும் ஒரு பெரிய பிரச்னையாக உள்ளது. ஒருங்கிணைந்த போக்குவரத்து முறை இல்லாமையால் பெரும்பான்மையான பயணிகள் இந்நகர்ப்புறப் பகுதிகளில் பேருந்துகளின் வசதியையே நாடியுள்ளனர். ஒழுங்குபடுத்தப் பட்ட நகர்ப்புற ரயில் வசதி பெருநகரின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே உள்ளது. இது மிகக் குறைந்த அளவு பயணிகளுக்கு மட்டுமே பயன் படுகின்றது. எந்த நகரங்களிலும், பேருந்துகளின் எண்ணிக்கையும், பயண எண்ணிக்கையும் இன்றைய தேவையின் அளவைப் பூர்த்தி செய்யவில்லை. பெரும்பாலான நகரங்களில் வண்டிகள் நிறுத்துமிடங்களுக்கும், முடிவிடங்களுக் கும் தேவையான வசதி அளிப்பது ஓரளவுக்கு பிரச்னைக்குரியதொன்றாகும். மோட்டார், சைக்கிள் ஊர்திகளின் அதிகரிப்பும், ஒழுங்குபடுத்தப்படாத வளர்ச்சி யும், போதுமான அகலமுள்ள சாலையின்மையும் போக்குவரத்திற்குப் பெரும் பிரச்னையை உண்டுபண்ணியுள்ளன.

நகர்ப்புற வீட்டு வசதி.—நகர்ப்புறப் பகுதிகளில் வீடுகளின் பற்றாக்குறை மிகுந்த அளவில் உள்ளது. I, II, III ஆம் வகுப்பு நகரங்களில் இப்பற்றாக் குறையின் அளவு 9,50,000 வீடுகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் I ஆம் வகுப்பு நகரங்களில் மட்டும், பொருளாதார ரீதியில் கீழ்ப்பட்ட மக்களின் பகுதியில், இப்பற்றாக்குறை 5,10,000 ஆகும்.

தொலைநோக்குத் திட்டத்தின்கீழ் செயல்படவிருக்கும் திட்டங்கள்

1. நகர்ப்புற வளர்ச்சி.—இம்மாநிலம் 8 திட்ட வட்டாரங்களாகப் பிரிக் கப்பட்டு, அவ்வாட்டாரங்களுக்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் துணை வட்டாரங்களின் திட்டங்களால் ஆதரிக்கப்படுகின்றன.

கடந்த காலபோக்கினை வைத்துப் பார்க்கும்போது, மாநிலத்தின் 1984 ஆம் ஆண்டின் மக்கள் தொகையில் 37 சதவீதத்தினர் நகர்ப்புறப் பகுதிகளில் இருப்பர். 1984-ல் நகர்ப்புற மக்கள் தொகை, 1971 ஆம் ஆண்டு அளவைக் காட்டிலும் 5.5 மில்லியன் அதிகமாகி 18 மில்லியன் அளவுக்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் நகர்ப்புற மக்கள் தொகைப் பகிர்வில்

சில வரைமுறைகள் கைக்கொள்ளப்பட வேண்டும் என்று கருத்து கூறப்படுகிறது. குறிப்பாக, சென்னை-கோயம்புத்தூர் திரட்சி, சென்னை-மதுரை திரட்சி, மதுரை-நாகர்கோயில் திரட்சி, சேலம்-கோயம்புத்தூர் திரட்சி ஆகிய நான்கு வரையறுக்கப்பட்ட நகர்ப்புறத் திரட்சிகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். எஞ்சியுள்ள நகர்ப்புற மக்கள் தொகை மேற்குறிப்பிடப்பெற்ற இடங்களிலன்றி மற்ற சில முக்கிய நகர்ப்புறங்களில் குடியேற்றப்படுவர். மாநிலம் முழுவதும் சமமாகப் பணி வளர்ச்சி நிலையங்கள் பகிர்ந்தளிக்கப்படும்.

சென்னை பெருநகர்ப் பகுதி.—சென்னை பெருநகர்ப் பகுதி மேலே குறிப்பிட்ட போக்குவரத்துப் பகுதிகள் ஒன்றுசேரும் இடமாகும். சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம், 1991-ல் 5.3 மில்லியன் மக்களுக்கும் 1984-ல் 4.5 மில்லியன் மக்களுக்கும் இடமளிக்கத் திட்டமிட்டுள்ளது. சென்னை நகரம், அதைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகள், பின்பு விரிவுபடுத்தப்படும். போக்குவரத்துப் பகுதிகளுடன் இணைந்த முடிவுப் பகுதிகள் ஆகியவை அடங்கியுள்ள பெருநகர்ப் பகுதிகளில் இம்மக்கள் தொகை ஒழுங்குபடுத்தப்படும். பெருநகர்ப் பகுதிக்கு அப்பால் சுமார் 50 கி.மீ. தொலைவில் மூன்று துணை நகரங்களை மேம்பாடடையச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அவையாவன : செங்கல்பட்டுக்கு அருகில் இருக்கும் மறைமலை நகர், திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி. பெருநகரின் முக்கியப் பகுதிகளை இணைத்து வடக்கிலிருந்து தெற்கே, கடற்கரைப் பகுதிக்கு இணையாகச் செல்ல ஒரு துரிதப் போக்குவரத்து முறையை அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட சென்னை பெருநகர் மேம்பாட்டுக் குழு இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் முயற்சியினை மேற்கொண்டுள்ளது.

பிற நகர்ப்புறங்கள்.—எஞ்சியுள்ள மக்கள் தொகையில் சுமார் 3 மில்லியன் மக்களை நான்கு ஒன்றிணைந்த பகுதிகளுடன் கூடிய மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய முக்கியமான நகர்ப்புறங்களில் குடியேற்றக் கருதப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 10·5 மில்லியன் மக்களை முக்கிய போக்குவரத்துப் பகுதிகளில் அமையும் நகரங்களிலும், மற்ற I முதல் III வகுப்பு நகர்ப்புறங்களில் குடியேற்றக் கருதப்பட்டுள்ளது. இம்மக்கள் தொகையில் ஒரு பகுதி பணி மற்றும் வளர்ச்சி மையங்களுடன் இணைக்கப்பட்டு தவணை வட்டாரத் திட்டங்களாகக் கருதப்படும். வட்டாரத் திட்டங்களின்கீழ் முக்கியத்துவம் பெற்ற நகர மையங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மிக முக்கிய நகர மையங்களுக்கான பெருந் திட்டங்கள் (Master Plans) வரையறுக்கப்பட்டுள்ளன, அல்லது வரையறுக்கப்பட்டு வருகின்றன. இம் மையங்களுக்கான வளர்ச்சிக் கொள்கையை இவை அளிக்கும்.

2. நகர்ப்புற நிலக் கொள்கை.—நகரத்தின் நடவடிக்கைகளுக்கு நிலம் ஒரு அடிப்படையாக அமைவதால் தேவையான நேரத்தில் தேவையான இடத்தில் போதிய நிலம் நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய நன்கு வரையறுக்கப்பட்ட நிலக் கொள்கை மிகத் தேவையான ஒன்றாகின்றது. நகர்ப்புறத் தேவைக்கு வேண்டிய போதிய நிலம் கிடைக்க முக்கிய நகர்ப்புறப் பகுதிகளிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள நிலங்களைப் பெருமளவில் கையகப்படுத்தி, அதனை மேம்படுத்த ஆலோசனை கூறப்பட்டுள்ளது. நகர்ப்புறப் பகுதி நிலங்களை அதனின்று ஏனைய காரியங்களுக்கும் பயன்படுத்துவதைத் தடுக்க, அதனைப் பயன்படுத்தப்படும் வகையினை ஒட்டியல்லாமல், எல்லா நிலங்களுக்கும் ஒரே அளவான வரி விதித்தலும் கருதப்பட்டுள்ளது.

3. நகர வசதிகள்.—உலகச் சுகாதார நிறுவனம், ஒரு நாளைக்குத் தனி மனிதர் ஒருவருக்கு 45 காலன் சுத்தப்படுத்தப்பட்ட நீர் தேவையென வரையறுத்துள்ளது. இதன்படி, தற்போது ஒரு நாளைக்கு வழங்கப்படும் 165 மில்லியன் காலன் நீர் அளவைக் காட்டிலும், 1984-ல் மொத்த நீர்த்தேவையானது ஒரு நாளைக்கு 535 மில்லியன் காலன் அளவுக்கு இருக்கும். ஒரு நீண்டகாலத் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பல்வேறு நகர்ப்புறப் பகுதிகளில் நீர் வழங்குதலை அதிகப்படுத்தச் செயல் முறைகளை வரைந்துள்ளது. மேலும், கழிவு நீர் வடிகால் வசதியினை மிக முக்கியமான நகரங்களில் மட்டுமாவது முதன்மையில் அளிக்க இவ்வாரியம் செயல் முயற்சியினை மேற்கொண்டுள்ளது.

4. நகர்ப்புற வீட்டு வசதி.—தொலைநோக்குத் திட்டக் காலத்தில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ரூ. 72·50 கோடி செலவில் 95,000 வீடுகளையும் மனைகளையும் குடிசைப் பகுதிகளில் வசிப்போருக்காகக் கட்டத் திட்டமிட்டுள்ளது. மேலும், குடிசைப் பகுதிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

வீட்டு வசதி.—நகர் வளர்ச்சிக் கழகத்தின் உதவி கொண்டும், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் கடன் வாங்கியும் வீட்டு வசதி வாரியம், முக்கிய நகரங்களிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் நிலங்களைக் கையகப் படுத்தி வளர்ச்சி செய்ய உத்தேசித்துள்ளது. தொலைநோக்குத் திட்டத்தில் 2,50,000 வீட்டு மனைகள் ஏற்படுத்தவும், 65,000 வீடுகளைக் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும், 32,500 வீடுகளை நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கும், 2,000 வீடுகளை அதிக வருவாய் உள்ளவர்களுக்கும், 5,200 வீடுகளை அரசு ஊழியர் வீட்டு வாடகைத் திட்டத்தின் கீழும், 14,000 வீடுகளைத் தொழிலாளர்களுக்காகவும் கட்டித் தரக் கருதியுள்ளது. சென்னை பெரு நகர்க் கூட்டுப் பகுதிகளிலும், துணை நகரங்களிலும் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக தொலை நோக்குத் திட்டத்தின் மூலம் பெரிய அளவில் வீடு கட்டும் திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரிசன வீட்டு வசதிக் கழகம் அரிசன மக்களுக்காக நிறைந்த அளவில் வீடு கட்டும் திட்டம் ஒன்றையும் கருதியுள்ளது.

5. ஆராய்ச்சி.—நகர்ப்புறமாக்கும் திட்டத்தைச் செயல்படுத்த ஐந்தாவது திட்டக் காலத்தில் ஒரு ஆராய்ச்சி நிறுவனத்தை, வட்டார அமைப்புத் திட்டம், நகர்ப்புற மேம்பாடு, வீட்டு வசதி ஆகிய துறைகளில் விஞ்ஞான முறைகளினால் ஆராய்ச்சி செய்ய, நிறுவுவதற்கான திட்டம் கருதப்பட்டுள்ளது.

மலிவான வீடு கட்டுமானப் பொருள்களைக் கொண்டு தனியாரே வீடு கட்டிக் கொள்ளும் முறையினை அதிகப்படுத்துவதின் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. வீட்டு வசதி நிதி உதவி நிறுவனங்களின் மூலம் மக்கள் அரசிடமிருந்து குறிப்பிட்ட அளவு உதவியினுடனேயே தங்களுக்குத் தாங்களே உதவிக் கொள்ளுமாறு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

திட்ட நிதி ஒதுக்கீடு.—தொலைநோக்குத் திட்டத்தில் மாநிலத்திற்கான நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:

(ரூ. லட்சத்தில்)

திட்டத்தின் பெயர்	நிதி ஒதுக்கீடு
(1)	(2)
வட்டாரத் திட்டம் அமைத்தல், நகர்ப்புற மேம்பாடு	3,800
நகர்ப்புற வீட்டுவசதி	20,200

கைவினைஞர் பயிற்சியும் வேலைவாய்ப்புப் பணிகளும்

கைவினைஞர்களின் பயிற்சி வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்.—புதிதாக 12 தொழில் நுட்ப பயிற்சி நிலையங்கள் மற்றும் ஒரு சில கிராமப்புற பயிற்சி நிலையங்கள் துவங்குதல், வேலைவாய்ப்பளிக்கும் முறையில் தேவையைக் கருத்திற்கொண்டு, புதியனவும் மக்களிடையே செல்வாக்கு பெற்றுள்ளவையுமான தொழில்களை அறிமுகப்படுத்துதல், தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு மாலை நேர வகுப்புகளை நடத்துதற்கு மேலும் 4 பயிற்சி நிலையங்கள் நிறுவுதல், திறமை வாய்ந்த கைவினைப் போதகர்களைத் தேர்வு செய்தல், மாநில வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகத்தை மேலும் வலுப்படுத்துதல், வேலை பழகுபவர்களின் பயிற்சிக்காகத் திட்டங்கள் முதலியன தொலைநோக்குத் திட்டக் காலத்தில் செயல் படுத்தப்படும்.

வேலை வாய்ப்புப் பணியைச் சேர்ந்த திட்டங்கள்.—ஆட்படை ஊற்றத்தின் தேவையையும் அளிப்பையும் ஒருங்கிணைப்பதில், அதன் பங்கை நிறைவேற்றும் பொருட்டு தொலைநோக்குத் திட்டக் காலத்தில் கவனிக்கத்தக்க மேம்பாடும் விரிவாக்கமும் வேலைவாய்ப்புப் பணிகளுக்குத் தேவை. வேலையில் அமர்த்தும் பணியில் உள்ள பிரச்னை பணியாளர் பற்றுக்குறை ஆகும். ஆகவே வேலைவாய்ப்பகங்களை வலுப்படுத்துதல், புதிதாக வேலைவாய்ப்பகங்களை அமைத்தல், அதிகப்படியான பணியாளர்களை நியமித்தல் ஆகியவை மேற்கொள்ளப்படும். வாழ்க்கைத் தொழில் வழிமுறைத் திட்டத்தின்கீழ் இளைஞர்கள் அனைவரையும் கொண்டு வருவதற்கு இத்திட்டம் முழுமையாக மேம்படுத்தப்படும். பார்வை இழந்தவர்களுக்குப் பயிற்சி, மறுபயிற்சி, அவர்களை வேலையில் அமர்த்துதல் மேலும் உண்டி, உறையுளுடன் கூடிய மாணவர் விடுதிகளும் அமைத்துத் தரப்படும். வாழ்க்கைத் தொழில் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகள் பிரிவு விரிவாக்கப்படும். பதவிக் காலி இடங்களைக் கட்டாயமாக அறிவிக்கும்

சட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்த நிர்வாக அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும். முறையான மனிதச் சக்திக்குத் திட்டமிடுதல் மற்றும் செயல் முறை சார்ந்த ஆட்படையூற்றத்தின் ஆராய்ச்சியின் மூலம், வசதியற்ற மனிதச் சக்தியின் பற்றுக் குறைகளையும், உகந்ததாயிராத மனிதச் சக்தியின் உபரிகளையும் தவிர்க்கும் நோக்கோடு 'மாநில ஆட்படையூற்ற ஆய்வுப் பிரிவு' ஒன்றை அமைக்கக் கூறப்பட்டுள்ள பரிந்துரை முக்கியமானது.

நிதி ஒதுக்கீடு.—மேலே சொல்லப்பட்டுள்ள திட்டங்களுக்கு ரூ. 14·50 கோடி ஒதுக்கீடு தேவைப்படும். கைவினைஞர்களின் பயிற்சி வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், வேலைவாய்ப்புப் பணியைச் சேர்ந்த திட்டங்கள் ஆகியவற்றிற்கு முறையே ரூ. 8.75 கோடி, ரூ. 5.75 கோடி என்று மொத்த ஒதுக்கீட்டைப் பிரிக்கலாம்.

சமூக நலனும் உழைப்பாளர் நலனும்

சமூகநலத் தீர்வுகள்.—மகளிர் நலனுக்கான திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள், ஏழ்மை நிலையிலுள்ள மகளிர்க்கு வேலைவாய்ப்பளிப்பதன் மூலம் அவர்களது சமூக-பொருளாதார நிலைமைகளை மேம்பாடடையச் செய்வதும், பணிபுரியும் பெண்களுக்கு நலம்சார் நன்மைகளைத் தருவதும் ஆகும். குடும்ப, குழந்தை நல நடவடிக்கைகள், குழந்தை நலத்துக்கான இணைப்பு வழி முறைகளின் மூலம் குழந்தை இறப்பு வீதத்தைக் குறைப்பதில் கவனத்தைச் செலுத்தும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நிறுவன அமைப்பால், தீவிர முறையில் சத்துணவு, சத்துணவுக் கல்வி, நோய்த் தடுப்பு, பள்ளி செல்லவிருக்கும் இளஞ்சிறுர்களுக்கான கல்வி, பொது ஆரோக்கியம், துப்புரவு மற்றும் பிற அத்தியாவசியப் பணிகள் போன்ற எல்லா சேவைகளும் முகவரமைப்பு ஒன்றின் மூலம் திட்டமிட்ட முறையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் அளிக்கப்படும்.

உடல் ஊனமுற்றவர்கள் நலனுக்கான திட்டங்களின் முக்கிய நோக்கம் விரிவானதாகவும், குருடர்கள், செவிடர்கள், மற்றும் ஊமைகள், மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள், எலும்பு ஊனமுற்றவர்கள் போன்றோரின் புனர்வாழ்வுக்கானதாகவும் இருக்கும்.

சீர்திருத்த நிறுவனங்களாலும், அமைப்புகளாலும் செய்யப்படும் முயற்சிகளைச் சேர்த்து, ஒருங்கிணைக்கும் நோக்கோடு 'தமிழ்நாடு சீர்திருத்தப் பணிகளின் கழகம்' (Tamil Nadu Bureau of Correctional Services) ஏற்படுத்தப்படும். இதைப் போன்றே முதியோர், உடல் ஊனமுற்றோர், மன நோய் உள்ளவர்கள், வாழ வகையற்ற பெண்டிர், குழந்தைகள் ஆகியோருக்கான பல உதவித் திட்டங்களை இணைக்க 'தமிழ்நாடு சமூக உதவிக் கழகம்' (Tamil Nadu Bureau of Social Assistance) அமைக்கப்பெறும். முதியோர் நலனுக்காக ஒரு புதிய துறை நிறுவப்பட்டு, 55 வயதிற்கு மேற்பட்டவர்களின் பணிகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைக் கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

பிச்சை எடுத்தலை ஒழிக்கும் நடவடிக்கைகளில் உள்ளடங்கியவை: (அ) உழைக்கும் திறன் கொண்ட எல்லா பிச்சைக்காரர்களுக்கும் விரிவான வகையில் மறுவாழ்வளிப்பது; (ஆ) தொலை நோக்குத் திட்ட இறுதிக்குள் பிச்சை எடுத்தலை அடியோடு ஒழிப்பது.

புதிய கட்டடங்களில் குடிசைவாசிகளுக்கு இடமளிப்பதற்கு முன் புதிய சூழ்நிலையின் பிரச்னைகளைப் புரிந்துக் கொண்டு ஒத்துப்போகும் வகையில் அவர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி அளிக்கப்படும்.

நல்வழிகாட்டும் நிர்வாகம்.—நல்வழிகாட்டும் நிர்வாகத்தின் நோக்கம், சீரமைப்பைவிட தடுத்து நிறுத்துவதேயாகும். அங்கீகரிக்கப்பட்ட பள்ளி மற்றும் கண்காணிப்புப் பணிகளின் இயக்குநரகம், 'நல்வழி நிர்வாக இயக்குநரகமாக' பெயர் மாற்றம் செய்யப்படும். அரசு அங்கீகரித்த பள்ளிகளில் தொழிலகங்கள் தொடங்குவது, தச்சுத் தொழிலமைப்புப் புத்தாக்கம் செய்வது, வாழ வகையற்றவர்களுக்கும், அநாதைக் குழந்தைகளுக்கும் இல்லங்களை ஏற்படுத்துவது முதலியன தொலைநோக்குத் திட்டத்துக்கான திட்டப்பணிகளில் சிலவாகும்.

சமூகப் பாதுகாப்பு.—சிறைகளில் திறமையாளர்களை நியமிப்பது, திறந்த வெளிச் சிறைகளையும் அவற்றில் கால நியதியற்ற தொழில்களையும் தொடங்குவது முதலியவை தொலை நோக்குத் திட்டத்தின் முக்கியப் பணிகள் ஆகும்.

ஒதுக்கப்பட்ட சாதியினர், பழங்குடியினர் ஆகியோருடைய நலன்.—(அ) ஆராய்ச்சி:—பழங்குடி ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவுதல், அரிசனங்களைப்பற்றி மாவட்டக் கணக்கெடுப்புகள் முதலியன தொலைநோக்குத் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படும்.

(ஆ) கல்வி—.படிப்புத்தொகைகளுக்கான வருமான அளவுத்தகுதி, பிற்பட்டோர் நேர்வில் உயர்த்தப்படும். ஒதுக்கப்பட்ட சாதியினர், பழங்குடியினர், அட்டவணையில் இருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் இவர்களுக்குத் தகுதி அடிப்படை படிப்புதவித் தொகைகள் வழங்கப்படும். மேலும், பள்ளியிறுதிப் படிப்புவரை தற்போது தரப்பட்டு வரும் படிப்புதவித் தொகை இரட்டிப்பாக்கப்படும். படிப்புதவித் தொகை வழங்குதல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், பழங்குடியினர் தங்கிப் பயிலும் வசதியுள்ள பள்ளிகள் துவங்குதல், நண்பகல் உணவு, மற்றும் உடையளிக்கும் திட்டங்கள் முதலியன தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

(இ) வேலை வாய்ப்பும், பொருளாதார மேம்பாடும்.—அரிசனங்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்தும் பணியில் சிறப்புக் கவனம் செலுத்தப்பெறும். கலப்பைகள் மற்றும் காளைகள் வாங்கவும், பாசனக் கிணறுகள் கட்டவும் நிதியுதவி வழங்கப்படும். பரந்த அளவில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், பயிற்சியோடு சேர்ந்த உற்பத்தி மையங்களும், பணி மையங்களும் தோற்றுவிக்கப்படும். ஒதுக்கப்பட்ட சாதியினர், பழங்குடியினர் ஆகியோரின் வேலையின்மைச் சிக்கலைத் தீர்க்கவும், இவ்வகுப்பினரிடையே பொதுவான முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் ஒரு ''வளர்ச்சிக் கழகம்'' ஏற்படுத்தப்படும்.

(ஈ) சிறப்பு, ஆரோக்கியம், வீட்டு வசதி, மற்றும் பிற திட்டங்கள்.— அரிசனங்களின் முன்னேற்றம், வீட்டு வசதிக்கான தனியானதொரு அமைப்பு ஏற்படுத்தப்படும். இதற்கென ஒரு கழகம் சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பழங்குடி மாதிரி அமைப்புக் கிராமங்கள் உருவாக்குதல், 'நடமாடும் மருத்துவ வசதியளித்தல்', கலப்புச் சாதி திருமண ஆலோசனை மன்றம் ஏற்படுத்துதல் முதலியன சில திட்டங்களாகும்.

பின்தங்கிய வகுப்பினர் நலன்.—(அ) கல்வி.—படிப்புதவித் தொகை, ஆதார ஊதியத் தொகை வழங்குதல், சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல், மாணவர் இல்லங்களில் பகுதி நேரக் கல்வி மேற்பார்வையாளர்களை நியமித்தல், கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் குறைந்த வேகத்தில் பயில்பவர்களுக்கான பயிற்சி மையங்களை ஏற்படுத்துவது முதலியன சில திட்டங்களாகும்.

(ஆ) சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்.—முடிதிருத்துவோர்களுக்கும், சலவையாளர்களுக்கும் குறைந்த விலையில் கருவிகளும், சாதனங்களும் கொடுக்கப்படும். குடிசைத் தொழில்களைத் தொடங்கவும், சில்லரைக் கடைகள் போன்றவற்றை நடத்தவும் கடன்கள் தரப்படும்.

(இ) ஆரோக்கியம், வீட்டு வசதி மற்றும் பிற திட்டங்கள்.—ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, வீடு கட்ட உதவும் வகையில் கடன்கள் தரப்படும்.

அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் நலன்.—(அ) கல்வி.— கல்வியிலும், நிதி நிலையிலும் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றனர். ஆகவே, அவர்களுக்குப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், படிப்புதவித் தொகைகள், மதிய உணவு, உடுப்புகள், புத்தகங்கள் மற்றும் எழுது பலகைகள் முதலியன அளிக்கப்படும். குழந்தை வளர்ப்புப் பள்ளிகளும் அமைக்கப்படும்.

(ஆ) வேலைவாய்ப்பும் பொருளாதார மேம்பாடும்.—அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினரில் பெரும்பாலோர் விவசாயிகள். ஆகவே, அவர்களுக்குப் பாசனக் கிணறுகள் தோண்டுவதற்கும், கலப்பைகள், காளைகள் வாங்குவதற்கும் நிதியுதவி அளிக்கப்படும். மதுரை மாவட்டத்திலுள்ள கள்ளர் புனரமைப்புத் திட்டத்தைப் போன்றதொரு புனரமைப்புத் திட்டம் மறவர்களுக்கும், வலயர்களுக்கும், திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்களில் தொடங்கப்படும்.

தொழில் தொடர்புகளும் உழைப்பாளர் நலனும்.—உழைப்பின் மீதான தேசியக் குழுவின் பரிந்துரைகள், தமிழ்நாட்டின் தேவைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பின்வரும் திட்டங்களை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

(1) தமிழ்நாடு உழைப்பாளர் பணிகள், தகவல் கழகத்தை ஏற்படுத்துவது ; (2) தகராறுகளைத் தீர்ப்பதற்கான அமைப்பை வலுப்படுத்துவது; (3) பிரதிநிதித்துவ ஒன்றியத்தைத் தெரிந்தெடுப்பது ; (4) கட்டமைப்பற்ற தொழில் உழைப்பாளருக்கான தீர்வுகள் ; (5) உழைப்பாளர் நலத் தீர்வுகள் ; (6) பேச்சுவார்த்தையில் அடிப்படையாக ' நல்லெண்ணக் ' கொள்கையை உருவாக்குவது. தொலைநோக்குத் திட்டக் காலத்தில் ஏற்கவேண்டிய குறிப்பான உழைப்பாளர் நல நடவடிக்கைகள் வருமாறு : தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி, தோட்டப் பண்ணை உழைப்பாளர்களுக்கான வீட்டுவசதித் திட்டம், உழைப்பாளர் அரங்கங்கள் அமைத்தல், நல மையங்கள் தோற்றுவித்தல் முதலியன.

நிதி ஒதுக்கீடு.—தொலைநோக்குத் திட்டக் காலத்தில் சமூக நலனுக்காகக் கருதப்படும் மாநில ஒதுக்கீடு ரூ. 38·05 கோடி. இது முறையே பின்தங்கிய வகுப்பினர் நலம், மலைப் பிரதேசங்களின் வளர்ச்சி ஆகியவற்றிற்கான ஒதுக்கீடுகளாகிய ரூ. 77·00 கோடி, ரூ. 10·00கோடி, உழைப்பாளர் நலனுக்கான ரூ. 5·00 கோடியினின்றும் வேறுபட்டது.

V. ஆக்க நடவடிக்கைகள்

கனிவள மேம்பாடு

1961 முதல் 1971 வரையான கடந்த பத்தாண்டில் தமிழ்நாட்டில் உற்பத்தி யான கனிப் பொருள்களின் மதிப்பு எட்டு மடங்காக உயர்ந்திருந்தபோதிலும், கனிவள கண்டுபிடிப்புப் பணிகளின் விளைவாக ஏற்பட்ட புதிய தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைக்கொண்டு பார்க்குமிடத்து, அதனால் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி யின் அளவு குறிப்பிடத் தக்கதாயில்லை. இத்துறையினை வளரச் செய்வதற்கான சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தொலைநோக்குத் திட்டக் காலத்தில் மேம்பாட்டுத் திட்டப் பணிகள்.—

இம்மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கனிவளங் குறித்து விரிவான ஆய்வு செய்வதும், அக்கனிப் பொருள்களை இம் மாநிலத்திலேயே தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பினை முழுமையாகப் பெறுவதும் கனிவள மேம்பாட்டின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். அதற்கேற்ப பத்தாண்டுக் காலத்தில் நடத்தவிருக்கும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களைக் கீழ்க்கண்ட நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்:

(அ) கிடைக்கின்ற சில கனிப்பொருள்களைத் தொழிற்சாலைகளில் பயன் படுத்துதல்;

(ஆ) கனிப்படிவுகள் குறித்து மேலும் கண்டறியும் பணிகளை மேற் கொள்ளுதல்;

(இ) எளிதில் கிடைக்காத அபூர்வமான கனிப்பொருள்களைப் பாதுகாத்தல்;

(ஈ) நிர்வாக அமைப்பு மாற்றங்கள்.

(அ) கிடைக்கின்ற கனிப்பொருள்களைத் தொழிற்சாலைகளில் பயன்படுத்துதல்.—

தொலைநோக்குத் திட்டக் காலத்தில் கீழ்க்கண்ட கனிப்படிவு சார்ந்த தொழிற் சாலைகளை நிறுவவும், அவற்றின் முதல் மூன்று தொழிற்சாலைகளை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(i) தற்போதுள்ள நீர் அபிரகப்பட்டைத் தொழிற்சாலையை அதனுடைய இப்போதைய உற்பத்தியை இருமடங்காக்கும்படி விரிவு படுத்துவதுடன் துணைத் தொழில்களை ஏற்படுத்துவது ;

(ii) ராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கைக்கு அருகில் கிடைக்கும் காரீயகத்தை அகழ்ந்தெடுத்துப் பயன்படுத்துதலும், அதனால் காரீயக் குடுவைத் தொழில் மற்றும் தொழிற்சாலைகளுக்கான காரீயத்தூள் தயாரிப்பு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கும் வழி செய்தல் ;

(iii) வட ஆற்காடு, தென் ஆற்காடு, தருமபுரி ஆகிய மாவட்டங்களிலுள்ள நீண்டகருங்கல் மலைத் தொடர்கள், களிமப் பாறைகள், எரிபாறைகள் ஆகிய வற்றை உபயோகித்து கருங்கல்லைச் செதுக்கிப் பளபளப்பூட்டும் தொழிற் சாலைகள் நிறுவுதல் ;

(iv) இக்காலத்தில் இறக்குமதி செய்யும் நாடுகள் பக்குவப்படுத்தப் படாத இரும்புத் தாதுக்களைவிட தயாரிக்கப்பட்ட அயக்காந்த ரவைகளைப் பெற விரும்புகின்றன. எனவே, திருவண்ணாமலைக்கு அருகில் கவுதிமலை மற்றும் வேடியப்பன் மலைத் தொடர்களில் கண்டுபிடிக்கப்பட்ட இரும்புத் தாதுப் படிவுகளைக் கொண்டு அயக் காந்த ரவைகளை உற்பத்தி செய்வதற்காகத் தொழிற் சாலை ஒன்று தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(v) தற்போதுள்ள தரம் குறைந்த மாக்னசைட் படிவங்களை உபயோகப் படுத்தி மக்னீசிய உலோகம் தயாரிப்பதற்கான தொழிற் பிரிவை சேலம் மாவட் டத்தில் நிறுவுதல் ;

(vi) சேலம், விசாகப்பட்டிணம், ஹாஸ்பெட் ஆகிய இடங்களில் நிறுவப் படவிருக்கும் எ·்குத் தொழிற்சாலைகளுக்கு அதிக அளவு வெப்பம் தாங்கும் கலங்கள் (Refractories) கணிசமான அளவில் தேவைப்படுமாதலால் சேலத்தில் பெரிய அளவிலான ஒருங்கிணைந்த வெப்பம் தாங்கும் செங்கல் தொழிற்சாலை ஒன்றை நிறுவுதல் ;

(vii) திருநெல்வேலி மாவட்டத்தில் கடற்கரை மற்றும் கழிமுகப் பகுதிகளின் மணற்பரப்பிலிருந்து இல்மெனைட், மோனசைட், கார்னெட் போன்ற கனிப்பொருள்களைப் பிரித்தெடுக்கத் தொழிற்சாலை அமைத்தல் ;

(viii) தரம் மிக்கக் களிமண் படிவுகளையும், களிமம், படிக்கல், போன்ற ஏனைய பொருள்களையும் கொண்டு பளிங்கினாலான மெருகேற்றப்பட்ட பல வண்ண தளக்கற்கள் தயாரிக்கத் தொழிற்சாலையை நிறுவுதல்.

(ஆ) கனிப்படிவுகள் குறித்து மேலும் கண்டறியும் பணிகளை மேற்கொள்ளுதல்.—

இதுவரையில் இம்மாநிலத்தில் பல மாவட்டங்களில் கனி வளம் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்றாலும், ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செய்யப்பட்டிருப்பதைப் போன்று நவீன உத்திகளைக் கொண்டு சிலமாவட்டங்களில் தீவிர மறுஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகையால், கீழ்க்கண்ட திட்டங்கள் தொலைநோக்குத் திட்டக்காலத்தில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன:

(i) இம் மாநிலத்திலுள்ள களிமப் படிவுகளைக் கண்டு பிடித்தலும், அதனை மதிப்பிடுதலும் ;

(ii) காற்று வெளியில் இருந்து மின்காந்தச் சக்தியின் துணை கொண்டு ஆய்வுகள் நடத்துதல்.

(இ) எளிதில் கிடைக்காத அபூர்வமான கனிப் பொருள்களைப் பாதுகாத்தல்.—

கனிவளங்கள் தீர்ந்து போகின்ற செல்வமேயன்றி மீண்டும் உற்பத்தியாகின்ற தன்மை வாய்ந்தவையல்ல. எனவே, இந்த வளங்களை வீணாக்காது பாதுகாத்து இயன்றவரையில் உச்சபட்ச அளவுக்குப் பயன்படுத்த வேண்டும். மேலும், பாக்சைட் (Bauxite) போன்ற சில கனிப் பொருள்கள் நாளுக்கு நாள் குறைந்து வருவதால் அவற்றிற்குப் பதிலாக மாற்றுக் கனிப்பொருள்களைக் கண்டு பிடிப்பது அவசியமாகிறது. எனவே, பாக்சைட் தாதுப் பொருள்களுக்குப் பதிலாக அலுமினியக் களிமண் (Aluminous Clay), நெப்ஃலைன் களிமப்பாறை, (Nepheline Syenite), மற்றும் நிலக்கரித்தூள், (Coal Ash) ஆகியவற்றைக் கொண்டு அலுமினியம் தயாரித்தல், மேலும், குறைந்த தரமுள்ள பல்வேறு தாதுப்பொருள்களை உபயோகப்படுத்தி நன்மை பெறுதல் போன்றவற்றை ஆராய்ச்சி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) நிர்வாக–அமைப்பு மாற்றங்கள்.—

தொலைநோக்குத் திட்டக்காலத்தில் கீழ்க்கண்ட திட்டங்கள் இத்தலைப்பின்கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ளன :

(i) தற்பொழுதுள்ள புவியியல் பிரிவை வலுப்படுத்தி, புவியியல் சார்ந்த பௌதீகம் (Geophysics), புவியியல் சார்ந்த ரசாயனம் (Geochemistry) கல்லாய்வியல் (Petrology), சுரங்கங்கள் ஆய்வு (Mines Inspection) போன்ற தனிப்பிரிவுகள் கொண்ட புவியியல் துறையாக உயர்த்துதல் ;

(ii) அறிவியல் அடிப்படையில் சுரங்கத் தொழில் நடைபெறவும், கனிப் பொருள்கள் வீணாகாமல் தவிர்க்கவும், சட்ட விரோதமாக நடைபெறும் சுரங்கத் தொழிலால் அரசாங்க வருவாய் சிதறுண்டு போகாமல் கண்காணிக்கவும் விழிப்புப் பணிக்குழு (Vigilance Cell) ஒன்றை அமைத்தல் ;

(iii) மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளின் மேம்பாட்டிற்காகத் தற்போதுள்ள கனிப்பொருள்களை வணிக அடிப்படையில் உபயோகித்து பயன்பெறவேண்டி மாநில கனிப்பொருள் வளர்ச்சிக் கழகத்தை (State Mineral Development Corporation) ஏற்படுத்துதல்.

கனிவள மேம்பாட்டிற்கான திட்டங்களுக்குத் தொலைநோக்குத் திட்டக் காலத்தில் நிதி ஒதுக்கீடு சுமார் ரூ. 6 கோடி ஆகும். அதில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 2 கோடியும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 4 கோடியும் செலவிடப்படும்.

பெரிய—நடுத்தரத் தொழில்கள்

மாநிலத்தின் தொழில் துறை உற்பத்தி 1951-ல் ரூ.75 கோடியாக இருந்தது. 1971-ல் அது ரூ. 250 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த அதிகரிப்பின் வளர்ச்சி விகிதம் ஓர் ஆண்டிற்கு 6·2 சதவீதமாகும். தொழில் துறையில் தமிழ்நாடு அடைந்த இச்சாதனைகள், தமிழ்நாட்டினை தொழில் துறை உற்பத்தியில் மாநிலங்களுக்குள் எட்டாவது இடத்திலிருந்து மூன்றாவது இடத்திற்கு உயரச் செய்துள்ளது.

1960 ஆம் ஆண்டிலிருந்து இம்மாநில அரசு, தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT), தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO), தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) முதலிய அரசுத் துறை தொழில் வளர்ச்சி கழகங்கள் நிறுவியும், மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் பெரும்பங்கேற்றது. சிப்காட் நிறுவனம் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய நிலையில் உள்ள பகுதிகள் வளர்ச்சி அடைவதற்கான ஊக்க உதவிகளை அளிக்கின்றது. டிட்கோ நிறுவனமானது அரசும், தனிப்பட்டோரும் சேர்ந்து மேற்கொள்ளும் கூட்டு முயற்சிகளை ஊக்குவிக்கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தனிப்பட்டோரின் சீருள்ள தொழில் நிறுவனங்களுக்கு நேரடியாகவும், மற்ற வழிகளிலும் உதவி செய்கின்றது. தொலைநோக்குத் திட்டக்காலத்தில் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் விரிந்த அளவில் இந்நிறுவனங்கள் செயல்பட இருக்கின்றன. அவற்றினைப் பற்றிய ஒரு சில குறிப்புகள் பின் வருமாறு :

தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT)

சிப்காட் (SIPCOT) நிறுவனத்தின் முக்கியமான குறிக்கோள் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை, குறிப்பாக பின்தங்கிய நிலையில் உள்ள பகுதிகளில், முன்னேற்றமான தொழில் அதிபர்களின் ஒத்துழைப்புடன் விரிவுப்படுத்துவதாகும் பல பெரிய-நடுத்தரத் தொழில்களை, பின்தங்கிய நிலையில் உள்ள பகுதிகளில், தொலைநோக்குத் திட்டக் காலத்தில் செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பொருளாதார நிலையில் பின்தங்கிய பகுதிகளில் தொழில்கள் வெகு தீவிரமாக வளர சிப்காட் திறுவனம் மிகுந்த செயல் திறத்துடனும், ஊக்கமுடனும் பணியாற்றும். ஆகையால் தொலைநோக்குத் திட்டத்தில் (சிப்காட்) நிறுவனத்திற்காக அரசுத் துறைப்பகுதியில் ரூ. 60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO)

இது நிறுவப்பட்ட 1965 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை ஒரு குறுகிய கால எல்லையான எட்டு வருடங்களுக்குள் பல புதிய தொழில்களை பொதுத் துறையில் அமைத்துள்ளது ; தனிப்பட்ட தொழில் அதிபர்களுடன் சேர்ந்து பல கூட்டு முயற்சிகளையும் ஊக்குவித்திருக்கிறது. இஃதன்றி, பண நெருக்கடி அடைந்த பல தொழில்நிறுவனங்களுக்குப் பண உதவியும் செய்திருக்கிறது. 1969ஆம் ஆண்டுக்கு முன்பு டிட்கோ நிறுவனம் அரசுத்துறையில் இரண்டு பெரிய பணித் திட்டங்களை அமைத்தது. அவற்றுள் ஒன்று ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆலங்குளத்தில் அமைக்கப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலையாகும். மற்றொன்று, வட ஆற்காடு மாவட்டத்தில் அரக்கோணத்தில் அமைக்கப்பட்ட தொடர் வார்ப்பட எஃகுத் தொழிற்சாலை. 1969 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்நிறுவனம் செயல் படுத்திய திட்டங்கள் பெரும்பாலும் அரசுத் துறையும், தனியார் துறையும் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகளாகும். அத்தகைய கூட்டு முயற்சித் திட்டங்களில் முக்கியமான ஒன்று தூத்துக்குடியிலுள்ள சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (SPIC) ஆகும். அரக்கோணம் எஃகுத் தொழிற்சாலையின் ஒரு பகுதியாகப் பொதுத்துறையில் மேற்கொள்ளப்படவிருக்கும் மென்னிரும்பு உற்பத்தித் திட்டம் (Sponge Iron Project), வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமான நைலான் இழை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை (இதில் டிட்கோ நிறுவனத்தின் பங்கு 49 சதவீதமாகும்) ஆகியவை நீங்கலாக ஏனைய தொழிற்சாலைத் திட்டங்கள் யாவும் கூட்டுத்துறையிலேயே நிறைவேற்றப்பட்டன. டிட்கோ நிறுவனத்தின் இத்தகைய முக்கியத் தொழில் முன்னேற்றப் பணிகளைக் கருத்திற் கொண்டு, தொலைநோக்குத் திட்டக்காலத்தில் ரூ. 180 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC)

இது இந் நாட்டில் வெகு முன்னதாக நிறுவப்பட்ட ஒரு பண முதலீட்டு நிறுவனமாகும். இது 1949ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தரக் காலக் கடன்களை வழங்கி வருகின்றது. இந்நிறுவனம் வணிக வங்கிகளின் மூலம் தொழிற்சாலைகள் பெறுகின்ற கடன்களுக்கும் பொறுப்புறுதி அளிக்கிறது. மேலும், இந்நிறுவனம் சிறுதொழில்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகளை நிறுவ சிப்காட் நிறுவனத்துடன் ஒத்துழைத்துப்பல தனிச்சலுகைகளையும் வழங்கி வருகின்றது. அண்மைக் காலத்தில் இந்நிறுவனம் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், கிராமப்புற மருத்துவர்களுக்கும் உதவுவதற்கான பல சிறப்புத் திட்டங்களை உருவாக்கியுள்ளது. இத்தகைய தொடர்ச்சியான முயற்சிகளால் மாநிலத்தில் சில தனியார் துறை தொழில் நிறுவனங்கள் தொலைநோக்குத் திட்டக் காலத்தில் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்காலத்திற்கான திட்டங்கள்

தொலைநோக்குத் திட்டக் காலத்தில் இப்பொழுதுள்ள தொழில்களை விரிவுபடுத்துவதுடன், வெற்றிகரமாக தொழில் சார்ந்தவையும் பக்குவப்படுத்துபவையுமான வேளாண் தொழில்களையும், மாநிலத்தில் உள்ள கனி வளங்களைத் தக்கவாறு பயன்படுத்தக்கூடிய கனிவளம் சேர்ந்த தொழில்களையும் ஊக்குவிப்பதும் முக்கியத்துவம் பெறும். சர்க்கரை, நூற்பு நெசவாலைகள், காகிதம், செலுலோஸ், கனிவளம் சேர்ந்த செயற்கை இழைபோன்ற பல பெரிய தொழில்கள் விரைந்து வளர்ச்சி அடையும். ஐந்தாவது திட்டக் காலத்தில் சேலம் எஃகுத் தொழிற்சாலைத் திட்டம் முற்றுப் பெறும்போது, இயந்திரங்களைச் சேர்ந்த தொழில்கள் வெகுவாக வளரும். மின்சாரம் மற்றும் மின்னியக்கக் கருவித் தொழில்கள், ரசாயனம் மற்றும் உரத்தொழில்கள் முதலியனவும் வெகுவாக முன்னேற வாய்ப்புண்டு. திருச்சியில் அமைக்கப்பட்டுள்ள உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை (High Pressure Boiler Plant) விரிவடைவதாலும் பல துணைத் தொழில்கள் வளரும். இவையல்லாமல், மத்திய அரசுத் துறையில் ஒரு பெரிய குழாய் உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவவும் கருதப்பட்டுள்ளது.

செய்தித் தொடர்புக் கருவிகளின் பகுதிகளைத் தயாரித்தல், மின்னியக்கக் காப்புக் கம்பிகள் (Cables) தயாரித்தல் முதலியனவும் மத்திய அரசுத் துறையில் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

மாநில அரசுத் துறையில் உலோகத் துண்டுகள் (Billets), மென்னிரும்பு (Sponge Iron), சிமெண்ட் உரங்கள் முதலியவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும், சிப்காட், டிட்கோ நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பல கூட்டு முயற்சிகளைப் பெருக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தனியார் துறை தொழில் நிறுவனங்களுக்குத் தாராளமான உதவிகளைச் செய்யும் என்று எதிர்பார்க்கலாம். பஞ்சாலைக் கழகம், அரசு மேற்கொண்ட ஆலைகளைத் தொழில் வகையில் புதுமைப்படுத்தவும், விரிவடையவும் செய்வதற்கான பணிகளுக்குப் பொறுப்பேற்கும்.

நிதி ஒதுக்கீடுகள்.—தொலைநோக்குத் திட்டக் காலத்தில் தொழில்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகையான ரூ. 2,206 கோடியில் ஐந்தாவது திட்டக் காலத்தில் ரூ. 680 கோடியும், மீதமுள்ள ரூ. 1,526 கோடி ஆறாவது திட்டக் காலத்திலும் கீழ்க்கண்டவாறு செலவிடப்படும்:

(ரூ. கோடியில்)

திட்டம்	மாநில அரசுத் துறை	மத்திய அரசுத் துறை	தனியார் துறை	மொத்தம்
(0)	(1)	(2)	(3)	(4)
ஐந்தாவது திட்டம் ..	60	375	245	680
ஆறாவது திட்டம்	186	630	710	1,526
மொத்தம் ..	246	1,005	955	2,206

தொலைநோக்குத் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் பணித் திட்டங்கள்

கீழ்க்கண்ட பணித் திட்டங்களை வெவ்வேறு பண முதலீடு செய்யும் முகவ ரமைப்புகள் மூலம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது:

	மாநில அரசுத் துறை	மத்திய அரசுத் துறை	தனியார் துறை
1.	மென்னிரும்பு உற்பத்தித் தொழிற்சாலை (Sponge Iron Plant)	சேலம் எஃகுத் தொழிற் சாலை முதல், இரண்டாவது நிலைகள்	மோட்டார் மற்றும் அவை சார்ந்த தொழில்கள்
2.	கான்காஸ்ட் தொழிற் சாலை விரிவாக்கம்	நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல்	உலோகம் சார்ந்த தொழில்கள்
3.	தமிழ்நாடு சிமெண்ட் தொழிலை விரிவு படுத்துதல்	மத்திய அரசுத் துறையில் உள்ள பணித் திட்டங்களை விரிவுப் படுத்துதல்	வேளாண் சார்ந்த தொழில்கள்
4.	நெசவாலைக் கழகத்திற்கு பங்கு முதலீடு உதவி செய்தல்	காப்பர் ஸ்மெல்ட்டர் (Copper Smelter) வேலைத் திட்டங்கள்	சிமெண்ட் மற்றும் அது சார்ந்த தொழில்கள்
5.	கூட்டுறவுத் துறை தொழில்கள்	கனநீர் தயாரிப்பு சாலை (Heavy Water Plant)	மின்சாரம் மற்றும் மின்னியக்கத் தொழில்கள்
6.	உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்	குழாய் உற்பத்தி தொழிற் சாலை (Seamless Steel Pipes)	ரசாயனம் மற்றும் அவை சார்ந்த தொழில்கள்
7.	சிப்காட் நிறுவனத்திற்கு உதவி	உரவகை தொழிற்கூடம்	....
8.	டிட்கோ பணித் திட்டங்கள்	உவர்த்தன்மை நீக்கும் தொழிற்சாலை (De-salination Plant)	....
9.	....	மின்னியக்கத்தொழில்கள்	....
10.	....	காகிதம், மற்றும் காகிதம் சார்ந்த தொழில்கள்	....
11.	....	மின்சாரத்தொழில்கள் ..	....
12.	....	நாப்தா தொழில் (Naphtha Cracker)	....

புறக் கட்டுப்பாடுகளும், சிக்கல்களும்.—தேவையானதும் போதுமானதுமான மின்சார விநியோகமும், தொடர்ச்சியாக மூலப்பொருள் பெறப்படுதலும், தொழிற்துறை முன்னேற்றத்தின் இரு முக்கியத் தேவைகளாகும். மின்சக்தி வழங்கலில் ஏதேனும் தடை ஏற்பட்டால் அது தொழில் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும். தற்பொழுது மாநிலம், தொழிற் துறைக்கான மின்சாரத் தேவைகளை முழுவதும் ஈடுசெய்ய முடியவில்லை. ஆகையால் ஒவ்வொரு ஆண்டும் ஓரளவு மின்சார வெட்டு தவிர்க்க முடியாததாகிறது. தொலைநோக்குத் திட்டக் காலத்தில், தொழில் வளர்ச்சி விரைந்து முன்னேறுதல் எதிர்பார்க்கப்படுவதால் மின்சார உற்பத்திக்கு மிக அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியது அவசியமானதொன்றாகும்.

மாநிலம் அடிப்படையான மூலப் பொருள்களில் மிகுதியாக வளம் பெற்றிராத காரணத்தால், மாநிலத்தில் உள்ள தொழில்கள் மூலப் பொருள்களுக்கு மற்ற மாநிலங்களையே எதிர்பார்க்கும் நிலைமை உள்ளது. போக்குவரத்துப் பிரச்னைகள், தொழிலாளர்களிடையே அமைதியின்மை முதலிய காரணங்களால் மூலப் பொருள் கிடைத்தலிலும் பல குறைபாடுகள் நிகழ்ந்துள்ளன. ஆகையால், மாநில அரசு தேவையான ஒரு அளவுக்கு எஃகினைச் சேகரித்து அவற்றினை மூலப்

பொருள் வங்கிகளில் வைத்திருப்பது தேவையாகின்றது. இஃதன்றி மேற்கு வங்காளத்திலிருந்தும், ஒரிசா மாநிலத்திலிருந்தும் நிலக்கரி கொண்டு வர ரயில் போக்குவரத்தை மட்டுமே சார்ந்திராது, தடையில்லாத வகையில் நிலக் கரிக் கப்பல்களை (Fleet of Colliers) வைத்துக் கொள்ளவும் வேண்டிய தாகிறது. மேலும் பயிர்த் தொழில், மற்ற தொழில்களுக்காக மூலப் பொருள் களின் அதிகரித்த தேவைகளை ஈடுசெய்ய சர்க்கரை, பருத்தி, எண்ணெய் விதை கள், காகிதக் கூழ் (Wood Pulp) தயாரிப்பதற்கான மரம் முதலியவற்றின் வழங்கலைத் தேவையான அளவு உறுதி செய்துகொள்ள, அவற்றின் உற்பத்தியினை தீவிர வளர்ச்சித் திட்டங்களின் மூலம் அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

இப்பொழுது தொழிலுக்கான தண்ணீர் வசதியில் குறைபாடு இல்லையென் றாலும் எதிர்காலத்தின் தேவை, வழங்கீட்டு நிலையை விட அதிகமாக இருக்கும். ஆகையால், ஊற்றுநீர் வாயில்களை வேண்டிய அளவு பயன்படுத்திக் கொள்ள வேண்டி இருக்கும். இஃதன்றி, அண்மையில் உள்ள மற்ற மாநிலங்களுடன் தக்க உடன்படிக்கைகள் மூலம் தேவையான அளவு தண்ணீரினைப் பெற்றுக்கொள்ள லாம். கடல் நீரினையும் ஓரளவுக்குப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும். இருக்கின்ற நீர் வசதிகளைத் தக்கவாறு பயன்படுத்திப் பாது காக்க, தொழில் உற்பத்தி முறைகளிலும் மாறுபாடுகளை மேற்கொள்ளத் திட்ட மிட வேண்டியிருக்கும். இத் திட்டத்தில் ஒன்று சிமெண்ட் உற்பத்தியில் ஈரமற்ற முறை (Dry Process) மேற்கொள்ளப்படுவதாகும்.

பொதுவான பரிந்துரைகள்.—

(1) பயிர்த் தொழில் சார்ந்த தொழில்கள் மேலும் முன்னேற, தயக்கமற்ற ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் தேவை. தஞ்சாவூர் மாவட்டத்தில் பெருவாரியான அளவு சர்க்கரை, சாராயச் சத்து, காகிதம் ஆகியன உற்பத்தி செய்யக்கூடிய பயிர்த்தொழில் சார்ந்த ஒரு பெரிய தொழிற் பேட்டையினை அமைக்கலாம். காகித உற்பத்தியில் பகாசியினை (Bagasse) ஒரு மூலப் பொருளாகப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும்.

(2) நெசவாலை நிறுவனங்கள், தொழில் முறையில் புதுப்பிக்கப் பெறுதலை ஊக்குவிக்க பிரத்யேக வசதிகள் செய்யப்பட வேண்டும்.

(3) எதிர்காலத்தில் நிறுவப்படவிருக்கும் தொழில் நிறுவனங்களுக்கு தகுதி யான மேலாளர்கள் கிடைக்க ஒரு தொழில் மேலாளர் பணி அமைப்பு (Cadre) உருவாக்கப்பட வேண்டும். மாநில அரசுக்கு மத்திய அரசு வேலைத் திட்டங் களுடன் வெகுவான தொடர்பு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மாநிலத்தின் பகுதிகளில் ஏற்படுகின்ற பிரத்யேகச் சிக்கல்களைச் சரிவர புரிந்துகொண்டு, அவற் றின் தீர்வினைத் தக்கவாறு அணுகவும், திறமையான வகையில் பணித் திட்டங்கள் செயல்படவும் கூடும்.

(4) தொடர்ச்சியாக பெரிய, நடுத்தரத் தொழில்களின் உற்பத்திக் கணக் கெடுப்பு நிகழ, தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

(5) இடைத் தரகர்கள் செயல்படுவதைக் குறைக்கவும், அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசிகளை நிலைநிறுத்தவும் ஒரு வழங்கீடு செயல் முறை, பங்கு முதலீட்டு நிறுவனங்கள் மூலம் (Joint Stock Companies) உருவாக்கப்பட வேண்டும். இந்நிறுவனங்கள் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை வாங்கி, வைத்திருந்து வழங்கும். அவ்வாறே அவை வினைமுடிந்த தொழிற் பொருள்களை அவற்றிற்கான தக்க செலவினங்களைத் தந்து, வாங்கிக் கொள் ளும். பின்னர், இப்பொருள்கள் மொத்த கொள்முதல் வகையில் பயன்படுத்து வோருக்கும், பொதுவாகப் பயன்படுத்துவோருக்கும் வழங்கும்.

(6) பொருள்களை சிப்பஞ் செய்யப் பயன்படும் பொருள்களை (Packing Materials) உருவாக்கும் தொழில்களும், சணல் ஆலைகளும் மாநிலத்தில் வளர்ச்சியடைதலும் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறு தொழில்கள்

கைத்தறி

ஆண்டுதோறும் ரூ. 50 கோடி மதிப்புள்ள துணிகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட சுமார் 5·56 லட்சம் கைத்தறிகள் இம்மாநிலத்தில் உள்ளன. ஏறக்குறைய 20 லட்சம் மக்கள் இத்தொழிலைச் சார்ந்துள்ளனர். இத்தொழில் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இம்

மாநிலத்தில் 1·98 லட்சம் கதிர்களை இயங்கு திறனுகக் (Installed Capacity) கொண்ட 12 கூட்டுறவு நூற்பு ஆலைகள் இருக்கின்றன. இந்த நூற்பாலைகள் தங்கள் கதிர்களின் எண்ணிக்கையை இரு மடங்காக்க வேண்டி ரூ. 10 கோடி மதிப்பு கொண்ட ஒரு பெரிய அளவுத் திட்டத்தைத் தொடங்க விருக்கின்றன.

தொலைநோக்குத் திட்டக் காலத்தில் பங்கு மூலதன உதவி, ஆராய்ச்சி, தள்ளுபடி, விற்பனை மற்றும் விளம்பரம், கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலதிபர் பங்கேற்கும் சேமிப்பு நிதி (Contributory Thrift Fund) முதலியவற்றிற்காகச் சுமார் ரூ. 60 கோடி செலவிட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புப் பணியினைக் கருத்திற்கொண்டு கைத்தறித் துறையில் கொள்கையொன்று பின்பற்றப்படும். அதன்படி எதிர்காலத்தில் உள்நாட்டில் துணிகளின் பெருமளவுத் தேவை பரவலாக்கப்பட்ட கைத்தறி, விசைத்தறி துணி களைக் கொண்டு நிறைவேற்றப்படுவதோடு, ஆலைகள் துறை ஏற்றுமதிகளில் பெரும் கவனம் செலுத்தலாம்.

நூற்பாலைகளிலிருந்து நூல் வாங்கவும், அதை கைத்தறி—விசைத்தறிகளுக்கு வழங்கவும், அவற்றினுல் உற்பத்திச் செய்யப்பட்ட துணிகளை விற்பனை செய்யவும் ஓர் அமைப்பு நிறுவப்பட வேண்டும். ஆரம்ப நிலைச் சங்கங்கள் (Primary Societies), அவற்றிற்குத் தேவையான பல்வேறு எண்ணிக்கை கொண்ட பருத்தி நூலைக் கூட்டுறவு நூற்பாலைகளிடமிருந்து தலைமைச் சங்கம் மூலமாகப் பெறத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

சிறு தொழிற்சாலைகள் (Small Scale Industries).—1971-ல் 25,486 ஆக இருந்த சிறு தொழிற்சாலைகளின் எண்ணிக்கையை 5 வருடங் களில் இருமடங்காக்கவும், அதாவது 50,000 ஆக அதிகரிக்கச் செய்ய வும், 1984-ல் 75,000 ஆக அதிகரிக்க செய்வதுமே சிறுதொழில் குறித்து தொலை நோக்குத் திட்டத்தின் குறிக்கோளாகும். புதிய தொழிற்சாலைகளைத் தொடங் கவும், தற்போதுள்ள தொழிற்சாலைகளில் பெரும்பாலானவற்றை விரிவாக்க வும் 1984 வரையில் மேலும் சுமார் ரூ. 300 கோடி மொத்த மூலதன முதலீடு தேவைப்படும். தொலைநோக்குத் திட்டக் காலத்தில் சிறு தொழிற்சாலைகளுக் கான மொத்த ஒதுக்கீடு ரூ. 280 கோடியாகும். இதில் ரூ. 143 கோடி மாநில அரசிடமிருநதும், ரூ. 10 கோடி மத்திய அரசிடமிருந்தும், எஞ்சிய தொகை தனியார் அல்லது நிறுவனங்களிடமிருந்தும் பெறப்படும். வேலை வசதிகள் அளித்தல், செயல்முறை தொழிற்பேட்டைகளின் வளர்ச்சி ஆகியவற்றிற்கும், தோல் பொருள்கள், காலணிகள், கட்டடச் சாமான்கள், பிளாஸ்டிக் முதலிய பல்வேறு பொருள்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு உதவி புரியும் தீவிர வேலைத் திட்டங்களின் வளர்ச்சிக்காகவும் மாநில அரசின் ஒதுக்கீடு செலவிடப்படும். இயந்திரப் பொறித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான துணைப் பாகங்கள், மின்னியங்குப் பொருள்கள், மோட்டார் வண்டித் தொழில், மின்சாரக் கருவிகள், ரசாயனப் பொருள்கள் போன்றவைகளை உற்பத்தி செய்வதற்காக பல்வேறு சிறு தொழிற்சாலைகள் நிறுவப்படலாம். மின்னணுக் கருவிகள், வானொலிப் பெட்டிகள் (Radio Receivers), டிரான்சிஸ்டர்கள் மற்றும் வீட்டிற்கான மின்னியங்குக் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதிலும், ஒருங்கிணைப்பதிலும் ஒரு புதிய துறை தோன்றியுள்ளது. மேலும் பல செயல் முறை தொழிற்பேட்டைகள் நிறுவப்படும். சிறு தொழிற்சாலைகளுக்கு உதவு வதற்காக தரப்படுத்தும் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்படும். அரசாங்க சோதனைச் சாலைகளில் தரத்தைச் சோதனை செய்து கொள்வதற்கான வசதிகள் சிறு தொழிற்சாலைகளுக்கு செய்து தரப்படும்.

எல்லா சிறு தொழிற்சாலைகளின் கட்டாயப் பதிவு, 'தொழில் நுட்ப ஆலோசனை நிலையம்' அமைத்தல், குறைந்த வருவாய் கைவினையாளர்களுக்கு சிறப்புப் பண உதவி அளித்தல், 'மூலப் பொருள்கள் வங்கி' (Raw-meterials Bank) மூலம் எளிதில் கிடைக்காத மூலப் பொருள்களை வழங்குதல், உரிமம் வழங்கும் (Licensing) முறைகளை எளிதாக்குதல் ஆகியவை இம் மாநிலத்தில் சிறு தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்காகப் பரிந்துரைக்கப்பட்ட சில நடவடிக்கைகளாகும்.

நிதி ஒதுக்கீடு.—தொலைநோக்குத் திட்டத்தில் சிறு தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட மாநில ஒதுக்கீடாகிய ரூ. 143 கோடியில், ரூ. 76 கோடி சிறு தொழிற்சாலைகளுக்காகவும், ரூ. 5 கோடி கிராமத் தொழிற்சாலைகளுக்காகவும், ரூ. 62 கோடி கைத்தறித் தொழிலுக்காகவும் செலவிடப்படும்.

வேளாண்மை

தொலைநோக்குத் திட்டத்தில் வேளாண்மை பற்றிய முக்கியக் குறிக்கோள்கள், மக்களுக்குப் போதிய சத்துணவு அளித்தலும் வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகளுக்குப் போதிய மூலப் பொருள்களை உற்பத்தி செய்தலுமாகும்.

வேளாண்மை உற்பத்தியில் இக்கட்டுகள்.—உயர்ந்த ரக விதைகள், உரம், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், பண்ணைக் கருவிகள் போன்ற தேவையான பொருள்கள் உரிய நேரத்தில் போதுமான அளவு கிடைப்பதில்லை ; கிடைத்தபோதும், வாங்குவதற்கு உழவரிடம் பொருள் வசதி இல்லை. தண்ணீர்த் தட்டுப்பாடு மற்றொரு குறையாகும்.

செயல்திட்டம்.—இந்த இக்கட்டுகளை அகற்றி, குறிப்பிட்ட அளவு நிலப்பகுதியில் அதிக உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையில் நவீன அறிவியல், தொழில் நுட்பவியல் நுட்பங்களைப் பயன்படுத்துவது வேளாண்மை மேம்பாட்டுக்கான செயல் திட்டமாகும்.

(1) தண்ணீரைச் சீராகப் பயன்படுத்தல்—கால்வாய்களைப் புதுப்பித்தல்.—தொலைநோக்குத் திட்டக் காலத்தில் இம்மாநிலத்திலுள்ள முக்கியமான பாசன வாய்க்கால்கள் அனைத்தையும் சீர்செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் ஏற்கெனவே பாசனம் பெறும் 7·32 லட்சம் ஹெக்டேர் பரப்புக்கு தண்ணீர் உறுதியாகக் கிடைக்கும். அதோடு, புதிதாக 1·53 லட்சம் ஹெக்டேர் பரப்பு பாசனம் பெறும். வாய்க்கால்களின் ஓரங்களைச் செப்பனிடும் பணியினால், மேலும் 1·96 லட்சம் ஹெக்டேர் பரப்பு புதிதாகப் பாசனம் பெறும்.

ஏரிகளின் நீர்ப்பிடிப்பு அளவை மேம்படுத்துதல்.—இம் மாநிலம் முழுவதிலும் சுமார் 37,000 ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகளில் பல பழைமையானவை ; தூர் படிந்துள்ளதன் காரணமாக அவற்றில் நீர்ப்பிடிப்பு குறைந்துவிட்டது. ஏரிகளின் முழு அளவு நீர்மட்டத்தினை உயர்த்தியும், கரையோர நிலங்கள் நீரில் மூழ்குவதைத் தடுத்தும், குறைந்துள்ள நீர்ப்பிடிப்பு அளவுகளைத் திரும்பவும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பெரிய-நடுத்தர பாசனத் திட்டங்கள்.—ரூ. 17·5 கோடி மதிப்பில் 21,500 ஹெக்டேர் பரப்பிற்குப் பயன்படும் 20 திட்டங்கள் விரிவான புலனாய்வில் உள்ளன. மேலும் 35 திட்டங்கள் தொடக்க நிலை ஆய்வில் உள்ளன. தொலைநோக்குத் திட்டக் காலத்தில், இத்திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும்.

ஊற்று நீரைப் பயன்படுத்துதல்.—தொலைநோக்குத் திட்டக் காலத்தில் (வடிமுனைக் குழாய்கள் உள்ளிட்ட) 1,25,000 புதிய கிணறுகள் தோண்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 3·5 லட்சம் ஹெக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கும்.

(2) புன்செய் பயிர்ச் சாகுபடி.—இத் துறையில் முன்னேற்றம் காண மூன்று முக்கியத் திட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்: (அ) புன்செய் நிலப்பகுதிகளின் 'விளைச்சலை பெருக்குவதற்கான நுட்ப உத்திகளை வகுப்பதற்குரிய தீவிர ஆராய்ச்சி ; (ஆ) இவ்வாறான ஆராய்ச்சி முடிவுகளை, இணைவு கொண்ட புன்செய் நில மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் நடைமுறையில் பொருத்திப் பார்த்தல் ; (இ) மண் சரிவை திருத்தவும் மண்ணீரத்தைப் பாதுகாக்கவும் வேண்டிய விரிவான பணிகளை மேற்கொள்ளல், மலையிடுக்குப் பகுதிகளைச் சீரமைத்தல், தண்ணீர் தேங்கும் குட்டைகளைத் தொடுதல் ஆகியன கருதுதல்.

(3) வேளாண்மை உள்ளீடுகள் (Inputs).—திருத்திய விதைகள்–அரசு விதைப் பண்ணைகளை வலுப்படுத்தல்; உத்தரவாதம் பெற்ற விதைகளை உற்பத்தி செய்யவும், விற்பனைசெய்யவும் மாநில விதைக் கழகம் ஒன்று ஏற்படுத்தல்; விதைச் சட்டத்தைத் திறம்பட செயல்படுத்த விதை உத்தரவாதம் செய்யும் அமைப்பை வலுப்படுத்தல்; அதற்குத் துணையாக விதைப் பரிசோதனைக் கூடங்களை அமைத்தல் ஆகியவை திட்டத்தில் காணப்பட்டுள்ளன.

பசுந்தாள் உரங்களும், ரசாயன உரங்களும்.—ஊராட்சி, நகராட்சி ஆகிய நிறுவனங்களுக்குத் தகுந்த ஊக்க உதவிகள் அளித்து, அடுத்த 10 ஆண்டுகளில் கலவை எரு உற்பத்தியை இரு மடங்காக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

திட்டக் காலத்தில் தூத்துக்குடியில் நிறுவப் பெற்றுள்ள சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் (ஸ்பிக்) என்ற பெரிய உரத் தொழிற் சாலை உற்பத்தி தொடங்க இருப்பதால், தமிழ்நாட்டில் ரசாயன உர உற்பத்தி பெருமளவில் அதிகரிக்கும். மற்றொரு உரத் தொழிற்சாலையைக் கடலூரில் அமைப் பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இரசாயன உரங்களை எந்த அளவில் பயன் படுத்தினால் நல்ல பயனளிக்கும், பயிர்மேல் எவ்வாறு தெளிப்பது, மானாவாரி சாகுபடியில் ரசாயன உரங்களை எவ்வாறு பயன்படுத்துவது ஆகியவற்றைப் பற்றி உழவர்களிடையே கருத்துக்களைப் பரப்புவதற்கு நடவடிக்கைகள் முனைந்து மேற் கொள்ளப்படும்.

பயிர்ப் பாதுகாப்பு.—எலிகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களை ஒழிக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அரசுத்துறை அங்காடிகளின் மூலமும், தனியார் மூலமும் பூச்சிக் கொல்லி மருந்துகளை வழங்குவது பெருமளவில் விரி வாக்கப்படும். பயிர் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் நிலப்பரப்பு 48 லட்சம் ஹெக்டேரிலிருந்து 96 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்கப்படும். பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பரிசோதனை செய்யும் ஒன்பது ஆய்வுக் கூடங்கள் நிறுவப்படும்.

நிதி.—தொலைநோக்குத் திட்டத்தின் இறுதி ஆண்டில் மொத்த உற்பத்திக் கான மூலதனம் ரூ. 540 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற் போதுள்ள மூலதனத் தேவை ரூ. 244 கோடியாகும். உழவர் பெருங்குடி மக்கள் தங்கள் கடன் தேவைகள் அனைத்தையும் கடன் வழங்கு நிறுவனங்கள் மூலமாகப் பெறக்கூடிய நிலையை அடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் வலுப்படுத்தப்பட்டு, உழவர்களின் குறுகிய காலக் கடன் தேவைகளில் 60 சதவீதத்தை அளிக்கக்கூடிய நிலையை 1983–84-ல் அடையும். எஞ்சியுள்ள 40 சதவீதத்தை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடனாக அளிக்க வேண்டும். நீண்ட காலக் கடன் முதலீட்டிற்காக அடுத்த 10 ஆண்டுகளில் தேவைப்படும் நிதி ரூ. 580 கோடியாக இருக்கும். இதில் பெருமளவு தொகையினை (சுமார் ரூ. 400 கோடி) நிலவள வங்கிகள் கொடுத்து உதவி செய்யும்; தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மீதமுள்ள ரூ. 180 கோடியினைக் கடனாக வழங்கும்.

(4) சாகுபடி முறையை மாற்றுதல்.—பாசன வசதிகள் அதிகரிக்கப்படு வதன் விளைவாக, மொத்தச் சாகுபடி நிலப்பரப்பு 1970–71-ல் இருந்த 75·31 லட்சம் ஹெக்டேரிலிருந்து 1983–84-ல் 102 லட்சம் ஹெக்டேராக உயரும். இந்தக் காலத்தில் சாகுபடி செய்யும் மும்முறைத் தன்மை 120 சதவீதத்திலிருந்து 160 சதவீதமாக உயரும். தற்போது நெற்பயிர் செய்யப்படும் நிலப்பரப்பை இந்த அளவிலேயே நிறுத்திக் கொண்டு கரும்பு, எண்ணெய், வித்துக்கள் பருத்தி, காய்கறிகள் ஆகியவற்றை சாகுபடி செய்வதற்கு ஊக்கம் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(5) வேளாண்மைப் பொருள்களின் விலையும் விற்பனையும்.—விவசாய உற்பத்தியை விரைந்து பெருக்குவதற்கு, தெளிவான விலைக் கொள்கையும், அதைச் செயல்படுத்த திறன் கொண்ட அமைப்பும் இன்றியமையா தனவாகும். இதனைக் கருத்தில் கொண்டு விலை நிலைப்பேறுக்க வாரியம் (Price Stabilisation Board) ஒன்று நிறுவக் கருதப்பட்டுள்ளது. இவ்வாரியம் குறைந்த விலை, உயர்ந்த விலை ஆகியவற்றை நிர்ணயிக்கும். மேலும் விலைகள் மேலும் கீழும் தாவாமல் ஒரு நிலையில் அமைய, தேவைப்படும்போது பண்டங்களை வாங்கி இருப்பு வைத்து விற்பனைசெய்யும் பணியையும் மேற்கொள்ளும். விற்பனைக் குழுக்கள் நிறுவியுள்ள அங்காடிக் கூடங்கள் சீர்திருத்தப்படும். இவ்விடங்களில் கிடங்கு வசதிகளும் அதிகரிக்கப்படும்.

(6) ஆராய்ச்சிப் பணிகள்.—மானாவாரிப் பகுதிகளின் விளைச்சலைப் பெருக்குவது, நிலம், மண்வளம், நீர் நிர்வாகம்இவற்றிற்கேற்ப புதுப் பயிர்வகைகளைத் தோற்றுவித்தல், உவர் மண், அமிலம் சார்ந்த மண்கொண்ட நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவருதல், பண்ணை நிர்வாகம்ஆகிய துறைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும். மேலும் கீழ்க் குறித்த ஆராய்ச்சி நிலையங்களை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது:

அ. பழ ஆராய்ச்சி நிலையம்;

ஆ. திண்டுக்கல்லில் புகையிலை ஆராய்ச்சி நிலையம் :

இ. அம்பாசமுத்திரத்தில் வட்டார ஆராய்ச்சி நிலையம் ;

ஈ. திருக்குப்பத்தில் வட்டார ஆராய்ச்சி நிலையம் ;

உ. தென்னை ஆராய்ச்சி நிலையம் ;

ஊ. ஆடுதுறையில் நெற்பயிர் ஆராய்ச்சி நிலையம் ;

எ. தென்காசியில் நவதானிய ஆராய்ச்சி நிலையம்.

(7) வேளாண்மைக் கல்வி.—தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மேலும் வசதிகள் அதிகரிக்கப்படும். திட்டக் காலத்தில் வேளாண்மைப் பட்டதாரிகள் அதிக அளவு தேவைப்படுவார்களாதலால் மேலும் ஒரு வேளாண்மைக் கல்லூரி வேண்டும் என்பதைத் தொலை நோக்குத் திட்டம் வலியுறுத்துகிறது.

(8) வேளாண்மை விரிவாக்கம்.—தீவிர வேளாண்மை மாவட்டத் திட்டம் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தென்னாற்காடு, செங்கல்பட்டு, மதுரை, சேலம், வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும். பத்து மாவட்டங்களில் உழவர்களுக்கான பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தவும், விரிவாக்கப் பணியாளர்களுக்கும் உழவர்களுக்கும் பல்கலைக் கழகத்தில் பயிற்சி நிலையங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மை, மீனளம், கூட்டுறவு, சமுதாய நலப்பணி ஆகிய துறைகள் ஒருங்கிணைந்த வளர்ச்சியைப் பெற வகை செய்யப்படும்.

(9) மண் வளப் பாதுகாப்பு.—மண்வள, நீர்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் மேலும் 4·5 லட்சம் ஹெக்டேரில் விரிவாக்கப்படும். தேனி, போடி ஆகிய இடங்களில் காற்றால் மண் அரிக்கப்பட்ட பகுதிகளின் மண் அரிப்பைத் தடுப்பதற்காகத் தடுப்பு மரங்களைப் பயிரிடும் பணி மேற்கொள்ளப்படும். கிணறுகளில் நீர் மீண்டும் ஊற்றெடுக்கத் துணையாக, ஆங்காங்கே குட்டைகள் அடுத்தடுத்து அமைக்கப்படும். உவர்த் தன்மை, அமிலத்தன்மை, கொண்ட நிலங்களை மீட்க, அதற்கு வேண்டிய ரசாயனப் பொருள்களைக் குறைந்த விலையில் கொடுத்து கணிசமான நிலப்பரப்பை செம்மைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(10) மலைப்பகுதி மேம்பாடு.—மலைப்பகுதிகளில் 40,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் பழங்களும், 10,000 ஹெக்டேரில் காய்கறிகளும், 17,500 ஹெக்டேரில் கிராம்பு வகைகளும் மேலும் சாகுபடி செய்ய இத்திட்டம் கருதியுள்ளது. சாகுபடிப் பயிர்களைத் தக்கவாறு வகுக்க, மலைப் பகுதிகளின் மண்வளம், தட்பவெப்ப நிலைகள் ஆகியன பற்றி ஆய்வு ஒன்று செய்யக் கருதப்பட்டுள்ளது.

(11) வேளாண் சார்ந்த தொழில்கள்.—மக்காச் சோளத்தைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலையையும் தேங்காய் நார், தேங்காய் ஓடு ஆகியவற்றைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளையும் நிறுவப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தொலைநோக்குத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு—சுருக்க வரைவு

(ரூ. லட்சத்தில்)

பிரிவு	செலவு
(0)	(1)
I. நீர்ப்பாசனம்	
1. வாய்க்கால்களை புதுப்பித்தல்	3,784
2. வாய்க்கால் கரைகளைச் செப்பனிடுதல் ..	8,286
3. ஏரிகளில் நீர்ப் பிடிப்பை அதிகரித்தல் ..	6,000
4. பெரிய—நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் ..	5,750
5. ஊற்று நீரைப் பயன்படுத்துதல்*	12,500
மொத்தம்—நீர்ப்பாசனம்	36,320
II. பயிர்ச் சாகுபடி	
1. வேளாண்மை உள்ளீடுகள்	4,833
2. வேளாண்மை ஆராய்ச்சி	2,920
3. வேளாண்மைக் கல்வி	3,100
4. வேளாண்மை விரிவாக்கம்	10,406
5. வணிகப் பயிர்கள்	5,916
6. நில மேம்பாடு	4,465
7. வேளாண்மைப் பொருள் விற்பனை-கிடங்கு வசதி	3,305
8. மலைப்பகுதி-நில மேம்பாடு	1,630
9. வேளாண் தொழில்கள்	2,100
மொத்தம்—பயிர்ச் சாகுபடி	38,675
மொத்தம்—நீர்ப் பாசனம் (மாநிலத் துறை)	23,820**
பெரு மொத்தம்	62,495 அல்லது 625 கோடி

வேளாண்மை உற்பத்தியின் எதிர்காலம்

உணவுத் தானியங்கள்.—தமிழ் நாட்டில் அரிசி உற்பத்தி 1971-72-ல் 53·10 லட்சம் டன்னியாக இருந்தது. ஆருவது திட்டத்தின் இறுதி ஆண்டில் 76.5 லட்சம் டன்னியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொலை நோக்குத் திட்டத்தின் இறுதியில் தமிழகத்தின் உணவு உற்பத்தி 111.50 லட்சம் டன்னியை எட்டும். பருப்பு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதின் அவசியத்தையும் இத் திட்டம் வலியுறுத்துகின்றது.

* ஊற்று நீரைப் பயன்படுத்துவதற்கான மூலதனம் தனியார் துறைக்குரியது எனக் கொள்ளப்பட்டது.

** ஆகையால் மாநிலத் துறையின் நீர்ப்பாசனத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 238·20 கோடியாகும்.

பழங்கள், காய்கறி வகைகள்.—காய்கறி சாகுபடியாகும் நிலப் பரப்பு இப்போதுள்ள 1.17 லட்சம் ஹெக்டேரிலிருந்து 4 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்கப்படும். பழச் சாகுபடி நிலப்பரப்பு 2 லட்சம் ஹெக்டேருக்கு விரிவாக்கப்படும். சேலம், தென்னாற்காடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மூன்று மாதிரிப் பழத்தோட்டங்கள் அமைக்கப்படும்.

எண்ணெய் வித்துக்கள்.—எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் நிலப்பரப்பு 1983-84-க்குள் 18.63 லட்சம் ஹெக்டேராக உயர்த்தப்படும். சாகுபடி நிலப் பரப்பை அதிகரிப்பதாலும், திருந்திய சாகுபடி முறைகளை மேற்கொள்வதாலும், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி, 1983-84-ல் 24·53 லட்சம் டன்னிகள் (4·27 லட்சம் டன்னிகள் எண்ணெய்க்குச் சமமான) என்ற நிலையை அடையும்.

தேங்காய்.—தற்போது தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு உற்பத்தியாகும் சுமார் 877 மில்லியன் தேங்காய்களில் பெரும்பகுதி பச்சையாகவே உபயோகிக்கப்படுகிறது. 1983-84-ல் மாநிலத்தின் தேங்காய் உற்பத்தி 1,319 மில்லியன்களாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தென்னைப் பயிரிடும் நிலப் பரப்பை 1.4 லட்சம் ஹெக்டேராக உயர்த்தியும், இப்போதுள்ள தென்னந் தோப்புகளில் புதிய சாகுபடி முறைகளைக் கையாண்டும் இந்த இலக்கை எய்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பருத்தி.—தமிழகத்திலுள்ள பஞ்சாலைகளின் கச்சாப் பருத்தித் தேவை 1983-84-ல் 16.39 லட்சம் பொதி என்ற அளவில் இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் இப்போதைய கச்சாப் பருத்தி உற்பத்தி 4.97 லட்சம் பொதிகள் மட்டுமே. நீர்ப்பாசனம் பெறும் பருத்திச் சாகுபடி நிலப்பரப்பை விரித்தும், புது உற்பத்தி முறைகளைக் கையாண்டும், 1984-ல் பருத்தி உற்பத்தி 11.88 லட்சம் பொதிகளை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கரும்பு.—தொலைநோக்குத் திட்டத்தின் இறுதி ஆண்டில், 9.25 லட்சம் டன்னி சர்க்கரையும், 4.40 லட்சம் டன்னி வெல்லமும் மாநிலத்தில் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கரும்புப் பயிர் செய்யும் நிலப்பரப்பை 1.65 லட்சம் ஹெக்டேருக்கு உயர்த்துவதற்கும், விளைச்சலை ஹெக்டேருக்கு 99 டன்னியாக உயர்த்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

முந்திரி.—முந்திரிப் பயிர் சாகுபடியாகும் நிலப்பரப்பு 50,000 ஹெக்டேருக்கு விரிவாக்கப்படும். இப்போதுள்ள முந்திரித் தோட்டங்களின் உற்பத்தி உயர்த்தவும் பெறும். இவ்விரண்டாலும் 1983-84-ல் முந்திரி உற்பத்தி 52,000 டன்னிகள் ஆக உயரும். அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் முந்திரியின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு முந்திரி வளர்ச்சிக் கழகம் (Cashew Development Corporation) ஒன்று அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

புதிய பயிர்கள்.—புளிச்சக் கீரை (Mesta), சர்க்கரைக்கான பீட்ரூட் கிழங்கு, ரெட் ஆயில் பாம் (Red Oil Palm) போன்ற புதிய பயிர்களை பொருத்தமான இடங்களில் சாகுபடிச் செய்யவும், சூரியகாந்தி, மல்லிகை, ரோஜா, கிரைசாந்தமம் (Chrysandamum), கோசன்ட்ரா (Cossandra) ஆகிய வியாபாரப் பூக்கள் பயிராகும் நிலப்பரப்பை விரிவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு

கால்நடை வளர்ப்புத் துறைக்கான தொலைநோக்குத் திட்டம், இம்மாநிலத்தில் பால், முட்டை, இறைச்சி இவற்றின் உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தற்போது தனி ஒருவருக்குக் கிடைக்கும் புரதச் சத்து மிகுந்த இந்த உணவுகளின் அளவு, நல்லுணவுக்கு அவசியமானது என்று கருதப்படுவதைக் காட்டிலும் மிகவும் குறைந்துள்ளது.

குறிக்கோள்களை எய்த பத்து-அம்ச திட்டச் செயல்முறை வகுக்கப்பட்டுள்ளது. உயர்ந்த அயலின கருக் கொண்டு உள்நாட்டுக் கால்நடைகளின் தரமுயர்த்துதல்; முர்ரா இனக் கடாக்களைக் கொண்டு உள்ளூர் எருமைகளின் தரம் உயர்த்துதல்; செயற்கை முறையில் விந்துவைப் பாய்ச்சி இனப் பெருக்கம் செய்வித்தல்; கோழியின மேம்பாட்டுக்காக பெரிய அளவில் கோழிப் பண்ணைகளையும்,

குஞ்சு பொரிக்கும் நிலையங்களையும் அமைத்தல், இறைச்சி, தோல், உரோமம் ஆகியவற்றின் உற்பத்தியும் தரமும் சிறக்க நல்லின ஆடுகளைப் பெருக்கல் என்பன இதனுள் அடங்கும்.

கால்நடை மேம்பாடும், பால் பெருக்கமும்.— இனம் தெரியாதவையும் உழவு மாடு வகையைச் சேர்ந்தவையுமான கால்நடைகளைப் பெயர் பெற்ற இன மாடு களுடன் சேர்த்து அவற்றின் தரமுயர்த்துதல், உள்ளூர் எருமைகளை முர்ரா இன எருமைகளுடன் சேர்த்து எருமை இனத்தை உயர்த்துதல் ஆகியவை கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்களாகும். பாலுக்கான தேவை, குறிப்பாக நகர்ப் பகுதிகளில் அதிகமாகவுள்ளது. அறிவியலடிப்படையிலான அமைப்பில்லாத குறையால், நகர்ப் பகுதியின் பால் உற்பத்தித் தேவை பூர்த்தி செய்யப்படுவ தில்லை.

'பால் பெருக்கத்' திட்டத்தின்கீழ், தமிழ்நாடு பாற்பண்ணை மேம்பாட்டுக் கழகம் மொத்தம் இரண்டரை லட்சம் பசு மாடுகளுக்குக் குறிப்பிட்ட பகுதிகளில் தேவையான உள்ளீடுகளனைத்தையும் வழங்கும். அதனால், சராசரி நாளொன் றுக்கு இரண்டரை லட்சம் லிட்டர் பாலைப் பக்குவப்படுத்த முடியும். கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் உதவியால், கட்டமைப்பான முறையில் பாலை உற்பத்தி செய்யவும், சேகரிக்கவும் இத்திட்டம் கருதுகிறது. இந்த கூட்டுறவுச் சங்கங்கள் கால்நடைகளின் நலனுக்காக வேண்டியன மேற்கொள்வதுடன், கறவை மாடுகளை வாங்குவதற்காகக் குறுகிய கால, நீண்ட காலக் கடன்களையும வழங்கும்.

கால்நடைச் சுகாதாரம்.—மாவட்டங்களில் உள்ள கால்நடை மருத்துவச் சோதனை நிலையங்கள் நோய்க் கிருமிகள் பற்றி ஆராயும் பணியை மேற்கொள்ளும் வகையில் புதிய சாதனங்களைப் பெற்று, மாவட்டக் கால்நடை நோய் ஆய்வுக் கூடங்களாகச் செயல்படும். கிராமப் புறங்களில் பெரிதும் பரவலாகக் கால்நடை மருத்துவ நிலையங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒட்டு நோய்க் கிருமிகளைத் தடுக்கும் நடவடிக்கையாக, பெருமளவில் கன்றுகளுக்கும் ஆடு களுக்கும் மருந்து தெளிக்கப்படும்; கிருமிகள் அகற்றப்படும். 'பால் பெருக்கத்' திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் தொற்றுநோய்த் தடுப்பியல் ஆய்வுக் கூடம் (Imm nological Labo a o y) ஒன்று அமைக்கப்படும். இந்த ஆய்வுக்கூடம் மாநிலத் தில் கால்நடைச் சுகாதாரத்தை மேம்படுத்துவதில், குறிப்பாக கால்நடைகளுக் கான அடைப்பான் தடுப்பு மருந்து, வெறி நாய்க்கடித் தடுப்பு மருந்து, வெக்கை நோய்த்தடுப்பு மருந்து ஆகியவற்றை தயாரிப்பதில் பெரும் பங்கேற்கும்.

கோழி வளர்ச்சி.—வேலை வாய்ப்புகளைப் பெரிய அளவில் உருவாக்குவதுடன், மக்களுக்குத் தேவைப்படும் ஊட்ட உணவையும் வழங்கவல்லதாகையால் கோழி வளர்ப்புக்கு இத்திட்டம் முக்கியத்துவம் அளிக்கின்றது. 1983-84 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 9 மில்லியன் முட்டைகள் தேவைப்படுமென்று மதிப்பிடப்பட் டுள்ளது; ஆனால் தற்போது 1·2 மில்லியன் முட்டைகளே கிடைக்கின்றன. கோழிப் பண்ணைகளையும், குஞ்சு பொரிக்கும் நிலையங்களையும் நாடெங்கும் தோற்றுவித்து மேற்கண்ட இலக்கினை எய்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தொலைநோக்குத் திட்டக் காலத்தில், ஆண்டொன்றுக்கு 9 வீதம் 90 குஞ்சு பொறிக்கும் நிலையப் பிரிவுகளைத் தோற்றுவிக்கக் கருதப்பட்டுள்ளது. கிராம கோழிப்பண்ணைகளுக்கு பெட்டைக் கோழிக்குஞ்சுகளை இவை வழங்கும். பண்ணை ஒன்றுக்கு முட்டையிடும் கோழிகள் 100 கொண்டதாக, 1·5 லட்சம் கோழிப் பண்ணைகள் அமைக்க இத்திட்டம் கருதுகிறது. இவை கிராமக் கூட்டுறவுச் சங்கங் கள் அடிப்படையில் அமைக்கப்படும். அவ்வாறாக, 1974 முதல் 1984 வரை ஆண் டொன்றுக்கு 150 கிராமச் சங்கங்கள் என்ற வீதத்தில் 1,500 கூட்டுறவுச் சங்கங்கள் திறுவப்படும். இந்த 1,500 கூட்டுறவுச் சங்கங்களும், 15 மில்லியன் முட்டையிடும் கோழிகளைக் கொண்டனவாய், தொலைநோக்குத் திட்ட இறுதிக்குள் நாளொன் றுக்கு 9 மில்லியன் முட்டைகளை வழங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதோடு, இந்த கோழி வளர்ப்புத் திட்டத்தால் ஆண்டொன்றுக்கு 8,000 டன்னிகள் கோழி இறைச்சியும் கிடைக்கும். கோழிகளுக்கான உணவு தயாரிக்கும் பிரிவு கள், விற்பனை அமைப்புகள் ஆகியவற்றிற்கான திட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அண்மையில் அமைக்கப்பட்டுள்ள கோழி வளர்ப்புக் கழகம் இம்மாநிலத்தில் கோழி மேம்பாட்டு முயற்சியில் முக்கிய பங்கை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப் படுகிறது.

வெள்ளாடு-செம்மறியாட்டு வளர்ச்சி.—இம்மாநிலத்தில் தேவைப்படும் இறைச்சியில் பெரும்பகுதி வெள்ளாடு, செம்மறியாடுகளிலிருந்து கிடைப்பதாயினும் இந்த ஆடுகளின் இறைச்சி குறைவானவை. ஏனெனில் இவை, கொழுத்த இன ஆடுகளாயில்லை. எனவே இறைச்சி உற்பத்தியைப் பெருக்க, நல்ல இன ஆடுகளைக் கலப்பு முறையில் உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கு ஊக்கமளிக்கப்படும். இலவாரியான பெருக்கத் திட்டங்களுக்குப் பதிலாகப் பகுதிவாரியான பெருக்கத் திட்டங்கள் வகுக்கப்படும். கம்பள வகை ஆடுகளுக்காக செயற்கை இனப் பெருக்க சோதனை மேற்கொள்ளப்படும். ஆடு வளர்ப்போருக்கென கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பன்றி வளர்ச்சி.—மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி உற்பத்தியை உயர்த்துவதில் சில சிக்கல்கள் உள்ளன. முக்கியமாக போதுமான மேய்ச்சல் வெளியும் இயற்கைத் தீவனமும் குறைவாக இருப்பதைக் குறிப்பிடலாம். பன்றிகள் விரைவாக இனப்பெருக்கம் செய்யும் தன்மை கொண்டவையாகவும், அவற்றிற்குப் பெருமளவில் மேய்ச்சல் நிலம் தேவையில்லாமலும் இருப்பதால், அவற்றின் இறைச்சி உற்பத்தியைப் பெருக்க அதிக வாய்ப்புள்ளது. நாளொன்றுக்கு ஒருவருக்கு சராசரி 3 கிராம் இறைச்சி என்ற அளவில் உற்பத்தி செய்வது பன்றி இன வளர்ச்சித் திட்டத்தின் இலக்காகும்.

துப்புரவான இறைச்சி.—சுத்தமான இறைச்சி உற்பத்திக்காக ஆடு, மாடு வெட்டுமிடங்களை நவீனப்படுத்தவும், இறைச்சியைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலைகளை அமைக்கவும் கருதப்பட்டுள்ளது. கால்நடைகளைப் பொருத்த வியாபாரம், ஆடு, மாடு வெட்டுமிடங்களுக்கான அமைப்புகள், சுத்தமான இறைச்சியை வழங்குதல் ஆகியவற்றிற்காக இறைச்சி வாரியம் (Meat Board) ஒன்றை அமைக்கவும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

கால்நடைத் தீவனம், பசுந்தாள் தீவனம் ஆகியன பெருக்கல்.—தற்போது கழிவு நீர்ப் பண்ணைகள் 700 ஏக்கர் பரப்பளவுக்குள்ளன. 1983-84-க்குள் 4,000 ஏக்கர் அளவாக இது விரிவாக்கப்படும். இதனால் 2 லட்சம் டன்னிகள் பசுந்தீவனம் உற்பத்தியாகும். நிரந்தரமான புல் வகைகளை ஒரு மில்லியன் ஏக்கரிலும், சுழற்சிப் பயிர் முறையில் பயற்றினப் பூண்டு வகைகளை ஒரு மில்லியன் ஏக்கரிலும் பயிர் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிர்களால் 40 மில்லியன் டன்னிகள் பசுந்தீவனம் கிடைக்கும். பசுந்தீவன விதை உற்பத்தியை திருந்திய முறையில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. வயல் வரப்புகளில் அகத்தியையும், சுற்றுப்பயிராக சீமைப் (லூசர்ண்) புல்லையும் பயிர் செய்ய ஊக்கமளிக்கப்படும். கால்நடைத் தீவன ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

திட்டப் பணிகளும் நிதி ஒதுக்கீடும்

(ரூ. லட்சத்தில்)

திட்டப் பணி	நிதி ஒதுக்கீடு
(0)	(1)
1. கால்நடை வளர்ச்சி	870·00
2. பால்பண்ணை வளர்ச்சி	400·00
3. கால்நடை நலம்	420·00
4. கால்நடை உயிரியல் சோதனை	35·00
5. கோழி வளர்ச்சி	1,092·00
6. வெள்ளாட்டு வளர்ச்சி	180·00
7. பன்றி வளர்ச்சி	1,110·00
8. கால்நடைத் தீவனம்	2,460·00
9. கால்நடை வளர்ச்சிக்கான நிறுவனம்	33·00
10. கால்நடை வளர்ப்புக் கல்வியும் ஆராய்ச்சியும்	300·00
மொத்தம்	6,900 00

காடு பேணல்

நமது மாநிலத்தில் கடந்த இருபதாண்டுக் காலமாக காடுகளைக் காடுகளாகப் பயன்படுத்தாது பிற காரியங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ள நிலை இருந்து வருகிறது. தொலைநோக்குத் திட்டம், இப்போக்கினைத் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதோடல்லாமல், இம்மாநிலத்தில் காடுகளாக உள்ள நிலப்பரப்பின் சதவீதத்தை 16·84-ல் இருந்து 18·06 ஆக உயர்த்துவதை முக்கிய கொள்கையாகக் கொண்டுள்ளது.

பலதரப்பட்ட காடுபடு பொருள்களின் தேவை, தொழிற்சாலைகளுக்கும், மற்ற வீட்டுப் பயன்களுக்குமாகப் பெருகிக் கொண்டே வருகிறது. இம்மாநிலத்தில் ரேயான் இழைத் தொழிற்சாலைகளும், காகித ஆலைக்குமாகத் தற்போது தேவைப்படும் மரக்கூழ் 2 லட்சம் டன்னிகளாக உள்ள போதிலும், உற்பத்தியோ 1·71 லட்சம் டன்னிகளேயாகும். மேலும் 1983-84 ஆம் ஆண்டு முடிவிற்குள் மரக்கூழின் தேவை 3·66 லட்சம் டன்னிகளாக உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.* தொழிற்சாலை மற்றும் கட்டட வேலைகளுக்குப் பயன்படும் வெட்டு மரத்தின் தற்போதைய தேவை 2·49 லட்சம் டன்னிகளாகும். ஆனால் இத்துடன் ஒப்பிடுகையில் உற்பத்தியோ 67,810 டன்னிகள்தான் ; பத்தாண்டுகளில் இவ்வகை மரங்களின் தேவை 2·61 லட்சம் டன்னியாக இருக்கும். விறகு மரங்களின் தேவை 8·4 லட்சம் டன்னிகளிலிருந்து 9·4 லட்சம் டன்னிகளாக உயரும். ஆனால் தற்போதைய உற்பத்தியோ 7·4 லட்சம் டன்னிகளாக உள்ளது; இதில் மாநிலக் காடுகள் மிகக் குறைந்த 3 லட்சம் டன்னிகளையே வழங்கியுள்ளன.

தொலைநோக்குத் திட்டப் பணிகள்

அ. மாநிலக் காடுகளில் சேராதவை.—700 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள ஏரிப்படுகை மற்றும் தரிசு நிலங்களில் மரங்கள், வனப்பயிர்கள் வளர்க்கப்படும். ஆறு, கால்வாய் கரைப்பகுதிகள், சாலை ஓர நிலங்கள், கடற்கரை மணற்பாங்குப் பகுதி ஆகிய நிலங்களில் தகுந்த மர வகைகள் பயிரிடப்படும். நீர்த் தேக்கங்களின் நீர்க்கோள் பகுதிகளில் வெள்ளத்தையும் வண்டலையும் தடுப்பதற்கான நிலையான தாவர வளர்ச்சி பாதுகாக்கப்படும்.

ஆ. மாநிலக் காடுகளில் அடங்கியுள்ளவை.—90 சதுர கிலோ மீட்டர் பரப்பில் தேக்கு மற்றும் பிற மர வகைகள் சாகுபடி செய்யப்படும். குறுகிய கால சுழற்சி முறையில் அதிக அளவு உற்பத்தியை எய்துவதற்காக மிலாறு பயிரிடப்படும் பகுதிகளில் மும்முரமான நடவடிக்கைகள் தொடங்கப்படும். காகிதம், ரேயான் செயற்கை இழைக்கான மரக் கூழை உற்பத்தி செய்யும் யூகலிப்டஸ், மூங்கில், ஓடை போன்ற மர வகைகள் 1983-84 ஆம் ஆண்டு இறுதிக்குள் 360 சதுர கிலோ மீட்டர் பரப்பு நிலத்தில் பயிரிடப்படும். மேலும், தொலைநோக்குத் திட்டக் காலத்தில் 22 சதுர கிலோ மீட்டர் பரப்பில் சந்தனமரம் பயிரிடக் கருதப்பட்டுள்ளது. தீக்குச்சி மர வகைகளை 22 சதுர கிலோ மீட்டர் பரப்பிலும், அரக்கு மரம் 5·5 சதுர கிலோ மீட்டர் பரப்பிலும் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விறகு மரங்கள் 110 சதுர கிலோ மீட்டர் பரப்பில் பயிரிடப்படும். புளி, வேம்பு, துவர்ப்பு வகை மரம், ஜெரேனியம் போன்ற காடுபடு சிறுபொருள் மர வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் தொலைநோக்குத் திட்டம் வலியுறுத்துகிறது. 40 ஹெக்டேர் நிலப்பரப்பில் காப்பி பயிரிடப்பட்டு அதன் பின்னர் அதிக அளவு உற்பத்தியைத் தரும் நிலையில் அச்செடிகள் பேணப்படும். 310 சதுர கிலோ மீட்டர் பரப்பிலுள்ள முந்திரிப் பயிர் அதிக அளவு உற்பத்தி தரும் வகையில் பேணப்படும்.

ஆராய்ச்சியும் கல்வியும்.—வனத் துறையின் ஆராய்ச்சி, கல்விப் பிரிவின் பணி மும்முரப்படுத்தப்படும். வேளாண்மை பல்கலைக் கழகத்தில் வனவியலில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு வசதிகள் செய்து தரப்படும். (1) பூச்சிகளாலும், நோய்களாலும் காட்டுப் பயிர்களுக்கு ஏற்படும் தீங்குகளை ஆய்வதோடு சிறந்த அளவில் பயனளிக்கக்கூடிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வகுத்தல்; (2) காடுபடு பொருள்களின் உற்பத்திக்கான பண்ணைகளை ஏற்படுத்துதல்; (3) காட்டுப் பகுதிகளில் மண், நீர் வளம் பாதுகாப்பு, அப்பகுதிகளை அடுத்து அமைந்துள்ள பண்ணை நிலங்களுடன் அவற்றின் தொடர்பு குறித்த ஆராய்ச்சி; (4) பலவகை மண்ணியல் ஆய்வு; (5) வெவ்வேறு தாவரங்களின் இயற்கையமைப்பு பற்றிய ஆய்வுகள் ஆகியவற்றில் மும்முரமான ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும். 1983-84 ஆம் ஆண்டுக்குள் வனங்கள் குறித்த விரிவான அட்டங்கல் பூர்த்தி செய்யப்படும்.

காட்டுச் சாலைகள் மேம்படுத்தப்படுவதோடு மட்டுமல்லாது 220 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய சாலைகளும் அமைக்கப்படும். திட்டக் காலத்தில் 40 ஓய்வில்லங்கள் கட்டி முடிக்கப்படும். வனப் பணியாளர்களுக்கு (வளர்ச்சித் திட்டங்களில் அமர்த்தப்பட்டுள்ள) போதுமான வீட்டு வசதிகள், மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதற்கும், சால்வைகள், மழைக் கோட்டுகள் வழங்கு வதற்கும் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

முதுமலை வனவிலங்குச் சரணாலயம் தேசிய பூங்காவாக மேம்படுத்தப்படும். நாசனூர் மேட்டு நிலம், ஆனைமலை, பழனிக் குன்றுகள் ஆகிய வட்டாரங்களில் மேலும் மூன்று வனவிலங்குச் சரணாலயங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொலைநோக்குத் திட்டக் காலத்தில், மதுரையிலுள்ள அரசு ஆக்குத் தொழிற்சாலையை விரிவுபடுத்தவும், அரசுத் துறையில் சந்தனத் தைலம் வடித் திறக்கும் தொழிற்கூடம், முந்திரித் தோல் நீக்கும் தொழிற்கூடம் ஆகிய புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும் கருத்துரைக்கப்பட்டுகிறது.

காப்பி, தேயிலை, ரப்பர் ஆகியவற்றை பயிரிடும் திட்டங்களைச் செயல் படுத்துவதற்காக வனத் துறையில் தனியான ஒரு பிரிவு ஏற்படுத்தப்படும். திறமையான நிர்வாகத்தைக் கருத்தில் கொண்டு, விதிமுறைகளும், நிர்வாகமும் உரிய வகையில் சீரமைக்கப்படும். வனத் துறை புள்ளி விவரப் பிரிவு மேலும் வலுப்படுத்தப்படும். அரசு அதிகாரிகள், காகிதத் தொழில், ரேயான் தொழில், மிலாறு எடுக்கும் தொழில் ஆகியவைகளில் இருந்து மூன்று பிரதிநிதிகள் அடங்கிய ஒரு வன வளர்ச்சி வாரியம் அமைக்கப்படும். இவ்வாரியம் காடுபடு பொருள்களின் உற்பத்திக்கான தேவையை மதிப்பீடு செய்வதற்கும் மாநிலத்தின் வன வளர்ச்சிக் கான பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சின்கோனா.—சின்கோனாத் துறை கோவை, நீலகிரி மாவட்டங்களில் நறுமணச் செடி, மற்ற மூலிகைச் செடிகளை அதற்குச் சொந்தமான நிலங்களில் சாகுபடி செய்வதில் ஈடுபட்டுள்ளது. இத்துறைக்குச் சொந்தமாக 7.000 ஹெக்டேர் நிலம் உள்ளது; இன்றியமையாத எண்ணெய்களாகிய ஜிரேனியம், யூகலிப்டஸ், சிட்ரோனல்லா முதலியன தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும், கொய்னா மற்றும் அதிலிருந்து பெறும் பொருள்களை உற்பத்தி செய்யும் மற்றொரு தொழிற்சாலையும் இருக்கின்றன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மூலிகை, நறுமணச் செடிகளைப் பயிரிடுவதை விரிவாக்கவும், முழ்முரப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டப் பணிகள் தொடர்ந்து நிறைவேற்றப்படும். தோட்டப் பயிர்கள் உயர்ந்த அளவு உற்பத்தியைத் தரும் வகையில் மறு பயிரிடுதல் மூலம் பல திட்டங்களாக நிறைவேற்றப்படும். ஆனைமலையில் உள்ள தொழிற்கூடத்தில் முழு உற்பத்தித் திறன் நிலை ஏற்பட ஆண்டொன்றுக்குச் சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடும் பணி மேற்கொள்ளப்படும்.

தொலைநோக்குத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு-சுருக்க வரைவு.

(ரூ. லட்சத்தில்.)

வளர்ச்சிப் பிரிவு	ஒதுக்கீடு
(0)	(1)
1. மாநிலக் காடுகளில் அடங்காதவைகளின் வளர்ச்சி ..	600·00
2. மாநிலக்காடுகளில் அடங்குபவைகளின் வளர்ச்சி	1,000·00
3. பொதுவான வளர்ச்சி	700·00
மொத்தம் ..	2,300·00
4. சின்கோனா	300·00
பெருமொத்தம் ..	2,600·00

மீனளம்

கடலிலும் உள்நாட்டு நீர்நிலைகளிலும் பிடிக்கப்படும் மீனின் அளவைப் பெருக்கி, மாநில மக்களுக்குப் போதுமான புரதச்சத்தை அளிக்கவேண்டும் என்பதை மீனளத்திற்கான தொலைநோக்குத் திட்டம், குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதற்காக ஒருவர் உட்கொள்ளும் மீனின் அளவு தற்போது ஆண்டொன்றுக்குச் சராசரி 7·9 கிலோவாக இருப்பதை, 1984-ல் 17·58 கிலோவாக உயர்த்த வேண்டும்.

தமிழகத்தில் மீன்பிடிப்பும் மின் உற்பத்தியும் பெருகத் தடைகளாக இருங்பன : (1) இயந்திரப் படகுகளின் உற்பத்திக் குறைவு; (2) படகுகளை இயந்திர மயமாக்குவதற்கு மீனவர்கள் பரம்பரைப் பழக்கத்தால் ஆர்வமில்லாதிருப்பது; (3) கடலோரப் பகுதிகளில் படகுத்துறை வசதிகள் போதாமை: (4) ஆராய்ச்சி-விரிவாக்கப் பணிகள் சுருங்கியிருப்பது ஆகியவைகளாகும். இத்தடைகளை நீக்கு தற்கான தொலைநோக்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

கடல் மீனளம்

மீன்பிடிப் படகுகளை இயந்திரமயமாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். உட்புற மோட்டார் பொருத்தப்பட்ட விசைப்படகுகளாக 1,250 பாய்மரப் படகுகள் மாற்றப்படும். 9·1, 9·8, 13·8 மீட்டர் நீளமுள்ள 1,900 இயந்திரப் படகுகள் கட்டுவதற்கும் கருதப்பட்டுள்ளது. இப்படகுகள் குறைந்த விலையில் மீனவர்களுக்குக் கொடுக்கப்படும். அரசும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும், கூட்டுறவுத் துறையினருக்கும் தனியாருக்குமாக 1,850 படகுகள் அளிக்க நிதி உதவி செய்யும். தற்போதுள்ள படகு பழுது பார்க்கும் நிலையங்கள், படகு கட்டுமான தளங்கள் விரிவுபடுத்தப்படும். ஒவ்வொன்றிலும் மேலும் இரண்டு புதிய நிலையங்கள் திட்டக் காலத்தில் ஏற்படுத்தப்படும். 9,440 டன்னிகள் செயற்கைக் கயிறும், வலை நூலும் குறைந்த விலையில் கொடுக்கவும் யோசனையுள்ளது. புயலில் சிக்கித் தவிக்கும் மீன்பிடி படகுகளை விரைந்து சென்று காப்பாற்றக்கூடிய ஐந்து படகுகள் பெரிய துறைமுகங்களில் நிறுத்திவைக்கப்படும். ஆழ்கடல் மீன்பிடிப்பில் திட்டக் காலத்தில் அதிகக் கவனம் செலுத்தப்படும். 1983–84ஆம் ஆண்டு இறுதிக்குள் 300 பெரிய இழுவை இயந்திரப் படகுகள் (Trawlers) தமிழ்நாட்டின் கடற்பகுதிகளில் மீன்பிடிப்பில் ஈடுபட்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மீன் பதனம், கிடங்குகள், அங்காடி வசதிகள்.—மீன் எளிதில் கெட்டுவிடும் பொருள் ஆகையால் விரைவாக வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு வசதியாக ஒன்றுக்கொன்று சங்கிலித் தொடர்பு கொண்டது போன்ற 36 குளிர்ப்பதன சேமிப்பு அறைகள் ஏற்படுத்தப்படும். சென்னை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் பெரிய மீன்பிடி துறைமுக அமைப்புத் திட்டத்தோடு, இணைந்த பகுதியாக 6 பெரிய பனிக்கட்டி உற்பத்தி சாலைகளும், அவற்றோடு, குளிர்மை கொண்ட ஊர்தித் (Insulated Vehicles) தொகுதிகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பெருமளவு மீன் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு வசதியாக, அச்சங்கங்களுக்கு அரசு நிதி உதவி செய்யும்.

உள்நாட்டு மீனளம்

இத்துறையில் மீன்பிடிப்பை கணிசமாகப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது. கெண்டை மீன் குஞ்சு பொரிக்கும் 20 நிலையங்கள் மூலமும், 150 மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள்மூலமும் 100 மில்லியனுக்கும் மேற்பட்ட குஞ்சுகளை உற்பத்தி செய்யக் கருதப்பட்டுள்ளது. வளர்ப்பு மீன் குஞ்சுகளைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்ல 15 ஊர்திப் பிரிவுகள் செயல்படவும் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மீன் குஞ்சுகள் பெருக்கத்துக்காக பகிர்ந்து கொடுப்பதிலும், மீன் உற்பத்திக்குத் தேவையான சாதனங்களை பகிர்ந்து கொடுப்பதிலும் ஊராட்சிகள் பெரும் பங்கு கொள்ளும். 46,750 ஹெக்டேர் பரப்புள்ள கழிமுகங்களிலும் நதி சங்கமங்களிலும், 49,000 ஹெக்டேர் பரப்புள்ள நீர்த்தேக்கங்களிலும் மீன் உற்பத்தி மும்முரப்படுத்தப்படும். நீலகிரி, கொடைக்கானல் ஆகிய இரண்டு மலைப்பிரதேசங்களிலும் மீன்குஞ்சு பொரிக்கும் நிலையங்களும், டிரவுட் மீன் பண்ணைகளும் ஏற்படுத்தப்படும்.

ஆராய்ச்சி.—கடலோர மீனள ஆய்வு தீவிரமாக மேற்கொள்ளப்படும். அதற்கென தற்போது இருக்கும் நான்கு நிலையங்களை வலுப்படுத்துவதோடு, மேலும் மூன்று நிலையங்கள் புதிதாக ஏற்படுத்தப்படும். கடற்பகுதிகளில் எங்கெங்கு இறால், டூனா (Tuna) ஆகிய மீன் வகைகள் வாழ்கின்றன என்பதைக் கண்டுபிடிப்பதற்கு பெரியனவும் நடுத்தரத்தனவுமாகிய 24 கலங்களைக் கொண்டு சோதனைகள் நடத்தப்படும். இடத்துக்கேற்ப ஆழ்கடல் உயிரியல், நீர் உயிரியல் ஆகியன பற்றிய நுட்பங்களை முறையாக ஆய்வதற்காக மாநில மீனள ஆராய்ச்சி நிலையம் ஒன்று தொடங்கப்படும்.

நீர் உயிரியல், ஆழ்கடல் மீனளத்தின் சூழல் தொடர்பு, ஆகியவை பற்றிய விரிவான புலனாய்வுகள், நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட இரண்டு கப்பல்களைக் கொண்டு செய்யப்படும். மீன் துறை பற்றிய புள்ளிவிவர நடவடிக்கைகளை வலுப்படுத்தவும், மீனளத்திற்கும் அதைச் சார்ந்த தொழில்களுக்கும் தேவையான நுட்பங்களையும் புதுமையான தகவல்களையும் திரட்ட ஒரு விரிவாக்கப் பிரிவும் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு மீனவர்களுக்குப் பயனளிக்கும் யோசனைகளை அவ்வப்போது எடுத்துக்கூறும்.

மீனவர்களின் சமூக–பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள்.—தொலைநோக்குத் திட்டக் கால இறுதிக்குள், மீனவக் குப்பங்களில் 25,000 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீனவக் கிராமங்களையும், மீன் பிடிப்பு கடலோரப் பகுதிகளையும், நெடுஞ்சாலைகளுடன் இணைக்கும் சாலைகளை அமைத்தல், செப்பனிடுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். 300 மீனவக் கிராமங்களுக்கு தூய்மையான குடிநீர் வசதி செய்து தரவும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

மற்றைய பணிகள்.—எண்ணூர், கடலூர், மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் மீனளத் தொழிற் பேட்டைகள் அமைக்கவும், மாநில மீன்குஞ்சுப் பண்ணை, மீனள முன்னேற்ற அமைப்பு போன்ற நிறுவனங்களை ஏற்படுத்தவும் திட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி துறைமுக வளர்ச்சி.—தொலைநோக்குத் திட்டக் காலத்தில் கடல் மீன் பிடிப்பை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதால், அதற்கேற்ப தமிழ்நாட்டின் நீண்ட கடற்கரைப் பகுதிகளில் 60 அல்லது 80 கி.மீ.க்கு ஒன்றாகப் பல படகுத்துறைகளை அமைக்கவேண்டியது அவசியமாகும். முந்தியத் திட்டங்களில் கடலூர், நாகப்பட்டினம், ராமேஸ்வரம், மண்டபம் ஆகிய இடங்களில் மீன்பிடி படகுத்துறை வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. தூத்துக்குடியில் பெரிய மீன்பிடி துறைமுகம் அமைக்கும் வேலை முடிவுபெறும் தருவாயில் உள்ளது. சென்னையில் மீன்பிடி துறைமுகம் கட்டும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். தொலைநோக்குத் திட்டக் காலத்தில் மேலும் இரண்டு புதிய மீன் துறைமுகங்கள்–குமரி மாவட்டம் கொளச்சலில் ஒன்றும், ராமநாதபுரம் மாவட்டம் வலியநூக்கத்தில் மற்றொன்றுமாக–அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதோடன்றி கடலூர் மீன் துறைமுக அமைப்பில் மூன்றாவது கட்டப் பணியும், நாகப்பட்டினம் மீன் துறைமுகத்தில் இரண்டாவது கட்டப்பணியும் எடுத்துக் கொள்ளப்படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் மல்லிப்பட்டினத்தில் கான்கிரீட் படகுத் துறை ஒன்று அமைக்கவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எண்ணூர், மண்டபம், முட்டம், சின்ன முட்டம், குலசேகரப் பட்டினம், கோடிக்கரை, பரங்கிப்பேட்டை ஆகிய இடங்களில் படகுத்துறை வசதிகள் பெருக்கப்படும்.

சுற்றுலா வளர்ச்சி.—தலைநகரில் மெரினா கடற்கரையில் எல்லா வசதிகளுடன் கூடிய நவீன மீன்காட்சியகம் ஒன்றை அமைக்கவும், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் படகு விடுதல், நீர் விளையாட்டுகளுக்கான வசதிகள் செய்தல் போன்றன தொடங்கவும் கருதப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கீடு.—மீன் வளப் பெருக்கத்திற்காக தொலைநோக்குத் திட்டக் காலத்தில் ரூ. 75 கோடி முதலீடு செய்யப்பட வேண்டுமென்றும், இத்தொகையில் மாநில அரசுத் துறையின் முதலீடு ரூ. 65 கோடியாகவும், மத்திய அரசு முதலீடு ரூ. 10 கோடியாகவும் அமைய வேண்டுமென்றும் கருதப்படுகிறது.

தொலைநோக்குத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டின் சுருக்கம்

(ரூ. லட்சத்தில்)

	திட்டம்	ஒதுக்கீடு
	(0)	(1)
1.	நாட்டுப் படகுகளில் பழைய முறையில் மீன் பிடிப்பவர்களுக்கு உதவுதல்	280·00
2.	சிறிய படகுகளை விசைப் படகுகளாக்க உதவுதல் ..	3,400·00
3.	ஆழ்கடல் மீன் பிடிப்பு	255·00
4.	பதப்படுத்துதல், சேமித்து வைத்தல், விற்பனை வசதிப்படுத்தல்	290·00
5.	பயிற்சி	60·00
6.	மீன் குஞ்சுகள் உற்பத்தி	305·00
7.	நீர்த்தேக்க மீனளம்	145·00
8.	ஏரிகளைச் சீர்ப்படுத்துதல்	35·00
9.	மலையிட மீனளங்கள்	50·00
10.	ஆராய்ச்சி	900·00
11.	பொருளாதார நல மேம்பாடு	535·00
12.	பிற திட்டங்கள்	110·00
13.	நிர்வாக அமைப்பு	35·00
14.	சுற்றுலா முன்னேற்றம்	65·00
15.	முன்னோடித் திட்டங்கள்	145·00
16.	சிறிய துறைமுகங்களில் கலங்கள் கரை சேரவும், நிறுத்தப்படுவதற்குமான வசதிகள் செய்தல்	682·50
17.	மாநில மீன்குஞ்சுப் பண்ணையையும், மீனவர் வளர்ச்சி அமைப்பையும் நிறுவுதல்	200·00
	மொத்தம்	7492 50

VI. தனிப் பிரச்னைகளும் சிறப்புத் திட்டங்களும்

பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சி

பொருளாதாரத்தின் பின்தங்கியநிலை, கீழ்க்கண்ட அம்சங்களில்பிரதிபலிக்கின்றது: அவை தனி நபர் வருமானக் குறைவு, குறைந்தளவு நுகர்வு, வேலையின்மை, குறைந்தளவு வேலை வாய்ப்பு, பெருமளவு வறுமை, ஆரோக்கிய—சுகாதார வசதிகள் இல்லாமை, படிப்பின்மை, போக்குவரத்து—செய்தித்தொடர்புகள் இல்லாமை ஆகும். இத்துடன், வறட்சிப் பகுதிகளும், மலைப்பகுதிகளும், பூர்வ குடியினர் மலை சாதியினர் வாழும் பகுதிகளும் பின் தங்கிய பகுதிகளில் சேரும்.

ஏற்கெனவே இப்பகுதிகளின் மேம்பாட்டிற்கு அரசு பலநடவடிக்கைகள் எடுத்தும், இப்பகுதிகளின் வளர்ச்சி மிகக் குறைந்த நிலையிலேயே இருக்கின்றது. இவ்வளர்ச்சியினைத் துரிதப்படுத்த இப்பகுதியில் உள்ள சிறு நகரங்களை விரிவு படுத்தி, தொழில் துறைகளை ஏற்படுத்தி அருகாமையில் உள்ள தேக்கத்தை நீக்க வேண்டும். இங்குள்ள வளர்ச்சி மையங்களைத் தெரிந்தெடுத்து அவற்றுக்கான பகுதி வளர்ச்சித் திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

இப்பகுதியில் காணும் வேலையின்மை, குறைந்த வேலைவாய்ப்பு இவற்றை நீக்க, சிறு தொழில், கைத் தொழில் மற்றும் நடுத்தரத் தொழில் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மேம்பாட்டிற்கு வழி செய்ய வேண்டும். அத்துடன் விவசாயம், நீர்ப்பாசனம், மண்வளப் பாதுகாப்பு, கால்நடை வளர்ப்பு, வன வளர்ச்சி, மீன் பிடிப்பு, சாலைகளை விரிவுபடுத்துதல் ஆகிய ஒன்றுக்கொன்று தொடர்பான திட்டங்களைச் செயலாக்க வேண்டும்.

ஒவ்வொரு மாவட்ட வருவாய் அளவுகளிலும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இவை மாநிலத்தின் பகுதிகளில் ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்குகின்றன. இதற்கு முக்கியக் காரணம், மாவட்டத் திட்டங்கள் இல்லாமையும் அவற்றைச் செயல் படுத்தத் தகுந்த அமைப்புகள் இல்லாமையும் ஆகும். மேலும், குறிப்பிட்ட அளவு செல்வத்தினைப் பல பகுதிகளில் பெருக்க விரும்புவதும் ஆகும். எனவே, பின் தங்கிய பகுதிகள் எதிர் காலத்தில் முன்னேற்றம் அடைய சில குறிப்பிட்ட பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அங்கு முன்னேற்றத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட இடங்களைப் பொறுக்குவதில் வளர்ச்சியும், அடிப்படை வளமும் உள்ள இடங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சி மையங்களை அமைத்து அங்கு பொது முன்னேற்றத்திற்கான திட்டங்களாகிய சாலை அமைத்தல், மின்சார இணைப்புத் தருதல், வீடு கட்டுதல் முதலிய ஆக்க வேலைகளைச் செய்ய வேண்டும். இவ் வரிசையில் ராமநாதபுரம், தர்மபுரி, தஞ்சாவூர், தென்னாற்காடு முதலிய மாவட்டங்களை முதற்கண்ணும், அவற்றைத் தொடர்ந்து தெற்கு திருச்சிராப்பள்ளி, வடக்கு சேலம், நீலகிரி மாவட்டங்களும், பிற மாவட்டங்களின் பின் தங்கிய பகுதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதில் முதல் நான்கு மாவட்டங்களில் நுட்பப் பொருளாதார ஆய்வுகள் நடந்தேறி உள்ளன. இதன் அடிப்படையில் ஒருங்கிணைந்த விவசாயத் திட்டங்களும், தொழில் மேம்பாட்டுத் திட்டங்களும் வகுக்கப்பட வேண்டும். தொழில் தொடங்குபவர்களுக்கு இயந்திரம், சீர்படுத்தப்பட்ட தொழில் அமைக்கும் இடங்கள், தங்கும் இடங்கள் மற்றும் ஆக்கக் கருவிகள் தரப்பட வேண்டும். இத்துடன் வரிச்சலுகையும் உற்பத்தித் தள்ளுபடியும், வருமான வரி, இறக்குமதி வரி, கலால் வரி, விற்பனை வரி ஆகிய வகைகளில் சலுகைகளும், போக்குவரத்தில் உதவித் தொகையும் முதல் ஐந்தாண்டுகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

ராமநாதபுரம் மாவட்டம்.—இம்மாவட்டத்தில் தனி நபர் வருமானம் ஆண்டுக்கு ரூ. 528 (1970–71-ல்)ஆகும். இதை 1983–84-ல் ரூ. 1,308 ஆக (1970–71 விலைகளில்) உயர்த்த வேண்டும். தகுந்த நீர்ப்பாசன முறைகளின் மூலம் இங்கு 3 லட்சம் ஏக்கர் நிலங்களில் அதிக உற்பத்தியைப் பெருக்கலாம். அதன் மூலம் 2 லட்சம் டன்னிகள் நெல் உற்பத்தி பெருகும். நீர்ப்பாசனச் சாகுபடி முறையை விட, இம்மாவட்டத்தில் மானாவாரி சாகுபடி முறை மிகவும் பொருத்தமானதாகும். எளிய கடன் வசதிகள் மற்றும் விவசாயிகளுக்கு பல வசதிகளைச் செய்வதின் மூலம் இங்கு உற்பத்தியைப் பெருக்கலாம். மண்டபத்திற்கு அருகாமையில் உள்ள மீன் வளத்தைப் பெரும் அளவு பெருக்குதல் மூலமும் தனி நபர் வருமானம் இங்கு பெருமளவு கூடும்.

இம்மாவட்டத்தில் தொழில் துறையில் மட்டும் சுமார் ரூ. 200 கோடி செலவிட மாவட்டத் திட்டம் வகை செய்கிறது. தொழில் துறையில் இம் மாவட்டத்தில் கீழ் கண்ட நிறுவனங்கள் நிறுவப்படும். அவையாவன : சோடியம் ஹைட்ரோ சல்ஃபைட் தொழிற்சாலை, மோட்டார் டயர், டியூப் தொழிற்சாலை, மோட்டார் சைக்கிள் தொழிற்சாலை, ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை (விரிவு), கால்சியம் கார்பைடு தொழிற்சாலை முதலியவை ஆகும். இம்மாவட்டத்தின் இயற்கை வளமாக களிமண், ஜிப்சம், கிராஃபைட், சுண்ணாம்புக்கல், உப்பு, மற்றும் சில படிமங்கள் காணப்படுகின்றன. இவற்றையும் பயன்படுத்தலாம்.

தர்மபுரி மாவட்டம்.—இம்மாவட்டத்தின் தனி நபர் வருமானம் ரூ. 432 ஆகும். எனவே மாநிலங்களுக்குள் மிகக் குறைந்த வருமானமுள்ள மாவட்டம் இதுவே. மாநிலத்தின் சராசரி நபர்வாரி வருமானத்தை 1983–84–ல் அடைய, இம் மாவட்டத்தின் வளர்ச்சி ஆண்டுக்கு 9 சதவீதமாகக் கூட்டு வளர்ச்சியில் உயர வேண்டும்.

இம் மாவட்டத்தின் தொழில் வேளாண்மை ஆகும். இங்கு மானாவாரி வேளாண்மையைப் பெரும் அளவில் செய்கிறார்கள். இதன் முக்கிய விளைபொருள்கள், கரும்பு, புகையிலை, பருத்தி, எண்ணெய் வித்துக்கள் முதலியன. இவை வேளாண்மைச் சார்ந்த தொழில்கள் ஏற்பட வகை செய்கின்றன. வேளாண்மையல்லாத பகுதிகளின் வளர்ச்சி வசதிகள் குறைவாகவே உள்ளமையால், இங்கு வேளாண்மைப் பகுதியிலேயே மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். எனவே, மேலே குறிப்பிட்ட விளைபொருள்களுடன் சூரிய காந்திப் பூவையும் பயிரிடலாம். நிலத்தைப் பயன்படுத்துதல் மூலம் இங்கு கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தலாம். இம் மாவட்டத்தின் தொழில் துறையில் ஒரு சிகரெட் தொழிற்சாலை, ஒரு ராகிமால்ட் தொழிற்சாலை, பழங்களைப் பக்குவப் படுத்தும் தொழிற்சாலை, வடிசாலை ஒன்றுடன் பாலக்கோடு சர்க்கரை ஆலை விரிவு படுத்துதல், கருங்கல் வெட்டும் தொழில் மற்றும் பல பக்குவப் படுத்தும் தொழில்கள் ஆகியவை ஏற்படுத்த இம்மாவட்டத் திட்டம் வழிசெய்கிறது. இதைச் செயல்படுத்துதல் மூலம் இம்மாவட்டத்தில் தனி நபர் வருமானத்தை விரைவில் பெருக்கலாம்.

தென்னாற்காடு, தஞ்சாவூர், மற்றும் மலைப்பகுதிகள்.—பொதுவாக தென்னாற்காடு தஞ்சாவூர் மாவட்டங்கள் விவசாயத்தில் முன்னேற்றம் அடைந்திருந்தும் தொழில் துறையில் பின் தங்கியே உள்ளன. இவ்விரு மாவட்டங்களின் சில பகுதிகள் வேளாண்மையிலும் வறண்ட பகுதிகளாக இருப்பதால், அவை பின்தங்கிய நிலையில் உள்ளன. இந்த வறண்ட பகுதிகளில் பாசன வசதி உள்ள இடங்களில் கரும்பும், பாசன வசதி இல்லாத இடங்களில் வாழை, சூரிய காந்தி, முந்திரி முதலியவற்றையும் பயிரிடலாம்.

இங்கு பூமிக்கு அடியில் உள்ள நீரைப் பெருமளவு பயன்படுத்தலாம். இம்மாவட்டங்களில் வேளாண்மைச் சார்பு உள்ள தொழில்களே மிகுதி. இம் மாவட்டங்கள், அவற்றின் பரம்பரைக் கலைகளையும் கைவினைகளையும் மேம்படுத்துவதால் உலகச் சந்தையில் நல்ல மதிப்பையும் பணத்தையும் ஈட்டலாம்.

கடலூர் துறைமுகத்தை இடைநிலைத் துறைமுகமாக விரிவு படுத்துதல் மூலமும், நெய்வேலியைச் சுற்றித் துணை நகரங்கள் வளரவும், தொழில் வளங்களைப் பெருக்கவும், தென்னாற்காடு மாவட்டம் தொழில் துறையில் முன்னேற்றம் அடையவும் வாய்ப்புள்ளது.

ஏனைய பின்தங்கிய பகுதிகளாகிய ஏற்காடு, கல்ராயன்மலை, பசசைமலை, மற்றும் நீலகிரி மாவட்டம் இவற்றிலும் தனிக்கவனம் செலுத்த வேண்டும். மலை சாதியினர் வசிக்கும் இப்பகுதிகளில் காட்டில் கிடைக்கும் பொருள்களையும் அவற்றினைச் சார்ந்த தொழில்களையும் விரிவுபடுத்த வேண்டும்.

நிர்வாகம்—நிறைவேற்றுதல் குறித்த பிரச்னைகள்

தொலைநோக்குத் திட்டத்தின் நோக்கங்கள் உயர்ந்த வகையில் அமைக்கப் பெற்றுள்ளன. இந்நோக்கங்கள், துறைவாரியான திட்டங்களிலும், நடுத்தரக் காலத் திட்டங்களில் உள்ள புதியதும், தொடர்ச்சியானதுமான வேலை திட்டங்களிலும் செயலுருப்படுத்தப்படும். இந்நோக்கங்களின் வெற்றி, ஓரளவிற்கு திட்டத்தை நிறைவேற்றுகின்ற வேகம், நெறி, தன்மை ஆகியவற்றினையும், திட்டங்கள் மற்றும் பணிகள் செயல்படுத்துவதையும் சார்ந்திருக்கும். சமுதாய நீதியினை அடைய இயலாமையே கடந்த காலத் திட்டங்களின் தோல்வி

யாகும். ஆகையால், திட்டங்களைத் தோல்வியுறச் செய்யும் சக்திகளையும், திட்டம் செயல்படுத்தப்படுதலில் உள்ள குறைபாடுகளையும் தெரிந்து கொண்டு, அவற்றினை வெற்றி காணும் செயல் முறைகளை மேற்கொள்ளுதல் தேவையானதாகும்.

தோல்வியின் முதற்காரணம், ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட நமது சமூகத்தினின்றும் எழுவதாகும். இது கணக்கில் வராத வளங்களைக் கொண்டதும், பற்றாக்குறை மிக்கதுமான ஒரு பொருளாதார நிலைமையினை உருவாக்குகின்றது. இதனால் பலவகையில் ஊழல்களும் உருவாகின்றன. உணவுத் தானியங்கள், அவையல்லாத மற்ற தானியங்கள் ஆகியவற்றின் உற்பத்திக் குறைவு, குறைந்த அளவே கிடைக்கும் தொழிலறிவு பெற்ற தொழிலாளர்கள், மிகவும் எளிய நிலையில்உள்ள ஆராய்ச்சி, அதனைச் சார்ந்த முன்னேற்றம், குறைந்துகொண்டேபோகும் சேமிப்பு, போதுமான அளவில் இல்லாத தொழில் உள்ளமைப்புகள், நீடித்த தொழில் அமைதியின்மை ஆகியவை இரண்டாவது காரணமாகும். மூன்றாவது காரணம், விரைந்து வளரும் முன்னேற்றத்திற்கான வினைச் செயலினைச் செயலாக்கத் தக்க தேர்ச்சி பெற்ற வல்லுநர்கள் இல்லாததாகும். நான்காவது காரணம், திட்டமும், அதிலடங்கிய வேலைத் திட்டங்களும் முழுமையாகச் செயலாக்கப்படுவதற்கான அமைப்பும், நடைமுறைகளும் இல்லாததாகும். அடுத்து, ஐந்தாவது காரணம், திட்டம் உருவாக்கப்படலும், அது செயல்படுத்தப்படலும் பெரிதும்ஒரு தலைமையிடத்திலேயே குவிந்திருப்பதாகும்.

ஆகையால், மத்திய மாநில உள்ளாட்சி அதிகார மட்டங்களில் இக்குறைபாடுகளை நீக்க, குறுகியகால, நீண்டகால அடிப்படைகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அரசியல் அதிகாரமுள்ளோர் திட்டத்தை உருவாக்குவதற்கான கொள்கைக் கோட்பாடுகளை வரையறை செய்வதை மட்டும் செய்ய வேண்டும். வேலைத் திட்டங்களை உருவாக்குவதையும், அவற்றை செயல்படுத்துவதையும்,திட்டங்களைச் செயல்படுத்தும் செயலாண்மையாளருக்கே விடுத்தல்வேண்டும். திட்டங்கள் உருவாக்கப்படும் மட்டங்கள் மாற்றியமைக்கப்படுதல், மாவட்டத் திட்டங்களைச் செயல்படுத்துதல், நிர்வாக அமைப்பில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல், திட்டம் செயல்படுத்தப்படுதலை கண்காணித்தல், மதிப்பீடு செய்தல், திட்டத்தில் பொதுமக்கள் பங்கு பெறல், பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளுதல் முதலியன முன்னால் கூறப்பட்ட குறைகளைக் களைவதற்கான மற்ற செயல் முறைகளாகும்.

திட்டம் மாவட்ட நிலையிலிருந்து, ஒரு தொகுதிக்கும்-பகுதிக்குமான மட்டத்திற்கும், பின்னர் மாநில மட்டத்திற்கும், மாநில மட்டத்திலிருந்து தேசிய மட்டத்திற்கும் படிப்படியாக உருவாக்கப்பட வேண்டும். மின்சாரம் மற்றும் இதர சக்தி, தண்ணீர் முதலிய சில அம்சங்களில் மாநில மட்டத்திற்கும் தேசிய மட்டத்திற்கும் இடைப்பட்ட ஒரு நிலை தேவைப்படலாம். இத் துறைகளில் மண்டலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு,அவை மண்டலக் குழுக்களின் மூலம் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கூட்டு முயற்சியால், பண முதலீடும் செயலாக்கமும் பெற வேண்டும். ஒரு மாநிலத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் மத்திய அரசினை சார்ந்த வேலைத் திட்டங்கள், மாநில அரசுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படல் வேண்டும். அவ்வாறு செய்தால்தான் மாநிலத் திட்டத்தில் அத் திட்டங்களை மற்ற திட்டங்களுடன் தக்கவாறு ஒருங்கிணைக்க முடியும்.

மாவட்டத் திட்டங்கள், திட்டங்கள் செயல்படுத்தப்படுவதற்கு அடிப்படையாக அமைய வேண்டும். அதனால், செயல்படக்கூடிய ஆண்டுத் திட்டமாக மாவட்டத் திட்டங்கள் இருக்கவேண்டும். இதற்கு, ஓராண்டுக் காலம் செயல்படக்கூடிய மாவட்டத் திட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரம், மாநில அரசின் தகுந்த அனுமதியுடன் மாவட்ட அதிகாரக் குழு ஒன்றிற்கு வழங்கப்படல் வேண்டும். இவ்வதிகாரக் குழு மாவட்ட வளர்ச்சி கழகமாக (District Development Corporation) இருத்தல் வேண்டும். இது ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக் குழுவின் பணிகள் செயலாக்கப் படக்கூடிய திட்டத்தைத் தீட்டுவதும், அத் திட்டம் செயலாக்கப் படுதலைக் கண்காணித்தலையும் உள்ளிட்டதாகும்.

நல்ல வகையில் திட்டம் செயலாக்கப்படுவதற்கு, உடனடியாகச் செய்யப்பட வேண்டிய ஆட்சி முறைக்கான சீர்திருத்தங்கள் பரிந்துரை செய்யப்படுகின்றன. அவையாவன:

(அ) சுதந்திரமாகவும், நுட்பமான வகையிலும் திட்டத்தில் ஏற்படக்கூடிய பிரச்னைகளை ஆய்வு செய்து அவற்றில் தீர்வுகாணுதல், நுட்பமான பரிந்துரைகளை செய்யக்கூடிய தொழில் நுட்ப வல்லுநர்களைத் தெரிந்தெடுத்தல், திட்டத்தின் ஒவ்வொரு பணிக்கும் மிகவும் தகுதியானவர்களை அறிந்து அவர்களை அப்பணிகளில் அமர்த்தல்;

(ஆ) திட்டம் செயலாக்கப்படுதலில் அரசின் சம்பந்தப்பட்ட செயல் துறையும், சம்பந்தப்பட்ட துறைகளின் தலைவர்களும் ஒருங்கிணைந்து ஒருமித்த பகுதியினராகச் செயலாற்றல் ;

(இ) மாநிலத்தின் பயிர்த் தொழில் மற்றும் தட்பவெட்ப நிலைகளுக்கு ஏற்றவாறு மாநிலத்தின் வரவு-செலவுத் திட்டம் செயலாக்கப்படும் முறையினையும் ஆட்சியின் சுழல் முறையினையும் தக்கவாறும், ஒன்றுக்கு ஒன்று பொருந்துமாறும், அமைக்க வேண்டும். முக்கியமாக இங்கு செய்யப்படவேண்டிய ஒன்று, மாவட்ட அதிகாரிகளுக்கு அவர்கள் சம்பந்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகளையும், ஒப்பளிப்புக்களையும் வெகு முன்னதாகவே குறித்த நேரத்தில் அறிவித்தலும், ஒப்பளிப்புக் காலம் முடிந்து விட்டது என்ற சித்தாந்தத்தினை மாற்றி ''ஒவ்வொரு மாதத்திற்கான செலாவணிக் கடிதங்கள்'' (Monthly Letters of Credit) முறையினை மேற்கொள்ளுதல் ;

(ஈ) நிதித் துறையானது அன்றாட அலுவல்களுக்கான செலவினங்களின் ஒப்பளிப்புகள் தருதலைத் தவிர்த்தல் வேண்டும். இவ்வாறு, நிதித் துறையின் வேலைப் பளு குறைக்கப்பட்டால், அத்துறை தனது கவனத்தை, பண முதலீடு செய்யப்படவேண்டிய வேலைத் திட்டங்களின் வரிசைக் கிரமங்களை அமைத்தல், ''செயல் நிறைவேற்றத் தணிக்கை'' (Perfomance Audit) மேற்கொள்ளுதல், இவற்றிற்கான செலவு-பயன் (Cost—Benefit), தொடர்பு மற்றும் தீர்மானமான செலவு ஆகியவற்றின் ஆய்வுகள் முதலியவற்றில் செலுத்தி உதவுதல் ;

(உ) முடிவெடுக்கும் வழிமுறைகளைத் துரிதப்படுத்தி தணிக்கை மற்றும் மதிப்பீடு செய்வதற்கான ஒரு முறையினை அமைத்தல் ;

(ஊ) பெரிய தொழில்களுக்கு மத்திய அரசும், நடுத்தர, சிறிய தொழில்களுக்கு மாநில அரசும் தொழில் துவங்குவதற்கான அனுமதி வழங்கும் முறைகளை வெகுவாகக் குறைத்து, கடுமையற்றதாக்குதல்;

(எ) பயிர்த் தொழில் துறையும், ஊராட்சி முன்னேற்றத் துறையும் மாநில, மாவட்ட, வட்ட, கிராம, மட்டங்களில் ஒருங்கிணைந்து செயல்படச் செய்தல் ;

(ஏ) நெடுஞ்சாலைத் துறையினை படிப்படியாக மாற்றி, சீருற அமைத்தல். இதற்கு முதற்படியாக, தனியான சிறு பாசனத் துறை ஒன்றை ஏற்படுத்துதல்;

(ஐ) அரசுத்துறை நிறுவன ஊழியர்களின் எண்ணிக்கையை உயர்த்தி அவற்றினை வலுப்படுத்தல். இ·்தன்றி, அவை திறம்படச் செயல்படுதலை அதிகரிக்கச்செய்து, அவற்றின் லாபத்தைப் பெருக்குவதற்குமான வழிமுறைகளை ஏற்படுத்தல்.

எல்லாப் பணித்திட்டங்களும் செயல்படுகின்ற வேகமும், தரமும் தொடர்ந்து கண்காணிக்கப்படுதல் மிகவும் தேவையானதாகும்.

பொதுமக்கள் பெருவாரியான திட்டத்தின் செயலாக்கத்தில் ஈடுபடுதல் உறுதியாக்கப்பட வேண்டும். முக்கியமாக, பல்கலைக் கழகங்களும் மற்ற ஆராய்ச்சிக் கூடங்களும் இதுவரை கவனிக்கப்படாத சமூக இயல் துறை அம்சங்களில் பங்கேற்க வேண்டும். தன் விருப்பார்வத்தால் இயங்கும் செயலாண்மையாளர்கள் புதுமுறை காணும் பணித் திட்டங்களை மேற்கொள்ளலாம். அரசியல் கட்சிகளிடையே திட்டம் பற்றிய கொள்கைக் கோட்பாடுகளில் ஒற்றுமை இருக்குமேயானால், அவர்களுடைய ஒத்துழைப்பு, திட்டம் செயலாக்கப்படுவதற்கு பெறக் கூடுமா என்ற கேள்வியினை எழச் செய்கின்றது. இதிலும் முக்கியமாக, நிலச் சீர்திருத்தம், வீட்டு மனையற்றோர்க்கு மனை வழங்குதல், முதியோர் கல்வி, கல்வியறிவு பரவச் செய்தல், குடும்பக் கட்டுப்பாடு, வறுமை நிலையில் வாழும் மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்களை வழங்குதல் முதலிய வேலைத் திட்டங்களுக்காவது அவர் தம் ஒத்துழைப்பைப் பெறக் கூடுமா என்பதாகும்.

திட்டத்தைச் செயல்படுத்துவோரின் செயல்திற நிலையினை உயர்வடையச் செய்யத் தகுதியான பயிற்சித் திட்டங்கள், உயர்கல்வி பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. மேலாளரைப் பயிற்றுவிக்கும் நிறுவனம் அமைக்கப்படுவதற்காகத் தரப்பட்டுள்ள திட்டம் இத்தருணத்தில் மிகப் பொருத்தமான ஒன்றாகும்.

அத்தியாவசியம்.—பல பிரிவுகளின் ஆராய்ச்சியில் ஓரளவுமுன்னேற்றம் இருந்த போதிலும், மாநில மேம்பாட்டில் ஆராய்ச்சி-வளர்ச்சி உயிர்நாடியாக உள்ளதை அரசு, தனியார்துறை அல்லது மக்கள் ஆகிய எந்த மட்டத்திலும் எவரும் சரியாக உணரவில்லை. ஆய்வகங்களில் வேளாண்மை ஆராய்ச்சிக்கும், செய்முறை விளக்க நிலையங்கள்,பண்ணைகள் அவற்றின் செயல்முறைகள் ஆகியவற்றிற்கு இடையேயும், தேசிய ஆய்வுக் கூடங்கள், பொறியியல் நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள ஆராய்ச்சி-வளர்ச்சிக்கும், பொருத்தமான தொழிற் பிரிவுகளில் அதன் பயனுக்கு இடையேயான அடிப்படைத் தொடர்புகள் மிகத் தொய்ந்த நிலையில் வலுக் குறைந்து காணப்படுகின்றன ; சில வேளைகளில் அவற்றிற்கு இடையே தொடர் பேதும் இல்லாமலும் உள்ளது. ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டங்கள் ஏற்படுத்து வதற்கு முன்பு பொருளாதார ரீதியில் மதிப்பிடப்படும் முறை ஏதுமில்லை ; அதாவது அவை ஏற்பளிக்கப்படும் முன்பு செலவு-பயன் அடிப்படை யில் பகுப்பாய்வு செய்யப்படுவதில்லை. அவை நிறைவேற்றப்படும்போது செலவு-பயன் குறித்து ஆய்வு செய்யப்படுவதில்லை. இறுதியில் அடைந்த விளைவு கள் குறித்து மதிப்பீடு செய்யப்படுவதில்லை. ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சியின் முடிவைப் பயன்படுத்துவோர் ஆகியோரிடையே விவரத் தொடர்பு முறை எதுவு மில்லை. பல்வேறு துறைகளின் அறிவியல் ஆராய்ச்சியாளர்களுக்கு இடையேயும் செயல்பாடு மிகக் குறைவாக உள்ளது. கிராமப்புற ஏழை மக்களின் பெரும் தேவைகளான மோட்டா ரகத் துணி, உணவு எண்ணெய்கள், வீட்டு வசதிச் சாதனங்கள் ஆகியவற்றை நிறைவு செய்யும் வகையில் ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்களை மேம்படுத்தும் முயற்சியேதும் எடுக்கப்படவில்லை. எனவே பயன் நிறைந்த வாழ்க்கைக்கு இம் மாநிலத்தில் ஆராய்ச்சி—வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்து வளர்ப்பதற்குத் தகுந்த கொள்கை ஒன்றை வகுப்பது அவசிய மாகிறது.

ஆராய்ச்சி-வளர்ச்சிக் கொள்கை.—மாநில ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டங் கள், தேசியத் திட்டங்கள் ஆகியவற்றிற்கு இடையேயான இணைப்பு கீழ்க் காணும் மூன்று வழிகளில் ஏற்படுத்தப்பட வேண்டும்:

(1) நிதியாக்கம் செய்வதில், மொத்த தேசிய வருமானத்தில் ஒரு சத வீதத்தைத் திரட்டிப் பங்கீடு செய்யும் தேசியத் தீர்மானத்தைச் சார்ந்திருப்பது உகந்ததாகும். நிதி வசதிகளின் பெரும்பகுதியை மத்திய அரசு திரட்டி, மாநில அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்குக் கிடைக்குமாறு செய்யவேண்டும்.

(2) அந்நியத் தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்வது குறித்த கொள்கை மத்திய அரசின் அளவில் அமைய வேண்டும்.

(3) மாநில ஆராய்ச்சி—வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்பது, மேலும் எங்கெங்கு பொருந்துமோ அங்கெல்லாம் தேசியத் திட்டத்தோடு மாநிலத் திட்டத்தை ஒன்றுக இணைப்பது மத்திய அரசின் பொறுப்பாகும்.

மாநில ஆராய்ச்சி-வளர்ச்சித் துறையானது பின்வரும் ஏழு கொள்கைகளின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டுள்ளது :

(1) மாநிலத்தில் ஆராய்ச்சி-வளர்ச்சிப் பிரிவு, முதியோர் கல்வி, பயிற்சித் திட்டங்கள், செய்முறை விளக்கப் பண்ணைகள், முன்னோடித் திட்டங்கள் ஆகிய வற்றைக் கொண்டு அதன் அறிவியல்-தொழில் நுட்ப இயல் உள்ளமைப்பின் வெளி வளர்ச்சியாக இருக்கவேண்டும்.

(2) ஆராய்ச்சி—வளர்ச்சித் திட்டங்கள் வணிக முறையில் ஏற்புடையனவா என்பதையும், குறைந்த அளவாவது வருவாய் ஈட்டக்கூடியனவா என்பதையும் உறுதிப் படுத்திக் கொள்ளும் பொருட்டு அவை ஏற்பளிக்கப்படுவதற்கு முன்பும், நிறைவேற்றப்படும் போதும் அல்லது இரண்டின் போதும் செலவு—பயன் சோதனை களுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

(3) அத்தகைய ஏற்புடைமையும், வருவாயும், ஒவ்வொரு திட்டமும் ஆராய்ச்சி—வளர்ச்சியின் இறுதியான குறிக்கோளை அடைய உதவுமா, அதாவது தொலைநோக்குத் திட்டத்தின் ஏழு குறிக்கோள்களையும் நிறைவேற்றுமா என்ற அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும்.

(4) கருதப்பட்டுள்ள அறிவியல் தொழில் நுட்பவியல் திட்டங்கள் பல்வேறு துறைகளையும் சார்ந்திருக்க வேண்டும். இந்த ஆராய்ச்சி—வளர்ச்சித் திட்டங்கள் பிரச்னைகளின்பாற்பட்டனவாகவே இருக்க வேண்டும். அதனால் இம்மாநிலத்தின் உண்மையான தொழில், வேளாண்மை வளர்ச்சித் தேவைகளை நிறைவு செய்ய முடியும்.

(5) நமது கல்லூரிகளில் ஆராய்ச்சி-வளர்ச்சிக்கும், தேசிய ஆய்வுக்கூடங்கள் தொழில்களில் உள்ள ஆராய்ச்சி—வளர்ச்சிக்கும் நெருக்கமான இணைப்பு இல்லாத தால்,நமது அறிவியல்-தொழில் நுட்பவியல் நடவடிக்கைகள் குறைந்துள்ளன. (அதாவது நமது அறிவியல், தொழில் நுட்பவியல், வளங்கொழிக்கும் நாடுகளின் ஆராய்ச்சி-வளர்ச்சியின் மறு உருவாகவே இருப்பதனால் நமது தொழிற்சாலைகள் அவற்றை வாங்குவதை விரும்புகின்றன. இந்த மாற்று நடைமுறையினால் விரை வாகவும், உறுதியாகவும் ஆராய்ச்சியின் பயனைப் பெற முடிகிறது.) எனவே ஆராய்ச்சி—வளர்ச்சித் திட்டங்கள் யாவும் அவற்றின் பொருத்தமான தொழில் நிறுவனங்களோடு அமைப்பான தொடர்பு பெற்றிருக்க வேண்டும் என்றும், புதிய ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டங்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட தொழில் துறையின் பகுதியாக அங்கேயே அமைந்திருப்பவைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது.

(6) இம் மாநிலத்தின் ஆராய்ச்சி—வளர்ச்சித் திட்டம், முன்னுரிமை முறைமை ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதாவது (அ) ஏழ்மையையும், சமூக ஏற்றத்தாழ்வையும் போக்குவதில் நேரடியாகப் பங்கேற்கும் திட்டங்கள், (ஆ) இம்மாநிலத்தில் தற்போதுள்ள வேளாண்மைத் தொழில் நுட்பவியல், தொழில் தொகுதிகள் ஆகியவற்றிற்கு ஆதரவு தந்து மேம்படுத்தும் திட்டங்கள், (இ) இம் மாநிலத்தில் ஏற்கெனவே உள்ள அறிவியல்—தொழில் நுட்பவியல் உள்ளமைப்புகளுக்கான திட்டங்கள்.

(7) ஆராய்ச்சி—வளர்ச்சித் திட்டம் துறை அளவிலும், பெரும் மொத்தத் திலும் ஆராய்ச்சித் திட்டங்களை வகுப்பது, நிறைவேற்றுவது, மேற்பார்வை இடுவது,மதிப்பீடு செய்வது ஆகியவற்றிற்கான அமைப்புகளை ஏற்படுத்தவேண்டும். அதனால் இம்மாநிலத்தின் ஆராய்ச்சி—வளர்ச்சிக்கான முயற்சி ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளவையும், நிச்சயமானவையுமான இக் கொள்கைகளைப் பின்பற்றும்.

அமைப்பு.—தொலைநோக்குத்திட்டம் மாநில அளவில் இரண்டு மட்டங்களிலான அமைப்புகளுக்கு வகை செய்கிறது. அவையாவன : கொள்கையை நிர்ணயிக்கும் அமைப்பாக முதல் அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழுள்ள தமிழ்நாடு அறிவியல் அமைப்பு (Tamil Nadu Science Foundation) ஒன்றும், வேளாண்மை, காடு பேணல், மீனளம், கால்நடை வளர்ப்பு, அறிவியல், மின் சக்தி, குடிநீர், தொழில், மருந்து, கல்வி, பயிற்சி, வீட்டு வசதி ஆகியவற்றிற் கான துறை வாரியான ஆராய்ச்சி மன்றங்களும் ஆகும். துறை வாரியான ஆராய்ச்சி மன்றம் ஒவ்வொன்றும் சம்பந்தப்பட்ட அமைச்சரைத் தலைவராகக் கொண்டும், அந்தத் துறையிலுள்ள முதல் நிலை விஞ்ஞானியை துணைத் தலைவராக வும் பெற்றிருக்கும். அதன் செயலகம் அறிவியல் நிறுவனங்கள் அல்லது அரசாங் கத் துறைகள் ஒன்றில் அமைந்திருக்கும்.

திட்டங்கள்.—தொலைநோக்குத் திட்டத்தில் கருதப்பட்டுள்ள 106 ஆராய்ச்சி—வளர்ச்சித் திட்டங்கள் பின்வரும் தலைப்புகளின்கீழ் தொகுக்கப்பட்டுள்ளன:

(1) வேளாண்மையும் துணை நடவடிக்கைகளும்;

(2) வன ஆராய்ச்சி ;

(3) கால்நடை வளர்ப்பு ;

(4) மீனளம்;

(5) நீர்ப்பாசனம் ;

(6) கனிப் பொருள்கள் ;

(7) தொழில் ;

(8) சாலைகள்—சாலைப் போக்குவரத்து ;

(9) எரி பொருள்—மின்சக்தி ;

(10) வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சி ;

(11) ஆரோக்கியம்—குடும்ப நலத் திட்டம் ,

(12) குடிநீர் வழங்குதல் ;

(13) ஊட்டச் சத்து;

(14) கல்வி ;

(15) நிர்வாகம்;

(16) முக்கியக் குறியிலக்குகள்.

மனிதச் சக்தி பற்றிய தொலை நோக்குகள்.—மாநிலத்திலுள்ள பொறியியல், அறிவியல் மனிதச் சக்தியைத் திறமையாகவும், ஆக்க பூர்வமாகவும் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்த ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டம் திட்டமிடுகிறது.

நமது விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுநர்களின் கண்டுபிடிப்புத் திறனை உயர்த்தும் வகையில், நமது பொருளாதார, சமூகத் தேவைகளுக்கு ஏற்ப நம்முடைய ஆராய்ச்சி, கல்வி நிலையங்களின் தரத்தை உயர்த்த தொலை நோக்குத் திட்டம் திட்டமிடுகிறது.

அறிவியல்—தொழில்நுட்பப் பயிற்சியும், ஆராய்ச்சியும்.—இவற்றின் கீழ் பின்வருவனவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளது :

(1) இம் மாநிலத்திலுள்ள 12 பொறியியல் கல்லூரிகளில் மேல்நிலைப் படிப்பு, ஆராய்ச்சி வசதிகளை ஏற்படுத்த சென்னைத் தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் ஒன்றை உருவாக்குதல் ;

(2) கிண்டி பொறியியல் கல்லூரிகளில், கடல் பொறியியல்—அறிவியல் நிலையம், நகர்ப்புற பொறியியல் நிலையம், காவேரி டெல்டாவின் அனலாக் டிஜிடல் (Analog and Digital) கம்பியூட்டர் ஆராய்ச்சிக்கான திட்டம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் ;

(3) சென்னை தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் சாதனங்கள் பரிசோதனைக் கழகத்தையும், மோட்டார் பொறியியல் மையத்தையும் அமைத்தல் ;

(4) சென்னையிலுள்ள இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தில் உயிரியல் மருத்துவப் பொறியியல் நிலையம் ஒன்றைத் தொடங்குதல் ;

(5) வேளாண்மைப் பல்கலைக்கழகத்தோடு கால்நடை அறிவியல் கல்லூரியையும், மீனள அறிவியல் கல்லூரியையும் விரிவுபடுத்தல்.

நிதி.—106 ஆராய்ச்சி—வளர்ச்சித் திட்டங்களுக்காக தொலைநோக்குத் திட்டம் ரூ. 54·07 கோடி நிதி ஒதுக்கீடு செய்யக் கருதியுள்ளது. நிதியாக்க முறை பின்வருமாறு அமைந்துள்ளது :

(1) தனியார் துறையால் 10 சதவீதம்—குறிப்பாக தொழில் ஆராய்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் ;

(2) சில திட்டப்பணிகளில் 10 சதவீதம்—சுய நிதியாக்கத்தால் ;

(3) மாநில அரசால் 20 சதவீதம் ;

(4) அந்நிய உதவி உள்பட மத்திய அரசின் பங்கு 60 சதவீதம்.

வேளாண்மை, மீனளம், குடிநீர் வழங்கல் ஆகிய தொடர்பான திட்டங்களுக்கு உலக வங்கி, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் (UNDP), ஐக்கிய நாடுகள் நாட்டிடை குழந்தைகளின் அவசர நிதி (UNICEF) ஆகியவற்றிலிருந்து நிதியுதவி பெறுவதற்கு கலந்து உரையாடுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

புள்ளியியல்

திட்டம் தீட்டுவதற்கும், நிறைவேற்றுவதற்கும் போதுமான அளவில் நம்பத் தகுந்த புள்ளி விவரங்கள் தேவைப்படுவதன் அவசியம் அண்மை ஆண்டுகளில் வெகுவாக உணரப்பட்டுள்ளது. அனுபவத்தின் அடிப்படையில் பின்வரும் பிரிவுகளில் போதுமான புள்ளிவிவரத் தகவல் இல்லாதது கவனிக்கப்பட்டுள்ளது:

1. வேளாண்மைப் புள்ளியியல்;
2. தொழில் புள்ளியியல்;
3. வீட்டுவசதிப் புள்ளியியல்;
4. மாநில வருமான மதிப்பீடு;
5. நில வளங்களைப் பயன்படுத்தல்;
6. மனித வளங்களைப் பயன்படுத்தல்;
7. மூலதன வசதிகளைப் பயன்படுத்தல்;
8. சேமிப்பும் மூலதன அமைப்பும்.

இந்த இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான திட்டப் பணிகள் குறித்து கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தொலைநோக்குத் திட்டக் காலத்தில் பின்வரும் சிறப்பு ஆய்வுகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது:

(அ) இம்மாநிலத்தின் வரிவிதிப்புத் திறனை மதிப்பிடுவதற்கான ஆய்வு;

(ஆ) கிராம, நகர்ப் புறங்களில் ஏழ்மை வரம்பிற்குக் கீழே வாழும் மக்கள் தொகை பற்றிய மதிப்பீடு ;

(இ) இம்மாநிலத்தில் வருமானம்-சொத்துடைமைப் பகிர்வு முறை ;

(ஈ) தொலைநோக்குத் திட்டத்திலுள்ள வளர்ச்சித் திட்டங்களின் செயல்படு திறம் பற்றி மதிப்பிடுவதற்கான புள்ளி விவரங்கள்;

(உ) உள்ளாட்சி மன்றங்களின் நிதி வசதிகள்.

இந்த ஆய்வுகளைத் தவிர, தொலைநோக்குத் திட்டக் காலத்தில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பின்வரும் புள்ளியியல் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டப்பணிகளுக்கு மத்திய அரசு நிதியுதவி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1. புள்ளிவிவர வங்கி ஒன்று அமைத்தல் ;
2. பொருளாதாரக் கணக்கெடுப்பும் அளவீடுகளும் ;
3. அங்காடித் தகவல் முன்னேற்றம் ;
4. அதிக விளைச்சலைத் தரும் பயிர் வகைகளின் மாதிரி ஆய்வுகள்;
5. தமிழ் நாட்டில் தென்னை சாகுபடிச் செலவு, நுகர்வு முறை குறித்த மதிப்பீட்டு ஆய்வு ;
6. முக்கியப் பயிர்களுக்கான பகுதி உற்பத்தி பற்றி உரிய நேரத்தில் அறிவித்தல் ;
7. பகுதி மற்றும் உற்பத்திப் புள்ளிவிவரங்களை மேற்பார்வையிடும் பணிகளை வலுப்படுத்துவதற்கான திட்டம்.

இத்திட்டங்களை திறம்படச் செயல்படுத்துவதற்காக புள்ளியியல் துறையினை வலுப்படுத்தி, அதனை மாநிலப் புள்ளியியல் அமைப்பாகச் சீரமைப்பது அவசியமாகிறது. வருமானம், சேமிப்புகள், மூலதன அமைப்புப் புள்ளி விவரங்களைத் தொகுக்கும் பணியை மேற்கொள்ளும் பிரிவு, தொடக்க நிலை, இடைநிலை மற்றும்

தொழில் முறையில் உள்ள பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கும் பிரிவு, அரசின் பல்வேறு துறைகளின் புள்ளியியல் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் நெறிமுறைப் படுத்தவும், மாநில ஒருங்கிணைக்கும் பிரிவு ஆகியவற்றை தனித்தனியாக அமைப்பதும் இதில் அடங்கும். மேலும், இம்மாநிலத்தின் மாவட்டங்கள், வட்டங்களில் செயல்படும் புள்ளியியல் பிரிவுகள் படிப்படியாக திட்டப்பணியின் மூலம் வலுப்படுத்தப்படும். புள்ளி விவரங்களை நவீன வழிகளில் தொகுத்து பகுப்பாய்வு செய்கின்ற துறையில் பணியை நீட்டிப்பதற்காக தற்போதுள்ள ஆராய்ச்சி–பயிற்சி உட்குழு, புள்ளியியல், அளவியல் பொருளாதாரம் (Quantitative Economics) ஆகியவற்றில் தகுதி வாய்ந்தவர்களைத் தெரிந்தெடுத்து பணிக்குச் சேர்த்துக் கொள்வதனால் குறிப்பிடத் தகுந்த முறையில் வலுப்படுத்தப்பட உள்ளது.

திட்டப்பணிகளும் நிதி ஒதுக்கீடுகளும்—ஐந்தாவது திட்டம்

(ரூ. லட்சத்தில்)

திட்டப்பணி	நிதி ஒதுக்கீடு
(0)	(1)
அ. மாநிலத் துறை	
1. தொழில் உற்பத்தி பற்றிய மாநிலக் குறியீட்டுக்கான திட்டம்	3·00
2. பயிர்ச் சாகுபடி முறைமை, நிலப் பகிர்வு குறித்த கணக்கெடுப்பு	35·00
3. பிறப்பு–நோய் முதலிய சமுதாய நிலை புள்ளிவிவர ஆய்வுத் திட்டங்கள்—மனித வளம்	6·00
4. உள் நாட்டில் உழைக்கும் திறமுடையோர் குறித்த காலாண்டு மாதிரிக் கணக்கெடுப்பு	35·00
5. கட்டட நிர்மாண நடவடிக்கை தொடர்பான புள்ளி விவரங்களைச் சேகரித்தல்	8·00
6. மாநில வருமானப் புள்ளி விவரப்பணியின் தரம் உயர்த்தி, மேலும் பல விவரங்களை அதன் கீழ்க் கொண்டு வருதல்	10·00
7. சிறப்புப் புலனாய்வுகள்	12·00
8. பல்வேறு நிலைகளில் (பயிற்சி–ஆராய்ச்சி முதலியவற்றில்) புள்ளியியல் விவர அமைப்பினை வலுப்படுத்துவதற்கான திட்டம்	200·00
மொத்தம்—மாநிலத் துறை	309·00
ஆ. மத்திய அரசுத் துறை	
1. புள்ளி விவர வங்கி ஏற்படுத்துதல்	74·31
2. கணக்கெடுப்பும் அளவீடுகளும்	64 84
3. அங்காடித் தகவல் முன்னேற்றம்	36·62
4. அதிக விளைச்சலைத் தரும் பயிர்வகைகளின் மாதிரி ஆய்வுகள்	36·14
5. தென்னை சாகுபடிச் செலவு, நுகர்வு முறையை மதிப்பிடுதல்	5·16
6. முக்கியப் பயிறுகளுக்கான பகுதி உற்பத்தி பற்றி உரிய நேரத்தில் அறிவித்தல்	15·00
7. பகுதி மற்றும் உற்பத்திப் புள்ளி விவரங்களை மேற்பார்வையிடும் பணி	10·00
மொத்தம்—மத்திய அரசுத் துறை	242·07

மேலே கூறப்பட்ட திட்டப்பணிகளில் சில, பல பொருள்களை விரிவாக உள்ளடக்குவதுடன் தொலைநோக்குத் திட்டக் காலத்தின் பிந்திய ஐந்தாண்டுகளுக்கும் நீட்டிக்கப்பட வேண்டியுள்ளது. பொருளாதார வளர்ச்சி முறையினாலும், சிறப்பாக ஆய்வு செய்யப்படவேண்டிய வகையில் எழும் புதிய பிரச்னைகளினாலும் புதிய திட்டப்பணிகளையும் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும். எனவே, (1974–84) பத்தாண்டுக் காலத்திற்கு மாநிலத் துறையில் மொத்தம் நிதி ஒதுக்கீடு ரூ. 8 கோடியென நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

VII. நிதி

திட்டத்திற்கான நிதி வசதிகள்

தொலைநோக்குத் திட்டம், முதல் ஐந்தாண்டுகளுக்கு மாநிலத் துறையில் ரூ. 1,365 கோடியும், இறுதி ஐந்தாண்டுக் காலத்திற்கு ரூ. 2,734 கோடியும் ஒதுக்கீடுகளாக நிர்ணயிக்கிறது. எனவே இந்த அளவுக்கு நிதிகளைத் திரட்டுவது, இரண்டு ஐந்தாண்டுத் திட்டக்காலங்களிலும் வழி முறைகளைத் தெரிந்து நிதி வசதிகளைப் பெறுவதில் அடங்கியுள்ளது. நான்காவது திட்டத்தில் மாநிலத் துறைக்கான மத்திய அரசின் உதவி மொத்தச் செலவீட்டில் 35·7 சதவீதமாகவும், முந்திய ஐந்தாண்டுகளில் 48·7 சதவீதமாகவும் இருந்தது. திரட்டப்பட்ட புதிய நிதி வசதி 28·8 சதவீதமாகவும் அதற்கு முந்திய காலத்தில் 10·8 சதவீதமாகவும் அதிகரித்தது. மாநில அரசும், பொது நிறுவனங்களும் வெளி அங்காடியிலிருந்து பெற்ற கடன்கள் நான்காவது திட்டத்தில் 30·8 சதவீதமாக உயர்ந்தன; அதற்கு முந்திய காலத்தில் அது 18·8 சதவீதமாக இருந்தது.

தொலைநோக்குத் திட்டத்திற்கான நிதிவாயில்கள்

(1) நடப்பு வருவாயின் எஞ்சிய இருப்பு.—கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில், தொலைநோக்குத் திட்டக் காலத்தில் கிடைக்கும் நிதிவாயில்களை 'இல்லை' எனவே கொள்ளப்பட்டிருக்கிறது. சமீப மதிப்பீட்டின்படி, நான்காவது திட்ட நடப்பு வருவாயின் எஞ்சிய இருப்பு ரூ. (—) 52 கோடி.

(2) மாநில அரசின் அங்காடிக் கடன்கள்.—நான்காவது திட்டத்தில் மாநில அரசு ரூ. 67·00 கோடி என்ற அளவுக்குக் கடன்கள் திரட்ட அனுமதிக்கப்பட்டது. மாநில அரசால் செப்டம்பர் 1973 வரை ரூ. 60 கோடி அங்காடிக் கடன்கள் பெறப்பட்டன. ஐந்தாவது திட்டத்தில் மாநில அரசு ரூ. 150 கோடி என்ற அளவுக்குக் கடன்கள் திரட்ட அனுமதிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆறுவது திட்டத்திற்கான இது போன்ற மதிப்பீடு ரூ. 375 கோடியாகும். மத்திய அரசு பெறும் அங்காடிக் கடன், மத்திய-மாநில அரசுகள் பெறும் மொத்த அங்காடிக் கடனில் நான்கில் மூன்று பங்காக இருக்கிறது. மாநில அரசுகளுக்கு மத்திய அரசு கடனுதவி செய்வதற்கான நிதிவாயில்களாக உள்நாட்டு அங்காடிக் கடன்கள் உள்ளன. இவ்வகையில் மத்திய அரசு நிதிகளைத் திரட்டி மாநிலங்களுக்கு அதன் வரையறைகள், நிபந்தனைகளுடன் கடனாகக் கொடுத்து இடைநிலைப் பணிகளை ஆற்றுகிறது. வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு சரியாகவும், விரைவாகவும் நிறைவேற்ற மாநில அரசுகள் உள்நாட்டுக் கடனைப் பெறக் கருதுவது தேவையானதே. எனவே, இவ்வழியில் மாநில அரசுகளின் மீதான கட்டுப்பாடுகளைக் களைய வேண்டும்.

(3) சிறுசேமிப்பு.—கடந்தகால திரட்டு நிலைகளின் அடிப்படையில், சிறு சேமிப்பில் தமிழ்நாடு பெறும் பங்கு, ஐந்தாவது திட்டத்தில் ரூ. 100 கோடியாகவும், ஆறுவது திட்டத்தில் ரூ. 260 கோடியாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது; இது நான்காவது திட்டத்தில் ரூ. 38 கோடியாக இருந்தது. மத்திய அரசின் சிறு சேமிப்புத் திரட்டுகள், நாட்டின் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது தென் மாநிலங்களில் குறைவாக உள்ளன. மாநில அரசு மற்றும் அதன் தனி அமைப்புகள் பூரண ஒத்துழைப்பை மத்திய அரசுக்கு அளிப்பதால் கிராம, நடுத்தர நகர்ப்புறங்களில் சேமிப்பை உயர் வீதங்களில் பெறலாம். இதற்கான ஏற்பாடுகளை நிறுவன மயமாக்குவது முக்கியமாகும். மாநிலத்தில் திரட்டப்படும் சிறு சேமிப்பில் மூன்றில் இரு பங்கு மட்டுமே கடன்கள் வடிவத்தில் மாநிலத்திற்குத் தரப்படுகிறது. இச் சேமிப்புகளின் மூலம் கிடைக்கும் வருவாயின் பெரும் பகுதி நடுத்தர-குறைந்த வருமானப் பிரிவினருக்கு உரியதாக இருப்பதால், இச்சேமிப்புகளின் நன்மையை நேரடியாக இவ்வித மக்களுக்குக் கிடைக்குமாறு செய்வதே சரியானதாகும். நேரடி உட்பயனை விளைவிக்கும் திட்டங்களிலும், திட்டப் பணிகளிலும் பொறுப்புக் கொண்ட மாநில அரசுகளுக்கு சிறு சேமிப்பின் வருவாய் அனைத்தும் சேருமாறு செய்யக் கருதப்பட்டுள்ளது.

(4) ஆயுள் ஈட்டுறுதி முதலீட்டு நிதிகள்.—தொலைநோக்குத் திட்டத்தில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து விரிவான உதவி எதிர் பார்க்கப்படுகிறது. இவ்வழியின் மூலம் மாநில அரசுக்குக் கிடைக்கும் கடன்கள் ஐந்தாவது திட்டத்தில் ரூ. 50 கோடியாகவும், ஆறுவது திட்டத்தில் ரூ. 100 கோடியாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது ; இவ்வகையில் நான்காவது திட்டத்தில் பெறப்பட்ட கடன்கள் ரூ. 8 கோடியாகும். மாநில அரசு நிறுவனங்களுக்கான கடன்கள் ஐந்தாவது, ஆறுவது திட்டங்களில் முறையே ரூ. 50 கோடி, ரூ. 80 கோடியளவில் இருக்குமென எதிர்நோக்கப்படுகிறது; இவற்றிற்காக நான்காவது திட்டத்தில் அளிக்கப் பெற்ற கடன்கள் ரூ. 30 கோடியாகும். ஆயுள் ஈட்டுறுதியை விரிவாகப் பரப்பவும், முதலீட்டு நிதிகளின் பெருக்கத்தைப் பெறவும் வாய்ப்பிருப்பதால் மாநிலத்திட்டங்களுக்கான நிதிவாயில் களைப் பெற பெருமளவுக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தைச் சார்ந்திருத்தல் முக்கி யத்துவம் பெறுகிறது. தற்போதைய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் செயற் பாடுகளின் பெரும்பகுதி நடுத்தர-குறைந்த வருமானக் குடும்பங்களைச் சென்றடை வதில்லை என்பது அறியப்படுகிறது. இதுபோன்றே கிராமச் செல்வந்தர்களுக்கும் இவ்வசதிகள் கிடைக்கப் பெறுவதாகத் தெரியவில்லை. கிராமப் புறங்களில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது, முக்கியமாகச் சமூக நோக்கத்தை நிறைவு செய்வதோடு புதிய நிதி வசதிகளைத் திரட்டுவதற்கான ஒரு சிறந்த வழியாகவும் அமையும்.

(5) மாநில அரசின் தன்னாட்சி நிறுவனங்கள் பெறும் கடன்.—நான்காவது திட்டத்திலான ரூ. 51 கோடியோடு ஒப்பிடும்போது, மாநில அரசு நிறுவனங்கள் பெறும் அங்காடிக் கடன் ஐந்தாவது திட்டத்தில் ரூ. 200 கோடி யாகவும், ஆறுவது திட்டத்தில் ரூ. 500 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. வணிக வங்கிகள் மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றிடமிருந்து பெறும் நேரடிக் கடன்கள் ஐந்தாவது, ஆறுவது திட்டங்களில் முறையே ரூ. 100 கோடியாகவும், ரூ. 200 கோடியாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மாநில அரசின் நிலையைப் போன்றே, மாநில அரசின் தன்னாட்சி நிறுவனங்களும் தொலைநோக்குத் திட்டத்தில் அவற்றின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியாக்கம் செய்ய அதிகளவு கடன் பெறுதலையே சார்ந்திருக்கவேண்டும். தனியார் துறை வணிகத்திற்கான கடனளிப்பின் வரையறைகள், நிபந்தனைகள் அடிப்படையிலேயே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தன்னாட்சி நிறுவனங்களின் முதலீட்டுத் திட் டங்களுக்கு உதவுமென எதிர்நோக்கப்படுகிறது. பொதுத்துறை முதலீட்டிற்கு நிதியாக்கம் செய்வதில் நிதியுதவி நிறுவனங்களும், வணிக வங்கிகளும் மிக முக்கிய நிலையைக் கொண்டிருக்கின்றன. பொதுத்துறை முதலீடு நிதியுதவி நிறுவனங் களால் செய்யப்படுகிறது. நிதியுதவி நிறுவனங்கள் நிதியை இல்லத் துறையின் சேமிப்பினின்றும் பெறுகின்றன. எனவே இவ்வகைச் சேமிப்பு வணிக வங்கிகளை அடையுமாறு செய்ய வேண்டும். திட்டத்தைப் பரவலாக்குவதில் முக்கியத்து வத்தைக் கருதும்போது, மாநிலத் திட்டங்களின் பொதுத்துறை நிதியாக்கத்திற் கான நிதிவாயில்களை மாவட்ட அளவில் திரட்டுவதில் வணிக வங்கிகள் முக்கிய பங்கை ஏற்க இயலும்.

சமீப ஆண்டுகளில் சிறப்பான எண்ணிக்கையில் கிராம, நடுத்தர நகர்ப் புறங்களில் வங்கிக் கிளைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பினும், தமிழ் நாட்டில் வைப்பு நிதிகளின் அளவு குறைந்தளவுக்கே கூடியுள்ளது. கிராமப்புறங்களின் தனிப்பட்ட லேவாதேவிக்காரர்கள், சீட்டு நிதிகள், நிதி அமைப்புகள் போன்றவை இருக்கின்றமையே இதற்கான முக்கியக் காரணமாகும். மாநிலத்தில் வங்கிக் கொள்கைகளோடு மாநில அரசு தீவிர தொடர்பைக் கொண்டிருந்தால், வணிக வங்கிகளிடமிருந்து உயர்ந்தளவில் நிதிகளைப் பெறுவது சாத்தியமாக இருக்கும். இவ்வகையில் மாநில நிதித் துறையில் வங்கிப் பிரிவை ஏற்படுத்துவது கருதப்பட லாம். வங்கி முறை மூலம் தற்போதிருக்கும் பிற கடனளிப்பு அமைப்புக்களை விரைவாக எடுத்துக் கொள்வதற்கான கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

(6) நிதி வசதிகளைத் திரட்டுவதற்கான புதிய முகவரமைப்புகள்.—இத்தீர்வுகளைத் தவிர, பின்வரும் நிறுவன மாற்றங்கள் சேமிப்புத் திரட்டை ஊக்குவிப்பதோடு, மாநிலத்திற்குள்ளாக முதலீடு செய்ய இச்சேமிப்பைப் பயன்படுத்திக் கொள்ளவும் உதவும்.

(அ) ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் வட்டார வாரியங்களை அமைப்பது.—ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் வட்டார வாரியத்தை அமைப்பது கருதத் தக்கதாகும். வட்டார வாரியம் மாநிலத்தின் குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள

கடன்பெறும் பலபிரிவு மக்களின் தேவைகளை மதிப்பிட்டு, தமிழ் நாட்டில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தால் திரட்டப்படும் நிதி வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வழி கோலும். துவக்கத்தில் வட்டாரப் பிரிவு ரூ. 1 கோடி வரையான நிதியுதவி செய்வது குறித்த முடிவுகளை எடுக்கலாமெனக் கருதப்படுகிறது.

(ஆ) மாநில முதலீட்டு டிரஸ்டை ஏற்படுத்துவது.—நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் யூனிட் டிரஸ்டுகளை அதிக எண்ணிக்கையில் அமைப்பது இவ்வகை முதலீட்டைச் செல்வாக்கு பெறச் செய்யும். வட்டார ரீதியாக நிதிகளைப் பகிர்ந்தளிக்கவும் கருத்துரைக்கப்படுகிறது.

(இ) தேசிய வளர்ச்சி வங்கி.—வணிக முறையில் ஏற்புடைய பெருந் திட்டங்களுக்கு நிதி உதவி செய்ய புனரமைப்பு—வளர்ச்சிப் பணிகளுக்கான உலக வங்கியைப் போன்று (I.B.R.D.) தேசிய வளர்ச்சி வங்கியொன்று அமைப்பது பற்றி கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஈ) மாவட்ட வளர்ச்சிக் கழகங்கள்.—மாநில அரசால் சமீபத்தில் கருதப்பட்டுள்ள மாவட்ட வளர்ச்சிக் கழகங்கள், மாவட்ட அளவில் பொருளா தாரத்தை மேம்படுத்துவதற்கான மற்றொரு பயனுள்ள முகவரமைப்பாக அமைந்து, சேமிப்புக்களைத் திரட்டி, முதலீடு செய்ய உதவும்.

(உ) சமூகக் காப்பீட்டுத் திட்டம்.—சேமிப்புகளைத் திரட்டுவதற்கான தனியான முகவரமைப்புகளின் வகையில் சமூகக் காப்பீட்டுத் திட்டமும் அடங்கும். இது பற்றி 1974-75 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சமூக நலத் தீர்வை அதன் சிறப்பாகக் கொண்டிருப்பதோடு கிராம-நகர்ப்புறங்களின் குறைந்த வருமானத்தைப் பெறும் எண்ணற்ற மக்கள் சேமிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளவும் நேரடியாக உதவுகிறது.

வளவாயில்கள் குறித்த ஒட்டுமொத்தமான மதிப்பீடுகள்.—ஐந்தாவது திட்டத்தில் ரூ. 1,365 கோடியும், ஆறாவது திட்டத்தில் ரூ. 2,734 கோடியும் செலவீட்டிற்கான குறியிலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளபோது, மேற்குறிப்பிட்ட தலைப்புகளின் கீழும், மாநில மின்சார வாரியம், மாநில வருங்கால வைப்பு நிதி, மாநில அரசு ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெறும் ஒப்பந்தக் கடன்கள், இந்திய ரிசர்வ் வங்கி போன்ற நிதி வாயில்களின் மூலமும் கிடைக்கக்கூடிய நிதிவசதிகளின் அளவு ஐந்தாவது திட்டத்தில் ரூ. 740 கோடியாகவும், ஆறாவது திட்டத்தில் ரூ. 1,604 கோடியாகவும் மட்டுமே இருக்கு மாதலால், இரு திட்டங்களிலும் முறையே ரூ. 625 கோடியும், ரூ. 1,130 கோடியு மாக நிதிப்பற்றாக்குறை ஏற்படும். இதைத் தவிர்க்க மத்திய அரசின் உதவியும், புதிய நிதி திரட்டுதலும் அவசியமாகும்.

(அ) மத்திய அரசின் உதவி.—மாநில திட்டச் செலவீட்டில் மத்திய அரசு உதவியின் வீதம் மூன்றாவது திட்டத்தில் 53·8 சதவீதமாக இருந்தது. இது மூன்று ஆண்டுத் திட்டங்களில் 44 சதவீதமாகவும், நான்காவது திட்டத்தில் 35·7 சதவீதமாகவும் குறைந்தது. நான்காவது திட்டக் காலத்தில் எல்லா மாநிலங்களுக்கும் சராசரியாகக் கிடைத்த தனி மனிதருக்கான மத்திய உதவி ரூ. 63 ஆக இருந்தபோது, தமிழ் நாட்டில் ரூ. 50 ஆக மட்டுமே இருந்தது. மத்திய உதவி குறைந்து வருவதற்கான முக்கியக் காரணம், மாநிலங்களின் தனி மனித வருமான அடிப்படையில் உதவியின் அளவு நிர்ணயிக்கப்படுவதாகும். மாநிலத்தில் வரி விதிப்பின் மூலம் திரட்டப்படும் நிதி வசதிகள் அல்லது பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ் நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழாக பெரும்பகுதி மக்கள் வாழ்கின்றனர் என்ற உண்மையும் கருதப்படுவதில்லை. இம்மாநிலத்தில் வேலை வாய்ப்பின்மையின் அளவும், குறிப்பாக படித்தவ ரிடையே வேலைவாய்ப்பின்மை மிக உயர்வாக இருப்பதை உணர்வதும் அவசியம். இதன் காரணமாக மத்திய அரசின் நிதியுதவிக் கொள்கை மாற்றப்பட்டு, உயர் மட்ட வருமானத்தைப்பெறும் மாநிலத்திற்குக் குறைந்த உதவியும், குறைந்த வருமானத்தைப் பெறும் மாநிலங்களுக்கு உயர்ந்தளவில் உதவியும் வழங்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்டவற்றை கருத்திற்கொண்டு பார்த்தால், தொலைநோக்குத் திட்டத்தில் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படும் உதவி குறைவானதாகவே இருக்கும். ஐந்தாவது திட்டத்தில் ரூ. 450 கோடியும், ஆறாவது திட்டத்தில் ரூ. 850 கோடியுமாகக் கருதப்பட்டுள்ள மத்திய உதவி மாநிலத்தின் செலவீட்டில் முறையே 33,31 சதவீதங்களாக மட்டுமே அமையும். இவ்விகிதங்கள் நான் காவது திட்டத்தைக் காட்டிலும் குறைவானவை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஆ) புதிய நிதி திரட்டுதலுக்கான தேவையும் வாய்ப்பும்.— கடந்த காலத்தில் வரி வருவாய்களிலும், திட்டமல்லாத செலவினங்களிலும் இருக்கும் இடைவெளி நிதிக் குழுக்களின் கொடைகளின் மூலம் ஈடுசெய்யப் பட்டது. ஆனால் இது தொடர்ந்து நீடிக்காது என்பது ஆறாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளினின்றும் தெரியவருகிறது. தமிழ் நாட்டிற்கு, கடனைத் திருப்பிக் கொடுப்பதில் சில சலுகைகள் கிடைத்திருப்பினும், வரி வருவாய் வகையில் ஏற்படும் இடைவெளிக்கு எவ்வித உதவியும் கிடைக்காது. எனவே, மாநிலத்திற்குள்ளா கவே புதிய நிதியை அதிகளவுக்குத் திரட்டுவது அவசியமாகிறது.

நிதி திரட்டுதலுக்கான வழிமுறைக் கொள்கைகள்.— மாநிலத்தில் புதிய வரிகளை விதிப்பதற்கும், தற்போதுள்ள வரிகளின் வீதங்களை உயர்த்துவதற்கும் குறைந்தளவே வாய்ப்புள்ளதைக் கருதும்போது, புதிய வழிகளில் நிதி திரட்டுவதற்கான முறைகளைப் பின்பற்ற வேண்டுமென்பது உணரப் படுகிறது. தற்போதுள்ள வரி முறையைச் சீரமைத்தல் அம்முறைகளில் ஒன் றாகும். பின்வரும் நடவடிக்கைகளும் குறிப்பிடப்படுகின்றன:

(1) வருமானவரி நிர்வாகத்தின் பரப்பை விரிவுபடுத்துதல்.— ரூ. 25,000-க்கும் குறைவான வருமானம் பெறும் தனிப் பட்டவர்களைப் பொறுத்தவரை, தற்பொழுது வருமான வரிவிதிப்பு மதிப்பீடும், வசூலிப்பும் திருப்திகரமாக இல்லை. வருமான வரிவிதிப்பிற்குட்பட்டிருக்கின்ற வருமானத்தைப் பெறுபவர்களில் பலரும் விற்பனை வரிகளைச் செலுத்துகின்றமையால், ரூ. 25,000-க்குக் குறைவான வருமானத்தைப் பெறுபவர்களிடமிருந்து இவ்வரிகளை வசூலிப்பதில், விற்பனை வரித்துறையின் நிர்வாக அமைப்புக்கும் வருமான வரி நிர்வாகத்துக்கும் இடையே கூட்டிணைவான பணி முறை தோற்றுவிக்கப்பட்டு இவ்வரியில் திரட்டப்படும் புதிய நிதியின் நன்மை மாநிலத்திற்குக் கிடைக்குமாறு செய்யவேண்டும்.

(2) மறைமுக வரிகளின் நிர்வாகத்தை எளிமைப்படுத்துவது.— விற்பனைவரி முறையை எளிதாக்குவதும், கேளிக்கைவரி, மோட்டார் வாகன வரி போன்ற வரிகள் குறித்த விதிகளை நன்னிலைப்படுத்துவதும், சிறப்பான வசூலிப்பிற்கும், வசூலிப்புச் செலவைக் குறைப்பதற்கும், அதிக வசூலிப்பிற்கும் வகை செய்யும்.

(3) நிதி வாயிலுக்கான நகர்ப்புற நில மேம்பாடு.—அரசு, நகர்ப்புறங்க ளின் வளர்ச்சிக்கான நிலங்களை எடுத்துக் கொண்டு, வீடு கட்டுவதற்குப் பொருத்தமான நிலத்தை குறைந்தளவு லாபம் சேர்த்து நியாய விலைகளில் விற்கலாமென்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. தொலை நோக்குத் திட்டத்தில் குடியிருப்புப் பயனுக்காக மட்டும் ஒரு லட்சம் ஏக்கர் நிலம் கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 30 பெரிய, 25 சிறிய நகரங்களுக்குத் தேவையான நிலங்களை அரசு நிறுவன அமைப்புகளாகிய 'ஹட்கோ' (HUDCO), ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போன்றவற்றின் மூலம் கையகப்படுத்தலாம். நகர்ப்புறங்களில் ஒரு லட்சம் ஏக்கர் நிலத்தை மேம்படுத்த ரூ. 390 கோடியும், மனை விற்பனையின் மொத்த மதிப்பு ரூ. 448 கோடியும் இருக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவை இரண்டுக்குமிடையே உள்ள வேறுபாடு ரூ. 58 கோடி. தொகை சிறிதாக இருப்பினும், இத்திட்டம் நன்மைகளைக் கொண்டிருக்கிறது. தொடக்க முதலீடு கடன்களின் மூலம் நிதியாக்கம் செய்யப்பட்டாலும், அந்நிதியின் பணி தொடர்ந்து இருந்துவரும். அந்நிதியை இத்திட்டத்தை மேலும் விரிவாக்குவதற் குப் பயன்படுத்தலாம். இது நகர்ப்புற நில வரி விதிப்பை உயர் வீதங்களில் பெருக்குவதற்கான வாய்ப்பை அளிக்கும்.

(4) உள்ளாட்சி அமைப்புக்களின் வருவாய்.—தற்போதைய வளர்ச்சிக் கொள்கை அடிமட்டத்திலிருந்து திட்டமிடுவதை வலியுறுத்துகின்றது. இக் கொள்கையைச் செயல்படுத்த உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பை அதிகரித்து, அவற்றின் நிதி வசதியை வலுப்படுத்துவதும் அவசியமாகிறது.

உள்ளாட்சி அமைப்புகள் நிதி வசதிகளைப் பெறுவதற்கு அடிப்படை நில வரி வசூலிப்பு முழுவதையும், தண்ணீர்த் தீர்வை வசூலிப்பில் 60 சதவீதத்தையும் (மாற்றியமைக்கப்பட்ட திட்ட அடிப்படையில்) ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்க வேண்டுமெனவும், வேளாண்மை நிலங்களின் மதிப்பின் மீது நிலவரியை விதிக்கும் அதிகாரத்தை ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரலாமெனவும், வகுக் கப்பட்ட அளவுகளில் அரசு உரிய மானியத்தை வழங்கலாமெனவும் வருவாய் வாரியம் பரிந்துரைக்கிறது. இப்பரிந்துரைகள் நிறைவேற்றப்படலாம்.

மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் மூலம் வருவாய் எந்த அளவிற்குக் கிடைக்குமென்று உறுதியாகக் கணிக்க முடியாது. ஏனெனில் அதனளவு பொருளாதாரத்தின் வளர்ச்சி முறை, வருமானப் பகிர்வு, அரசின் பொருளாதாரக் கொள்கை மற்றும் பிற காரணிகள் ஆகியவற்றைச் சார்ந்து அமையும் வளர்ச்சியைப் பெற புதிய வரிகளை விதிக்கலாம்; அல்லது புதிய முறைகளில் நிதி வளங்களைத் திரட்டலாம். மாநிலம் திறமையான நிர்வாக முறையைப் பெற்றிருப்பதாலும், மாநிலப் பொருளாதாரம் சரியான சிறப்பு வழியில் முன்னேறி வருவதாலும், மேலும் வளர்ச்சியைப் பெறுவதற்கான அதிகத் திறன்களைப் பெற்றிருப்பதாலும் தொலைநோக்குத் திட்டத்தில் கருதப்பட்டுள்ள புதிய நிதி வாயில்களின் அளவுகள் (ஐந்தாவது திட்டத்தில் ரூ. 175 கோடியும், ஆறுவது திட்டத்தில் ரூ. 280 கோடியும்) மிகச் சரியானவையே.

அட்டவணை 13-ல் தொலைநோக்குத் திட்ட நிதி வாயில்களின் குறியிலக்குகள் காட்டப்பட்டுள்ளன. ஒப்பீடு செய்வதற்கு வசதியாக நான்காவது திட்டப் புள்ளி விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 13

தொலைநோக்குத் திட்டத்திற்கான நிதிவாயில்களின் இலக்குகள்

(மாநிலத்துறை) (ரூ. கோடியில்)

வாயில்கள்	நான்காவது திட்டம் 1969—74	ஐந்தாவது திட்டம் 1974—79	ஆறுவது திட்டம் 1979—84	தொலை நோக்குத் திட்டம் 1974- 84
(0)	(1)	(2)	(3)	(4)
நடப்பு வருவாயின் எஞ்சிய இருப்பு	(—) 52	..	..	..
மாநில மின்சார வாரியத்தின் நிதி வசதிகள்	78	30	12	42
மாநில அரசு பெறும் வெளி அங்காடிக் கடன்கள் (நிகர)	60	150	375	525
சிறு சேமிப்பு	38	100	260	360
மாநில வருங்கால வைப்பு நிதி	22	50	61	111
மூலதனக் கணக்கின் எஞ்சிய இருப்பு	(—) 95	..	..	..
மாநில அரசு பெறும் ஒப்பியக் கடன்கள்—				
(அ) ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து	8	50	100	150
(ஆ) இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து	6	10	16	26
மாநில அரசு நிறுவனங்கள் பெறும் கடன்கள்—				
(அ) ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து	20	50	80	130

(0)	(1)	(2)	(3)	(4)
(ஆ) வெளி அங்காடி, வணிக வங்கிகளிட மிருந்து	51	200	500	700
(இ) இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, வணிக வங்கிகள் போன்றவற் றிடமிருந்து	50	100	200	300
மாநிலத்தின் மொத்த நிதி வசதிகள்	196	740	1,604	2,344
மத்திய அரசு உதவி	197	450	850	1,300
புதிய நிதி வசதிகளின் திரட்டு	159	175	280	455
மொத்த நிதி வசதிகள்	552	1,365	2,734	4,099
திட்டத்தின் மொத்த அளவு	552	1,365	2,734	4,099

பொதுக் கடன்

பொதுக்கடன் வாங்குவது குறித்து மத்திய,மாநில அரசுகளுக்குள்ள அதிகாரங் கள் தொடர்பான விதித் துறைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 292, 295-வது பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன. மாநிலங்களைப் பொறுத்தவரை இன்றி யமையாத கூறு 292-வது பிரிவைச்சேர்ந்த உட்பகுதி 3-ல் காணப்படுகின்றது. அதன்படி, இந்திய அரசிடமிருந்து (அல்லது அதற்கு முந்திய அரசு) பெற்ற கடனில் பெரும்பகுதி நிலுவையாக இருந்தால், அம்மாநிலம் இந்திய அரசின் அனுமதியின்றிக் கடன் பெற முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளது. இந்த உட் பகுதியின் பொருள் வாசகத்தால், மத்திய அரசில் இணைந்துள்ள மாநிலங்களி லிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து அந்த அரசு கடன் பெற முடியும். ஆனால் மாநில அரசோ தனது மாநிலத்திலேயே கிடைக்கும் நிதி வசதிகளிலிருந்து மத்திய அரசின் அனுமதியின்றிக் குறிப்பிட்ட அளவுக் கூட கடன் பெறும் பலனை அனுபவிக்க இயலாது.

இதனால் மத்திய அரசின் வருவாய், மாநிலங்களைக் காட்டிலும் விரைவான வீதத்தில் வளர்ந்து வருகின்றது. மாநிலங்கள் கடன் உதவிக்காக மத்திய அரசையே சார்ந்திருக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

1955–56-ல் ரூ. 289 கோடியாக இருந்த மத்திய அரசின் மூலதன வருவாய்த் திரட்டு 1973–74-ல் ரூ. 3,261 கோடியாக உயர்ந்துள்ளது. அதற்கு முரணாக மாநிலங்கள் அனைத்திலிருந்தும் நேரடி மூலதன வருவாய், 1955–56-ல் ரூ. 120 கோடியிலிருந்து 1973–74-ல் ரூ. 1,036 கோடியாக மட்டுமே உயர்ந் துள்ளது. இதிலிருந்து அரசமைப்பு முறையில் மத்திய-மாநில அரசுகள் நிதி வசதிகளில் 3/4 பங்கிற்கு மத்திய அரசு ஆதிக்கம் கொண்டிருப்பது புலனாகிறது. வரவு-செலவுத் திட்ட நிதிவாயில்களில் ஏறத்தாழ முழு அளவில் மத்திய அரசு ஆதிக்கம் கொண்டுள்ளது. ஆனால் மாநிலங்களோ பல்வேறு துறைகளில் வளர்ச் சித் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்புகளைப் பெற்றிருப்பதனால், அவற்றிற்குப் பெருமளவில் நிதி தேவைப்படுகிறது. இவ்வாறாக, நாளடைவில், மத்திய அரசிட மிருந்து பெருமளவில் மாநிலங்களுக்கு நிதி வாயில்கள் மாற்றப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு நிதி வாயில்களை மாற்றுவது பற்றி முடிவெடுக்கும் அதிகாரம் பெற்ற ஒரே சட்ட பூர்வமான அமைப்பு நிதி ஆணைக் குழுவாகும். நிதி ஆணைக்குழுவின் முடிவுகளினால் மாற்றப்பட்ட நிதி வாயில்கள் மொத்தத்தில் 1/3 பாகமாக மட்டுமே உள்ளது. பெரும்பகுதி, மத்திய அரசு நிர்வாகத்தால், 282-வது பிரிவின்படி மாநிலங்களுக்கு மானியங்கள் வழங்குவத னாலோ அல்லது 293 (உட்பகுதி 2)பிரிவின்கீழ் கடன்களாகவோ, தன்னிச்சையான முறையில் அல்லது தனிப்பட்ட அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்த திட்டக் காலங்களின்போது, மாநிலங்களின் கடன் சுமை, 1956 மார்ச் 31-ல் ரூ. 2,606 கோடியாக இருந்து, 1974 மார்ச் 31-ல் ரூ. 10,687 கோடியாக உயர்ந்திருக்கின்றமை மொத்த நிலுவைக் கடனிலிருந்து தெரியவரும். 31—3—1951-ல் மாநிலங்கள் அனைத்திடமிருந்தும் மத்திய அரசுக்கு நிலுவையாயிருந்த ரூ. 196 கோடி, 31—3—1974-ல் ரூ. 8,380 கோடியாக-மொத்தக் கடனில் 4/5 பகுதியாக உயர்ந்துள்ளது.

மத்திய அரசிடமிருந்து பெறப்படும் மூலதன மாற்றத்தில், திட்ட நிதியுதவி, சிறுசேமிப்புகளில் பங்கு, திட்டங்களுக்கல்லாத மற்ற கடன்கள் ஆகியவை அடங்கும். மாநிலங்களின் பொறுப்பு என்று கூறப்படும் வருவாய்-செலவினங்களைச் சரிக்கட்டுவதற்கான நிதி மாற்றங்கள், தேசிய அளவிலான திட்ட வரைவில், மாநில அரசுகளால் மேற்கொள்ளப்படும் புதிய திட்டங்களின்மீதானதிட்டச்செலவு என்று கூறப்படுவதற்கான நிதிவாயில் மாற்றங்கள் ஆகியவை திட்ட உதவியில் அடங்கும், திட்ட உதவிபற்றி நிதி ஆணைக்குழு கருத்து கூறமுடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு மத்திய அரசின் திட்ட உதவியை முதன்மையாகக் கொண்டு அவற்றின் கடன்படும் தன்மை முடிவு செய்யப்படுகிறது. மற்ற சிறு சேமிப்புகளின் பங்கு, திட்டமில்லாக் கடன்கள் முதலியன இரண்டாமிடம் பெறுகின்றன.

மாநில அரசுகள் உதவி கோரும் திட்டப்பணி ஒவ்வொன்றின் அளவு அல்லது அது செயல்படுத்தப்படும் பகுதி ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் முடிவு எடுக்கும் அதிகாரத்தை மத்தியத் திட்டக் குழு கொண்டுள்ளது. 100 சதவீத மானியம் பெறும் தகுதியுடைய திட்டப்பணிகளிலிருந்து, கடன் வடிவில் '' திட்ட உதவி '' பெறும் தரமுடைய திட்டங்கள் வரை பெரிய அளவுகளிலான திட்டப் பணிகளுக்கான உதவி வகைகள் திட்டம் தீட்டுவோரால் வரையறுக்கப்படுகின்றன.

நான்காவது திட்டம் வகுக்கப்படும்போது பல மாநில அரசுகளின் வற்புறுத்தலின்பேரில் திட்டப்பணி வாரியாக உதவி அளிப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு மாநிலத்திற்குமான மொத்தத் திட்ட உதவி 30 சதவீதம், 70 சதவீதமாக முறையே தொகுதி மானியங்களும், தொகுதிக் கடன்களும் (Block Grants and Block Loans) வழங்கப்படும் முறை பின்பற்றப்பட்டது. இது ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக இருப்பினும், மானியம், கடன்களுக்கு இடையிலான விகிதங்களைத் தன்னிச்சையான முறையில் நிர்ணயிப்பதும், திட்டத்தின் இயல்பைக் கருதிப் பார்க்காமல் திட்டமிட்ட வளர்ச்சிக்கான மூலதன மாற்றங்களை கடன்களாகக் கருதுகின்ற சீரற்ற தன்மையும் இன்னும் தொடர்ந்து நிலவுகிறது.

சிறு சேமிப்புகள்.—தற்போதுள்ள ஏற்பாடுகளின்படி, மாநிலமொன்றில் சிறு சேமிப்புகள் மூலம் சேகரிக்கப்படும் ஆண்டுத் தொகைகள் கடன்கள் வடிவில் அம் மாநிலத்திற்கே வழங்கப்படுகிறது. இத்தொகைகள் மக்களால் மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களாக உள்ளன. இவ்வாறு மாநிலங்களுக்கு மாற்றித் தரப்பட்ட இந்நிதி வசதிகளைத் திருப்பிச் செலுத்தத்தக்க கடன்களாகக் கருதுவது நியாயமாகத் தோன்றவில்லை. எனினும், ஆறுவது நிதி ஆணைக்குழு அதன் கடன் நிவாரண திட்டத்திலிருந்து அத்தகைய கடன்களை நீக்கியுள்ளது. இம் மாநில அரசால் ஐந்தாவது, ஆறுவது திட்டங்களில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 29·81 கோடி. ஆறுவது நிதி ஆணைக்குழு அதன் கடன் நிவாரணத் திட்டத்தில் அங்காடிக் கடன்களுக்குப் பதிலாக திட்டமில்லாத கடன்களையும் விட்டுவிட்டது. எனவே இந்த வகையில் 1975-76—ல் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை ரூ. 13 கோடியாகும்.

மாநிலங்களின் கடன் சுமை தொடர்ந்து உயர்ந்து வருவதால் முதலீடு செய்வதற்கான நிகரத் தொகை படிப்படியாக குறைந்து வந்துள்ளது. மாநிலங்களில் இருந்து மத்திய அரசுக்கு கடன், வட்டியாகச் செலுத்த வேண்டிய தொகை அதிக அளவில் உள்ளதால், நான்காவது திட்டத்தில் மாநிலங்களுக்கான மத்திய அரசின் கடன் வசதி ரூ. 6,000 கோடியாக இருந்த போதிலும் நிகரமாக முதலீட்டுக்குக் கிடைப்பது ரூ. 737 கோடியாக மட்டுமே உள்ளது. இது

தொடர்பாக நான்காவது திட்டக் காலத்தில் நிகரமாக தமிழ் நாட்டிற்குக் கிடைக்கின்ற நிதி வசதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன :

(ரூ. லட்சத்தில்)

ஆண்டு	நிகரமாகக் கிடைக்கும் நிதி
(0)	(1)
1969-70	—2.26
1970-71	7·65
1971-72	—33·52
1972-73	+59·59
1973-74	—11·38

மாநிலங்களிலிருந்து மத்திய அரசுக்குச் சேர வேண்டிய கடன் சுமையின் அளவை கருத்திற் கொண்டு, ஆறுவது நிதி ஆணைக்குழு கடன் திருப்பிச் செலுத்துவது என்ற பிரச்னை குறித்து ஆராய்ந்தது. கடன்களை பலவகைகளாகப் பிரித்த ஆணைக்குழு, ஒவ்வொரு வகைக்கும் திருப்பிச் செலுத்தப்படும் முறைபற்றி பரிந்துரைத்துள்ளது. அவ்வாறு ஆணைக்குழு, பரிந்துரைக்கையில் கடன் அளிக்கப் படும் திட்டத்தின் இயல்பு, மாநிலங்களின் கடன்சுமை, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மாநிலங்களின் நிதித் தேவைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்தது.

ஆறுவது நிதி ஆணைக்குழுவின் மதிப்பீட்டின்படி 31-3-1974-ல் உள்ள வாறு மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு செலுத்த வேண்டிய கடன் நிலுவை ரூ. 418·19 கோடியாகும். தற்போது உள்ளவாறு திருப்பிச் செலுத்தப்பட வேண்டியதும், திருத்தியமைக்கப்பட்ட வரையறைகளின்படி திருப்பித்தர வேண்டியதும் முறையே ரூ. 216·97 கோடியும், ரூ. 129·92 கோடியும் ஆகும். தமிழ்நாட்டிற்கு ஐந்தாவது திட்டத்தில் அளிக்கப்பட்ட கடன் நிவாரணம் ரூ. 87·05 கோடியாகும். இது மாநிலங்கள் அனைத்திற்கும் அளிக்கப்பட்ட மொத்த நிவாரணத்தில் 4·4 சதவீதமாகும்.

மத்திய—மாநில அரசுகளுக்கிடையே கடன் தொடர்பாகச் சீரான கொள்கைகளை வகுப்பது அவசியமாகிறது. பொது மக்களிடமிருந்தும் மற்ற நாடு களிடமிருந்தும் எளிய நிபந்தனைகளின் பேரில் கடன் வாங்கிய பணத்தை மாநிலங் களுக்குக் கடனாக வழங்கும் இடைத்தரகராக மத்திய அரசு செயல்படுகிறது. தகுந்த கொள்கைகளை உருவாக்கவும், பல்வேறு மாநிலங்களுக்குக் கடன் ஒதுக்கீடு செய்வது குறித்து முடிவெடுக்கவும் ஆஸ்திரேலிய கடன்கள் குழுவைப்போல் (Australian Loans Council) இந்நாட்டிலும் கடன்கள் குழுவொன்று ஏற்படுத்தப் படலாம்.

நிதிக் கொள்கையும், மத்திய—மாநில நிதித் தொடர்புகளும்

திட்டமிட்ட வளர்ச்சிக்கான நிதிவாயில்களைத் திரட்டுவதும், அவற்றை பயன் படுத்துவதும் மத்திய-மாநில அரசுகளின் இணைந்த அணுகு முறையைச் சார்ந்திருப் பினும், உண்மையில், இப்போதுள்ள அரசியலமைப்பின்படி, நிதி வசதிகளைத் திரட்டுவது குறித்த அதிகாரங்களும், முடிவெடுக்கும் உரிமையும் பெரும்பாலும் மத்திய அரசிடமே உள்ளன.

மத்திய-மாநில அரசுகளுக்கிடையே, வரி விதிப்பு முறைகளின் மூலம் நிதி வாயில்களைத் திரட்டுவதிலுள்ள செல்வாக்கு, ஆயத் தீர்வை, சுங்க வரி, வருமான வரி ஆகியவற்றை உள்ளடக்கிய மொத்த வரி வருவாய்களில் 70 சதவீதத்தை மத்திய அரசும், 21 மாநில அரசுகளனைத்தும் 30 சதவீதத்தைப் பெறுவதினின்றும் தெரிகிறது.

பண்டங்கள்-பணிகள் மீது புதிய வரி விதிப்பு செய்வதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், நிதிக் கொள்கை நேர்முக வரிகளின் வாயிலாக வருவாயைப் பெருக்க முயல வேண்டும். இதன் காரணமாக இவ்வகையில் மத்திய-மாநில அரசுகளின் கூட்டு முயற்சி தேவைப்படுகிறது.

வளர்ச்சிக்கான நிதிக் கிடைப்பு, வளர்ச்சியில்லாப் பணிகளின் மீதான செலவினங்களைக்—குறிப்பாகக் காவல் துறையின் மீதான—குறைப்பதில் அடங்கியுள்ளது. 1960—61 முதல் 1970—71 வரையான 10 ஆண்டுகளில் காவல் துறையின் மீதான மத்திய அரசின் ஆண்டுச் செலவீட்டு வளர்ச்சி வீதம் 24·1 சதவீதமாக இருந்த போது, அனைத்து மாநிலங்களிலும் 10·7 சதவீதமாகவும், தமிழ் நாட்டில் 9·7 சதவீதமாகவும் இருந்தது.

இவ்வகையில் குறிப்பிட வேண்டிய மற்றொன்று, மத்திய அரசின் ஆதரவுடன் கல்வி, வேளாண்மை போன்ற சில துறைகளின் நடவடிக்கைகள் பெருகியுள்ளமையாகும். இத்துறைகளின் மீதான பொறுப்புகள் மாநில அரசைச் சார்ந்தவை. வேளாண்மை, சமூகப் பணிகள் போன்றவற்றின் மீதான மத்திய அரசின் தற்போதைய செலவீட்டு முறையை மதிப்பீடு செய்து, தேவையில்லாத செலவினங்களை நீக்குவது மத்திய அரசு கணிசமான அளவிற்கு நிதிவசதிகளை மாநிலங்களுக்குத் தருவதில் முடிய வேண்டும். இவ்வசதிகளை மாநிலத் திட்டங்களில் நிதியாக்கம் செய்யப் பயன்படுத்தலாம்.

திட்டமற்ற செலவினம் தொடர்ந்து உயர்ந்துள்ளமையால் தமிழ்நாட்டில் பணித் திட்டங்களின் செலவீடுகள் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது குறைவாகவே உள்ளன. புதிய திட்டங்களைக் கைக்கொள்ளவும், சமூகப் பணிகளின் வளர்ச்சியை சிறப்பாகத் தொடரவும் மாநில அரசுகள் அவற்றின் நிதி வசதிகளோடு கூட, மத்திய அரசிடமிருந்து நிதி பெறுவதையும் சார்ந்திருக்கின்றன.

பொருளாதாரத்தில் தேவையான அளவுக்கு சேமிப்பு வீதத்தை உயர்த்துவதில் நிதிக் கொள்கை சிறப்பான முக்கியத்துவத்தைப் பெற்றிருப்பதால், குடும்பச் சேமிப்புகளைத் திரட்டுவதற்கான மத்திய அரசின் முயற்சிகளில் மாநில அரசுகளும் பங்கு பெறும் வகையில் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

விலைகளின் மிக அதிகளவு உயர்வும், அரசுப் பணியாளரின் ஊதியங்களின் உயர்வும், வளர்ச்சியல்லாத பணிகளின் மீதான செலவைக் கூட்டியுள்ளன. மத்திய அரசின் பண-நிதிக் கொள்கைகளினின்றே பெரும்பாலும் பணவீக்க நிலைகள் தோன்றுகின்றன. அதன் விளைவுகள், குறிப்பாக தனியார் துறை மற்றும் மாநில அரசின் வளர்ச்சித் திட்டங்களில் நிதியாக்கம் செய்வதற்கான நிதி வசதிகளைத் திரட்டுவதில் உணரப்படுகின்றன. விலைகள், கூலிகள், லாபங்கள் ஆகியவற்றின் பிரச்னை குறித்து இணைவான, பகுத்தாய்ந்த அணுகு முறையைக் கண்டுணர்ந்து நிறைவேற்றுவது அவசியம்.

மேற்குறிப்பிடப்பட்ட சில பிரச்னைகள் குறித்தும், பொதுத் துறை நிறுவனங்களைச் செயல்படுவது பற்றியும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படலாம். அவ்வாராய்ச்சியில் விலைகளின் உயர்வுச் சிக்கல் மற்றும் அது சார்ந்த பிரச்னைகள் குறித்து தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

VIII. திட்டமிடல்—ஒரு தொடரும் செயல்முறை

தமிழ்நாட்டுத் தொலைநோக்குத் திட்டமானது, தமிழக சமுதாயத்தில் அவ்வப்பொழுது ஏற்படுகின்ற மாற்றங்களையொட்டித் தொடர்ந்து மறு ஆய்வும் மேம்பாடும் பெறத்தக்க ஒன்றாகும். இது கீழ்க்கண்ட முறைகளில் செயற்படலாம்:

(1) தமிழ்நாட்டின் வளங்களிலும், அமைப்புகளிலும் நிகழும் போக்குகள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டும். மக்கள் தொகை மற்றும் மக்களின் வயது, பால் வேறுபாடு இவற்றினை விளக்கும் மக்கள்தொகை எண்ணிக்கை, வேலையில் ஈடுபட்டுள்ள மக்களின் எண்ணிக்கை, நிலம் பயன்படுத்தப்படுகின்ற வகை, தண்ணீர் வசதி, கனிவள வசதி, மின்சாரம் மற்றும் இதர சக்தி வசதிகள், அவற்றைப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள், சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் ஏற்படுகின்ற மாறுதல்கள் எந்த அளவுக்கு நமது பொருளாதார மற்றும் மனித வளங்களில் மாற்றங்களைச் செய்விக்கின்றன என்ற ஆய்வுகள், இதுவரை கவனிக்கப்படாது விடப்பட்ட அம்சங்களில் முன்னேற்றம் காண்பதற்கான ஊக்குவிக்கும் சக்திகள், பொருள் உடைமை பற்றிய வகைகள் முதலிய அம்சங்களில் தொடர்ந்து ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

(2) தொலைநோக்குத் திட்டம் அடிப்படையாகக் கொண்டுள்ள ஏழு நோக்கங்களும் வினைச் செயல்வகை முறைகளும், திட்ட அம்சங்களும் கட்டுப்படும் சுழி முனைகளாகும். இந்த நோக்கங்களும் குறிப்பிட்ட காலங்களில் தொடர்ந்து மறு ஆய்வுசெய்யப்படவேண்டுவன. அப்போதுதான் இந்த நோக்கங்கள் எந்த அளவுக்குக் கிட்டியுள்ளன என்றும், அவை செயல்படுத்தப்படும்போது, எதிர்ப்படுகின்ற இடர்ப்பாடுகள் எவை என்றும் அவ்விடர்ப்பாடுகளைக் களைய மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளும் புலனாகும். குறிப்பிட்ட காலங்களில், திட்டம் மறு ஆய்வு செய்யப்படுவது, மேற்கூறிய காரணத்திற்காக மட்டுமல்லாது திட்டம் தொடர்ந்து மேம்படுத்தப்படுதலையும் சாத்தியமாக்கும். இஃதன்றி, இத்தகைய மறு ஆய்வு, வேலைத் திட்டங்களின் வரிசைக் கிரமத்திலும், திட்டம் செயல்படுகின்ற வினைச் செயல்வகைகளிலும் தேவையான மாற்றங்களைச் செய்யவும் உதவும்.

(3) திட்ட முன்மாதிரி (Model) தனி மனித உண்மை வருமானத்தை இருமடங்கு ஆக்குவதற்கான மதிப்பீடுகள், மாநில மொத்த வருமானம், மாநிலத்தின் மொத்த முதலீடு, இறுதி நிலை முதலீட்டின் வீதம் முதலியனவற்றை கொண்டதாகும். இத்திட்ட முன்மாதிரி, துறைவாரியான திட்ட இலக்குகள் அனைத்தும் சேர்ந்த மொத்த இலக்குகள் ஒன்றோடொன்று பொருந்தியுள்ளனவா என்றும், அவை செயல்படக் கூடியனவா என்றும் ஆய்வு செய்து சரிபார்த்துக் கொள்ள உதவும் ஆனால், மாநிலத்தின் நிகர பண்டங்களையும் பணிகளையும் சார்ந்த மதிப்பீட்டுப் புள்ளி விவரங்கள் தொடர்ந்து மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன. திட்ட முன்மாதிரி அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட புள்ளி விவரங்கள் புள்ளியியல் துறையினரால் அண்மையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அப்புள்ளி விவரங்கள் மேலும் சரிபார்த்து முடிவாக்கப்படும் பொழுது, அவற்றில் மேலும் மாறுதல்கள் ஏற்படக்கூடும் என்பதில் ஐயமில்லை. திட்ட முன் மாதிரியில் பயன்படுத்தப்பட்ட கூடுதலாகும் மூலதன—உற்பத்தி விகிதங்கள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1960 முதல் 1970 வரையிலான ஆண்டுகளில் எவ்வாறெல்லாம் இருந்தது என்பதனை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட அனுபவ ஆய்வுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டனவாகும். மத்திய திட்டக் குழு மேற்கொண்ட அத்தகைய ஆய்வுகளில் இருந்து கிடைக்கப் பெற்ற சில வழிமுறைகளும் இதற்கு வழிகாட்டியாக அமைந்தன. தொலை நோக்குத் திட்டக் காலத்திலும் அதற்குப் பிறகும் முன்னேற்றத்தை நிர்ணயம் செய்யும் சில முக்கிய அம்சங்களின் அனுபவ ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புள்ளி விவரங்களை மேலும் மேம்பாடு செய்ய வேண்டும். இஃதன்றி, நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும், வருமானம் விநியோகிக்கப்பட்டிருக்கும் முறை, கிராமப் புறங்களிலும், நகர்ப் புறங்களிலும் நிலவுகின்ற வேலையின்மை, வேலைக் குறைவு பற்றிய தொடர்ச்சியானதும், விரிவானதுமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய ஆய்வுகள் கிடைத்தால்தான் வேலை இன்மையினையும், வறுமையினையும் போக்குவதற்கான திட்டங்கள், வலுவான புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு அமையும். அவை எதிர்காலத்தில், திட்டமிடும் பணிக்குத் தகுதியான திட்ட வழிமுறைகளையும் அமைத்துக் கொள்ள உதவும்.

(4) இத்தொலைநோக்குத் திட்டத்தில் முடிவாக ஒன்று வலியுறுத்தப்படுகின்றது. அஃதாவது, தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படை, மக்கள் பெருவாரியாக அதில் பங்கேற்பதாகும். இதற்கு மிகவும் அத்தியாவசிய

மானது தொலைநோக்குத் திட்டம். இது சாத்தியமானதும், மக்கள் பெருவாரியாக அறிந்ததும், மிகச் சிறிய எல்லைக்குட்பட்டதுமான ஒரு மட்டத்தில் அமைக்கப்படுவதாகும். அதாவது கிராமம், வட்டம், மாவட்டம், பெரும்பகுதி ஆகிய மட்டங்களில் தொலைநோக்குத் திட்டம் அமைக்கப்படுதலாகும். இவ்வாறான தொலைநோக்குத் திட்டம், திட்டக் காரியங்களில், சாதாரண குடிமகனும் பெருவாரியான அளவு பங்கேற்கச் செய்ய உதவுவதுடன், மத்தியதர குறுகிய காலத் திட்டங்களில் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளையும், கால வேறுபாட்டினாலும் தகுதியான தலைமையின்மையாலும் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளையும் தவிர்க்கத் தக்கதாகும்.

மேற்கூறியவாறு, திட்ட வேலைகள் தொடர்ந்து நடைபெறுதல் தொலைநோக்குத் திட்டம் தொடர்ந்து மேம்படுத்தப்படுதலை உறுதியாக்கும். தொலைநோக்குத் திட்டம், எதிர்காலத்தில் வருடாந்தர, நடுத்தர காலத் திட்டங்கள், அவற்றினுள்ளே கட்டாயம் உள்ளடக்கப்பட வேண்டும் என்று எண்ணப்படுகின்ற ஒரு கடினமான வரைவு அன்று ; ஒரு பொதுவான வரைவுதான். இது மாநிலத்தின் பொருளாதார வளங்களின் நிலைமையினையும், கொள்கைக் கோட்பாடுகளையும் தகுந்த வகையில் கருத்திற்கொண்டு சாத்தியமான வகையில் மாநிலத்தின் முன்னேற்ற மாதிரி அமைக்கப்படுவதற்கான ஒரு பொதுவான வரைவேயாகும். நீண்ட கால எல்லையில் நிகழ்கின்ற மாற்றங்களுக்குத் தக்கவாறு திட்டம் மாற்றி அமைக்கப்படுதல், தொலைநோக்குத் திட்டத்திற்குத் தேவையானதே. காரணம், தொலைநோக்குத் திட்டக் காலமே ஒரு நீண்ட நெடுங்காலம் என்பதனாலாகும்.

20 JUL 1973

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	7	ரூ. 70,24	ரூ. 7,024
15	18	உயாநிலைப் பள்ளி	உயர்நிலைப் பள்ளி
18	5	ஏற்கனெவே	ஏற்கெனவே
21	13	வனங்களின்	வளங்களின்
23	14	ஹெவி வாட்டர் தொழிற்சாலை	கனநீர் தயாரிப்புச் சாலை
28	37	மெ. வாட்	மெ. வாட்டாக
29	17	கூடுதல7கும்	கூடுதலாகும்
39	23	சுல்வி	கல்வி
46	1	கடன	கடன்
46	2	பன்னூடடு	பன்னூட்டு
49	46	அவ்வாட்டாரங்களுக்கான	அவ்வட்டாரங்களுக்கான
51	44	பணிகருத்	பணிக்குத்
55	10	முழுமையையாகப்	முழுமையாகப்
56	25	நிலக்கரித்தூள்	நிலக்கரிச் சாம்பல்
66	48	கருக் கொண்டு	கருவைக் கொண்டு
67	19	கடன்களையும	கடன்களையும்
70	1	காடடுச்	காட்டுச்
72	2	அதறகென	அதற்கென
72	5	நடுத்தரத்தனவுமாகிய	நடுத்தரமுமான
86	32	குறைநதளவு	குறைந்தளவு

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	5 பிரிவு எண் 2	45	43
5	8 பிரிவு எண் 4	769	765
5	9 பிரிவு எண் 4	3·47	3·52
5	9 பிரிவு எண் 5	3·89	3·92
7	8 பிரிவு எண் 3	4·0	4·9
7	8 பிரிவு எண் 4	6·1	5·9